# MANONMANIAM SUNDARANAR UNIVERSITY

DIRECTORATE OF DISTANCE & CONTINUING EDUCATION

TIRUNELVELI – 627012, TAMIL NADU

# B.A – Tamil

## சுற்றுலாவியலும்  தமிழர்உணவியலும்

**மனோன்மணியம்  சுந்தரனார்  பல்கலைக்கழகம்**

**தொலைதூரத்  தொடர்கல்வி  இயக்ககம்**

**திருநெல்வேலி–  627017**

# தமிழ்நாடு

| Learning Objectives | |
|---|---|
| The Main Objectives of this Course are to : | |
| • **சுற்றுலாவியலை அறிமுகம் செய்தல்**<br>• **பண்டைய கால சுற்றுலாவை விளக்கமாக உணரச் செய்தல்**<br>• **சுற்றுலாவின் பயன்களை அறியச் செய்தல்**<br>• **தமிழகத்தில் புகழ்மிக்க தலங்களைப் பற்றி விரிவாக மாணவர்களுக்குப் பயிற்றுவித்தல்**<br>• **சுற்றுலாவின் வளர்ச்சியை விரிவுபடுத்துதல்** | |

**unit-**ஐசுற்றுலாவும் அதன் பயனும்

சுற்றுலா வகைகள்-சுற்றுலாவின் முக்கியத்துவம் சுற்றுலாவின் பயன்கள் (பண்பாட்டுப் பரிமாற்றம்,மனிதநேயம்,அறிவுவளர்ச்சி,மகிழ்ச்சி,வாழ்க்கைத்தரமேம்பாடு,பன்னாட்டுநல்லிணக்கம்,வன விலங்குகளும் தாவரங்களும் காக்கப்பெறுதல்,வணிகவளர்ச்சி,பொருளாதாரவளர்ச்சி,வேலைவாய்ப்பு) உலகநாடுகளில் சுற்றுலாவளர்ச்சிசுற்றுலாப் பயணப் பணிநிறுவனங்களும் அவற்றின் பணிகளும் அமைப்பாளர்கள் (முசபயணைநசள) வழிகாட்டிகள் (புரனைநள)- பயணிகள் (வுழரசளைவள) - சுற்றுலாவைத் திட்டமிடுதலும் செயற்படுத்துதலும் சுற்றுலாவழிகாட்டிகளின் தகுதிகள் சுற்றுலாவும் சுற்றுச்சூழலும் - சுற்றுலாவும் பிறதுறைகளும்.

**Unit -II**காலந்தோறும் சுற்றுலா,புகழ்மிக்கசுற்றுலாத் தலங்கள்

காலந்தோறும் சுற்றுலா (பண்டை, இடை,தற்காலம்) பயணஅனுபவக் குறிப்புகள் (யுவான் சுவாங்,பாகியான்,மார்க்கோபோலோ) சுற்றுலாவும் இலக்கியங்களும் சுற்றுலாதொடர்புடையதொழில்நுட்பங்களும் கருவிகளும் சுற்றுலாதொடர்புடையபுள்ளிவிவரங்கள் - உலகப் புகழ்பெற்றசுற்றுலாத் தலங்கள்: உலகஅதிசயங்கள் உலகப் பாரம்பரியக் களங்கள் (ருநேளுஊழு) - சுற்றுலாத் தலங்களின் வகைகள் (கோயில்கள்,வரலாற்றுச் சின்னங்கள்,தாவரவியல் பூங்கா,விலங்குகள் சரணாலயம்,அருங்காட்சியகம்,அகழாய்விடம்,நினைவகம்,கோட்டை,அணைக்கட்டு,கட்டுமானம்,அருவி, பிற) விடுதிகள் உணவகங்கள் போக்குவரத்துவிழாக்களும் சுற்றுலாத் தலங்களும் தமிழகக் கலைப் பண்பாடும் சுற்றுலாவும்

**Unit - III**சுற்றுலாவளர்ச்சியும் நினைவுச் சின்னங்களைப் பாதுகாத்தலும்

சுற்றுலாமேம்பாட்டுவளர்ச்சிக் கழகங்களின் (ஐவுனுஊ வுவுனுஊ) திட்டங்கள்,செயல்பாடுகள்,பயன்கள் நினைவுச் சின்னங்களைப் பாதுகாத்தல்-புதியசுற்றுலாத் தலங்களைஉருவாக்குதல் -சுற்றுலாதொடர்புடையபடிப்புகளும் வேலைவாய்ப்பும்.

**Unit - IV**காலந்தோறும் உணவும் உணவுப் பழக்கவழக்கங்களும்

தமிழரின் விருந்தோம்பல் மரபுகாலந்தோறும் உணவு (பழங்காலம் இடைக்காலம்-தற்காலம்)உலகளாவியஉணவும் உணவுமுறைகளும் தமிழர் உணவுப் பொருள்களும் அவற்றின் மருத்துவகுணங்களும் -உணவுத் திருவிழாக்களும் கொண்டாட்டங்களும் - இலக்கியங்களும் உணவும்.

Unit -Vதமிழர் உணவின் தனித்துவமும் உணவுவணிகமும்தமிழர் உணவுப் பொருள்கள் (அரிசி,பருப்பு,சிறுதானியம்,கீரை,கிழங்கு,பழங்கள்,எண்ணெய்,பால்பொருள். இறைச்சி,பிற) -தமிழர் உணவு வகைகள் (சோறு,குழம்பு,அவியல்,பொரியல்,வறுவல்,பானம்,பிற),சமையல் கலையும் தனித்துவமானசமையல் பொருள்களும் தமிழர் உணவும் பிறநாட்டுஉணவுகளும் சமகாலஉணவுக் கலாச்சாரத்தில் உள்ளகுறைபாடுகள்-மரபுசார் உணவும்வணிகமும் - தமிழுணவும் வேலைவாய்ப்பும்.

## அலகு-1

**சுற்றுலாவியல்ஓர் அறிமுகம் (வுழுருசுஐளுஆ யுE ஐவுேசுழுனுருஊவுஐழுே)**

ஒருவர் தமது இருப்பிடத்தைவிட்டுவெளியில்ஓரிடத்திற்குச் சென்று,தங்கி,மகிழ்ந்து,புத்துணர்வுப் பெற்றுமீளுதல் சுற்றுலாவாகும். அருகில் உள்ளநகரம்,வரலாற்றுப் பெருமைமிக்கநினைவுச்சின்னம், இயற்கையெழில் மிக்க இடம்,கண்ணைக் கவரும் கலைக்கருவூலம் ஆகியவற்றிற்குச் சென்று,தங்கிமனநிறைவுபெறலாம்.செல்வச்சிறப்புமிக்கோர் அயல் நாடுகளில் பயணம் செய்வதும் சுற்றுலா ஆகும்.

சுற்றுலாவியல் ஓர் வளர்ந்துவரும் கோட்பாடுபலகோணங்களைக் கொண்டது. எனவேசுற்றுலாஎன்றால் என்ன ? சுற்றுலாப் பயணி யார்? என்பனபோன்றவினாக்களுக்குவிடைகாண்பதில் அறிஞர்களிடையேஒருமித்தகருத்துஉருவாகவில்லை.

**சுற்றுலாஎனும் சொல்**

சுற்றுலாபற்றியவிளக்கங்களைஅறிவதற்குமுன்பு “சுற்றுலா“ எனும் சொல் எப்படிவந்ததுஎன்பதைக் காண்பதுஅவசியம். வுழரசஎனும் ஆங்கிலச் சொல் வுழுசுருேளு எனும் லத்தீன் மொழிச் சொல்லிலிருந்துபிறந்தது. டோர்ன்ஸ் என்றால் சக்கரம் எனவே இச்சொல் சுற்றிவருவதைக் குறிக்கிறது. இவ்வாறுலத்தீன் மொழியினின்றும் பிறந்தவுழரசஎனும் சொல் கி.பி. 1292 இல் ஆங்கிலமொழியில் கலந்ததுபயணத்தைக் குறித்தது. பல இடங்களைச் சுற்றிப் பார்ப்பது டூர் ஆகும். டூரிஸ்ட் எனும் சொல் பயணிஅல்லதுயாத்ரீகரைக்குறிக்கும்.

வுழுருசு“ எனும் சொல் ஹிப்ருமொழியில் உள்ளவுழுசுயுர்எனும் சொல்லிலிருந்துபிறந்ததாகக் கூறுவாரும் உளர்.ஒவ்வொருமனிதனும் இன்பப் பொழுதுபோக்கிற்காகத் தனதுவிருப்பத்திற்கேற்பபல இடங்களுக்குப்பயணம் செல்கிறான். அற்புதமான,அதிசயமான,தொன்மைச் சிறப்புமிக்கமையங்களையும் உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் இயற்கைக் காட்சிகளையும் சமயத் தொடர்பானபுனிதத் தலங்களையும் ஆடம்பரஆரவாரமிக்கநகரங்களையும் கண்டுகளிக்கஅவனதுமனம் துடிக்கிறது. எனவேமனிதன் பொருட் செலவையும் பாராமல் அரியனவற்றைப் பெரியனவற்றைக் கண்டுமகிழ்ச்சிக் கடலில் நீந்துகிறான்,தனதுதுன்பத்தைத் துயரத்தைப் போக்கிக் கொள்கிறான். மேலும் பிறபகுதிவாழ் மக்களின் பழக்கவழக்கங்களைநேரடியாகக் கண்டுமகிழ்வதில் அவன் பெருவிருப்பம் கொள்கிறான். அதில்இன்பம் காண்கிறான். இவ்வாறுமனிதன் பல்வேறு இடங்களில் உறவாடுவதன் மூலம் மனித நேயம் வளர்கிறது. உலகஒற்றுமைஓங்குகிறது. “யாதும் ஊரேயாவரும் கேளிர்“ என்றகணியன் பூங்குன்றனாரின் கனவுநனவாகிறது.

மக்களின் அறிவும் உலகஞானமும் சுற்றுலாவால் வளர்கிறது. பிறபகுதிகளில் உள்ளமக்களுடன் தொடர்புஏற்படுவதால்,ஒற்றுமைஉணர்வுவளர்ந்துவேற்றுமைஉணர்வும் பகைமையும் மறைகின்றன. சுற்றுலாவளரவளரநாடுகளின் பொருளாதாரமும் வளர்கின்றது.

மக்களில் பலர் பல இடங்களுக்குச் செல்வதில் பேரார்வம் காட்டுகின்றனர். அவர்கள் தங்களதுஓய்வுநேரத்தைப் பயனுள்ளவழிகளில் கழிப்பதுடன்,மனச் சோர்வைப் போக்கி,மனமகிழ்வுகொள்கின்றனர். மேலும் உழைத்துஉழைத்துஅலுத்துப் போனமக்களுக்குச் சுறுசுறுப்பும் புத்துணர்ச்சியும் ஊட்டக் கூடியபொழுதுபோக்குசுற்றுலாவேயாகும். வரலாற்றுமதிப்புவாய்ந்ததலங்களும், இயற்கைஎழில் கொஞ்சும் இடங்களும்,திறந்தவெளிக் கண்காட்சிகளாகவிளங்குகின்றன. இக்கண்காட்சிகளைக் கண்டு இன்புறுவதில்,மனிதமனம் முனைவதில் வியப்பதற்குஒன்றுமில்லை. எனவேசுற்றுலாமனிதனின் முக்கியத் தேவைகளுள் ஒன்றாகஆகிவிட்டதுஎன்றால் மிகையாகாது.

**சுற்றுலாவியல் - ஒருவிளக்கம்**

ஆரவாரமிக்க இவ்வுலகில்,மனிதர்கள் ஓய்வெடுத்துக் கொள்ளும் பொருட்டும்,உடல் நலம் பேணும் பொருட்டும்,விளையாட்டுப் போட்டிகளைக் கண்டுகளிக்கவும்,குதிரைப் பந்தயம்,படகுப் போட்டி,மலர்க்காட்சி,நாயினக்காட்சிஆகியவற்றைக் கண்டுகளிக்கவும்,புனிதத் தலங்களுக்குயாத்திரைசெய்யவும் சுற்றுலாசெல்வதுண்டு. அறிவியல் முன்னேற்றம் பெருகியுள்ளதற்காலத்தில் மனிதன் மிகக் குறுகியகாலத்தில் குறைந்தசெலவில் மிகத் தொலைவில் உள்ள இடங்களுக்கும் சென்றுவரமுடிகிறது. எனவேஓரிடத்தில் வசிப்போர் தமதுஓய்வுநேரத்தில் மற்றொரு இடத்திற்குச் சுற்றுப்பயணம் செய்துமனநிறைவுகொள்வதனைச் சுற்றுலாஎனக் கூறலாம். சுற்றிவருதலின் இது சுற்றுலாஆயிற்று. இராகுல் சாங்கிர்த்தியாயன் இதனையேஊர் சுற்றுதல்என்பார். சுற்றுலாப்பயணியைஅவர்ஊர் சுற்றிஎன்றேஅழைக்கிறார். சுற்றுலாத் தொடர்பானஅனைத்துச் செய்திகளையும் அறிவியல் சார்ந்தபடிப்பினையாக்கிக் கொள்ளும் நிலையைச் “சுற்றுலாவியல்“ எனஅழைப்பதுபொருத்தமாகும்.

**பயணங்களின் காரணங்கள்**

பண்டையமக்கள் ஓரிடத்திலிருந்துவேறோர் இடத்திற்குப் பெயர்ந்துசென்றதுவாழ்க்கைப் பயணம்:பொருளீட்டும் நோக்கத்துடன் துபாய் செல்வதுபொருளீட்டுப் பயணம்:யூதர்கள் மோசஸ் தலைமையில் எகிப்துநாட்டிலிருந்துயூதேயாவிற்குச் சென்றதுவிடுதலைப் பயணம்:பக்தர்கள் காசி,இராமேஸ்வரம் செல்வதுபுனிதப் பயணம்:கம்ப்யூட்டர் படிப்பில் மேல் படிப்பிற்காக ஜப்பான் செல்வதுகல்விப் பயணம்:ஆப்பிரிக்கக் காடுகளில் வாழும் பழங்குடிகளின் வாழ்க்கைமுறைகளை ஆராயச் செல்வதுஆய்வுப் பயணம்:மருத்துவச் சிகிச்சைக்காகநியூயார்க்கிற்குவிமானப் பயணம் மேற்கொள்வதுமருத்துவப் பயணம்:எவரஸ்ட் சிகரத்தின் உயரத்தைக்காணஅதன் உச்சிக்குஏறினால்

அதுதுணிகரப் பயணம்: ஜெனிவாவில் நடைபெறும் உலகத் தொழிலாளர் மாநாட்டில் கலந்துகொள்ளச் செல்வதுதொழிற்பயணம்: ஆஸ்திரேலியாவின் தலைநகராம் சிட்னியில் நடைபெறும் ஒலிம்பிக் விளையாட்டுக்களைக் காணச் சென்றால் அதுவிளையாட்டுப் பயணம்:கைத்தறித்துணிஏற்றுமதியாளர்கள் வணிகத்தைமேம்படுத்த அயல் நாடுகளுக்குச் செல்வதுவணிகப் பயணம:' சிற்பக்கலையில் ஆர்வம் கொண்டகலைஞர் ஒருவர் கஜீராகோசிற்பங்களைக் காண கஜீராகோசெல்வதுகலைப்பயணம்: இவையனைத்தும் பயணங்களேஆகும்.

மேற்கூறப்பட்டஅனைத்துப் பயணங்களும் பொதுவாகசுற்றுலாவாகக் கருதப்பெறுவதில்லை. ஏனெனில் இவர்கள் அனைவரும் தனக்குஆர்வமானஒரேஒருசெயலிலேயேஈடுபடுகின்றனர். வணிகநிமித்தம் வெளிநாடுசெல்வோர் வணிகத் தொடர்பானமுகவர்களை, (ஏஜெண்டுகளை) மட்டுமேசந்தித்துவிட்டுமற்ற இடங்களைப் பார்க்காமல் விரைவில் வந்துவிடுகின்றனர்.

இருப்பினும் அரசுப் பணிநிமித்தமாகசென்னைசெல்லும் அலுவலர் ஒருவர்,தமதுபணிகளைமுடித்துக் கொண்டுவண்டலூர் மிருகக் காட்சிசாலை,சென்னைஅருங்காட்சியகம்,மெரினாகடற்கரைஆகியவற்றையும் கண்டுகளித்துத் திரும்புகின்றார். இதுபோன்றஅலுவலகப் பணியாளரின் அலுவலகப் பயணங்கூடசுற்றுலாவாகவேகருதப்படுகின்றது.

எனவே இன்பப் பொழுதுபோக்கு,மகிழ்ச்சி,ஓய்வு,அரிய,பெரியகாட்சிகளைக் காணல்,அறிவுவளர்ச்சி,கலைக்கோயில்களைக் காணுதல் ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்றிற்காகப் பயணம் செல்லலும் சுற்றுலாவின் பாற்படும்.

''ஓய்வுநேரத்தைஅறிவுப் பூர்வமாய் பயன்படுத்தும் கலைதான் நாகரிகத்தின் மிகச் சிறந்தஅடையாளம்" என்றஅறிஞர் <u>பெட்ரான்ட் ரஸ்ஸல்</u> கூற்றும் சிந்திக்கத் தக்கது. எனவேசுற்றுலாசெல்லுதலும் நாகரிகத்தின் வளர்ச்சியே.

**அறிஞர்களின் விளக்கங்கள்**

சுற்றுலாவின் இயல்புக் கூறுகளைப் பலர் பலவிதமாகச் சுட்டிக்காட்டுவர். அவற்றுள் சிலவற்றைக் காண்போம்.

''மனிதசெயல்பாடுகள்.இயற்கைக் கூறுபாடுகள் ஆகியவற்றில் இதுகாறும் அறிந்திராதவற்றைஆய்வுசெய்யப் புகுதலேசுற்றுலா''என்பதுபிரிமால்ட்அவர்களின் விளக்கமாகும்.

டாக்டர் ஷியாடின் அவர்கள் ''ஓய்வுகவனமாற்றம் மற்றும் கலாசாரக் கூறுகளில் மனநிறைவளிக்கும் ஒருசமூகச் செயல்பாடேசுற்றுலா" எனக் குறிப்பிட்டுள்ளார்.

“சுற்றுலாஎன்பதுஒருவர் தான் வாழ்ந்துவரும் அல்லதுபணிபுரிந்துவரும் இடத்திலிருந்துவெளியிடத்திற்குக் குறுகியகாலமேசென்றுதங்கி,பல இடங்களுக்கு இன்பப் பயணம் சென்றுபார்த்துவருவதாகும்” என்று 1976-இல் சுற்றுலாவிற்குஇங்கிலாந்துசுற்றுலாக் கழகம் விளக்கம் தந்தது.

“விளையாட்டுப் போட்டிகளைக் காணச் செல்லுதல்,ஊர்களைச் சுற்றிப் பார்த்தல்,சைக்கிள்களில் பயணம்செய்தல்,உல்லாசப்படகுகளில் பயணம் செய்தல்,முகாமிடல்,மனமகிழ்வுக்காகப் பிற இடங்களைநோக்கிச் செல்லுதல் ஆகியவற்றின் ஒருங்கிணைப்பாகக் கருதப்படுவதேசுற்றுலா” என்பதுஜோஸ் இக்னாசியோ டி. அரில்லாகாஎன்பவரின் வித்தியாசமானவிளக்கம் ஆகும்.

1981-ல் இங்கிலாந்தில் கூடிய‘பன்னாட்டுச் சுற்றுலாமாநாடு’“சுற்றுலாஎன்பதுஒருகுறிப்பிட்டமக்களால் தாங்கள் வாழ்ந்துவரும் சூழ்நிலைக்கு அப்பால் சென்றுசெயல்படும் நடவடிக்கைகளேஆகும்” என்றவிளக்கத்தைஅளித்தது.

“சுற்றுலாநவீனகாலத்தில் ஒருதனிச் சிறப்பிடத்தைவகிக்கின்றது. இழந்தவலிமையைமீண்டும் பெற,மாறுபட்ட சூழ்நிலைகளைக் காண, இயற்கைஅழகினைக் கண்டுமகிழஅதுஒருவளர்ந்துவரும் தேவையாகிவிட்டது” என்ற எ.ஃ.பிரியூலர் அவர்களதுவிளக்கம் சுற்றுலாவின் நவீனகாலஅவசியத்தைவலியுறுத்துகின்றது.

பூர்கர்ட்டு,மெட்லிக் போன்றஅறிஞர்கள் “சுற்றுலாஎன்பதுஒருபயணியின் குறுகியகாலப் பயணமாகும். அவர்கள் தங்கள் இருப்பிடத்திலிருந்துமற்றொரு இடத்திற்குப் பயணம் செய்வர். அவர்கள் பிற இடங்களில் தற்காலிகமாகத் தங்குவர்” என்றுசுற்றுலாவின் தன்மையைச் சுட்டுகின்றனர். அவர்கள் மேலும் “சுற்றுலாஓய்வுநேரத்தோடும் உலகத்தோடும் தொடர்புகொண்டது. அதுஒருதொழிலகமும் ஆகும்.நாடுகளும் நகரங்களும் கிராமப் பகுதிகளும் பயணிகளைக் கவர்ந்து இழுப்பதால் அதற்குநல்லஎதிர்காலம் உள்ளது. அதுசெல்வத்தையும் வேலைவாய்ப்பையும் உருவாக்குகிறது.” என்றுசுற்றுலாவின் சிறப்பையும் காட்டுகின்றனர்.

ஜோவியக் சுற்றுலாவை ஓர் சமுதாய இயக்கமாகவேகாண்கிறார். “ஓய்வெடுப்பதற்காகவும்,பொழுதுபோக்கிற்காகவும்,கலாச்சாரத் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்குமானஒருசமுதாய இயக்கம் இது” என்பதுஅவரதுகருத்தாகும். எனவேசுற்றுலாவியல் தொழில் உறவுபூண்டசமுதாயஅறிவியலாகவிளங்குகின்றதுஎன்பதுஉண்மையாகும்.

ஆஸ்திரியநாட்டுப் பொருளாதாரநிபுணரானஹெர்மன் வி.சுல்லார்டுஎன்பார் “ஒருநாட்டிற்கோ,நகரத்திற்கோ,பிராந்தியத்திற்கோவெளிநாட்டுப் பயணியர்

வருகைபுரிவது,தங்குவதுசெல்வதுபொருளாதாரநோக்குடையதுபோன்றஅனைத்துச் செயல்பாடுகளின் தொகுப்பேசுற்றுலா” என்றுகுறிப்பிட்டுள்ளமைசுற்றுலாவின் நோக்கத்தைத் தெளிவுபடுத்துகின்றது.

‘‘பயணிகளின் பல்வேறுநடவடிக்கைகளின் கூட்டுத்தொகையேசுற்றுலாஆகும். பொருள்தேடும் அடிப்படையிலோ,ஓரிடம் சென்றுநிரந்தரமாகத் தங்கிவாழவேண்டும் என்றஎண்ணத்திலோஅல்லாமல்,அந்நியர்களால் மேற்கொள்ளப்படும் பயணம்,தங்குதல் போன்றவற்றின் மொத்தஉருவேசுற்றுலாஆகும்” என்றகருத்தினை ஹன்சிகாமற்றும் திராப்ட் (ர்ரணெமைநசயனெமுசயிவ)எனும் ஸ்விஸ் அறிஞர்கள் கொண்டுள்ளனர். சுற்றுலாஅறிவியல் வல்லுநர்களின் பன்னாட்டுக் கழகமும் (ஐவெநசயெவழையெட யுளளழஉயைவழைெ ழக ளுஉநைவெகைஉ நுஒிநசவள டை வுழரசளைஅ) இவ்விளக்கத்தையேஏற்றுக் கொண்டுள்ளது. பயணிகளின் நோக்கம் பொருள் சம்பாதித்தலாக இருக்கமுடியாதுஎன்பது இவரதுஆணித்தரமானவாதம். இக்கருத்தினையேஅப்துல்வகாஅவர்கள் சற்றுவிளக்கமாகக் கீழ்க்காணும் முறையில் வலியுறுத்துவார். ‘‘சுற்றுலாஎனப்படுவதுஒருகுறிப்பிட்டபுவியியல் எல்லையைத் தாண்டியோ,நாட்டிற்குள்ளேயோவாழ்கின்றமக்களிடையே ஓர்இணைப்பைஉருவாக்கக் கூடிய பயன் மிகுமனிதநடவடிக்கைஆகும். அதுசம்பாதிக்கும் நோக்கம் தவிர்த்து,பல்வேறுவகையானவிருப்பங்களைநிறைவுசெய்வதற்காகமேற்கொள்ளப்படுகின்ற,தற்காலிகமானவட்டாரம்,நாடு,கண்டம் போன்றவற்றின் இடையேஏற்படும் இடப்பெயர்ச்சிஆகும்.” இதனைப் போன்றசுற்றுலாக்களால் ஏற்படும் பயன்கள்-பொருளாதார,பண்பாட்டு,சமுதாயவாழ்க்கைமுறைகள் வழி வெளிப்படுகின்றனஎன்பதனையும் அவர் சுட்டிக்காட்டுகிறார்.

“ஐ ஞாயடட னுசநயஅ”இதுடாக்டர் தேஜ்வீர்சிங் அவர்கள் சுற்றுலாவிற்குத் தந்தவிளக்கம்,அதாவது‘‘நான் கனாக் காண்பேன்”.

‘‘கற்பனைக்கும் உண்மைக்கும் இடையேநடைபெறும் உரையாடலேசுற்றுலா” (னுயைடழபரந டிநவறநநெ ஐஅயபைெயவழைெ யனெ ஙநளவையெவழைெ) என்பதுஒருபுரட்சிகரமானவிளக்கம்

சுற்றுலாஎன்பதில் பின்னிப் பிணைந்துள்ளபிறதுறைகளையும்,பிரிட்டானிகாகலைக்களஞ்சியம் கீழ்க்காணும் வரிகளால் கோடிட்டுக் காட்டுகிறது.

‘‘இன்பப் பொழுதுபோக்கிற்காகப் பயணம் மேற்கொள்ளுதல் அல்லதுபயணிகளுக்குவழிகாட்டுதல்,சுற்றுலாமேற்கொள்ளும் பயணிகளுக்குத் தேவையானவசதிகள் செய்துகொடுத்தல் முதலானபணிகளைச் செய்யும் தொழிலகம் சுற்றுலாஎனப்பெறும்’’.

சுற்றுலாவியல் என்பதுசுற்றுலாப் பயணிகள் மட்டுமேஅடங்கியதல்ல. சுற்றுலாப் பயணிகளுக்குத் துணைபுரியும் வழிகாட்டிகள்,சுற்றுலாக் கழகங்கள்,சுற்றுலாப்

பயணமுகவர்கள்,தங்கும்விடுதிகள்,போக்குவரத்துவசதிகள் போன்றஅனைத்தையும் உள்ளடக்கியதேசுற்றுலாவியல் ஆகும்.

**சுற்றுலாவின் வகைகள் (வுலீநுளு முகு வுமுருசுஜளுஆ)**

தற்காலத்தில் சுற்றுலாமக்களிடையேபெருஞ் செல்வாக்குபெற்றுள்ளது. இதுஒருதொழில் புகையில்லாத தொழில்துறை(ளுஅழமநடநளள iனைரளவசல).சுற்றுலாவாணிகம் ஒருநாட்டிற்குஅந்நியச் செலாவணியைஈட்டித்தந்து,செலுத்துதல் சமநிலையை(டீயடயஉந ழக P்யலஅநவெ)எய்தஉதவுகிறது. எனவே இன்றுஅனைத்துநாடுகளும் போட்டிபோட்டுக் கொண்டு,சுற்றுலாவைமேம்படுத்துவதில் அதிகநாட்டம் செலுத்துகின்றன. சுற்றுலாபலவகைப்பட்டது. நோக்கம்,தன்மை, இடம், தூரம்,பயன்பாடு,தங்குகின்றகாலம் ஆகியவற்றைஅடிப்படையாகக் கொண்டுசுற்றுலாபலவகையினவாகப் பகுக்கப்படுகின்றது.

பொதுவாகச் சுற்றுலாவைநாம் (அ) உள்நாட்டுச் சுற்றுலா (னுழஅநளவiஉ வுழரசளைஅ ழச ஐவெநசயெடவுழரசளைஅ) (ஆ) அயல் நாட்டுசுற்றுலா(குழசநபைெ வுழரசளைஅ)என இருவகையாகப் பகுக்கிறோம். அயல்நாட்டுச் சுற்றுலாவைப் பன்னாட்டுச் சுற்றுலா (ஐவெநசயெவழையெட வுழரசளைஅ) எனவும் அழைக்கலாம். இனி,சுற்றுலாவின் வகைககளைப் பற்றிக் காண்போம்.

**1.உள்நாட்டுச் சுற்றுலா(னுழஅநளவiஉ வுழரசளைஅ)**

ஒருநாட்டில் வாழும் மக்கள் தமதுநாட்டிற்குள்ளேயேசுற்றுப்பயணம் செய்வதுஉள்நாட்டுச் சுற்றுலாவாகும். இதுசிக்கனமானது,எளிதானது,சிக்கல்கள் அற்றது. உள்நாட்டுச் சுற்றுலா,தேசியச் சுற்றுலாஅல்லதுநாட்டுச் சுற்றுலாஎனவும் அழைக்கப் பெறுகின்றது. சுற்றுலாப் பயணியருள் 90 சதவிகிதத்தினர் உள்நாட்டுச் சுற்றுலாவைமேற்கொள்வதாகஉலகச் சுற்றுலாக் கழகப்புள்ளிவிபரம் தெரிவிக்கின்றது. இப்பயணியர் பெரும்பாலும் இன்பப் பொழுதுபோக்கு, இறைவழிபாடு,விடுமுறை,உடல் நலன்,கல்வி,விளையாட்டுப் போட்டிஇவாணிபம் போன்றவற்றின் அடிப்படையில்தான் பயணம் செய்வர். இதற்குபாஸ்போர்ட்,விசா,நாணயமாற்று,மொழிமுதலானசிக்கல்கள் எவையுமில்லை.

**உள்நாட்டுச் சுற்றுலாவின் தன்மை**

உள்நாட்டுச் சுற்றுலாவிற்கான தூரம் இதுகாறும் துல்லியமாகவரையறுக்கப்படவில்லை. பொதுவாக 25 மைல் தொலைவிலிருந்து 100 மைல் தொலைவுவரைபயணம் செய்தலைஉள்நாட்டுச் சுற்றுலாஎனலாம். இவ்வரையறைநாட்டிற்குநாடுவேறுபடுகின்றது. ஆஸ்திரேலியாவில் 25 மைல் பயணம் செய்பவர் உள்நாட்டுச் சுற்றுலாவில் கலந்துகொண்டதாகக் கருதப்படுகிறார். ஆனால் அமெரிக்காவிலோஉள்நாட்டுச் சுற்றுலாவின் குறைந்தஅளவுபயண தூரம் 50 மைல்கள்.

பன்னாட்டுச் சுற்றுலாஅமைப்பு(ஐருழுவுழு) உள்நாட்டுச் சுற்றுலாபற்றிக் கீழ்க்காணும் விளக்கத்தைக் கூறுகின்றது.

“ஒருநபர் தான் வாழும் இடத்தைவிட்டு,தன்னாட்டிற்குள்ளேயேவேறு இடத்திற்குப் பயணம் சென்று,எந்தவிதபணவருவாயுமின்றி,தான் தங்குமிடங்களில் 24 மணிநேரம் அல்லதுஒரு இரவுதங்கியிருப்பவர் உள்நாட்டுப் பயணிஎனஅழைக்கப்படுபவார்”.இவ்விளக்கத்தில் பயண தூரத்தைப் பற்றியகுறிப்பு இல்லை. ஆனால் காலத்தைப்பற்றியகுறிப்புஅதாவதுகுறைந்தது 24 நேரம் தங்குதல் பற்றிக் குறிப்பிடுகின்றது. எனவே 24 மணிநேரத்திற்குக் குறைவானபயணம் உள்நாட்டுச் சுற்றுலாஆகாது. உள்நாட்டுச்சுற்றுலாவில்குறைந்தசெலவில் பல இயற்கையழகுமிக்க இடங்களையும் கவின்மிகுநினைவுச் சின்னங்களையும் கண்டுமகிழலாம்.

**2.பன்னாட்டுச் சுற்றுலா**(ஐவெநசயெவழையெட வுழரசளைஅ)

ஒருவர் தனதுதாய் நாட்டைவிட்டுவேறுநாடுகளுக்குப் பயணம் செய்வதுபன்னாட்டுச் சுற்றுலாஅல்லது அயல் நாட்டுச் சுற்றுலாஎனப்படும். வெளிநாட்டுச் சுற்றுலாவிற்குகடவுச்சீட்டு (பாஸ்போர்ட்) தங்கும் உரிமை (விசா),ஆரோக்கியச் சான்றிதழ் முதலானஆவணங்கள் தேவைப்படுகின்றன. இதற்குஆகாயவிமானப் பயணம் பேருதவிபுரிகின்றது. பன்னாட்டுச் சுற்றுலாவிற்குஏற்பாடுகள் செய்யப் பலபயணஅலுவலகங்கள் உள்ளன. மேற்குஐரோப்பியநாடுகள் பன்னாட்டுச் சுற்றுலாவில் பேரார்வம் காட்டுகின்றன. இவற்றுள் ஜெர்மனிமுதலிடம் வகிக்கின்றது. பன்னாட்டுச் சுற்றுலாஉலகமக்களிடையேநல்லெண்ணத்தையும்,நட்பையும் வளர்த்து,அமைதிக்குவழிகோலுகின்றது.

(கடவுச் சீட்டு,தங்கும் உரிமைபற்றியசெய்திகளைப் பயணஆவணங்கள் எனும் தலைப்பில் விரிவாகக் காணலாம்.)

பயணியரின் எண்ணிக்கையைஅடிப்படையாகக் கொண்டுசுற்றுலாவினை (அ) தனிநபர் சுற்றுலா (ஆ) குழுச் சுற்றுலாஅல்லதுமக்கள் சுற்றுலா(ஆயுளுளு வுழுருசுஐளுஆ) என இருவகையாகப் பிரிக்கலாம்.

**3.தனிநபர் சுற்றுலா**(ஐனெiைனைரயட வுழரசளைஅ)

ஒருவர் மட்டும் தனியாகச் சுற்றுலாமேற்கொள்வதனைத் தனிநபர் சுற்றுலாஅல்லதுதனிச் சுற்றுலாஎன்கிறோம். இதில் இவர் சுற்றுலாப் பயணத்திற்குவேண்டியஅனைத்துஏற்பாடுகளையும் தானேசெய்துகொள்ளவேண்டும். சிலர் தனிச் சுற்றுலாவைவிரும்புவர். இருப்பினும் இதில் கலகலப்போ,மகிழ்ச்சியோ இருக்காது.

4.**குழுச் சுற்றுலா**(Group Tourism)

ஒருவருக்குமேற்பட்டபயணிகள் குழுவாகச் சேர்ந்து,சுற்றுலாசெல்வதுகுழுச் சுற்றுலாவாகும். அதிகஎண்ணிக்கையில் கலந்துகொண்டால், இதனைமக்கள் சுற்றுலா(ஆயளள வுழரசளைஅ) எனவும் அழைப்பர். குழுச் சுற்றுலாமகிழ்ச்சியும் பாதுகாப்பும் நிறைந்ததுகுறைந்தசெலவில் பல இடங்களுக்குவசதியாகச் சென்றுதிரும்பமுடிகிறது. இதனால் சகோதரத்துவமும் நட்பும் வளர்கிறது. பள்ளி,கல்லூரி மாணவர்கள்,அலுவலகப் பணியாளர்கள்,தொழிலாளர்கள் ஆகியோருக்கு இதுவேஏற்றது வசதியானதுசிரமங்கள் அற்றது. அரசாங்கம் ஆசிரியர்களுக்காகரயிலில் கட்டணச் சலுகைஅளிக்கிறது. இதனால் குறைந்தவருமானம் உள்ளவர்களும் தொலைதூர இடங்களுக்குச் சுற்றுலாமேற்கொள்ள இயலுகிறது.

அண்மைக் காலத்தில் குழுச் சுற்றுலாபலராலும் விரும்பப்படுகிறது. கிழக்குஐரோப்பியநாடுகளில் இது மிகுந்தசெல்வாக்குப் பெற்றுள்ளது. தனியார் நிறுவனங்கள் தங்களதுதொழிலாளர்களுக்குச் சுற்றுலாச் செல்ல,சம்பளத்துடன் விடுமுறையும் பொருளுதவியும் புரிந்துவருகிறது. தனிநபர் சுற்றுலாவைக்காட்டிலும் குழுச் சுற்றுலாசிரமங்கள் அற்றதுமகிழ்ச்சிகரமானது.

5.**பண்பாட்டுச் சுற்றுலா** (Cultural Tourism)

பிறநாட்டுமக்கள் அவர்களதுவரலாறு,நுண்கலைகள்,தத்துவங்கள்,பழக்கவழக்கங்கள் அயல்நாட்டுமக்களதுபண்பாடு,கல்விநிலை,அறிவியல் வளர்ச்சிபோன்றவற்றைக் காண்பதற்காகமேற்கொள்ளப்படும் பயணமேபண்பாட்டுச் சுற்றுலாஎனப்படும். ஒருநாட்டுமக்களின் சமுதாயவாழ்க்கை,கலை,அருங்காட்சியகம்,வரலாற்றுச் சின்னங்கள்,நினைவுச் சின்னங்கள்,திருக்கோயில்கள்,விழாக்கள், இசை,நடனம்,நாட்டுப்புறப் பாடல்கள்,திருவிழாக்கள் ஆகியனவற்றைக் கண்டுகளிப்பதேபண்பாட்டுச் சுற்றுலா,ஒருநாட்டுமக்களின் பண்பாட்டைப் புரிந்துகொள்வதால் பன்னாட்டுஉறவுவளரும்.

இந்தியாபண்பாட்டுப் பாரம்பரியம் மிக்கதுஏறத்தாழ 5000 ஆண்டுகட்குமுற்பட்டவரலாற்றுப் பெருமைகொண்டது. ஆன்மிகத் துறையில் உலகிற்கோர் வழிகாட்டியாகத் திகழ்வது. எனவே இந்தியாவில் கலாச்சாரமையங்களுக்குப் பஞ்சமில்லை. நம் நாட்டின் கலாச்சாரமையங்களுள் முக்கியமாகக் கருதத்தக்கவை-

1 அஜந்தா,எல்லோரா,எலிபெண்டா,சித்தன்னவாசல் முதலானகுடைவரைக்கோயில்கள்.

2. நாளந்தா,சாரநாத், கயா,குசிநகரம்,காஞ்சிபுரம் முதலானபௌத்தத் தலங்கள்.

3. கோவா,பாடலிபுத்திரம், ஹம்பி,பாதாமி, கஜுராஹோ,கொனாரக்,புவனேசுவரம்,சீரங்கம்,பூரி,மதுரா,காசி,

இராமேசுவரம்,மதுரை,தஞ்சாவூர்,ஆக்ராமுதலானவரலாற்றுமுக்கியத்துவம் மிக்கபண்பாட்டுமையங்கள் குறிப்பிடத்தக்கவைகளாகும்.

**6.கல்விச்சுற்றுலா (**நுனரஉயவழைெயட வுழரசளைஅ)

அரியனவற்றைபெரியனவற்றைபுதியனவற்றைக் காணவேண்டும்தனதுஅறிவைப் பெருக்கிக் கொள்ளவேண்டும்,ஆராய்ச்சிமனப்பான்மையைவளர்த்துக் கொள்ளவேண்டும் எனும் தூய நோக்கத்துடன் செய்யும் பயணம் கல்விச் சுற்றுலாஎனப்படும். அண்மையில் கல்விப்பாடத் திட்டத்தில் சுற்றுலாவும் ஒருதிட்டமாக,பாடமாகச் சேர்க்கப்பட்டுள்ளது. எனவேஆசிரியர்களும் மாணவர்களும் அறிவியல்,புவியியல்,கலை - முக்கியத்துவம் பெற்ற இடங்களுக்குச் சுற்றுலாசெல்கின்றனர்.

கலைபயிலும் மாணவர்கள் தஞ்சாவூர்,மாமல்லபுரம்,கிருஷ்ணாபுரம்,பேரூர்,தாரமங்கலம்,தாடிக்கொம்பு, ஹளபீடு, பேலூர், கஜுராஹோமுதலானகலைவளம் மிக்க இடங்களுக்கும்,அறிவியல் மாணவர்கள் தும்பாராக்கெட் ஏவுதளம்,கோளரங்கம் (பிளானடோரியம்) முதலானஅறிவியல் சோலைகளுக்கும்,தாவரவியல் மாணவர்கள்,உதகமண்டலம்,களக்காடு - முதலானதாவரப்பண்ணைகளுக்கும் தங்கள் பாடங்களின் தொடர்பானகண்காட்சிகளுக்கும்,கருத்தரங்குகளுக்கும் பணிப்பட்டறைகளுக்கும் (றுழசம ளாழிள) செல்லுதல் கல்வியைமேம்படுத்தும். கல்விச் சுற்றுலாவின் மூலம் மாணவர்கள் நேரடிக் கல்விபெறும் வாய்ப்புள்ளது. தனிச் சிறப்புப் படிப்பு,மேல்படிப்பு - ஆகியவைமேற்கொள்ளகல்விச் சுற்றுலாவேதலைசிறந்தது. கீழ்க்காண்பனவற்றிற்காகமேற்கொள்ளப்படும் பயணங்கள் கல்விச் சுற்றுலாவில் அடங்கும்.

அ).அறிவியல் தொழில்நுட்பமையங்கள்.

ஆ.)புவியியல் முக்கியத்துவம் மிக்க இடங்கள்.

இ)வரலாற்றுச்சின்னங்கள்,நினைவுச்சின்னங்கள்.

ஈ.)பண்பாட்டுமையங்கள்.

உ)ஆய்வுக் கருத்தரங்குகள்,பணிப்பட்டறைகள்.

ஊ)கலைக்கூடங்கள்,அருங்காட்சியகங்கள்.

ஆவணக்காப்பகங்கள்

எ)மேற்பட்டப்படிப்பு,ஆய்வு,தனிச் சிறப்புப் பட்டம்.

**7.சமூகச் சுற்றுலா (Social Tourism)**

சுற்றுலாவிற்கானசெலவினத்தைத் தாங்கிக் கொள்ளமுடியாதவர்களால் மேற்கொள்ளப்படும் சுற்றுலாவே,சமூகச் சுற்றுலா ஆகும். ‘‘சமூகத் தலையீடின்றிஅதாவதுஅந்நபர் சார்ந்துள்ளசமுகநிறுவனத்தின் உதவியின்றிபயணம் செய்யமுடியாது” எனும் நிலையில் உள்ளவர்களேசமூகச் சுற்றுலாவில் ஈடுபடுவர். சிலசமயங்களில் அரசாங்கமேமுன்வந்துமக்கள் சுற்றுலாசெல்வதற்கானவசதிகளையும்,சலுகைகளையும் அளித்து,ஏற்பாடுசெய்துதருவதே சமூகச் சுற்றுலாவாகும்.

எனவேதான் ஆண்ட்ரபாப்ளிமாண்ட (யுனேசுயு "ீமூடுஜஆமுவே)என்னும் அறிஞர் ‘‘சுற்றுலாவிற்கானசெலவுகளைத்தான் சார்ந்திருக்கும் சமுதாயஅமைப்புகளின் ஆதரவுடனும்,அவைகளின்உதவிபெற்றுக் கொண்டும் அமைத்துக் கொள்வதேசமுதாயச் சுற்றுலா” எனவரையறுத்துள்ளார்.

அடுத்து‘‘சமூகச் சுற்றுலாஎன்பதுகுறைந்தவருவாய் உடையவர்கள்,முழுவதும் மற்றவர்களின் ஆதரவுடனும்,உதவியுடனும் பயணம்செல்வதாகும்” என்றுறு. ஹன்சீகர் (னுச. று.ர்ருனேஜமுநுசு)சமூகச் சுற்றுலாபற்றிக் கூறியுள்ளகருத்தும் உற்று நோக்கத்தக்கது.

பொதுவாகஉடலுழைப்பைமட்டுமேநம்பியிருக்கும் குறைந்தவருவாய் பெறும் தொழிலாளர்கள் சுற்றுலாசெல்வதுசிரமம். எனவேஅவர்களிடம் உள்ளசிறுசேமிப்புடன்,தலநிறுவனங்களோ,தொழிற்சங்கங்களோவழங்கும் பணத்தையும் சேர்த்து,சுற்றுலாசெல்கின்றனர். பொதுவாக இத்தகையசுற்றுலா,அத்தொழிலாளர் வாழும் இடத்திற்குஅப்பால் மாற்றுச் சுற்றுப்புறச் சூழல் கொண்ட இடமாக இருக்கும்.

**சம்பளத்துடன் கூடியவிடுமுறை(Paid Holidays)**

சுற்றுலாசெல்லவிரும்பும் ஏழைத் தொழிலாளர்களுக்குஉதவும் வகையில்,பலநாடுகளில் சம்பளத்துடன் கூடியவிடுமுறைஉருவாக்கப்பட்டுள்ளது. இதனால் ஏழைத் தொழிலாளியும் சுற்றுலாசென்று,புத்துணர்ச்சிபெற்று,பணியில் உத்வேகத்துடன் ஈடுபடமுடிகிறது.

பலநாடுகள்,குறிப்பாகவளர்ச்சியடைந்தநாடுகள் தங்களதுதொழிலாளர்கள் சமூகச் சுற்றுலாவைமேற்கொள்ளஉதவிகளைச் செய்துவருகின்றன. நம் நாட்டிலும் மத்திய,மாநிலஅரசுகள் தமதுஊழியர்களுக்குவிடுமுறைப் பயணச் சலுகைகளை(டுநயளந வசயளநடஊழஉெநளளழைெ)அளித்து,குடும்பத்துடன் குதூகலத்துடன் சென்றுவரஏற்பாடுகள் செய்துள்ளன.

**8.தொழில் சுற்றுலா(Business Tourism)**

தற்காலத்தில் வணிகர்கள்,தொழிலதிபர்கள் தங்களதுதொழில்,வாணிபம் தொடர்பாகஅயல்நாடுகளுக்குப் பலமாநாடுகளில் கலந்துகொள்ளப் பயணம் மேற்கொள்கின்றனர். இம்மாநாடுகளில் தொழில் வல்லுநர்களும் கலந்துகொள்வதால்,தொழிலதிபர்கள் பெரிதும் பயனடைகின்றனர். எனவே இவற்றின் முக்கியத்துவம் நாளுக்குநாள் அதிகரிக்கின்றது. இம்மாநாடுகளால் ஆடம்பர,சொகுசுஓட்டல்கள் வளர்ந்துவருகின்றன. சிலதொழில் நிறுவனங்கள் தங்களதுஉற்பத்திப் பொருள்களைஅதிகம் விற்பனைசெய்யும் கடை முதலாளிகளை,அயல்நாடுகளுக்குத் தமதுசெலவிலேயேஅழைத்துச் செல்கின்றனர். எடுத்துக்காட்டாகடி.வி.எஸ்.,நிறுவனம் தனதுவண்டிகளை (டி.வி.எஸ்.50,டி.வி.எஸ்., சூப்பர், ஸ்போர்ட்ஸ்,டிவிஎஸ் சுசூகி) அதிகம் விற்கும் விற்பனையாளர்களைஅயல்நாட்டுச் சுற்றுலாவிற்குஅழைத்துச் செல்வதைச் சுட்டலாம். தொழில் சுற்றுலாவினால் தொழில் விருத்தியடைகின்றன.

## 9.மருத்துவச் சுற்றுலா(Health Tourism)

எங்கும் எதிலும் கலப்படம். தண்ணீர்,காற்று,உணவுப்பொருள் ஆகியஅனைத்துமேகெட்டுவிட்டன் மாசடைந்துவிட்டன. தொழிற்சாலைகளின் புகையும்,கரியும் மோட்டார் வண்டிகளின் புகையும் மனிதனுக்குக் கேடுபயக்கின்றன. நகரவாழ்க்கைநரகவாழ்க்கையாகஉள்ளது. சுற்றுப் புறச்சூழல் மாசடைந்துவிடுவதால்,பலர் இயற்கையானநல்லகாற்றுகிடைக்கும் கடற்கரைகளுக்கும்,பூங்காக்களுக்கும்,அருவிகளுக்கும் செல்லவேண்டியதேவைஏற்படுகின்றது.

சுற்றுப்புறச் சூழல்கள் ஆரோக்கியத்தைப் பாதிப்பதால் பலர் உடல் நலம் கெட்டு,உடல் நலன் பேணசுவிட்சர்லாந்துமுதலானநாடுகளுக்குப் பயணம் செய்கின்றனர். கடற்கரைகள்,வெந்நீர் ஊற்றுகள்,ஆறுகள்,மலைப் பகுதிகள் ஆகிய இடங்களுக்குஉடல் நலம் பேணச் செல்லுதலேமருத்துவச் சுற்றுலாவாகும். குற்றாலஅருவியில் விழும் நீரில் பச்சிலைசாறுகலந்துள்ளது. இதுஉடல் நலத்திற்குநல்லது. எனவேபலர் அங்குநீராடச் செல்கின்றனர். செல்வர்கள் மத்தியதரைக் கடல்,கருங்கடற்கரைப் பகுதிகளுக்கும் இதமானஆல்ப்ஸ் மலைப் பகுதிகளுக்குச் செல்வதும் மருத்துவச் சுற்றுலாவேயாகும்.

## 10.இன்பச் சுற்றுலா (அல்லது) மகிழ்வுச் சுற்றுலா(Pleasure Tour)

சுற்றுலாமக்களுக்குமகிழ்ச்சியைவழங்குகின்றது இன்பஉணர்வைத் தருகின்றது. பயணியர் பலர் கோடைவெயிலைத் தணிக்க, குளு குளுஉதகைக்குச் செல்கின்றனர். உள்நாட்டுச் சுற்றுலாவினர் பாதிக்குமேல் இன்பநுகர்ச்சிக்கும் மகிழ்ச்சிக்கும் மட்டுமேசுற்றுலாசெல்கின்றனர். உலகப் புகழ்பெற்றபாரிஸ்,நியூயார்க்,சிங்கப்பூர், ஹாங்காங் டோக்கியோமுதலானநகரங்களில் எழிலார்ந்தநடனம் கேளிக்கை, சூதாட்டம், பாப் இசைஆகியன இரவும் பகலும் நடைபெறுகின்றன. மகிழ்ச்சியாகப் பொழுதுபோக்கவே இவர்கள் இவ்விடங்களுக்குச் செல்கின்றனர்.

அண்மைக்காலஆய்வின்படிஅமெரிக்காவில்,பன்னாட்டுச்சுற்றுலாசெல்வோருள் 75 சதவீதமும்,உள்நாட்டுச் சுற்றுலாசெல்வோருள் 50 சதவீதமும் இன்பநோக்குப் பயணியரேயாவர் புது மணமக்கள் தேன்நிலவிற்காகச் செல்வதும் இன்பச் சுற்றுலாவேஎன்பதனைநீங்கள் அறிவீர்கள்

### 11.அரசியல் சுற்றுலா (Political Tourism)

தங்கள் நாட்டுஅரசாங்கவிழாவில் கலந்துகொள்ளச் செல்வதுஅரசியல் சுற்றுலாவாகும்.

### 12.ஓய்வுச் சுற்றுலா(Leisure Tourism)

அலுவலகத்தில் அல்லதுதொழிற்கூடத்தில்,பணிபுரிந்துகளைத்தபோது,சுற்றுலாமேற்கொண்டு இளைப்பாறுதல் ஓய்வுச் சுற்றுலா. எடுத்துக்காட்டாக உள் அரங்குவிளையாட்டுகளில் கலந்துகொண்டுஉற்சாகம் அடையலாம்.

### 13.பருவகாலச் (காலநிலை) சுற்றுலா(Monsoon Tourism)

சுற்றுலாப் பயணியர் தட்பவெப்பநிலைக்கேற்பசுற்றுலாமேற்கொள்வதைப் பருவகாலச் சுற்றுலாஅல்லதுகாலநிலைச் சுற்றுலாஎனஅழைக்கிறோம். குளிர்காலத்தில் வெதுவெதுப்பானகடற்கரைப் பகுதிக்குச் செல்வதும் கோடையில் மலைவாழிடங்களுக்குச் செல்வதும் நலம் பயக்கும்.

நம் பாரதத்திற்குஅக்டோபர் முதல் மார்ச் வரைஉள்ளகாலக் கட்டத்தில் அயல் நாட்டுப் பயணியரின் வருகைஅதிகஅளவில் உள்ளது. ஆனால் பருவகாலங்களிலோமிகமிகக் குறைந்துவிடுகிறது. எனவேதான் இந்தியத் தொழில் இணையம் (ஊழகெநன- நசயவழைெ ழக ஐனெயைெ ஐனௌரளவசல)பருவகாலச் சுற்றுலாவில் நாம் நாட்டம் செலுத்தவேண்டியதன் அவசியத்தைவலியுறுத்துகிறது. உலகச் சுற்றுலாவில் நம் பாரதத்தின் விகிதம் 0.4 சதவிகிதம் தான். இயற்கைக் காட்சி,சுற்றுச் சூழல், இதமானதட்பவெப்பநிலைஆகியவைநிறைந்த,எளிதில் அடையக் கூடியபகுதிகளைத் தேர்ந்தெடுத்துசிறப்புப் பருவச் சுற்றுலாத் திட்டத்தை(ளிநஉயைடஆழளெழழெ ீயஉம- யபந) அயல்நாட்டுப் பயணியர்க்குஅறிமுகப்படுத்தவேண்டும். கேரளம்,மத்தியப்பிரதேசம்,கர்நாடகம்,கோவா, ஜம்முகாஷ்மீர்,உத்தராஞ்சல்,சிக்கிம், இமாசலபிரதேசம்,ஒரிஸா ஆகியமாநிலங்கள் இச்சுற்றுலாவிற்குத் தேர்ந்தெடுக்கப்படலாம்.

### 14. விடுமுறைச் சுற்றுலா(Holiday Tour)

அன்றாடம் உழைத்துழைத்துஅலுத்துப் போனதொழிலாளர்களும் அலுவலர்களும் அலுவலகப் பணியாளர்களும் சனி,ஞாயிறுவிடுமுறைகளில் டிசம்பர் விடுமுறைகளில்,கோடைவிடுமுறைகளில் தனியாகவோகுடும்பத்துடனோவெளியூருக்குச் சென்றுபொழுதுபோக்கிவிட்டுமறுமலர்ச்சியுடன்

வீடுதிரும்புவதுவிடுமுறைச் சுற்றுலாவாகும். மேமாதவிடுமுறையில் பலர் வெளிமாநிலங்களுக்கும் டில்லி,ஆக்ரா, ஜெய்ப்பூர்,மும்பை,சென்னைமுதலான இடங்களுக்கும் நீண்டதோர் விடுமுறைச் சுற்றுலாவைமேற்கொள்வதும் உண்டு. (விடுமுறைநாள் சுற்றுலாஎனும் தலைப்பில் விரிவானசெய்திகள் தரப்பட்டுள்ளன.)

### 15. விளையாட்டுமற்றும் துணிகரச் செயல் சுற்றுலா (Sports and Adventure Tourism)

வீரர்கள் விளையாட்டுப் போட்டிகளில் பங்குகொள்ளவும் பார்வையாளராகவும் அவைநடைபெறும் இடங்களுக்குச் செல்லுதல் விளையாட்டுச் சுற்றுலாஎனப்படும். பண்டைக்காலத்தில் கிரேக்கவீரர்கள் விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ளஒலிம்பியாசென்றனர். முதல் ஒலிம்பிக் போட்டி கி.மு.776-இல் தொடங்கியது. இதனைத்தொடர்ந்துநான்காண்டுகளுக்குஒருமுறைஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிநடைபெறும்.

கோல்ப் விளையாட்டு,சீமான்களைப் பெரிதும் கவர்ந்தது. இன்றுதேசியஆசியபன்னாட்டுப் போட்டிகள் வெகுசிறப்பாகநடைபெறுகின்றன. உலகஅளவில் லட்சக் கணக்கானோர் இதனைப் பார்த்துமகிழ்கின்றனர். கி.பி.2000 ஆண்டில் ஆஸ்திரேலியாவில் உள்ளசிட்னியில் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்றன. 2004 இல் ஏதென்சில் இப்போட்டிநடைபெறஉள்ளது. இவற்றைக் காணச் செல்வதும் விளையாட்டுச் சுற்றுலாவே.

துணிகரச் செயல்களில் தமதுஉயிரையும் பணயம் வைத்துஅவற்றில் ஈடுபடுவோர் துணிகரச் செயல் சுற்றுலாவில் ஈடுபடுகின்றனர். பண்டையகிரேக்கத்தில் பலவீரர்கள் சிங்கம்,காளைமுதலானவிலங்குகளைஅடக்கும் போட்டிகளிலும் ஈடுபட்டனர். இவற்றைவேடிக்கைபார்க்கவும் ஆயிரக் கணக்கானோர் துணிகரச் சுற்றுலாவில் ஈடுபட்டனர். இன்றும் ஸ்விட்சர்லாந்தில் நடைபெறும் துணிகரவிளையாட்டுக்களில் பங்குகொள்ளஅவற்றைவேடிக்கைபார்க்கஆண்டுதோறும் ஆயிரக் கணக்கானோர் சுற்றுலாசெல்கின்றனர். மலையேறுதலும் துணிகரச் செயலின் பாற்பாடும்.நீர்ச்சறுக்குவிளையாட்டுகளிலும் இயந்திரத்தின் உதவியின்றி, இறக்கைகட்டிப் பறத்தல் (ஐைெ ளரசகைபெ) ஆகியவற்றிலும் பலர் ஈடுபடுகின்றனர். இவைஅனைத்தும் துணிகரச் சுற்றுலாவே. இதனைஅயல்நாட்டுப் பயணியர் அதிகம் விரும்புகின்றனர்.

### 16. சமய,ஆன்மிகச் சுற்றுலா (Religious Tourism)

சமயப் பழக்கவழக்கங்கள் மனிதப் பண்பாடுகளைஉறுதிப்படுத்துவதில் முக்கியப் பங்குவைப்பதாகச் சமயப் பெரியோர்கள் கூறுவர். அத்தகையசமயப் பழக்கவழக்கங்கள் நாளடைவில் சமயநம்பிக்கைகளாகஉருப்பெற்று,ஆன்மீகக் கோட்பாடுகளாகி,மக்கள் உள்ளங்களில் நிலைபெறுகின்றன. அவ்வாறுநிலைபெற்றுவிட்டஆன்மீகக் கோட்பாடுகளின் பால்

அசையாநம்பிக்கைமக்களிடத்திலேசுற்றுலாப் பயணங்களுக்குத் தூண்டுகோலாகிறது. மக்களைஆன்மீகச் சுற்றுலாவிற்குஅணியமாக்குகிறது.

### 17. சங்கச் சுற்றுலா

சிலநாடுகளில்அரசேபலசலுகைகளைவழங்கி,குறைந்தகட்டணத்தில் சங்கக் குழுக்களைச் சுற்றுலாசெல்வதற்குஏற்பாடுகளைச் செய்துதருகின்றது. செல்லவேண்டிய இடம்,பார்க்கவேண்டியவை,தங்கவேண்டியநாட்கள் - ஆகியஅனைத்தையும் அரசேமுடிவெடுத்துச் செயல்படுத்துகின்றது. இதனைப் போன்றசுற்றுலாக்களில் பயணியர்களுக்குஎவ்விதச் சிரமும் இருப்பதில்லை. சோவியத்ருஷ்யா,மற்றும் கிழக்குஐரோப்பியபொதுவுடைமைநாடுகளும் இதுபோன்றசங்கச் சுற்றுலாக்களைஏற்பாடுசெய்துவருகின்றன.

### 18. ஈகோ -டூரிசம் (Eco-Tourism)

அண்மைக் காலத்தில் உலகெங்கிலும் சுற்றுச் சூழல் சுற்றுலாமிக்கசெல்வாக்குபெற்றுள்ளது. கவின்மிகு இயற்கைச் சூழலைக் கொண்டுள்ளமிகக்குறைந்தவருவாய் பெறும் நாடுகள் இச்சுற்றுலாவைமுன்னேற்றிப் பெரும் பொருள் சம்பாதிக்கின்றன. சபரிமலைஆரியங்காவுப் பகுதிகள்,கொடைக்கானல், இமயமலைப் பகுதிகள் ஆகியனஈ.கோசுற்றுலாவிற்குச் சிறந்தவை. இன்றுஈக்வேடார் நாட்டின் அமேசான் பகுதியில் வசிக்கும் குவிச்சுவா இனமக்கள் (ஞரஉைாரய ஊழஅஅரவைநைள ைந நுஉரயனழசயை யுஅயணயெ)பலர் விரிவுபடுத்தப்பட்டவாணிகவேளாண்மைக்குப் பதிலாகஈகோசுற்றுலாவைவளர்த்துவருகின்றனர்.

சுற்றுச்சூழல் கெடாதவாறு இச்சுற்றுலாநடைபெறுகிறது. யேவரச வுழரசளைஅ. புசநநஎெழரசளைஅஇ சுநளிழளெடைிடந வுழரசளைஅஇளுழகவ வுழரசளைஅ -எனும் பெயராலும் இது அழைக்கப்படுகிறது. இதுமக்கள் சுற்றுலாவிற்குமாற்றாகஅமைந்துள்ளது. இதில் இயற்கைக் காட்சிகளைக்காண்பதில் பயணியர்பெருமகிழ்ச்சியடைகின்றனர்.

### 19. குளிர்காலச் சுற்றுலா - (Winter Tourism)

குளிர்காலத்தில் மேற்கொள்ளப்படுவதுகுளிர்காலத் சுற்றுலாவாகும். இதுஐரோப்பியநாடுகளில் பெரும் செல்வாக்குப் பெற்றுள்ளது.

### 20. சுற்றித்திரியும் சுற்றுலா -(Rolling Tourism)

இதில் கலந்துகொள்ளும் பயணியர் மற்றசுற்றுலாப் பயணிகளிலிருந்துவேறுபடுவர். இவர்கள் ஒரு இடத்தில் இருந்துமற்றொரு இடத்திற்கு இடைவெளியின்றிவிரைவாகபயணம் மேற்கொள்வர்.

இவர்கள் பயணம் தொடர்ச்சியானதாகவே இருக்கும். இவர்கள் ஐந்து இரவுகளுக்குமேல் தொடர்ந்து ஓர் இடத்தில் தங்குவதில்லை.

### 21. கடற்கரைச் சுற்றுலா(Beach Tourism)

பன்னாட்டுச் சுற்றுலாபயணியரைமகிழ்விக்கும் முக்கியமானசுற்றுலாமையங்களுள் இயற்கைகாட்சிகளுடன்கூடிய இடங்கள்,வரலாற்றுசிறப்புமிக்கபண்பாட்டுமையங்கள்,மலைவாழிடங்கள்,கடற்கரைகள்,விலங்குகள்,பறவைகள்,சரணாலயங்கள் முதலியவைஅடங்கும். இவற்றுள் கடற்கரைதலங்களில் பயணியரைக் கவரும் வகையில் இதமானகாலநிலையும் வீரதீரசெயல்களுக்குஏற்றநீர் விளையாட்டுகளும் இடம்பெறுகின்றன. சுத்தமானகாற்றும் சூரிய ஒளியும் அங்குகிடைக்கின்றன.எனவேதான் சுற்றுலாபயணியர் பலர் மத்தியக் தரைக்கடல் பகுதிகளில் உள்ளகடற்கரைக்குச் சென்றுமகிழ்கின்றனர். அங்குஅவர்கள் இன்பப் பொழுதுபோக்குதக்ககுடியிருப்புகளும் உள்ளன. உலகளவில் புகழ்பெற்றகடற்கரைவாசஸ்தலங்களுள் அமெரிக்காவின் மெக்சிகன் கடற்கரை. கலிபோர்னியா,ப்ளோரிடா, ஹவாய் தீவுகள்,மயாமிகடற்கரை(ஆயைஅயடிநயஉா)மத்தியதரைக்கடல் பகுதியில் உள்ளமான் டீ கார்லோ(ஆழவெந ஊயசடழ) நைஸ் (ஶைஉந)கேன்ஸ் (ஊயநெள) போன்றகடற்கரைமையங்களும் சிரியாவில் உள்ளதர்தூஸ்,லடாக்கிய,கடற்கரைகளும்,ஜப்பானில் உள்ளசெயற்கைகடற்கரைமுதலானவையும் குறிப்பிடத்தக்கனவாகும்.

### 22. விண்வெளிச்சுற்றுலா- (Space Tourism)

அண்மைக்காலத்தில் அறிமுகமானவிண்வெளிச் சுற்றுலாகோடீஸ்வரர்களுக்கானஅதிஆடம்பரச் சுற்றுலா. இதனைஅறிமுகப்படுத்தியபெருமை ரஷ்யாவைச் சாரும். அமெரிக்காவின் நாசாவுக்கு (ஹீஸ்டன் அருகே) இணையான ரஷ்யாவின் வான் வெளிமையம்,விண்வெளியில் உள்ளதன்னாட்டுஆய்வுமையத்திற்குச் சுற்றுலாப் பயணியரைஅழைத்துச் செல்கிறது. அமெரிக்கக் கோடீஸ்வரர் டென்னிஸ் டிட்டோஎன்பார் இதில் முதலில் பயணம் செய்தார். பலகோடீஸ்வரர்கள் ரஷ்யாவின் விண்வெளிஆய்வுநிலையச் சுற்றுலாவில் பயணிக்கத் தம் பெயரைப் பதிவுசெய்துள்ளனர்,அமெரிக்காவும் விண்வெளிச் சுற்றுலாவிற்குஏற்பாடுகள் செய்துள்ளது. இதனால் சுற்றுலாவிற்குப் புதியதோர் பரிமாணம் கிடைத்துள்ளது.

காலநிலை,எல்லை,நோக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் மேற்கூறப்பட்டபிரிவுகள் பகுக்கப்பட்டுள்ளன.

### சுற்றுலாவின் முக்கியத்துவம்

கற்காலம் முதல் தற்காலம் வரையில் பயணங்கள் தொடர்ந்துநடைபெறுகின்றன. இப்பயணங்கள் அனைத்தும் சுற்றுலாஅல்லபழங்காலச் சுற்றுலாதற்காலச் சுற்றுலாவினின்றும் வேறுபட்டது. பலர்

அன்றுபெரும்பாலும் பொருள் தேடவேபல இடங்களுக்குச் சென்றனர். வணிகத்தின் பொருட்டும்,போர்புரியும் பொருட்டும்,கல்விகற்கும் பொருட்டும் அன்றுபலர் வெளியிடங்களுக்குச் சென்றனர். பொருளாதாரவசதியும்,போக்குவரத்துவசதியும்,அறிவியல் முன்னேற்றமும்,தங்குமிடவசதியும் அன்று இல்லாதகாரணத்தால்,சுற்றுலாவளர்ச்சிபெறாதநிலையில் இருந்தது. காலம் செல்லச் செல்லப் புதியநாடுகளைக் காணும் ஆர்வம் பெருகியது. அதற்கேற்ப்பபோக்குவரத்துவசதிகளும் பெருகின. இரயில்,கார்,சொகுசுகார்,கப்பல்,ஆகாயவிமானம், ஜெட் விமானம்,போயிங் 747 விமானம் போன்றவைதற்காலத்தில் பெருகிவிட்டதால் சுற்றுலாவும் பெருகிக் கொண்டேவருகிறது. சுற்றுலாவிற்குத் தொழில் தகுதிவழங்கப்பட்டுள்ளதால் இது விரைந்துமுன்னேறுகிறது.

**இரண்டாம் உலகப் போருக்குப்பின் முன்னேற்றம்**

சுற்றுலா இரண்டாம் உலகப்போர் முடிவடைந்தபின் மக்கள் மத்தியில் பெரிதும் செல்வாக்குப் பெற்றது. 1945க்குப் பின் உள்நாட்டுச் சுற்றுலாப் பயணமும் அதிகரித்தது. 1955-ம் ஆண்டிலிருந்து 1965-ம் ஆண்டுவரையிலானபத்தாண்டுகளில் சுற்றுலாப் பயணியரின் எண்ணிக்கை 51 மில்லியனிலிருந்து 157 மில்லியனாகஉயர்ந்தது. பத்துஆண்டுகளில் இது மூன்றுமடங்குஉயர்ந்துள்ளதுஎன்பது இங்கேகவனிக்கத்தக்கது.

**வருவாய்ப் பெருக்கம்**

பன்னாட்டுச் சுற்றுலாவின் மூலம் உலகின் பலநாடுகள் தமதுவருவாயைப் பெருக்கிக் கொண்டுள்ளன. சிலநாடுகளின் சுற்றுலாவருவாய் அவற்றின் தேசியவருவாயில் முக்கியபகுதியாகஅமைந்துள்ளமை இங்கேகுறிப்பிடத்தக்கது. இவ்வகையில் பார்படோஸ் முன்னணியில் நிற்கிறது. அதுசுற்றுலாவின் மூலம் பெறும் வருவாய்' தனதுதேசியவருவாயில் கால் பகுதியாக இருக்கிறதுஎன்பதுபாராட்டத்தக்கது. ஆஸ்திரேலியா, ஸ்பெயின்,அயர்லாந்து, ஜமைக்கா,மெக்ஸிகோமுதலானநாடுகள் தமதுதேசியவருமானத்தில் 50 சதவீதத்துக்குமேல் சுற்றுலாவின் மூலம் பெறுகின்றன.

ஸ்பெயின் போன்றுஉலகின் பலநாடுகள் சுற்றுலாவைஒருமுக்கியத் தொழிலாகவேகருதி,அதற்கெனத் திட்டங்கள் தீட்டிசுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையானவசதிகளைச் செய்துகொடுத்துப் பெரும் பொருள் ஈட்டுகின்றன. இவ்வகையில் ஸ்பெயின்,பனாமா, ஜோர்டான்,மெக்ஸிகோ, ஜமைக்கா,கனடாமுதலானநாடுகள் குறிப்பிடத்தக்கவகையில் முன்னேற்றம் கண்டுள்ளன. 1978ஆம் ஆண்டில் ஸ்பெயின் நாட்டின் மக்கள் தொகை 40 மில்லியன். அந்நாட்டிற்குவருகைதந்தஅயல்நாட்டுப் பயணியரின் எண்ணிக்கையும் 40 மில்லியன். இதன் மூலம் ஸ்பெயின் எவ்வாறுஅயல்நாட்டுப் பயணியரைக் கவர்ந்திழுக்கும் கவர்ச்சிக் கன்னியாகவிளங்கியதுஎன்பதனைஅறியலாம். கனடாவும்

சுற்றுலாத்துறையில் பெரும் முன்னேற்றம் கண்டுள்ளது. செய்தித்தாள் உற்பத்திக்குஅடுத்தநிலையில் அங்கேசுற்றுலாத் தொழில் வளர்ந்துள்ளது.

**சுற்றுலாவின் மூலம் இந்தியவருவாய்**

நம் பாரதம் சுற்றுலா மூலம் கணிசமானஅந்நியச் செலாவணியைப் பெறுகிறது. உலகில் அதிகமானஅந்நியச் செலாவணியைப் பெறும் நாடுகளில் நம் நாடு,நான்காவது இடத்தைப் பெறுகிறது. இதன் விளைவாகநேரடியாகவும் மறைமுகமாகவும் நம் நாட்டின் வருவாய் பெருகுகிறது.

சுற்றுலாவின் மூலம் நமதுநாடு 1698 முதல் 1972 வரையிலானஐந்துஆண்டுகளில் 214.5 கோடிரூபாய் தேசியவருவாயாகவும் 32.18 கோடிவரிவருவாயாகவும் பெற்றுள்ளது. 1999-இல் மட்டும் நம் பாரதம் 13041கோடி ரூபாயைச் சுற்றுலா மூலம் பெற்றுள்ளது. இவ்வாறு நம் நாடும் அண்மைக் காலத்தில் சுற்றுலாத் துறையைவிரிவுபடுத்திஅந்நியச் செலாவணியைஈட்டிவருகிறது.

**சுற்றுலாவருவாயின் தனித்தன்மை**

உலகின் பலபாகங்களிலும் சுற்றுலாவளர்ச்சி இன்றுபன்மடங்குபெருகியுள்ளன. விவசாய,தொழில் உற்பத்தியைக் காட்டிலும் சுற்றுலாவளர்ச்சியேநம்மைஅதிர்ச்சியடையச் செய்கின்றது. 1961 முதல் 1972 வரையிலான இக்காலக் கட்டத்தில் விவசாயப் பொருள்களின் உற்பத்தி 32மூஆகஉயர்ந்தது’ தொழில்துறைப் பொருள்களின் உற்பத்தி 10மூஆக உயர்ந்தது. ஆனால் சுற்றுலாவோ 221மூவளர்ச்சியைஎட்டிப் பிடித்து,அசுரசாதனைபுரிந்துள்ளது. வர இருக்கும் ஆண்டுகளில் இது மேலும் உயரத்தான் செய்யும். இதனால் ஒருநாடுவணிகப் பொருள் ஏற்றுமதி மூலம் பெறுகின்றவருவாயைக் காட்டிலும்,சுற்றுலாத்துறைமேம்பாட்டின் மூலம் கணிசமானவருவாயைப் பெறுகிறதுஎன்றபேருண்மைபுலனாகும். எடுத்துக்காட்டாக நம் நாட்டைஎடுத்துக் கொள்வோம். 1963-ஆம் ஆண்டில் 12,195 மில்லியன் ரூபாயைஏற்றுமதிப் பொருள்கள் மூலம் பெற்றநாம் 1972-ஆம் ஆண்டில் 18,030 மில்லியன் ரூபாயைப் பெற்றோம். இதுஒருசாதாரணவளர்ச்சியே. இதன் வளர்ச்சி 4.5மூதான். அதேகாலக்கட்டத்தில் நம் சுற்றுலாத்துறையின் வளர்ச்சியைக் கணக்கிட்டுப் பார்த்தால்,அது 6.8மூவளர்ச்சியைக் காட்டுகிறது. இதுமாபெரும் சாதனையே. சுற்றுலாவின் வருவாய் 206 மில்லியன் ரூபாயிலிருந்து 379 மில்லியன் ரூபாயாகஉயர்ந்துள்ளமை (1963-1972) பாராட்டத்தக்கது. 1988-ஆம் ஆண்டில் நம் பாரதம் 2103 கோடிரூபாயும் 1989-இல் 2456 கோடிரூபாயும் 1991-இல் 3318 கோடிரூபாயும் 1992-இல் 3989 கோடிரூபாயும் 1998-இல் 11950 கோடிரூபாயும் 1999-இல் 13041 கோடிரூபாயும் அந்நியச் செலாவணியாகச் சுற்றுலாவின் மூலம் பெற்றுள்ளதுஎன்பது இங்கேகுறிப்பிடத்தக்கது. நாளடைவில் இதுமேலும் பெருகும்.

அண்மைக் காலத்தில் பெரும்பாலானநாடுகள்,சுற்றுலாவளர்ச்சியின் மூலம் அதிகஅளவில் அந்நியச் செலாவணியையீட்டுகின்றன. இவ்வருவாய் தமதுஏற்றுமதிப் பொருள்களின் மொத்தவருமானத்தில் குறிப்பிடத்தக்கதோர் பங்கினைவகிக்கிறது.

**அந்நியச் செலாவணிபெறுதல்**

அந்நியச் செலாவணியையீட்டும் தொழில்களுள் சுற்றுலாத் தொழில் முதலிடம் வகிக்கிறது. இன்றுபலநாடுகள் தங்களதுஏற்றுமதிப் பண்டங்கள் மூலம் பெறும் அந்நியச் செலாவணியைக் காட்டிலும்,சுற்றுலாவளர்ச்சியின் மூலம் அதிகஅளவில் அந்நியச் செலாவணியைப் பெறுகின்றன. சுவிட்சர்லாந்து, ஆஸ்திரியா, ஸ்பெயின்,கனடா, இத்தாலிமெக்சிகோ,போர்ச்சுக்கல்,அயர்லாந்து,தென் அமெரிக்கநாடுகள். முதலானவைசுற்றுலாவளர்ச்சியில் பெரிதும் கவனம் செலுத்தி,நிறைந்தவருவாயைப் பெறுகின்றன் இங்கிலாந்து,அமெரிக்காவிற்குப் பெருமளவில் பொருள்களைஏற்றுமதிசெய்தாலும்,சுற்றுலா மூலமேமிகுதியானடாலர்களைச் சம்பாதிக்கிறது. நமதுபாரதமும் சுற்றுலாப் பயணிகளின் மூலம் ஏறத்தாழ 600 கோடிரூபாய் அந்நியச் செலாவணியையீட்டியுள்ளது. இது நம் நாட்டின் மொத்தஏற்றுமதியில் 8மூஆகும். இருப்பினும் உலகச் சுற்றுலாவணிகத்தில் இந்தியாவின் பங்கு 0.4 சதவீதமாகஉள்ளது.

1996 இல் சீனா 12.1 பில்லியன் டாலர்களையும், ஹாங்காங்க் 10.8 மில்லியன் டாலர்களையும்,தாய்லாந்து 8.7 பில்லியன் டாலர்களையும்,சிங்கப்பூர் 7.9 பி.டாலர்களையும் சுற்றுலாத் தொழிலின் மூலம் அந்நியச் செலாவணியாகப் பெற்றது.

**வளர்ந்துவரும் நாடுகளுக்குச் சுற்றுலாகைகொடுக்கிறது**

வளர்ந்துவரும் நாடுகள் பல,தொழில் முன்னேற்றத்திற்காகப் பலநவீன இயந்திரங்களை இறக்குமதிசெய்கின்றன்ஆனால் உற்பத்திப் பொருள்களின் ஏற்றுமதியோபெருகுவதில்லை இதன் விளைவாகஅவைபாதகமானவாணிகச் சமநிலையை(யுனஎநசளநடீயடயஉெந ழக வுசயனந)அனுபவிக்கவேண்டியுள்ளது. அடுத்து,செலுத்தும் சமநிலையும் (டீயடயஉெநழக ியலஅநவெ) பாதகமாகவேஅமைந்துவிடுகிறது. தாங்கள் கூடுதலாக இறக்குமதிசெய்யும் பொருள்களின் விலையைத் தங்கமாகவோ,வெளிநாட்டுநாணயமாகவோ,செலுத்தி,செலுத்தும் சமநிலையைஈடுசெய்யவேண்டியுள்ளது. இதனால் அந்நாட்டின் தங்க இருப்பும் அந்நியச் செலாவணி இருப்பும் குறைந்துகொண்டேசெல்கிறது. இதன் விளைவாகப் பொருளாதாரநிலையும் சீர்கெட்டுவிடுகிறது. இந்நிலையில் சுற்றுலா கை கொடுக்கிறது. சுற்றுலாஅந்நியச் செலாவணியையீட்டி,செலுத்தும் சமநிலையைச் சரிசெய்து,பாதகமானவாணிகச் சமநிலையையும் சீர் செய்கிறது. இவ்வகையில் சுற்றுலாஆபத்துநேரத்தில்,ஒருநாட்டைப் பொருளாதாரவீழ்ச்சியினின்றும் காப்பாற்றும் காமதேனுஎன்பதுவெளிப்படையாகும்.

**மேம்பட்டவருவாய்**

சுற்றுலா,மற்றஏற்றுமதிப் பொருட்களைக் காட்டிலும்,பலவகைகளில் மாறுபட்டது. பலநாடுகள் தமதுஏற்றுமதிக்குப் பெரும்பாலும் பணப்பயிரையேநம்பிஉள்ளன. அவற்றின் மூலம் கிடைக்கும் வருவாயும் நிரந்தரமானதல்ல்ஏனெனில் உற்பத்தி கூடலாம் குறையலாம். ஆனால் சுற்றுலாவினால் வரும் வருவாய் அதிகரிக்கக்கூடியஒன்று. அடுத்துமுன்னேறியநாடுகள் பின்தங்கியநாடுகளிலிருந்துவரும் இறக்குமதிப் பொருளின் மீது,காப்புவரிகள் போட்டு, இறக்குமதியைஉற்சாகப்படுத்தாமல் விட்டுவிடலாம். ஆனால் தனதுநாட்டினின்றும் அயல் நாடுகளுக்குச் செல்லும் சுற்றுலாப் பயணிகள் செய்யக் கூடியசெலவுகளைத் தடைசெய்யும் வாய்ப்பில்லை.

அடுத்துநாடுகள்,தமதுஏற்றுமதிப் பொருள்களின் மூலம் கிடைக்கும் வருவாயின் பெரும் பகுதியை, இறக்குமதிசெய்யப்படும் பொருள்களுக்காகக் கொடுக்கவேண்டியிருக்கும். அதேநேரத்தில் தமதுநாட்டின் சுற்றுலாமேம்பாட்டிற்கானநவீனவசதிகளைச் செய்துகொடுக்கும் பணியில்,அவர்கள் பலசெலவினங்களைஏற்கவேண்டியிருக்கும். அயல்நாடுகளிலிருந்துஏர்பஸ்,போயிங் விமானம்,சொகுசுக்கார் ஆகியவற்றை இறக்குமதிசெய்யவேண்டியிருக்கும். இருப்பினும் இச்செலவுகள்,சுற்றுலாவின் மூலம் வரும் வருவாயுடன் ஒப்பிடும் போதுசொற்பமே. எடுத்துக்காட்டாக 1981 ஆம் ஆண்டுநமதுபாரதம் சுற்றுலா மூலம் பெற்றவருவாய்,சுற்றுலாவிற்காகச் செய்தசெலவுகளைக் காட்டிலும் 9 மடங்கிற்கும் சற்றுஅதிகமாகும். நாம் சுற்றுலாவிற்காக 70 கோடிரூபாய் செலவுசெய்து, 650 கோடிரூபாய் சம்பாதித்துள்ளோம். இதன் நிகரலாபம் 580 கோடிரூபாய் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

**இன்றுசுற்றுலாமுக்கியத்துவம் பெறக் காரணங்கள்.**

1 சுற்றுலாகவர்ச்சிமிக்கதோர் தொழிலாகமாறிவிட்டது. இன்றுவளர்ந்துகொண்டேஉள்ளதுறையாகவும் விளங்குகிறது.

2. தனிநபர் வருவாய் பெருகியுள்ளது. மக்களுக்குஓய்வுநேரமும் அதிகரித்துள்ளது.

3. அறிவியல் முன்னேற்றத்தால் தொலை தூர நாடுகளுக்கும் குறுகியகாலத்தில் செல்லமுடிகிறது.

4. போக்குவரத்தில் முன்னேற்றம்,கண்டுள்ளது.

5. பலதரப்பட்டவர்களுக்குவேலைவாய்ப்புதரும் நிறுவனமாகசுற்றுலாவளர்ந்துள்ளது.

6. இதன் மூலம் பலநாடுகள் அந்நியச் செலாவணியைஈட்டுகின்றன.

7. பின் தங்கியநாடுகளும் இதன் மூலம் வருவாய் பெறுகின்றன.

8. நாடுகளிடையேபண்பாட்டுப் பரிமாற்றத்திற்கு வழி வகுக்கிறது.

9. கைத்தொழில்,கலைத் தொழில் வளர்கின்றன.

10. பலகவர்ச்சிமிகு இடங்களைக் கண்டுகளிக்கமக்களிடையேபெருவிருப்பம் ஏற்பட்டுள்ளது.

11. பலசுற்றுலாமையங்கள் கவர்ச்சியாகஅமைக்கப்படுகின்றன.

12. உலகக் குடிமகன் (உவைணைநடெ ழுக வாந றழசடன) எனும் கருத்துபரவுகிறது.

13. மனித நேயம் வளர்கிறது. "யாதும் ஊரேயாவரும் கேளிர்''எனும் கணியன் பூங்குன்றனின் கொள்கைபரவுகிறது.

**சுற்றுலாவின் பயன்கள்(The Value of Tourism)**

இன்றையஉலகில் சுற்றுலாவானதுதனிமனிதவாழ்க்கையில் ஒரு இன்றியமையாச் செயலாகிவிட்டது. சுற்றுலாவால் தனிமனிதனுக்கும் சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் உலகிற்கும் பலபயன்கள் கிடைக்கின்றன. மக்களின் அறிவைச் சுற்றுலாவளர்க்கின்றது. உள்ளமும் உடலும் சோர்ந்துபோனவர்கள் ஓய்வெடுத்துகளைப்பாறி,புத்துணர்ச்சியுடனும் புதுப்பொலிவுடனும் பணியில் ஈடுபடுகின்றனர். நோயாளிகள் குணமடையவும் சுற்றுலாதுணைபுரிகிறது. சுற்றுலாஒருஏற்றுமதித் தொழிலாகஅங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் நாட்டிற்குமிகுதியானஅந்நியச் செலாவணிகிடைக்கின்றது: தேசியவருவாய் பெருகுகின்றது. முன்னேறிக் கொண்டிருக்கும் நாடுகள் இதன் வருவாயைப் பெற்றுபாதகமானவாணிகச் சமநிலையையும் நாட்டின் செலுத்துதல் சமநிலையையும் சீர் செய்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாகசுற்றுலாபல்லாயிரம் பேர்களுக்குமேல் வேலைவாய்ப்புஅளிக்கும் ஒருவேலைத் தேடிதரும் நிறுவனமாகவும் பணிபுரிகிறது. உலகமக்களிடையேநட்பு,நல்லெண்ணம் வளரவும்,பூமியில் சமாதானமும் உணர்வும் தழைக்கப்பாடுபடுகிறது. மனிதநேயமும் வளர்க்கிறது. இதனால் சமத்துவமும் உலகஅமைதியும் நிலைநாட்டப்படுகிறது. "உலகக் குடிமகன்''எனும் உணர்வுமக்களிடையேஏற்படுகிறது. இவ்வாறுதனிமனிதனுக்கும் நாடுகளுக்கும் உலகிற்கும் விலைமதிக்கமுடியாதபயன்களைசுற்றுலாஅளிக்கிறது .

**பண்பாட்டுப் பரிமாற்றம்**

பண்பாட்டுப் பரிமாற்றம் நிகழசுற்றுலாதுணைநிற்கிறது. சுற்றுலாப்பயணிதான் செல்லும் நாட்டின் பழக்கவழக்கம்,பண்பாடுஆகியவற்றைஉற்றுக் கவனிக்கிறான். பின்புதான் பண்பாட்டையும் பின்பற்றுகிறான். இவ்வகையில் பண்பாட்டுப் பரிமாற்றம் நிகழ்கிறதுநம்நாட்டுப் பெண்கள் கௌன் போன்றமேலைநாட்டுஉடைகளையும்,அயல்நாட்டுப் பெண்கள் சேலைகளையும் அணிந்துவருதலைநாம் அன்றாடம் கண்டுவருகிறோம்.

**மனித நேயம்**

மனித நேயம் வளரசுற்றுலாஉறுதுணைபுரிகிறது. பிறபகுதிமக்களுடன் நெருங்கிப் பழகும்போதுஅவர்களைப் புரிந்துகொண்டு,அன்புசெலுத்தமுடிகிறது. பிறமாநிலமக்களுடன் இணக்கமானநல்லுறவுகொள்ளஏதுவாகிறது. பிராந்தியவெறிமறைந்துதேசியஉணர்வுபெருகுகிறது. அயல்நாடுகளுக்குச் செல்வதால் பிறநாட்டினர் மீதும் அன்புசெலுத்தமுடிகிறது. உலகக் குடிமகன் (Citizen of the World) “யாதுமூரேயாவரும் கேளிர் எனும் தாராளப் பண்புமலர்கிறது’’. பன்னாட்டுறவுவலுப்பெறுகிறது.

**அறிவுவளர்தல்**

சுற்றுலாவினால் தனிமனிதனின் அறிவுபெருகுகிறது. பிறபகுதிகளுக்கும்,பிறவிளையாட்டுநாடுகளுக்கும் சுற்றுலாசெல்வதால்,அவன் நவீனஅறிவியல் முன்னேற்றங்களையும்,தொழில் வளர்ச்சிகளையும் கண்டுதனதுபலதுறைஅறிவைவிரிவுபடுத்திக் கொள்கிறான்,கற்றலில் கேட்டல் நன்றுகேட்டலில் காணல் நன்று. இயற்கையும் மனிதனும் படைத்துள்ளவிந்தைகளைக் கண்டுஅறிவுபெறலாம். புதிய இடங்கள்,புதியகலாச்சாரங்கள்,புதியநடை,உடைபாவனைகள்,புதியபழக்கவழக்கங்கள் ஆகியவற்றுடன் தொடர்புஏற்படுகிறது. மேலைநாடுகளில் சுற்றுலாபடிப்பின் ஒருபகுதியாகவேகருதப்படுகிறது.

**மகிழ்ச்சி**

சுற்றுலாமனிதனுக்குமகிழ்ச்சியையும் புத்துணர்ச்சியையும் அலுத்துக் போனவர்களுக்குவழங்குகிறது. அன்றாடம் உழைத்துஉழைத்துகளைத்ததொழிலாளிக்குசுற்றுலா இன்பம் தருகிறது. அதேதொழிற்சாலையை, இயந்திரங்களையும் சந்தித்துக் கொண்டிருந்ததொழிலாளிசுற்றுலாவின் மூலம் புத்தம் புதிய சூழ்நிலையில், இயற்கையழகில் மனம் கவரும் கடற்கரையில் இன்பம் காண்கிறான். இதன் விளைவாகஅவன் அலுப்பைப் போக்குகிறான். புத்துணர்ச்சிபெறுகிறான்கவலையைமறக்கிறான். தனதுபணிகளில் உற்சாகத்துடன் பணிபுரிகிறான்.

சுற்றுலாபலருக்குஒரு இன்பப் பொழுதுபோக்காக(Recreation) விளங்குகிறது. கேளிக்கைகளில் ஈடுபடுவதும்,குதிரைசவாரி,படகுப் பயணம் ஆகியவற்றில் ஈடுபடுவதும்,மிகச்சிறந்தபொழுதுபோக்கு.

**வாழ்க்கைத்தரமேம்பாடு**

தொழில் நுட்பவளர்ச்சிக்கும் மனிதசக்தித்திறன் மேம்பாட்டிற்கும் சுற்றுலாஆதாரமாகஅமைந்துள்ளது. வளரும் நாடுகளில் தொழில் நுட்பப் பயிற்சிநிறுவனங்களைத் தொடங்கிதொழில் வல்லுநர்களைஉருவாக்குகின்றது. சுற்றுலாபலருக்குவேலைவாய்ப்பளிப்பதுடன் மனிதசக்திவளமேம்பாட்டையும் உருவாக்குகின்றது. இதன் மூலம் மக்களின் வாழ்க்கைதரம் மேம்படுகிறது.

**பன்னாட்டுநல்லிணக்கம்**

சுற்றுலாவினால் நாட்டிலும்,உலகிலும் நல்லெண்ணம்,அன்புபுரிந்துகொள்ளும் பண்பு,அமைதி,நல்லிணக்கம் வளர்கின்றன. சுற்றுலாபெருகப் பெருகஉலகஅமைதியும் வளமும் பெருகும். உலகின் பலபகுதிகளில் வாழும் மக்களிடையேநட்பும் சகோதரத்துவமும் வளரவாய்ப்பளிக்கிறது.

**வனவிலங்குசரணாலயங்களும் தாவரவகைகளும் காக்கப் பெறல்**

வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணியரின் வருகைக்காகஉள்நாட்டில் உள்ளவனவிலங்குபுகலிடங்கள், இயற்கையெழில்கள்,நீர்வீழ்ச்சிகள்,அணைக்கட்டுகள்,பூங்காக்கள்,தாவரவியல் பூங்காக்கள் ஆகியனபேணிக்காக்கப் பெறுகின்றன. மேலும் அழகுபடுத்தப்படுகின்றன,சீரமைக்கப்பெறுகின்றன. சிலபொழுதுபோக்குமையங்கள் கவர்ச்சியாக்கப் படுகின்றன. கோடைவாழிடங்களில் உள்ளஏரிகளிலும் பிச்சாவரம் முதலானமையங்களிலும் நவீனப் படகுகள் விடப்படுகின்றன. சுற்றுலாஎனும் பெயரில் இவை பராமரிக்கப்படவும்,அழகுபடுத்தப் பெறவும் வாய்ப்புஏற்படுகிறது. உள்நாட்டின் வரலாற்றுச் சின்னங்களும்,நினைவகங்களும் நன்குபராமரிக்கப்படசுற்றுலாத் துணைபுரிகின்றது.

**வணிகவளர்ச்சி**

ஒவ்வொருநாடும் சுற்றுலாவினால் நல்லவருவாயைப் பெறுகின்றன. சுங்கத்தீர்வையும் பயணவரிகளும் நாட்டின் வருமானத்தைப் பெருக்குகின்றன. பயணிகள்,விமானப் பயணவரிகள்,உணவுவிடுதிகள்,கைவினைப் பொருள்கள் வரிகள்,போன்றுபலநேரடிவரிகளைச் செலத்துகின்றன. சுற்றுலாசார்புநிறுவனங்களும் வரி செலுத்துகின்றன. சுற்றுலாவின் மூலம் தொழில்களும்,கைத்தொழில்களும் பெருகுகின்றன. வெளிநாட்டுப் பயணியர் விரும்பும் வகையில்,பலஅழகியகைவினைப் பொருள்கள் உற்பத்திசெய்யப்படசுற்றுலாதுணைபுரிகிறது.

**பொருளாதாரவளர்ச்சி**

சுற்றுலாஒருநாட்டின் தேசியவருவாயைப் பெருக்குகிறது. அயல்நாட்டுப் பயணியர் நம் நாட்டில் செலவழிக்கும் தொகை,நமதுதேசியவருவாய் பெருகவழிவகுக்கிறது. செலுத்துதல் சமநிலையும் குறைகிறது. சுற்றுலாவால் ஒருநாட்டின் வரி வருவாயும் பெருகுகிறது.

**வேலைவாய்ப்பினைநல்குதல்**

சுற்றுலாபலலட்சக்கணக்கானமக்களுக்குவேலைவாய்ப்பைநல்குகிறது. வேலையற்றபட்டதாரிகள் பலர் சுற்றுலாவின் பல்வேறுதுறைகளில் வேலைவாய்ப்பைப் பெறுகின்றனர். இதன் விளைவாகவேலையில்லாத் திண்டாட்டம் குறைகிறது. இந்தியாவில் ஏறத்தாழ 13 மில்லியன்

பேர்கள் சுற்றுலாத் துறையின் மூலம் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர் என்றுகணிக்கப்பட்டுள்ளது. 1996-97இல் சுற்றுலாத்தொழில் இந்தியாவில் 211மில்லியன் பேர்களுக்குவேலைவாய்ப்பினைநல்கியுள்ளது. இதில் 9.1மில்லியன் பேர்கள் நேரடியாகவேலைவாய்ப்பைப் பெற்றனர் (211 மில்லியன் பேர்கள் மறைமுகவேலைவாய்ப்பைபெறுகின்றனர்)

**உலகநாடுகளில் சுற்றுலாவளர்ச்சி**

பழங்காலத்தில் இருந்தேசுற்றுலாச் செல்வதுஒருவழக்கமாகவும்,மோகமாகவும் இருந்துள்ளது. பண்டைக் காலத்தில் இருந்தேமனிதன் ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்குச் சென்றுவந்துள்ளான். முதலில்,மனிதன் குறிக்கோள் இல்லாமல் எளியகாரியங்களுக்காகவெளியிடங்களுக்குச் சென்றுவந்தான். சுற்றுலாவில் இன்று இருக்கும் சிக்கல்கள் பழங்காலத்தில் இருந்தனவல்ல. சுற்றுலாவிற்குரியவிதிமுறைகள் அன்றுதோன்றவில்லை. பண்டைக் காலத்தில் இன்பத்திற்காகவும்,மனமகிழ்ச்சிக்காகவும் மக்கள் பிற இடங்களுக்குச் செல்லவில்லை. பிற இடங்களைக் காணவும்,வாணிகம் செய்யவும்,கோயில் குளங்களைக் காணவும்,பழங் கலைகளைஅறியவும்,கல்விகற்கவும் வெளியிடங்களுக்குச் சென்றனர். சிலர் போர் செய்யவும் வெளிநாடுகளுக்குச் சென்றனர். அன்றுபெரும்பாலும் பொருள் தேடவேவெளியிடங்களுக்குச் சென்றனர். ஹிராட்டஸ் (Herodotus)என்பாரின் ‘‘பயணம்’’என்னும் நூல் அவரதுபயணஅனுபவத்தைக் கூறுவதாகும். பயணிகளில் பலர் தங்கள் வாழ்க்கையைச் சத்திரங்களிலும் படகுகளிலும் கழித்ததாகப் புளுடார்க் என்பவர் எழுதியுள்ளார். பயணிகளில் பலர் தங்கள் அறிவைப் பெருக்கிக் கொள்ளஉலகம் சுற்றினர் என்றுடேனியல் கூறுகிறார்.

**சூழ்நிலை**

பண்டைக் காலத்தில் மனிதன் ஒருகுறிப்பிட்ட சூழ்நிலையிலேயே வாழவிரும்பினான். அங்குஅவர்களுக்குத் தேவையானஉணவுப் பொருள்கள் கிடைக்காதபொழுதுவேறிடங்களுக்குச் செல்லலாயினர். வீரர்கள் பிற இடங்களைச் சுற்றிப் பார்த்துஅங்குள்ளதட்பவெப்பநிலை,தங்கும் வசதி,உணவுவசதிபோன்றஅடிப்படைத் தேவைகளைநிறைவுசெய்யும் இடங்களைத் தேர்ந்துஎடுத்துமக்களுக்குஅறிவித்தனர். மக்கள் அங்குக் குடிபெயரலாயினர். பருவகாலமாறுபாட்டினாலும்,உணவுத் தட்டுப்பாட்டினாலும்,ஆரியர்கள் மத்தியஆசியாவைவிட்டுவேறிடங்களுக்குச் செல்லலாயினர்.

**புதியபாதைகள்**

நாளடைவில் வெளியிடங்களுக்குச் செல்லப் புதியபாதைகள் கண்டுபிடிக்கப்பட்டகாரணத்தால் தூரப் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதனால் பலர் கூட்டமாகச் சென்றுவெளிநாடுகளில் வாணிகம் செய்யலாயினர். வாணிகம் செய்யச் சென்ற இடங்களில் மக்கள் பல

இனத்தவர்களுடனும்,பலநாட்டுமக்களுடனும் கலந்துபழகினர். அதனால் வாணிகம் பெருகியது. வாணிகத் தொடர்புமக்களின் நாகரிகம்,பண்பாடுபோன்றவற்றைவளர்த்ததுடன் மக்கள் சுமுகமாகவாழவும் வழி வகுத்துத் தந்தது. பினீசியர்கள் முதன் முதலில் தற்காலமுறையில் சுற்றுப்பயணத்தைமேற் கொண்டதுடன் வாணிகமும் செய்துவந்தனர்.

**பணம்**

ஐயாயிரம் ஆண்டுகளுக்குமுன்புசுமேரியர்கள் வண்டிகளையும்,பணத்தையும் கண்டுபிடித்ததால்,வாணிகம் பெருகலாயிற்று. பலவணிகர்கள் வண்டிச் செலவிற்கும்,தங்கும் இடத்திற்குவாடகைதருவதற்கும்,உணவிற்கும் பணத்தையோ,பண்டங்களையோமாற்றாகத் தந்தனர். ஆரம்பத்தில் பண்டமாற்றுமுறையேவழக்கில் இருந்தது.அதனால் பல இடையூறுகளும் சிக்கல்களும் ஏற்பட்டன. ஒருபொருளின் மதிப்பிற்குஏற்றமுறையில் மற்றொருபொருளைக் கொடுக்கமுடியாதகாரணத்தால் பணப்புழக்கம் ஏற்பட்டது. அதேகாலத்தில் இந்தியாவிலும் வாகனங்களும்,பணமும் கண்டுபிடிக்கப் பட்டதால், இந்தியாவிலும் மிகுதியானசுற்றுப்பயணம் இருந்தது. அதனைமொகஞ்சதாரோ, ஹரப்பாநாகரிகம் காட்டும். உலகப் பயணவரலாற்றில் இந்தியாவும் முக்கியப் பங்குவகிக்கிறது. வாணிகமும்,புனித இடங்களுக்குச் செல்வதுமேஅவர்களதுநோக்கமாக இருந்தது. பண்டைக் காலத்தில் முனிவர்கள் இமயமலையின் அடிவாரத்திலும்,தென்னிந்தியக் காடுகளிலும் வாழ்ந்துவந்தனர். அவர்கள் அங்குக் குருகுலமுறையைஉருவாக்கிமாணவர்களுக்குக் கல்விகற்பித்தனர்.

**இந்தியா**

பண்டைக் காலத்திலிருந்தே இந்தியாசுற்றுலாவிற்குரியநாடாகக் கருதப்பட்டது. பழங்காலத்தில் இந்தியாவைச் சுற்றிப் பார்க்கவும்,அதிருஷ்டத்தைத் தேடியும்,வாணிகம் செய்யவும் பிறநாட்டினர் இந்தியாவிற்குவந்தனர். இந்தியாஒருசெல்வம் நிறைந்தநாடாகக் கருதப்பட்டதால்,அலெக்ஸாண்டர் போன்றமாவீரர்கள் இந்தியாமீதுபடையெடுத்துவந்தனர். அராபியர்களும்,ஐரோப்பியர்களும் இந்தியாவில் வாணிகச் சந்தைகளைஉண்டாக்க இந்தியாவிற்குள் வந்தனர். வாஸ்கோடகாமா இந்தியாவிற்குப் புதியபாதைகண்டுபிடித்தார். இந்தியாவைக் காணமுயன்றகொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்தார். மாபெரும் அலெக்ஸாண்டர் இந்தியாவிற்குவந்தபொழுது, இங்குநன்றாகப் பாதுகாக்கப்பட்டசாலைகள்,சாலை ஓர மரங்கள்,சாலையோரத்தில் கிணறுகள்,சாலைகளில் காவலர்கள்,சாலையோரத் தங்கும் விடுதிகள் போன்றவற்றைக் கண்டதாகக் குறிப்பிட்டுள்ளார். ஒருசாலை 12,000 மைல் நீளமும், 64 அடி அகலமும் உடையதாக இருந்தது. அக்காலப் பயணிகள் தேர்களிலும்,மாட்டுவண்டிகளிலும்,யானை,ஒட்டகம்,குதிரை,எருதுபோன்றமிருகங்களின்மீதும் பயணம் செய்தனர் என்றுவரலாற்றாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர். இதைச் சங்க இலக்கியங்களிலும் காணலாம். அசோகரின் தூதுவர்கள் இலங்கை,கிழக்காசியா,மேற்காசியாபோன்றநாடுகளுக்குச்

சென்றுபுத்தரின் கொள்கைகளைப் பரப்பினர். சீனப் பயணிகள் இந்தியாவில் பயணம் செய்து இந்தியாவைப் பற்றிவிரிவாகஎழுதியுள்ளனர். கி.மு. 334இல் ஒருகுறிப்பிட்டபருவத்தில் ‘‘எஸ்பீகஸ்’’என்னும் இடத்தில் ஏழு இலட்சம் பயணிகள் ஒன்றுகூடி,வேழம்பர்,எத்தர்,மந்திரவாதிகள் போன்றோரின் செயல்களைக் கண்டுகளித்தனர்.

**எகிப்து**

கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் எகிப்திற்குச் சென்றுவருவதைமக்கள் பெருமையாகக் கருதினர். நாலாயிரம் ஆண்டுகளுக்குமுன்புசுல்கிஎன்றபாபிலோனியஅரசர் சாலைகளைஅமைத்தும்,பூஞ்சோலைகளைஉருவாக்கியும்,மரியாதைக்குரியபயணிகளுக்குஓய்வு இல்லங்களைக் கட்டியும் பயணத்தைஆதரித்தார். அக்காலத்தில் பயணிகள் அவ்விடங்களில் பாதுகாப்பாகத் தங்கிச் சென்றனர். பலர் பலநாடுகளுக்குச் சென்றுதங்கள் அறிவைவளர்த்துக் கொண்டனர் என்றுவிவிலியம் கூறுகிறது.

பண்டைக் கிரேக்கர்கள் சிறுபடகுகளில் கடலில் குறைந்த தூரப் பயணம் மேற்கொண்டனர். அக்காலத்தில் சிலர் தங்கஆப்பிளைத் தேடிப் பயணம் செய்தனர். ஹிராட்டஸ் என்பவர் பினீசியா,எகிப்து,கிரீஸ்,கருங்கடல் போன்றபகுதிகளில் பயணம் செய்து,அந்நாடுகளின் பழக்கவழக்கங்கள்,பண்பாடுகள்,மரபுகள்,வாழ்க்கைமுறைபோன்றவற்றைக் குறித்துவைத்துள்ளார். பிளேட்டோ,பித்தகோரஸ் போன்றதத்துவஞானிகள் எகிப்தில் பயணம் செய்தனர்.

**உரோம்**

உரோம் நாட்டுச் சாலைகளும் நாகரிகமுறையில் அமைந்திருந்தன. அவர்கள் பழையசாலைகளைப் புதுப்பித்தனர்:புதியசாலைகளைஅமைத்தனர்நன்றாகப் பராமரித்தனர். அப்பொழுதுபயண நூல்களும் தோன்றின. அவற்றில் வழித்தடங்களும்,பெரியசாலைகளின் பெயர்களும்,ஓரிடத்திற்கும் இன்னோர் இடத்திற்கும் உள்ள தூரமும்,அவ்விடங்களுக்குவண்டிகள் செல்லும் நேரமும்,அவ்விடங்களுக்குச் செல்லஆகும் நேரமும் இடம் பெற்றிருந்தன. அஞ்சல் முறையில் (Relay)குதிரைகளைப் பயன்படுத்திஉரோமர்கள் ஒருநாளில் நூற்றுக்கணக்கானமைல்கள் பயணம் செய்தனர். அவர்கள் சாலைகளில் ஐந்து ஆறு மைல்களுக்குஒருதங்குமிடத்தைக் கட்டியிருந்தனர். அவர்கள் ஆரம்பத்தில் மத்தியதரைக் கடல் பகுதிகளில் இருந்தகோயில்களையும்,நினைவுச் சின்னங்களையும்,எகிப்தில் இருந்தபிரமிடுகளையும் காணச் சென்றனர். உரோமர்கள் அடிக்கடிகிரீசுக்குச் சென்றுவந்தனர் ஒலிம்பிக் விளையாட்டைக் காணச் சென்றனர். ஓய்வுநேரத்தில் இன்பச் சுற்றுலாமேற் கொண்டனர். ஆற்றங் கரைகளில்

மக்கள் கூடுவதற்குஏற்றவகையில் சுற்றுலாமையங்களைஅமைத்து இன்பப் பயணத்திற்குஆக்கம் தந்தனர். அவர்கள் மருத்துவக் குளியலுக்காகக் கடற்கரைப் பகுதிகளுக்குச் சென்றனர். மூலிகைநிறைந்தநீரில் குளிப்பதற்கும்,நீரைக் குடிப்பதற்கும் அருவிகளைநாடிச் சென்றனர். நோயாளிகள் நோயைக் குணப்படுத்தஆற்றங்கரைகளுக்கும்,தாதுக்கள் உள்ளநீர்த்தடங்களுக்கும் சென்றுவந்தனர். ஸ்பாசு(Spas)என்றுசொல்லப்படும் இடங்கள் உரோமர்களுக்கு இன்பத்தையும் மகிழ்ச்சியையும் நல்கியதோடு,விருந்துஅளிக்கும் இடங்களாகவும் இருந்தன. அவைநோய்களைக் குணப்படுத்தும் மருத்துவமனைகளாகவும் பயன்பட்டன. அவ்விடங்களில்,விளையாட்டுப் போட்டிகள்,திருவிழாக்கள்,பொழுதுபோக்குநிகழ்ச்சிகள் போன்றவைநடைபெற்றன. அவைமக்களிடத்தில் செல்வாக்குப் பெற்றிருந்தன. அதன் பயனாகஅவர்கள் வெளிநாடுகளுக்குப் பயணம் செய்தனர்.

**தொழில் புரட்சியும் சுற்றுலாவளர்ச்சியும்**

தற்காலச் சுற்றுலா இயக்கம் மேற்குஐரோப்பாவிலும்,வடஅமெரிக்காவிலும் ஏற்பட்டதொழிற்சாலைகளின் பெருக்கத்தால் தோன்றியதாகும். கி.பி.1885-க்குப் பின் அவ்வியக்கம் வேர்விட்டுவளரத் தொடங்கியது. தொழிற் சாலைகளின் பெருக்கம் தொழிற் புரட்சிக்குவித்திட்டது. தொழிற் புரட்சிக்குமுன் (1) அறிவைவளர்க்கவும், (2) வணிகம் செய்யவும், (3) புனிதப் பயணம் மேற்கொண்டும் மக்கள் வெளிநாடுகளுக்குச் சென்றனர். அதன்பின் பணக்காரர்களும்,ஓய்வுஉள்ளவர்களும் இன்பச் சுற்றுலாமேற்கொண்டனர்.

தொழிற் புரட்சிசமூகப் பொருளாதாரமன்றங்களுக்குவித்திட்டது. நீண்ட நேர உழைப்பு,மோசமானவசதியற்றவாழ்க்கைபோன்றவைதொழிலாளர்களைச் சிந்திக்கவைத்தன. மக்கள் பெருக்கத்தால் நகரவாழ்க்கைசீர்குலைந்தது. பொருள்களின் விலையும் ஏறிவிட்டது. பணக்காரர்களால் மட்டுமேசுற்றுலாச்சென்றுவரமுடிந்தது. தொழிற் புரட்சியின் காரணமாக 19ஆம் நூற்றாண்டின் இறுதி இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் போக்குவரத்துச் சாதனங்களும்,தகவல் தொடர்புச் சாதனங்களும் பெருகின. தொழிலாளர்களுக்குஆண்டுவிடுமுறையும்,சம்பளத்துடன் விடுமுறையும் அளிக்கப்பெற்றன. அதனால் தொழிலாளர்கள் விடுமுறைநாட்களில் சுற்றுலாச்செல்லவிரும்பினர்.

**தொழில் புரட்சிக்குப் பின்:**

18ஆம் நூற்றாண்டில் ஏற்பட்டதொழிற் புரட்சியின் காரணமாகச் சமுதாயமாற்றம் ஏற்பட்டது. கி.பி.1750 முதல் 1850 வரை இங்கிலாந்தில் மக்கள் பெருக்கம் அதிகமாயிற்று. 17ஆம் நூற்றாண்டில் 5.5 மில்லியன் மக்களும், கி.பி.1801இல் 15 மில்லியன் மக்களும், 19ஆம் நூற்றாண்டின் இடையில் 25 மில்லியனுக்கும் அதிகமானமக்கள் இங்கிலாந்தில் வாழ்ந்துவந்தனர்.

மக்கள் பெருக்கம் தொழில் பெருக்கத்திற்கும்,பொருளாதாரவளர்ச்சிக்கும் வழிகாட்டியது.மக்கள் பெருக்கத்தின் காரணமாகமக்கள் உள் நாட்டிற்குள் இடம்பெயர்ந்துவாழலாயினர்.

**கடல் பயணம்**

19ஆம் நூற்றாண்டில் மக்கள் இன்பச் செலவிற்காகக் கப்பல் பயணங்களைமேற்கொண்டனர். அதனால் மக்கள் கண்டம் விட்டுக் கண்டம் சென்றனர். அமெரிக்காவில் பலகப்பல்கள் கட்டப்பெற்றன. தொடக்கத்தில் கட்டப்பெற்றநீராவிஎஞ்சின் கப்பல்கள் மக்கள் பயணம் செய்யவும்,அஞ்சல்களைஎடுத்துச் செல்லவும்,புத்துலகுகாணவும் பயன்பட்டன. அமெரிக்கக் கப்பல்கள் மற்றநாட்டுக் கப்பல்களைவிடஉயர்ந்தனவாகக் கருதப்பெற்றன. இங்கிலாந்தும் அமெரிக்காவுடன் வணிகத் தொடர்புகொள்ளப் பெரியகப்பல்களைஉருவாக்கியது. பயணிகளுக்குக் கட்டணச் சலுகைஅளித்தது. கட்டணச் சலுகைபெற்றுவடஅட்லாண்டிக் கடலில் மிகுதியானமக்கள் பயணம் செய்தனர். அக்காலத்தில் இங்கிலாந்துமக்கள் அமெரிக்காவிற்குச் செல்லவிரும்பினர். பலர் அதிருஷ்டத்தைத் தேடிஅமெரிக்காவிற்குச் சென்றனர். கி.பி. 1820இல் அட்டவணைப்படிடிரான்ஸ் அட்லாண்டிக் கடல் டிராவல்ஸ புகைவண்டியுடன் போட்டிபோட்டுக் கொண்டுசுற்றுலாநடத்தியது.

கி.பி. 1840இல் சர் சாமுவேல் குனார்டுஎன்பவர் பலவகைவசதிகளுடன் இங்கிலாந்திற்கும். அமெரிக்காவிற்கும் கப்பல் விட்டார். கி.பி. 1870இல் பயணிகள் அட்லாண்டிக் கடலைஎட்டுநாட்களிலும், கி.பி. 1907இல் ஆறு நாட்களிலும் கடந்தனர். ஆங்கிலேயர்களுடன் செர்மானியர்களும் அமெரிக்காவிற்குச் சென்றுவந்தனர். பலர் சுற்றுலாப் பயணிகளாகஅமெரிக்காவிற்குச் சென்றுவந்தனர். கி.பி1869இல் சூயஸ் கால்வாய் தோன்றியபின் மேலைநாட்டார் கீழைநாட்டாருடன் வாணிகத் தொடர்புகொள்ளத் தொடங்கினர். இருப்பினும் முதல் உலகப்போர் வரைகடற்பயணம் சூடு பிடிக்கவில்லை. மேலும் பணக்காரஐரோப்பியநாடுகளும் அமெரிக்காவுமேஆழ்கடல் பயணங்களைமேற்கொண்டன.புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டநாடுகளில் குடியேறுபவர்கள் கப்பல் பயணத்தைமேற்கொண்டனர். வேற்றுநாடுகளில் குடியேறியவர்கள் சுற்றுலா இயக்கத்தைஆரம்பித்துவைத்தனர். அதன்பின் முறையானஅட்டவணைப்படிகப்பல் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டன. கப்பல் பயணத்திற்குஉள்நாட்டுப் பயணங்களைவிடவெளிநாட்டுப் பயணங்களேமிகுதியாக இருந்தன. விடுமுறைநாட்களில் கப்பல் பயணிகள் அதிகமாயினர். மக்களின் மனமாற்றம்,மனமகிழ்ச்சியைவிரும்புதல்,கல்விகற்கவெளிநாடுசெல்லல்,செல்வ வளம்,வாகனவசதிகள்,சமுதாயமதிப்புபோன்றவை இன்பச் சுற்றுலாவிற்கு வழி வகுத்தன. கி.பி. 1925 வரைபணக்காரர்களும்,மிகுதியானவிமானம் உடையவர்களுமேசுற்றுப்பயணத்தைமேற்கொண்டனர். அப்பொழுதுசுற்றுப்பயணம் ஆடம்பரமாகக் (டுரஒரசல)கருதப்பெற்றது. அவர்கள் வசதியானவிடுதிகளில் (Luxurious hotels) தங்கியதால்

அதுஆடம்பரமாகக் கருதப்பெற்றது. சிலகழகங்கள் விடுதிகளையும் (Family rest and holiday homes) கட்டின. அதனால் மிகச் சிலரே பயன் பெற்றனர். இரண்டாம் உலகப் போருக்குப் பின் விமானத்துடன் போட்டிபோடமுடியாமல் கப்பல் பயணம் சிறிதுதளர்ந்தது. ஓய்வுபெற்றவர்களும்,மிகுதியான நேரம் உள்ளவர்களும் மட்டுமே இன்றுவிடுமுறைநாட்களைக் களிக்கக் கப்பல் பயணம் செய்கின்றனர். அண்டைநாடுகளுக்குக் கப்பலில் செல்வது இன்றும் புகழ் பெற்றுவிளங்குகிறது.

**மோட்டார் வாகனங்கள்**

சாலைவசதிகள் மற்றும் மோட்டார் வாகனங்கள் இக்காலப் போக்குவரத்தைமிகுதிப்படுத்தின. குறைந்தசெலவில் மிகுதியான இடங்களுக்குச் செல்லக் கூடியவாகனங்களேசுற்றுலாப் பயணத்திற்குத் தேவைப்பட்டன. உலகப் போருக்குப் பயன்பட்டவாகனங்கள்,போருக்குப்பின் சுற்றுலாவிற்கும் பயன்பட்டன.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் வரைசுற்றுலாப்பயணிகள் புகைவண்டியையும்,கப்பலையும் மிகுதியாகப்பயன்படுத்தினர். முதல் உலகப் போருக்குப்பின் தனியார்கார்களும்,கோச்சுகளும் சுற்றுலாவிற்குப் பயன்படுத்தப்பெற்றன.மோட்டார் கார் குறுகிய தூரப் பயணத்திற்குமிகுதியாகப் பயன் பெற்றது. நல்லமேற்பரப்பையுடையநெடுஞ்சாலைகள் வந்த பின் மோட்டார் காரில் நீண்ட தூரப் பயணம் மேற்கொள்ளப் பெற்றது. இந்தியாவிலும் மோட்டார் கார் பயணம் பெருகியுள்ளதுபோக்குவரத்துநெரிசல் ஏற்பட்டுள்ளதுசாலைவிபத்துக்கள் நடந்துள்ளன. விரைவில் கம்ப்யூட்டர் பிரேக்குகள் வரவுள்ளன. மோட்டார் வாகனத்தில் எலெக்ட்ரானிக் பொறிமுறைகளைச் சேர்க்கும்பொழுது இன்னும் விரைவாகவும்,பாதுகாப்பாகவும்,எரிபொருள் செலவின்றியும் செல்லமுடியும். ஸ்டான்போர்டுஆராய்ச்சிநிறுவனம் நீண்ட தூரப் பயணங்களுக்குப் பெரியமோட்டார் வண்டிகளையும்,குறுகிய தூரப் பயணங்களுக்குச் சிறியமோட்டார் வண்டிகளையும் பயன்படுத்தும்படிஅறிவுரை கூறியுள்ளது. எதிர்காலத்தில் மோட்டார்கார்கள் கடினமானபிளாஸ்டிக்கினால் செய்யப்படும். அதனால் பெட்ரோல் மிச்சப்படும். சிறியகார்களைப் பேட்டரிமின்சாரத்தினால் இயக்கலாம்.

**விமானம்**

விமானப் பயணம் உலகப் பயணத்தின் தன்மையையேமாற்றிவிட்டது. வெளிநாட்டுச் சுற்றுலாவில் விமானம் முக்கிய இடத்தைப் பெறுகிறது. தூரப் பயணத்திற்கும் விரைவாகக் கண்டம் விட்டுக் கண்டம் செல்வதற்கும் பயன்படுகிறது. இரண்டாம் உலகப்போருக்குப் பின் விமானத்தில் மிகுதியானபயணிகள் பயணம் செய்துள்ளனர். கி.பி. 1960-க்குப் பின் மக்கள் கூட்டமாகச் செல்லும் சுற்றுலாவிற்கும்,திட்டமிட்டுச் செல்லும் சுற்றுலாவிற்கும் அதிகம் பயன்படுகிறது. ஜெட் விமானங்களில் வேகமாகச் செல்லமுடிகிறது. அவற்றில் வசதியும் பாதுகாப்பும்

அதிகமாகஉள்ளன. இன்றுபலவகைவிமானங்களில் நாள்தோறும் ஆயிரக்கணக்கானபயணிகள் பயணம் செய்கின்றனர்.

**சுற்றுலாஅமைப்பாளர்கள் (வுழுருசு ழீநுசுயுவுழுசுளு)**

சுற்றுலாத் துறைஎனும் தேருக்குஅச்சாணியாகவிளங்குபவர் சுற்றுலாஅமைப்பாளர். சுற்றுலாப் பயணத்தில் முதலும் கடைசியுமாக இருந்து இன்றியமையாச் செயலாளராகமிளிர்பவர் சுற்றுலாஅமைப்பாளர். சுற்றுலாஅமைப்பாளருக்கும் முகவருக்கும் அதிகவேறுபாடுகள் இல்லை.

சுற்றுலாவெற்றிகரமாகநடைபெற,சுற்றுலாஅமைப்பாளர் பெருந்துணைபுரிகிறார். இரண்டாம் உலகப் போருக்குப்பின் மேலை - நாடுகளில் சுற்றுலாப் பயணம் பெரிதும் செல்வாக்குப்பெறஆரம்பித்தது. இன்றுஉலகெங்கிலும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கைப் பெருகிவிட்டது. இவர்கள் அயல்நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டு,பயனுள்ளமுறையில் தமதுவிடுமுறைநாட்களையும் ஓய்வுநேரங்களையும் மகிழ்ச்சியுடன் கழிக்கவிரும்புகின்றனர். செலவுகளைப் பற்றிக் கவலைப்படாதவர்கள்,சுற்றுலாவைமேற்கொள்ளப் பயணப்பணிநிறுவனங்களைஅணுகி,தக்கஏற்பாடுகளைச் செய்துகொண்டுசுற்றுலாச் செல்கின்றனர். இதனால் பயணிகள் அலைச்சலின்றிச் சுற்றுலாக்களில் ஈடுபடமுடிகின்றது. பயணிகளுக்குத் தேவையானவசதிகளைச் செய்துகொடுக்கும் அனைத்துப் பணிகளையும் பயணப்பணிநிறுவனங்களேஏற்றுக்கொண்டு,முன்னேற்பாடுகள் செய்து,பயணத்தை இனிதேமுடித்துத் தருகின்றன. பயணிகளுக்குப்பயணச்சீட்டுவாங்கித் தருவதுமுதற்கொண்டுபயணங்கள் முடியும் வரை,அனைத்துசேவைகளையும் பயணப்பணிநிறுவனத்தைச் சார்ந்தசுற்றுலாஅமைப்பாளர்களேமேற்கொள்கின்றனர்.

**தனிநபர் சுற்றுலா(Individual Tourism)**

சுற்றுலாசெல்லவிரும்பும் ஒருவர் தனதுவிருப்பத்தைச் சுற்றுலாஅமைப்பாளரிடம் தெரிவிக்கிறார். சுற்றுலாஅமைப்பாளர் அந்தப்பயணியிடம் தமக்குளப்படிப்பட்டசுற்றுலாதேவைஎந்த இடத்திற்குச் செல்லவேண்டும்,எந்தநாளில் செல்லவேண்டும்,என்னென்னவசதிகள் வேண்டும் என்பனபோன்றவினாக்களைஎழுப்பி,பயணியிடம் பதில்களைவரவழைக்கிறார். பின்னர் பயணியின் விருப்பத்திற்கேற்றபடிஒருபயணத் திட்டத்தைஉருவாக்கிப் பயணியிடம் காண்பித்து,அதற்காகும் செலவைத் திட்டவட்டமாகத் தெரிவிக்கிறார்பயணிக்கு இச்சுற்றுலாத் திட்டத்தில் மனநிறைவுஏற்பட்டு,சுற்றுலாசெல்ல இசைவுதெரிவித்தால்,அவரிடம் சுற்றுலாஅமைப்பாளர் செலவுத் தொகையில் 25 சதவிகிதத்தைமுன்பணமாகப் பெற்றுக்கொண்டுபயணத்திற்கானநிகழ்ச்சிநிரலைவழங்குகிறார். பின்னர் சுற்றுலாத் தொடங்கும் போதுபாக்கிப் பணத்தைஅமைப்பாளரிடம் செலுத்துகிறார். சிலசமயங்களில் சுற்றுலாவெற்றிகரமாகமுடிந்தபின்பும் பாக்கிப் பணத்தைச் செலுத்தஅனுமதிக்கப்படுகிறார்.

சிலநிறுவனங்கள் பயணத்தைத் தொடங்கும் போதே,பாக்கித் தொகையைப் பாக்கியின்றிச் செலுத்தும்படிவற்புறுத்துகின்றன. சுற்றுலாஅமைப்பாளர் பயணச் சீட்டுக்களைவழங்குவதுடன் விடுதி,வாகனம் ஆகியவற்றிற்கும் முன்பதிவுசெய்கிறார். சுற்றுலாஅமைப்பாளர் தொடக்கமுதல் கடைசிவரையில் பயணிக்குத் துணைபுரிகிறார்' உரியகணக்குகளையும்,வவுச்சர்களையும் பயணிக்குவழங்குகிறார்.

**குழுச் சுற்றுலா**

குழுச் சுற்றுலாவைநடத்தும்போதும் சுற்றுலாஅமைப்பாளர் மேற்கூறியவழிமுறைகளைப் பின்பற்றுகிறார். தனிநபர் சுற்றுலாவிற்குமுன்னேற்பாடுகள் செய்வதுஎளிது. ஆனால் குழுச் சுற்றுலாவிலோசுற்றுலாஅமைப்பாளர் சற்றுஅதிகசிரமங்களைஏற்கவேண்டியுள்ளது. ஒருகுறிப்பிட்டஎண்ணிக்கைஅளவிற்குஆள் சேர்ந்தபின்னர் குழுப் பயணம் மேற்கொள்ளப்படுகிறது. பொதுவாகஒருகல்விநிறுவனத்தைச் சேர்ந்தசிலரோ கூட்டுக் குடும்பத்தினர் சிலரோ,வணிகநிறுவனத்தினரோஒன்றாகச் சேர்ந்துகுழுப்பயணம் மேற்கொள்கின்றனர். அக்குழுவினர் பயணப்பணிநிறுவனத்தைச் சேர்ந்தசுற்றுலாஅமைப்பாளரிடம்,சுற்றுலாவிற்கானஏற்பாடுகளைச் செய்யகேட்டுக் கொள்கின்றனர்.

முதலாவதாகசுற்றுலாஅமைப்பாளர்,குழுப்பயணம் மேற்கொள்ளும் நபர்களின் எண்ணிக்கையைஉறுதிசெய்துகொள்கிறார். அடுத்துசுற்றுலாவிற்காகஆகும் செலவுத் தொகை,சுற்றுலாசெல்லும் முறைஆகியவற்றில் தனிக்கவனம் செலுத்துகிறார். அடுத்துவாகனவசதி,விடுதிகள் முதலானவற்றிற்கானமுன்னேற்பாட்டைச் செய்துமுடிக்கிறார். பின்னர் நிகழ்ச்சிநிரலைத் தயார் செய்து,பயணிக்குவழங்குகிறார். அதில் ஒருகாப்பியைத் தான் வைத்துக்கொண்டு,மற்றொன்றைத் தான் முன் பதிவுசெய்துள்ளவிடுதிக்கும் போக்குவரத்துத் துறைக்கும் அனுப்பிவைக்கிறார். முன்பதிவுசெய்துள்ளஹோட்டல் அறைஎண்ணையும்,போக்குவரத்துமுன் பதிவின்படிஉட்காரவேண்டியசீட் எண்ணையும் ஒவ்வொருபயணிக்கும் இவர்அறிவிக்கிறார். முக்கியமானவர்களைச் சுற்றுலாஅழைத்துச் செல்லும்போதும்,பயணிகள் எண்ணிக்கைஅதிகமாகஉள்ளபோதும்,சம்பந்தப்பட்டஅலுவலர்களுக்குப் பாதுகாப்பளிக்கக் கேட்டுக் கொள்கிறார்.

சுற்றுலாஅமைப்பாளரின் பணியைநாம் வரையறுத்துக் கூறுதல் இயலாது. ஏனெனில் இதுநாட்டுக்குநாடுவேறுபடும். கனடா,அமெரிக்கா, ஜெர்மனி, ஆஸ்திரியாமுதலானபொருளாதாரமுன்னேற்றம் பெற்றநாட்டுப் பயணிகள் அதிகமானவசதிகளைஎதிர்பார்க்கின்றனர். அப்போதுபயணஅமைப்பாளர் அவர்கட்குஅதிகமானவசதிகளைச் செய்துதருகிறார். வசதிகுறைந்தநாட்டுக்காரர்கள் அதிகவசதிகளைஎதிர்பார்க்கமாட்டார்கள். எனவேஅவர்களுக்குச் சிக்கனமானமுறையில் சுற்றுலாவைஅமைத்துத் தரவேண்டும்.

**அனைத்தும் உள்ளடக்கியசுற்றுலா(All Inclusive Tour)**

காலம் மாறுகிறது. கோலம் மாறுகிறது. இதனைப் போன்றுசுற்றுலாதுறையிலும் பலமாற்றங்களும் வளர்ச்சிகளும் ஏற்படுகின்றன. 1960-ஆம் ஆண்டளவில் மேற்குஐரோப்பியநாடுகளில், “அனைத்தும் உள்ளடக்கியசுற்றுலா’’(யுடட ஐஉெடரளளைந வுழரச)எனும் சொற்றொடர் சுற்றுலாத் துறையில் ஒரு மாபெரும் புரட்சியைத் தோற்றுவித்ததுஎன்றால் அதுமிகையாகாது. அனைத்தும் உள்ளடக்கியசுற்றுலா,பயணிகளுக்குக் குறைந்தசெலவில் சிறந்தமுறையில் சுற்றுலாவைமேற்கொள்ளஉதவுகிறது. இத்திட்டத்தில் சுற்றுலாஅமைப்பாளர் விமானம்,கப்பல்,ரயில் ஆகியவற்றில் ஒருகுறிப்பிட்டஎண்ணிக்கைகொண்ட இருக்கைகளை(Seats)முன்னதாகவேகுத்தகைக்குஎடுக்கிறார். இதனைப் போன்று,ஓட்டல்களிலும் சிலஅறைகளைக் குறைந்தவாடகைக்குப் பிடித்துக் கொள்வார். விளையாட்டுக்கள்,கேளிக்கைகள்,பொழுதுபோக்குகள், வழி காட்டிகள் எல்லாவற்றையும் சலுகைவிலையில் ஏற்பாடுசெய்துவிடுகிறார். இவ்வாறுகுறைக்கப்பட்டகட்டணங்களையும்,தனதுஆதாயத்தையும் ஒன்றுசேர்த்துகணக்குப் பார்த்து,பயணிகளிடம் ஓட்டுமொத்தமாகஒருகுறிப்பிட்டகட்டணத்தைவசூல் செய்கிறார். இக்கட்டணத்தில் அனைத்துச் செலவுகளும் அடங்கிவிடுகிறது. இதில்கட்டணமும் குறைவுபயணிகளுக்கும் சிரமம் இல்லை. இதுஒரு ஆல் இன் ஒன் (All in one).

**சிறப்பு**

நாம் முன்புபார்த்ததனிநபர் சுற்றுலா,குழுச் சுற்றுலாஆகியவற்றைக் காட்டிலும் இதில் கட்டணம் குறைவு. பயணிகளுக்குச் சிரமங்களும் குறைவுபயணிகள் பெறுவதோமனநிறைவு. இதில் ஒருசிறப்புயாதெனில்,பணவசதிகுறைந்தவர்களும் கூட இதில் பங்குபெற்று, இன்பம் பெறலாம். இதனைப் போன்றசுற்றுலாக்கள் மேலைநாடுகளில் மிகுந்தசெல்வாக்குபெற்றுள்ளன. ஆனால் இந்தியாவிலோஅனைத்தும் உள்ளடக்கியகுழுச் சுற்றுலாவேஅண்மைக் காலத்தில் மிகவும் பிரபலமாகியுள்ளது. இதனைப் பற்றிக் கீழேகாண்போம்.

**அனைத்தையும் உள்ளடக்கியகுழுச் சுற்றுலா.**

இது இந்தியப் பயணிகளால் விரும்பிவரவேற்கப்படுகிறது. சுற்றுலாஅமைப்பாளரே, இதனைமுன்னின்றுநடத்துகிறார். இதில் அமைப்பாளர் பயணிகளுடன் உடன் வருவதில்லை. ஆனால் அனைத்துஏற்பாடுகளும் இவர் செய்துதருகிறார். ஒருகுழுவினர் அதாவதுஏறத்தாழ 15 அல்லதுஇருபது பேர் ஒன்றுசேர்ந்து,ஒருகுறிப்பிட்ட,சுற்றுலாமுக்கியத்துவம் மிக்க இடத்திற்க்குப்

பயணம் செய்கின்றனர். இவர்கள் விமானத்தில் பயணம் செய்வதாகவைத்துக் கொள்வோம். விமானநிறுவனம் சுற்றுலாஅமைப்பாளர்களுக்குத் தமதுஒப்பந்தப்படி இலவசப் பயணவசதிஅளிக்கிறது. இத்தகுசுற்றுலாமுறையில் சுற்றுலாஅமைப்பாளர் பயணிகளின் போக்குவரத்து,தங்குமிடம் மற்றும் வேறுசிலஅவசியச் சேவைகளுக்குமட்டும் தக்கமுன்னேற்பாடுகளைச் செய்துதருகிறார். மற்றவசதிகளைச் சுற்றுலாப் பயணிகள் தாங்களேதங்கள் வசதிப்படிசெய்துகொள்கின்றனர். எடுத்துக்காட்டாகத் தாங்கள் விரும்பும் உணவுவகையைத் தாங்களேதேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். கேளிக்கைகளும் அவரவர் விரும்பியவண்ணமே. இவ்வகையில் சுற்றுலாஅமைப்பாளர் குறைந்தசெலவில் அனைவரும் சுற்றுலாமேற்கொள்ளஉதவுகிறார் இதனால் இதனைப் போன்றநெகிழ்ந்துகொடுக்கும் சுற்றுலாமுறைகளேஏராளமானபயணிகளைக் கவர்ந்திழுக்கமுடியும்’ சுற்றுலாவளரவும் துணைபுரிய இயலும்.

**பயணஅமைப்பாளருக்கும் பயணமுகவருக்கும் உள்ளவேறுபாடு**

பொதுவாகமேல் போக்கில் பயணமுகவரும் பயணஅமைப்பாளரும் ஒருவராகவேதோன்றுவார். இவர்களின் பணிஒரேமாதிரியாகஉள்ளதுதான் இதற்குக் காரணம். ஆனால் சற்றுக் கூர்ந்துநோக்கினால் இருவரும் வேறானவர் என்பதுபுலப்படும்.இருவருக்கும் வேறுபாடுகள் உள்ளன. சுற்றுலாஅமைப்பாளர் சுற்றுலாப் பண்டத்தைஉற்பத்திசெய்பவர்’ சுற்றுலா சேவைகளைப் பயணிகளுக்குவழங்குபவர். இவர் பயணிகளுடன் தானும் உடன்பயணம் செய்கிறார். சுருங்கச் சொன்னால் இவரன்றிசுற்றுலா இல்லை. இவர் சுற்றுலாப் பண்டத்தைநேரடியாகவிற்கிறார்.சிலசமயங்களில் பயணப்பணிநிறுவனங்கள் மூலமாகவும் விற்கிறார். இதன் விளைவாக இவர் மற்றநிறுவனங்களிலிருந்துகழிவுத் தொகையைப் (கமிஷன்) பெறுவதுடன் சிறிதுஆதாயமும் பெறுகிறார். இவர் முன்னின்றுநடத்தும் சுற்றுலாக்கள் ‘நடத்திச் செல்லும் சுற்றுலாக்கள்’ (Conducted Tours) என்றபெயராலும் வழி நடத்தும் சுற்றுலாக்கள் (Escorted Tours) எனும் பெயராலும் அழைக்கப் பெறுகின்றன.

**பயண முகவரது பணிகள்:**

பயணமுகவர்,பயணிகளுக்குச் சுற்றுலாச் சேவைகளைச் சில்லறைவியாபாரிகளைப் போன்றுவிற்பனைசெய்கிறார்.இவர் ஓர் சில்லறைவிற்பனையாளரேஅன்றிமொத்தவியாபாரிஅல்லர். உற்பத்தியாளரும் அல்லர். இவர் வழங்கும் சேவைக்கு, இவர் போக்குவரத்துநிறுவனங்களிடமிருந்தும்,விடுதிமுதலாளிகளிடமிருந்தும்,மற்றநிறுவனங்களிடமிருந்தும் அதற்கானகழிவுத் தொகையைப் பெற்றுக் கொள்கிறார். சேவையைவழங்குபவர்கள்

போக்குவரத்துநிறுவனங்களும் விடுதிகளுமேஆகும். பயணமுகவர் ஒருகமிஷன் ஏஜண்டாகத்தான் செயல்படுகிறார். இருப்பினும், இவரதுபங்களிப்பையும் நாம் குறைத்துமதிப்பிடல் இயலாது. திட்டமிட்டுச் சுற்றுலாவைநடத்துவது,சுற்றுலாநடத்துநர்களின் பணியாகும். சுற்றுலாமுகவர்களுக்குஉதவிபுரிவதும் இவரதுபணியாகும். இவர் பயணமுகவர்களைப் போன்றுதனியாகத் தொழில் புரிபவராகவும் இருப்பார். சுற்றுலாநடத்துனர்கள்,போக்குவரத்துநிறுவனங்கள்,விடுதிகள் போன்றவற்றுடன் நீண்டகாலஒப்பந்தம் செய்துகொள்வார். இதன் விளைவாகவே இவர்கட்குகட்டணச் சலுகைகிடைக்கிறது.இதனால் பயணிகளைக் குறைந்தசெலவில் சுற்றுலாஅழைத்துச் செல்லமுடிகிறது.

சுற்றுலாஅமைப்பாளர்களின் பணிமகத்தானது. சுற்றுலாஎனும் கோயிலில் இவர்களேஅர்ச்சகர்கள். இவர்களால் சுற்றுலாத் துறை வளம் பெறுகிறது. இவர்களதுசேவையால் சுற்றுலாப் பயணியர் எவ்விதச் சிக்கலும் இன்றிநிம்மதியாகப்பயணம் செய்யமுடிகிறது.

**சுற்றுலாவழிகாட்டிகள் (Tourist Guides)**

சுற்றுலாவழிகாட்டிசுற்றுலாவிற்குமுதுகெலும்புபோன்றவர். சுற்றுலாப் பயணத்தின் வெற்றிமுழுக்கமுழுக்கசுற்றுலாவழிகாட்டியின் பொறுப்பில்தான் உள்ளதுஎனில் மிகையன்று. சுற்றுலாப் பயணிக்குச் சுற்றுலாமையத்தைப் பற்றியோ,அதன் சிறப்புப் பற்றியோஎங்கேதங்குவது? எங்கேஉண்ணுவது? என்பதுபற்றிஎதுவுமேதெரியாது. இவைபற்றியஅனைத்துவிபரங்களையும் பயணிகளுக்குத் தெரிவிப்பவர்,சுற்றுலாவழிகாட்டியே. இவரேசுற்றுலாவின் ஒளியூட்டி,உயிரூட்டி. சுற்றுலாமையத்தின் அருமைபெருமைபற்றியும் பழமைச் சிறப்புப் பற்றியும் சுற்றுலாநிகழ்ச்சிநிரல் பற்றியும் முழுமையானஅளவில் தெரிந்திருத்தல் வேண்டும். இவர் சுற்றுலாத் துறையில் நல்லஅனுபவமும்,அறிவும் தேர்ச்சியும் பெற்றவராகவிளங்கினால்தான் சுற்றுலாவைவெற்றிகரமாகநடத்தமுடியும். எல்லாவற்றிற்கும் மேலாகஅவர் வழிகாட்டிக்கெனஅளிக்கப்படும் தனிப்பயிற்சியும் பெற்று,அங்கீகாரம் பெற்றவழிகாட்டியாகத் (சுநஉழபளைநன புரனைந)திகழவேண்டும். வழிகாட்டிக்குரியஉரிமமும் (டுஉைநஉெந)அவர் பெற்றிருக்கவேண்டும். அப்போதுதான் அவர் பயணியர்க்குஉண்மையானவழிகாட்டியாகத் திகழ இயலும்.

ஒருநல்லவழிகாட்டியாகத் திகழஅவர் சிலதகுதிகளுடன் அன்னியமொழிகள் சிலவற்றையும் அறிந்திருத்தல் வேண்டும். அவர் பன்மொழியறிந்தவராகத் திகழ்ந்தால்தான்,அயல்நாட்டுப் பயணிகளுக்குநல்வழிகாட்டியாகத் திகழமுடியும். பயணியர் கேட்கும் கேள்விகட்கும்,சந்தேகங்களுக்கும் விளக்கங்கள் கூற இயலும். பல்வேறுபயணிகளும் எளிதாகப் புரிந்துகொள்ளும் வகையில், இவர் தெளிவானமொழிநடையில் பேசவேண்டும். சுற்றுலாமையத்தின் பண்பாட்டுச் செழுமை,வரலாற்றுப்பெருமைஆகியவைபற்றிய இவரதுவிளக்கங்கள்

ஆணித்தரமாகஅமைதல் வேண்டும். மலர்ந்தமுகமும், இனிய பேச்சுத் திறனும்,நகைச்சுவையும் சுற்றுலாவின் வெற்றியைவிரைவுபடுத்தும். இவரது இனிய பண்புநலன்களும் நடவடிக்கைகளும் அன்னியப் பயணியரைத் திருப்திப்படுத்திமகிழ்விக்கும்.

**பெண் வழிகாட்டிகள்**

சுற்றுலாவழிகாட்டிகளாகப் பணிபுரியப் பெண்கள்,ஆண்கள் இருவருமேதகுதிபடைத்தவர்கள். வெளிநாடுகளில் பெரும்பாலும் பெண்களேவழிகாட்டிகளாகப் பணிபுரிகின்றனர். நம் நாட்டிலோபெரும்பாலோர் ஆண்களே இப்பணியைச் செய்கின்றனர். ஒருசுற்றுலாகுழுவிற்குஒருவர் அல்லதுஒன்றுக்குமேற்பட்டோர் வழிகாட்டிகளாகப்பணியாற்றலாம். வெளிநாடுகளில் பலபெரியகுடும்பத்துச் சீமாட்டிகளும் சமூகசேவைநிறுவனத்தைச் சேர்ந்தமகளிரும்,அயல்நாட்டுபயணிகளுக்குவழிகாட்டியாகப் பணிபுரியமனமுவந்துமுன்வருகின்றனர். மணியன் அவர்கள் தமது “பிரெஞ்சுபயணக்கதை’’எனும் நூலில்,பிரெஞ்சுபெண் வழிகாட்டிசோனியாவின் திறமையையும்,நளினத்தைகடமையுணர்வையும்,உற்சாகத்தையும் பலபடப் பாராட்டுகிறார். ‘‘மற்றொரு நூலில் காலைஎட்டுமணிக்குதிருமதிதாம்சன் உங்களைஹோட்டலில் சந்தித்து இந்த இடத்திற்குஅழைத்துச்செல்வார். ஒன்பதுமணிக்குமாரி ஜோஸப் உங்களைச் சந்திப்பார். பதினொருமணிக்குதிருமதிபார்பாராஎன்றுவரிசையாகச் சொல்லிவிடுகிறார்கள்’’என்றுமணியன் கூறுகிறார்.இதனால் வெளிநாடுகளில் ஒரேபயணத்தைமுடிக்கப் பலபெண் வழிகாட்டிகள் பணிபுரிகின்றனர் என்பதைஅறியலாம்.

**வழிகாட்டிகளுக்குப் பயிற்சிவகுப்புகள்**

சுற்றுலாவழிகாட்டிவெற்றிகரமாகத் திகழப்பயிற்சிஅவசியமாகும். குறிப்பாகஅதிலும் சிறப்பாகஅயல்நாட்டுப் பயணியர்க்குவழிகாட்டும் வழிகாட்டிகள் தேர்ச்சிபெற்றவர்களாக இருத்தல் வேண்டும். 1974 இல் மதுரைமீனாட்சிஅம்மன் திருக்கோயிலில் வழிகாட்டிகளுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது. 1983 ஆம் ஆண்டுதமிழகஅரசாலும் வழிகாட்டிகளுக்குப் பயிற்சிவகுப்புகள் நடத்தப்பட்டன.

பருப்பின்றிகல்யாணமா ? என்று கூறுவதுபோல் வழிகாட்டியின்றிசுற்றுலாவா? இல்லை. பயணியின் சுற்றுலாவெற்றியிலும்,நாட்டின் சுற்றுலாவளர்ச்சியிலும் பெரும் பங்குவகிப்பவர் சுற்றுலாவழிகாட்டி. நம் நாட்டின் சுற்றுலாவழிகாட்டிகளானஆண்களும் பெண்களும் மேலும் உற்சாகத்துடனும் திறமையுடனும் செம்மையாகப் பணிபுரிந்தால்,நாம் எதிர்பார்க்கும் அளவிற்குமேல்,அயல்நாட்டுப் பயணிகளின் மூலம் நமதுஅரசுஅந்நியச் செலாவணியைப் பெறும். இன்றையமத்தியமாநிலச் சுற்றுலாத் துறையினரின் முயற்சியும் உழைப்பும் வெற்றிபெறும் என்பதில் ஐயமில்லை.

**சுற்றுலாப் பயணிகள் (TOURIST)**

மனமகிழ்ச்சிக்காகவும், இன்பப் பொழுதுபோக்கிற்காகவும் ஓரிடத்திலிருந்துமற்றொரு இடத்திற்குச் செல்பவன் சுற்றுலாப் பயணிஆவான். தன்னைச் சுற்றியுள்ளபொருள்களைஅறிந்துகொள்ளவேண்டும் என்றமனிதனின் ஆர்வமே,பயணத்தின் தூண்டுகோலாகஅமைகிறது. "சுற்றுலாப் பயணி'' யார்? என்பதனைவிளக்குதல் எளிதன்று. காரணம் இதற்குப் பலவகையானவிளக்கங்கள் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் ஒருசிலவற்றைக் காண்போம்.

**விளக்கங்கள்**

பெக்கிளன்னும் அறிஞர் "சுற்றுலாப் பயணி''என்பவர் ஒரு "பயணியே''எனக் கூறுவார்.

உலகசுற்றுலாக் கழகம் ''ஒருநாட்டில் குறைந்தஅளவு 24 மணிநேரமாவதுபயணம் செய்பவர் சுற்றுலாப் பயணிஎனஅழைக்கப்படுவார்" என்றுவரையறைசெய்கிறது.

''மனமகிழ்ச்சிக்காகஓரிடத்திலிருந்துமற்றோர் இடத்திற்குச் செல்பவர் சுற்றுலாப் பயணி ஆவார்" என்றுஅகராதி கூறுகிறது.

''ஒருஅயல்நாட்டுகடவுச்சீட்டுடன் (பாஸ்போர்ட்) நிரந்தரமாகத் தங்காமல்,வேலைபார்க்கும் நோக்கமின்றி 24 மணிநேரத்திற்குமேல் தங்கவருபவர்களேசுற்றுலாப் பயணி ஆவார்" என்பது 1971-ஆம் ஆண்டுமுதல் இந்தியாவகுத்துள்ளவரையறையாகும்.

லிக்கோரிஷ் என்பார் ''தான் வசிக்கும் இடத்தில் இருந்துமற்றொரு இடத்திற்குச் சென்று,அங்கு 24 மணிநேரத்திற்குஅதிகமாகவும் 12 மாதங்களுக்குக் குறைவாகவும் தங்கும் நபரேசுற்றுலாப் பயணி ஆவார்" என்றுகருத்துத் தெரிவிக்கிறார்.

''ஆர்வத்தின் பொருட்டுப் பயணம் மேற்கொள்பவரோஅல்லதுதானும் பயணம் செய்தேன் என்றுபிறரிடம் பெருமையாகச் சொல்லிக் கொள்ளும் நப்பாசைகொண்டவரோசுற்றுலாப் பயணியாகக் கருதப்படுவார்" என்றுயுனிவர்சல் அகராதிவரையறைசெய்கிறது. "எவரொருவர் ஆர்வத்தின் காரணமாகவோநேரத்தைப் போக்குவதற்கோபயணம் மேற்கொள்கிறாரோ,அவரேசுற்றுலாப் பயணி ஆவார்''என்றுபிரான்சுநாட்டறிஞர் விட்ரிகுறிப்பிட்டுள்ளார்.

ஏ.கே. நார்வல் என்பார் ''எவரொருவர் எவ்விதக் குறிக்கோளும் இன்றி,தனதுநாட்டின் எல்லைகளைக் கடந்து,பிறநாட்டில் தற்காலிகமாகத் தங்கி,தான் எங்கோஈட்டியபணத்தை,அங்குசெலவிடுகின்றாரோஅவரேசுற்றுலாப் பயணி ஆவார்" என்றசரியானவிளக்கத்தைக் கூறியுள்ளார்.

பன்னாட்டுக் கழகத்தின் பொருளாதாரக்குழு 1947 ஆம் ஆண்டுசுற்றுலாப் பயணிபற்றிக் கீழ்க்காணும் விளக்கத்தைக் கூறுகிறது.

“ஒருவர் தான் வசிக்கும் நாட்டைவிட்டுவேறு இடத்திலோ,வேறுநாட்டிலோ 24 மணிநேரத்திற்குமேல் பயணம் செய்வாராயின் அவர் சுற்றுலாப் பயணிஎன்றுஅழைக்கப்படுவார்”. பினனர் இதில் சிலமாற்றங்களுடன் “சம்பளம் இல்லாமல்,வேலைநோக்கம் கருதாமல் தமதுவழக்கமான இருப்பிடத்தைவிட்டுவிலகி,புதியநாட்டிற்குச் செல்பவரேசுற்றுலாப் பயணி” எனஅழைக்கப்படுவார் என்று கூறப்பட்டது.

அடுத்துசுற்றுலாப் பயணி யார்? சுற்றுலாப் பயணிஅல்லாதார் யார் ? என்பதுகுறித்தும் இப்பொருளாதாரக் குழு சிலவரையறைகளைக் கூறியுள்ளது. சுற்றுலாப் பயணிஎன்போர் “மனமகிழ்ச்சிக்காகவும்,சொந்தக் காரணங்களுக்காகவும்,உடல் நலன் பொருட்டும் பயணம் செய்வோர்,பன்னாட்டுக் கருத்தரங்குகள்,மாநாடுகள் (விளையாட்டு,சமயம்,அறிவியல்) ஆகியவற்றில் பேராளர்களாகக் கலந்துகொள்வோர்,கப்பல் மூலம் 24 மணிநேரத்திற்கும் குறைவாகப் பயணம் செய்வோர்” ஆவர்.

சுற்றுலாப் பயணிகள் அல்லாதோர் எனப்படுவோர் “அயல் நாட்டிற்குச் சென்றுகுடியேறுவோர்,ஒருநாட்டிற்குவேலைசெய்வதற்காகச் செல்வோர்,விடுதிகளில் தங்கிப் படிக்கச் செல்லும் மாணாக்கர், 24 மணிநேரத்திற்கும் அதிகமாகஒருநாட்டில் பயணம் செய்துஅந்தநாட்டைக் கடந்துசெல்வோர்” ஆகியோராவர்.

மேற்கூறப்பட்டபலவிதமானவிளக்கங்களைக் கொண்டுசுற்றுலாப் பயணிஎன்பவன் 24 மணிநேரத்திற்குமேலாகஒருநாட்டில் மனமகிழ்ச்சி,ஓய்வு,பொழுதுபோக்குஆகியவற்றிற்காகத் தங்குபவன் என்பதுபுலனாகும்.குறைந்தபட்சதங்கும் நேரத்தைச் சுட்டிக்காட்டும் இவ்விளக்கங்கள்,அதிகபட்சகாலம் யாது? என்பதனைப் பற்றிலிக்கோஷ் என்பவரைத் தவிரஎவரும் கூறவில்லை. எனவேதனது இருப்பிடத்திலிருந்துபுறப்பட்டு,ஒருநாளைக்குமேல் பிற இடத்தில் அதாவது உள் நாட்டிலோஅல்லதுஅயல்நாட்டிலோபயணம் செய்துதங்கினாலும்,அவர் சுற்றுலாப் பயணியாகக் கருதப்படுவார் என்பதுஅறியப்படுகிறது. இதில் உள்நாட்டுப் பயணமும் அடங்கும்.

சுற்றுலாப் பயணி யார்? என்பதனைஅறிந்துகொண்டநாம் சுற்றுலாப் பயணிகளைக் கீழக்காணும் முறையில் வகைப்படுத்தலாம்.

**இன்பச் சுற்றுப் பயணிகள்(Excursionists)**

இன்பச் சுற்றுப் பயணிகள் என்போர் தற்காலிகமாக 24 மணிநேரத்திற்கும் குறைவானகாலம் பயணம் செய்பவர் ஆவார். இவர்கள் உள்நாட்டுப் பயணத்தைமேற்கொள்பவர். இவர்கள் சுற்றுலாப் பயணிஆகமாட்டார்கள். சுற்றுப்பயணம் சுற்றுலாப் பயணம் ஆகாது.

**பொழுதுபோக்குப் பயணிகள் (RECREATIONERS)**

தமதுஓய்வுநேரத்தைப் பயனுள்ளமுறையில் அறிவுப் பூர்வமாகச் செலவிடவிரும்புவோர் பொழுதுபோக்குப் பயணியர் ஆவர். பொழுதுபோக்குகள் பலவகைப்படும். இவற்றுள் ஒவ்வொருபயணியரும் தனதுவிருப்பத்திற்கேற்பஏதாவதுஒருபொழுதுபோக்கைத் தேர்ந்தெடுக்கலாம். தானேஈடுபடும் அல்லதுபங்குபெறும் பொழுதுபோக்குதன்வினைப் பொழுதுபோக்குஆகும். ஆனால் பிறர் விளையாடும் விளையாட்டுக்களைக் கண்டுகளிப்பதுபிறவினைப் பொழுதுபோக்காகும். ஒருவர் தான் வாழும் இடத்தைவிட்டுவேறு இடங்களுக்குச் சென்றுபொழுதுபோக்கினால் அவரைப் பொழுதுபோக்குப் பயணிஎன்கிறோம். எடுத்துக்காட்டாகபக்கத்துநகரத்தில் நடக்கும் விளையாட்டுப் போட்டிகளைக் கண்டுகளிப்பதைக் கூறலாம். மேலைநாடுகளில் பலர் இதுபோன்றபொழுதுபோக்குகளில் விரும்பிஈடுபடுவர்.

**விடுமுறைபொழுதுபோக்குவோர் (VACATIONERS)**

விடுமுறைகாலங்களில் தாம் வாழும் இடத்தைவிட்டுவேறு இடங்களுக்குச் சென்றுபொழுதுபோக்குபவர்,ஓய்வுஎடுப்பவர்,விடுமுறைபொழுதுபோக்குபவர் எனலாம். சிலர் வாரமுழுவதும் உழைத்துவிட்டுவாரக் கடைசியில் அதாவதுசனி,ஞாயிறுகிழமைகளில் அண்டையூரில் உள்ளபொழுதுபோக்கு இடங்களுக்குச் செல்வர். சிலர் காலாண்டு,அரையாண்டு,கோடைவிடுமுறைகளில் உள்நாட்டிலோ,வெளிநாட்டிலோபொழுதுபோக்குவர். சுற்றுலாப் பயணியையும் விடுமுறைப் பொழுதுபோக்கில் ஈடுபடும் பணியையும் வேறுபடுத்திஅறிவதுசற்றுக் கடினமானஒன்றுதான்.

**வழித்தங்கல் பயணி(Transit Visitor)**

ஒருபயணிதான் விரும்பும் நாட்டிற்குச் செல்லஒரேவிமானத்தில் செல்ல இயலாது. எனவேஅவர் சிலவிமானநிலையங்களில் தங்கி,அடுத்தவிமானம் புறப்படும் வரைஓய்வெடுக்கவேண்டியநிலைஏற்படுகிறது. அந்த இடைவெளிநேரத்தில் அவர் அந்நகரத்திற்குச் சென்றுசுற்றிப்பார்க்கிறார். இவர்தான் வழித்தங்கல் பயணி ஆவார். எடுத்துக்காட்டாகபயணிஒருவர் கோவையிலிருந்துஅமெரிக்காசெல்கிறார். கோவையிலிருந்து ஜெட் ஏர்வேஸ் விமானத்தில் புறப்படும் அவர் பம்பாயில் இறங்கி,லண்டன் செல்லும் பிரிட்பீஷ் ஏர்வேஸ் விமானத்தில் மாறிச் செல்லவேண்டும். லண்டன் புறப்படஆறுமணி நேர இடைவெளியுள்ளது. அவன் பம்பாய் நகரைச் சுற்றிப் பார்க்கிறான். அடுத்துவிமானம் லண்டனில் இறங்குகிறது. லண்டன் விமானநிலையத்திலிருந்துஅமெரிக்காவிற்குவிமானம் புறப்பட 9 மணி நேரம் காத்திருக்கவேண்டியுள்ளது. எனவே இந்த இடைவெளிநேரத்தில் அவர் லண்டனைசுற்றிப் பார்க்கிறார். இவர்தான் வழித்தங்கல் பயணி.

**எல்லைகடப்போர் ( Border Crossers)**

ஒருநாட்டின் எல்லைப் பகுதிகளில் வசிப்போரில்பலர் ஒரேநாளுக்குள் அண்டைநாடுகளுக்குச் சென்றுதிரும்புவா். இவர்கள் எல்லைகடப்போர் எனஅழைக்கப்படுவர்.

மகிழ்வுலா : மகிழ்ச்சியூட்டும் பொழுதுபோக்கிற்காககுறுந்தூரம் பயணம் மேற்கொள்வதனைமகிழ்வுலா(PICNIC)எனஅழைக்கலாம்.ஒருசுற்றுலாமையத்தில் தங்கிப் பணிபுரிபவன் சுற்றுலாப் பயணிஆகமாட்டான். காரணம் அவன் பிழைப்பிற்காகஅங்கேயேதங்கியுள்ளான். எடுத்துக்காட்டாகஊட்டிக் கல்லூரியில் பணிபுரியும் ஒருபேராசிரியரைச் சுட்டலாம்.

‘‘சென்றுதிரும்புதல்’’என்பதுவேசுற்றுலாவின் முக்கியக் கருத்து. சுற்றுலாப் பயணிஎன்பவன் “சென்றேன்! கண்டேன்! மீண்டேன்!” எனும் வரையறைக்குள் இருத்தல் அவசியம்.

**இன்பநோக்குப் பயணியர் - இன்பநோக்கிலாப் பயணியர்:**

பயணியரை இன்பநோக்குப்பயணியர் என்றும், இன்பநோக்கில்லாப் பயணியர் எனவும் இரு பிரிவாகப் பகுக்கலாம். மேற்கூறப்பட்டநால்வரும் இன்பநோக்குப் பயணியர் ஆவார். கல்வியாளர்கள்,தொழிலதிபர்கள்,வணிகர்கள்,நண்பர்,உறவினர் ஆகியோரைப் பார்க்கச் செல்பவர்கள் ஆகியோர் இன்பநோக்கில்லாப் பயணியர் எனஅழைக்கப் பெறுகின்றனர். “கருமமேகண்ணாயினார்’’என்று கூறப்படுவதுபோல் இவர்கள் தமதுதொழிலிலேயேகருத்தாக இருப்பர். பல இடங்களைச் சுற்றிப் பார்த்து இன்பம் காண்பதில் இவர்களுக்குஆர்வம் இருக்காது. இவர்களுள் நூற்றில் ஒருவர்தான் மகிழ்ச்சிக்காக இடைவெளிநேரத்தையும் பணத்தையும் செலவிடுவர்.

‘‘அனைத்துப் பயணங்களும் சுற்றுலாஅல்ல. ஆனால் அனைத்துசுற்றுலாக்களும் பயணங்கள் தாம்” என்பதுசுற்றுலாபற்றியபயன்மொழி.

**சுற்றுலாவைத் திட்டமிடுதலும் மேம்படுத்தலும்**

திட்டமிட்டுச் செய்யும் காரியங்கள் வெற்றிபெறும். வள்ளுவரும் “எண்ணித்துணிககருமம்’’என்று கூறியுள்ளார். சுற்றுலாத் துறையைப் பொறுத்தவரைஎக்காரியத்தையும் திட்டமிட்டுச் செயல்படவேண்டும். திட்டமிடாமல் செய்யும் காரியங்கள் தோல்வியடையும். வளர்ந்துவரும் நாடுகள் சுற்றுலாவின் மேன்மையைஅறிந்து,சுற்றுலாத் துறையைவளர்க்கமுனைந்துள்ளன.

**உலகச் சுற்றுலாமாநாடு**

1963ஆம் ஆண்டுஉரோம் நகரில் ஐ.நா. சபையின் உலகச் சுற்றுலாமாநாடுநடைபெற்றது. அம்மாநாட்டில் பல்வேறுதீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன: 1. வளர்ந்துவரும் நாடுகள்

சுற்றுலாத்துறைக்குஅதிகமானமுக்கியத்துவம் கொடுத்துச் சுற்றுலாத் துறையைவளர்க்கவேண்டும். 2. வளர்ந்துவரும் நாடுகள் ஐ.நா. சபையின் சிறப்புநிதியிலிருந்துநீண்டகாலத் தவணையிலும்,குறுகியகாலத் தவணையிலும் கடன் பெற்றுக் கொள்ளலாம். நீண்டகாலத் திட்டத்திற்கும். குறுகியகாலத் திட்டத்திற்கும் கடன் பெறலாம். 3. உலகம் முழுவதும் சுற்றுலாச் செல்வோரின் எண்ணிக்கைபெருகிக் கொண்டுவருகிறது. மக்கள் புதியசுற்றுலாமையங்களுக்குச் செல்லஆர்வம் கொண்டுள்ளனர். எனவேஒவ்வொருநாடும் புதியசுற்றுலாமையங்களைஉருவாக்கவேண்டும் என்றுஅறிவுரை கூறியது. மலையேறுதல்,குளிர்காலவிளையாட்டுகள்,மீன்பிடித்தல், வேட்டையாடுதல்,கடற்கரைகள்,மருத்துவக் குணமுள்ளநீரூற்றுகள்,தேசியப் பூங்காக்கள்,விளையாட்டுகள்,பறவைவிலங்குகளின் சரணாலயங்கள்,தேசியநினைவுச்சின்னங்கள்,அந்நாட்டுமக்களின் பழக்கவழக்கங்கள்,நாகரிகம்,பண்பாட்டுச் சின்னங்கள்,புனிதப் பயணம் மேற்கொள்ளல்,திருவிழாக்கள்,போட்டிவிளையாட்டுகள் போன்றவற்றைமிகுதிப் படுத்தவேண்டும்.

பழங்காலநினைவுச் சின்னங்கள்,தொல்பொருள் ஆய்வினர் கண்டுபிடித்தபுதிய இடங்கள்,வரலாற்றுச் சிறப்புவாய்ந்தகோட்டைகள்,நாகரிகம்,பண்பாட்டுச் சிறப்புவாய்ந்தசிற்பங்கள்,மரபுவழிக் கலைகள்,நாட்டுப்புறக் கலைகள்,பழங்குடியினரின் கலைகள் போன்றவற்றைப் போற்றிப் பாதுகாக்கவேண்டும். ஒருநாட்டில் எத்தனைசுற்றுலாமையங்கள் உள்ளன? எத்தனைபுதியசுற்றுலாமையங்களைஉருவாக்கலாம்? பழையசுற்றுலாமையங்களைமேம்படுத்தவும்,புதியசுற்றுலாமையங்களைஉருவாக்கவும் போதுமானபணவசதிஉள்ளதா? என்பனவற்றைக் கண்டறியஆலோசனைவழங்கியது. ஐ.நா. சபையின் சுற்றுலாக் கழகத்தின் உறுப்பினர்களுக்குஉரோம் நகரில் நடைபெற்றமாநாட்டுத் தீர்மானங்களைஅனுப்பி,அவற்றைச் செயல்படுத்துமாறுவேண்டுகோள் விடுத்ததுபுதிதாகச் சுற்றுலாத் துறையைத் தொடங்கியநாடுகளுக்குஅம்மாநாட்டின் பரிந்துரைகள் பயனுள்ளதாக இருந்தன. அண்மைக் காலம்வரைபொருளாதாரத்தில் முன்னேறியநாடுகளேசுற்றுலாவில் மிகுதியானஅக்கறைகாட்டின. பொருளாதாரத்தில் முன்னேறியநாடுகளேபுதியசுற்றுலாமையங்களைஉருவாக்கின. உரோம் நகரின் பரிந்துரைகளைஏற்றுவளர்ந்துவரும் நாடுகளும் புதியசுற்றுலாமையங்களைஉருவாக்கின.

1965இல் ஐ.நா. சபையின் தொழில் மற்றும் வணிகவளர்ச்சிக் குழு சுற்றுலாத் துறைக்குச் சிலபரிந்துரைகளைவழங்கியுள்ளது. சுற்றுலாத்துறைவேலைவாய்ப்பினைநல்குவதாலும்,அந்நியச் செலாவணியைஈட்டித் தருவதாலும் சுற்றுலாத் துறையில் மிகுதியானகவனம் செலுத்தவேண்டும் என்று கூறியது. 1964ஆம் ஆண்டில் அங்கீகாரம் பெற்றசுற்றுலாக் கழகத்தின் மூன்றாவதுமாநாடுசெக்கோஸ்லோவியாவில் உள்ளபிரகுவில் நடைபெற்றது. வட்டம்,மாவட்டம்,மாநிலம்,நாடுஎன்னும் நான்குநிலைகளில் சுற்றுலாவிரிவாக்கங்களைத் திட்டமிட்டுச்

செய்யவேண்டும் என்றுபரிந்துரைத்தது. தற்பொழுதுஉள்ளசுற்றுலாமையங்கள்இஎதிர்காலத்தில் உருவாக்கக் கூடியசுற்றுலாமையங்கள் என இருவகைகளாகப் பிரித்துச் சுற்றுலாமையங்களைமேம்படுத்தவேண்டும் என்றுஅறிவுரை கூறியது.

**வெற்றிபெறும் வழிகள்:**

முன்னேற்பாடுகளுடன் செய்யப்படும் திட்டங்கள் வெற்றிபெறுகின்றன. அறிவியல் ஆராய்ச்சியின் அடிப்படையில் திட்டமிட்டுச் சுற்றுலாத் துறையைமேம்படுத்தவேண்டும். சுற்றுலாத் துறையில் மேம்பாடுஅடைந்துவரும் நாடுகளும்,மேம்பாடுஅடைந்தநாடுகளும் சிலமுன்னெச்சரிக்கைகளைமேற்கொள்ளவேண்டும். 1. வளர்ந்துவரும் நாடுகள் பணவருவாயைத் தராததும்,மக்களுக்குமகிழ்ச்சியைஅளிக்காததுமானசுற்றுலாமையங்களைஉருவாக்கக் கூடாது. 2. ஒருநாடுகுழுச் சுற்றுலாவைவேகமாகஊக்கப்படுத்தலாமா? அல்லதுமெதுவாகஊக்கப்படுத்தலாமா? என்பதைத் தீர்மானித்துச் செயல்படவேண்டும். 3. வட்டார,மாவட்ட,மாநிலஅளவில் சுற்றுலாவைப் பெருக்கினால் அதுஅந்நாட்டுப் பொருளாதாரமேம்பாட்டுடன் ஒத்துவருகிறதா? என்பதைஅலசி ஆராய வேண்டும். 4. சுற்றுலாவின் வளர்ச்சிக்காகஅரசிடம் கொடுக்கப்பட்டபொறுப்புக்களையும்,தனியாரிடம் கொடுக்கப்பட்டபொறுப்புக்களையும் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். 5. சுற்றுலாவிற்காகச் செலவுசெய்யப் பெற்றஉள்நாட்டுப் பணத்தையும்,வெளிநாட்டுப் பணத்தையும் கணக்கிடவேண்டும். 6. உள்நாட்டுப் பணம் போதவில்லையென்றால் அயல்நாடுகளிலிருந்துகடன் வாங்கிக் கொள்ளலாமா? என்பதையும் தீர்மானிக்கவேண்டும். 7. சுற்றுலாத் துறைபிறதுறைகளுக்குச் சமமாகப் பாவிக்கப் படுகிறதா? அல்லதுசிறப்புநிலைகொடுக்கப்படவேண்டுமா? என்பதைநினைவில் கொள்ளவேண்டும். 8. சுற்றுலாத் துறையைநீண்டகாலமுறையில் மேம்படுத்துவதா? அல்லதுபொருளாதாரக் குறையைநிறைவுசெய்யக் குறுகியகாலமுறையில் மேம்படுத்துவதா? என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

**ஒருங்கிணைந்ததிட்டம்**

சுற்றுலாத்துறைஒருநாட்டின் பொருளாதாரவளர்ச்சிக்குநேரடியாகவோ,மறைமுகமாகவோஉதவுகிறது. எனவேசுற்றுலாத் துறையைப் பிறதுறைகளுடன் ஒருங்கிணைத்துஅமைக்கவேண்டும். சுற்றுலாவளர்ச்சிக்காகத் திட்டமிடுவதும்,ஒருநாட்டின் வளர்ச்சிக்காகத் திட்டமிடுவதும் ஒருங்கிணைந்துஒத்துச் செல்லவேண்டும். அனைத்துத் துறைகளும் ஒன்றுசேர்ந்துசுற்றுலாவைவளர்க்கவேண்டும்.

**முன்னேறும் நாடுகளில் சுற்றுலா:**

அண்மைக் காலம் வரைசுற்றுலாமுன்னேறியநாடுகளுக்குரியதுஎனவரையறுக்கப்பட்டது. முன்னேறும் நாடுகளும் சுற்றுலாவின் சிறப்பைஅறிந்துசுற்றுலாவைவிரிவுபடுத்தவிரும்பின. சிலநாடுகள் சுற்றுலாவின் தொழில் நுணுக்கம் அறியாமல் அத்துறையில் இறங்கிவிட்டன. சூரிய

வெளிச்சமும் கடற்கரையுமேசுற்றுலாப் பயணிகளைஈர்க்கும் எனநினைத்துஏமாந்தன. அச்சமயத்தில் பொருளாதார வளம் பெற்றநாடுகள் பொருளாதார வளம் குன்றியநாடுகளுக்குஉதவமுன்வந்தன. சிலநாடுகள் சுற்றுலாவசதிகளைப் பெற்றிருந்தும்,அவற்றைமேம்படுத்தமுடியாதநிலையில் இருந்தன. பணக்காரநாடுகளுக்குத் தொலைவில் உள்ளநாடுகளும், இயற்கைக் காட்சிகள் அற்றநாடுகளும்,நல்லதட்பவெப்பம் இல்லாதநாடுகளும்,சிலஅடிப்படைவசதிகள்கூட இல்லாதநாடுகளும் சுற்றுலாவைவளர்க்கமுடியாது. உலகில் மெக்சிகோவும்,துனிசியாவும் சுற்றுலாவினால் பலநன்மைகளைப் பெற்றுள்ளன. அந்நாடுகள் முன்னேற்பாட்டுடன் திட்டமிட்டுச் செயலாற்றியதால்,சுற்றுலாத் துறையில் வெற்றிஅடைந்தன.

**மாநிலஅரசின் ஒத்துழைப்பு**

திட்டமிடுதல் என்பதுகொடுக்கக்கூடியபொருள்களையும், மூலங்களையும் மதிப்பீடுசெய்துஅவற்றின்மீதுஏற்படும் தேவையைஅறிதலாகும். சுற்றுலாத் துறையில் பல்வேறுநிறுவனங்கள் ஈடுபடுவதால்,அவற்றைஒருங்கிணைத்துச் செயல்படுத்தவேண்டும். ஒவ்வொருநாடும் தங்கள் நாட்டிலுள்ளதேசியசுற்றுலாக் கழகத்தின் வழியாகச் சுற்றுலாவைமேம்படுத்துகின்றது. தங்கள் நாட்டின் புவியியல் நிலைக்கேற்பவும்,தங்கள் நாட்டின் வரவுசெலவுத் திட்டத்திற்கேற்பவும்,தங்கள் நாட்டின் பொருளாதாரவளர்ச்சிக்கேற்பவும் திட்டமிடவேண்டும். பிரான்சுநாடுலாங்கோடிக்-ரவுசிலியன் திட்டத்தில் அம்முறையைக் கையாண்டுவெற்றிபெற்றுள்ளது. ஓரிடத்தைமேம்படுத்தஅம்மாநிலஅரசின் ஒத்துழைப்பு,முதலீடு,புதியனபுனையும் திறன் போன்றவைதேவை. வளர்ந்துவரும் நாடுகளில் மாநிலஅரசின் ஒத்துழைப்பேசுற்றுலாவெற்றிபெறுவதற்குமுக்கியக் காரணியாகஅமையும்.

**சுற்றுலாப் பயணியின் தேவைவழங்கலின் மதிப்பீடு**

ஒருசுற்றுலாமையத்தைப் பற்றியஅனைத்துச் செய்திகளையும் சேகரிக்கவேண்டும். மேலும் அச்சுற்றுலாமையத்தின் வளர்ச்சிக்குரியவழிவகைகளைஆராயவேண்டும். சுற்றுலாத்துறைபின்தங்கியிருப்பதற்கானகாரணம்,அதைப் பற்றியமுழுமையானசெய்திகள் கிடைக்காமையேஆகும். செய்திகளைச் சேகரிப்பதும்,புள்ளிவிவரங்களைக் கணக்கிடுவதும் முக்கியமானவேலையாகும். ஒவ்வொருநாளும் சேகரிக்கும் புள்ளிவிவரங்கள் சுற்றுலாவளர்ச்சிக்குப் பயனுள்ளதாக இருக்கவேண்டும். தேவை,வழங்கல்,திட்டமிடுவதற்குமுன்னோடியாக இருக்கும். சுற்றுலாப் பயணிகளைக் கவருவதற்குஒருநாடுமேற்கொண்டுள்ளஅனைத்துமுயற்சிகளையும் விளம்பரப்படுத்தவேண்டும். சுற்றுலாப் பயணிகளைக் கவருவதற்கானகாரணங்களைஆராயாமல் சுற்றுலாத் துறையைவிரிவாக்கமுடியாது.

**மனிதசக்தியைப் பயன்படுத்துதல்**

சுற்றுலாத்துறைவெற்றிபெறத் தொழில் நுணுக்கமும் திறமையும் வாய்ந்தஅலுவலர்கள் தேவை. அதற்குப் பயிற்சிபெற்றஅலுவலர்கள் தேவை. ஆரம்பகாலத்தில் சுற்றுலாத் துறையில் பயிற்சிபெற்றஅலுவலர்கள் இல்லைஎன்பதுகுறிப்பிடத்தக்கது. சுற்றுலாத் துறையின் அனைத்துத் துறைகளிலும் பயிற்சிபெற்றநிபுணர்கள் இருக்கவேண்டும். சுற்றுலாத் துறையில் பல்வேறுவகையானதொழில்கள் உள்ளன. அந்தந்தத் துறையில் சிறப்புப் பயிற்சிபெற்றவர்களையேஅந்தந்தப் பணிகளில் அமர்த்தவேண்டும். சுற்றுலாத் துறைவளரும்பொழுதுஅதற்குஏற்றாற்போல் பயிற்சிபெற்றநிபுணர்களும் மிகுதியாக இருக்கவேண்டும்.

யார் யாருக்குஎவ்வகைப் பயிற்சிஅளிக்கவேண்டுமோ,அவர்களுக்குஅவ்வகைப் பயிற்சியைஅளிக்கவேண்டும். பயிற்சியாளருக்குச் சுற்றுலாத் துறையில் மிகுதியானபற்றுஏற்படும்படியாகப் பயிற்சிஅமையவேண்டும். தொழிலில் ஆர்வமும்,தொழில் நுணுக்கத்தில் ஆழ்ந்தபுலமையும் பெற்றிருக்கவேண்டும். பெருமை,நெகிழும் தன்மை,மற்றவர்களுடன் ஒத்துப்போதல்,எதையும் நடுநிலையில் இருந்துஆராய்தல் போன்றவைசுற்றுலாஆர்வத்தினால் உண்டாகக் கூடியவையாகும். ஒருதுறையைநடத்துதல்,நிருவகித்தல்,நிதிநிலையைச் சமாளித்தல்,உணவு,பானங்கள் போன்றவற்றைஉற்பத்திசெய்தல்,பகிர்ந்தளித்தல்,பணியாளர்களைமேற்பார்வையிடல்,பொதுநிருவாகம், திட்டமிடல்,புள்ளிவிவரங்களைஆராய்தல் போன்றவைதொழிற்திறமையின் பாற்படும்.

சுற்றுலாத் துறைக்குஎத்தனை பேர் தேவை? என்பதைமுதலில் புள்ளிவிவரம் சேகரிக்கவேண்டும். அதற்குமுதலில் என்னென்னவேலைகள் உள்ளன? அவ்வேலைகளைச் செய்வதற்குரியபணியாட்களின் தகுதிஎன்ன? ஒவ்வொருவரையும்ஒருகுறிப்பிட்டபணியில் மட்டும் ஈடுபடுத்தவேண்டுமா? பிறபணிகளிலும் ஈடுபடுத்தலாமா? என்பனபோன்றதிட்டங்கள் தீட்டவேண்டும். சான்றாகசமையற்காரரைஉணவுபரிமாறச் சொல்லலாமா? ஊர்திஓட்டுநரைத் தோட்டவேலைசெய்யச் சொல்லலாமா? என்பனபோன்றவற்றைத் தீர்மானிக்கவேண்டும். எதிர்காலத்தில் என்னென்னபணிகளுக்கெல்லாம் ஆட்கள் தேவைப்படும்? என்பதற்கும் திட்டம் போடவேண்டும். பணிகளைச் சிறப்புறச் செய்வதற்குப் பணியாளர்களுக்குத் தேவையானகல்வியும்,பயிற்சியும் அளிக்கவேண்டும். அப்பயிற்சியைஉள்நாட்டிலோ,வெளிநாட்டிலோஅளிக்கலாம். பணியாளர்களுக்குஎளியபயிற்சியைஉள்நாட்டிலும்,சிறப்புப் பயிற்சிகளைத் திறமைமிகுவெளிநாடுகளிலும் அளிக்கலாம். உள்நாட்டுப் பயிற்சியையும்,வெளிநாட்டுப் பயிற்சியையும் தீர்மானிக்கவேண்டியதுஅத்துறைவல்லுநர்கள் ஆவர். வெளிநாட்டுவல்லுநர்களையும் ஒருகுறிப்பிட்டகாலத்திற்கு இந்தியாவில் பணியாற்றச் சொல்லலாம்.

**நிருவாகஅமைப்பு:**

ஒருதுறைமுன்னேறஅதன் நிருவாகஅமைப்புதிறமையாகச் செயல்படவேண்டும். சுற்றுலாத் துறைவளர்வதற்குஅதன் நிருவாகஅமைப்புகள் செம்மையாகச் செயல்படவேண்டும். நிருவாகம்

பல்வேறுபணிகளையும் திட்டமிட்டுச் செய்யவேண்டும். பலநாடுகளில் சுற்றுலாத் துறையைநிருவாகம் செய்யத் தனிஅலுவலகங்கள் உள்ளன. ஒருநாட்டின் சமூகப் பொருளாதாரஅரசியல் அமைப்பிற்கேற்பச் சுற்றுலாத்துறைஅரசிடம் இருக்கலாம் அல்லதுதனிக் கழகமாகச் செயல்படலாம். அரசின் அனுமதியுடனும்,ஆதரவுடனும்,பணஉதவியுடனும் தனியார் நிறுவனங்களும் அதனைநடத்தலாம். சுற்றுலாத் துறைபற்றியவிதிமுறைகளைத் தீர்மானிக்கச் சட்டத் துறையின் உதவியும் தேவைப்படும். சுற்றுலாத் துறையில் திட்டமிடல்,வணிகச் சந்தை,ஆராய்ச்சி,பயிற்சியளித்தல்,சட்டம்,பொதுநிருவாகம் போன்றபலதுறைகள் உள்ளன.

**மாற்றியமைக்கவழிகள்**

எதையும் திட்டமிட்டுச் செய்வதுநல்லது. போட்டதிட்டத்தைமுறையாகச் செயல்படுத்தவேண்டும்.அத்திட்டத்தில்குறைகள் இருப்பின் மறுபரிசீலனைசெய்யவேண்டும். அறிவியல் வளர்ச்சிக்கேற்பத் திட்டங்களைமாற்றிஅமைக்கவேண்டும். சிலதிட்டங்களைப் புதுப்பிக்கவேண்டும். திட்டங்கள் நிலையாக இல்லாமல் மாற்றக் கூடியதாக இருக்கவேண்டும். சமுதாயத்தின் மாற்றத்திற்கேற்பவும், சூழ்நிலைக் கேற்பவும் திட்டங்கள் மாறக் கூடியதாக இருக்கவேண்டும்.

**காலம்**

சுற்றுலாத் துறையில் காலம் சிறந்த இடத்தைப் பெறும்,சுற்றுலாவின் வளர்ச்சிதன்னாக்கவளர்ச்சியாய் இருந்து,மக்களைக் கவரும்படியாக இருக்கவேண்டும். காலத்திற்குஏற்பப் பணியாளர்கள் பயிற்சிபெற்றிருக்கவேண்டும். இயற்கைவளத்தைமிகுதிப்படுத்தவேண்டும். சுற்றுலாத் துறையில் ஆர்வம் உள்ளவர்களைமுதலீடுசெய்யவைக்கவேண்டும். அதற்கு 5 முதல் 20 ஆண்டுகள் வரைஆகலாம். சுற்றுலாத் துறையைஅகமதிப்பீடுசெய்யவேண்டியுள்ளதால்,முதலில் பத்தாண்டுகளுக்கானதிட்டத்தைமேற்கொள்வர். சுற்றுலாத் துறையைமேம்படுத்தமிகுதியானநாட்கள் ஆகும். நடுத்தரத் திட்டங்களைமுடிக்க 3 முதல் 7 ஆண்டுகள்வரைஆகும். நடுத்தரத் திட்டங்களுக்கு 5 ஆண்டுகளேசாலச் சிறந்தது. நீண்டகாலத்திட்டம் என்பது 10 ஆண்டுகள் முதல் 25 ஆண்டுகள் வரைஆகும்.

குறுகியகாலத் திட்டம் என்பதுஓராண்டுத் திட்டமாகும். ஒவ்வோர் ஆண்டும் கிடைக்கும் மூலப்பொருள்களைவைத்துக் குறுகியகாலத் திட்டத்தைநிறைவேற்றவேண்டும். குறுகியகாலத் திட்டம் என்பதுஉடனேசெயல்படுத்தக் கூடியது. நடுத்தரத் திட்டங்களுக்கும்,நீண்டகாலத் திட்டங்களுக்கும் மிகுதியானமுதலீடுசெய்யவேண்டும். எனவேசுற்றுலாத் துறையில் திட்டமிடும்பொழுதுஅதுகுறுகியகாலத் திட்டமா? நடுத்தரத் திட்டமா? அல்லதுநீண்டகாலத் திட்டமா? என்றுதீர்மானிக்கவேண்டும். சுற்றுலாத் துறையில் திட்டமிடுவதற்குக் காலம் சிறந்த இடத்தைப்

பெறும் முடிக்கமுடியாததிட்டங்களும்,மேம்படுத்த இயலாதபடிஅமைக்கப்பட்டதிட்டங்களும் தோல்விபெறுவதோடுநட்டத்தையும் கொடுக்கும். சுற்றுலாவைவளர்க்கக் கூடியஇயற்கைவளங்கள் பொருந்தியநாடுகள் திட்டமிட்டுச் சுற்றுலாவைவளர்க்கவேண்டும். கவனம் இன்மையுமஇ கூட்டுறவு இன்மையும்,ஒத்துழைப்பு இன்மையும்,காலத்தேவேலைசெய்யாமையும் சுற்றுலாவைக் கெடுப்பதுடன் அழித்தும்விடும். ஒருநல்லவழிகாட்டிஎத்தகையபண்புநலன்களைப் பெற்றிருக்கவேண்டும்? அவர் எப்படிப் பயணிகளிடம் நடந்துகொள்ளவேண்டும்? என்பனபற்றிநாம் இங்கேவிளக்கமாகக் காண்போம்.

**வழிகாட்டியின் தகுதிகள்**

வழிகாட்டிக்குநல்லஉடல் தோற்றம்இ குரல் வளம்இபேச்சுத் தெளிவு,நினைவாற்றல்,சுற்றுலா இடங்களைப் பற்றியநல்லறிவுபன்மொழிப் புலமை,மற்றவர்களின் பண்பாட்டைஅறிந்துஒழுகும் தன்மைபோன்றதகுதிகள் இருக்கவேண்டும்.

1. சுற்றுலாமையங்களைப் பற்றியபூரணஅறிவு

2. இனியபேச்சு

3 நல்லதோற்றம்

4.நல்லகுரல் வளம்

5.நினைவாற்றல்

6.நேர்மைமற்றும் நாணயம்

7.பன்மொழிப் புலமை

8.பல்துறைஅறிவு

9.பிறர் பண்பாடறிந்துஒழுகும் தன்மை

10. வரலாறுமற்றும் பண்பாடுபற்றிய முழு அறிவு

போன்றநற்பண்புநலன்களைஅடையப்பெற்றவழிகாட்டியேவெற்றிகரமானவழிகாட்டியாகத் திகழமுடியும்.

**சுற்றுலாமையங்களைப் பற்றியபூரணஅறிவு**

சுற்றுலாப் பயணம் செல்ல இருக்கின்ற இடத்தைப் பற்றியஅனைத்துசெய்திகளும்,வழிகாட்டிக்குஅத்துபடியாக இருக்கவேண்டும். அவ்விடத்தைஅடையஎத்தனைவழிகள் உள்ளன?எந்தவழியாகச் சென்றால் விரைவாகச் செல்லலாம்? வேறுவழியாகச் சென்றால் வேறுஎன்னபுதியவரலாற்றுப் புகழ்மிக்க இடங்களைக்

காணலாம்? அந்த இடத்தைப் பார்வையிட்டபிறகு,அடுத்தசுற்றுலாமையத்திற்குளப்படிச் செல்வது? எதனைத் தங்குமிடமாகக் கொள்ளலாம் ? எங்குநல்லதரமானஉணவுகிடைக்கும் ? எந்தக் காலத்தில் (மாதத்தில்) அந்த இடத்திற்குச் சென்றால் வசதியாக இருக்கும்,எந்தவாகனத்தைஅமர்த்தவேண்டும்? அந்தமையத்தில் என்னஎன்னஅரியபொருள்கள் மலிவுவிலையில் கிடைக்கும் ? அந்தஇடத்தின் வரலாற்றுச் சிறப்புயாது? யார் காலத்தில் கட்டப்பட்டது? அதன் கட்டடக் கலைக் சிறப்புஇசிற்பச்சிறப்பு,தலபுராணம்,அக்கட்டடக் கலையோடுஒப்புமை கூறத்தக்கமற்றகலைப் படைப்புகள் யாவை? போன்றபலவினாக்களுக்குவிடையளிக்கக் கூடியஅறிவைவழிகாட்டிபெற்றிருக்கவேண்டும்.

எடுத்துக்காட்டாகவெளிநாட்டுப் பயணிகளைஒருவழிகாட்டிகுற்றாலத்திற்குஅழைத்துச் செல்வதாகவைத்துக் கொள்வோம். ஜுன்,மாதங்களில் குற்றாலம் செல்வதுஉசிதமானதுஊட்டி,கோடைக்கானல் செல்லவேண்டியிருப்பின் ஏப்ரல்,மே, ஜுன் மாதங்களில் செல்வதுதான் நல்லதுஎன்பதனைவழிகாட்டிஅறிந்திருத்தல் வேண்டும். எனவேஒருவழிகாட்டிசுற்றுலா இடத்தைப் பற்றிய முழு அறிவையும் பெற்றிருக்கவேண்டும் என்பதுஅத்தியாவசியம் ஆகும்.

**இனியபேச்சுத் திறன்**

வழிகாட்டியின் முக்கியதகுதிகளுள் ஒன்றுபேச்சுத்திறன். பேச்சுத் தெளிவாகவும், இனிமையாகவும் இருத்தல் அவசியம். இன்முகம் காட்டி இன்சொல் பேசி,பயணிகளைமகிழ்விப்பதுவழிகாட்டியின் கடன் ஆகும். சொல்லவேண்டியசெய்தியை,சொல்லவேண்டியமுறையில் சுருக்கமாகச் சொல்லவேண்டும். முன்பின் முரணின்றி,ஆற்றொழுக்கானமொழிநடையில்,கேட்டார் பிணிக்கும் வகையில் பேசுவதுநல்லது. நகைச்சுவையுடன் பேசினால் பயணிகள் மகிழ்வர். எந்தமொழியில் பேசினாலும் அதனைஎளிதாகப் புரிந்துகொள்ளும் வகையில் ஆணித்தரமாகப் பேசவேண்டும். பயணிகளுக்குவழங்கப்படும் அறிவிப்புகளும்,அறிவுரைகளும் கூட இனிமையானவேண்டுகோள்களாக இருப்பதுநலம் பயக்கும்.

**நல்லதோற்றம் (Good Appearance)**

வழிகாட்டியின் தோற்றப்பொலிவுகவர்ச்சியாகவும்,விரும்பத்தக்கதாகவும் இருப்பதுநல்லது. அவர் நாகரிகமானஉடைகளைஅணிந்திருப்பதுஅவசியம். வெளிநாட்டுப் பயணிகளைஅழைத்துச் செல்லும்போது,அவர்களால் விரும்பப்படும் உடைகளைஅணிவதில் தவறில்லை. வழிகாட்டிபெண்ணாக இருப்பின் கவர்ச்சியாகத் தோற்றமளித்தல் விரும்பத்தக்கது.

நிற்பது,அமர்வது,நடப்பதுபோன்றநடவடிக்கைகளிலும் மற்றவர்களுடன் கலந்துபழகுவதிலும்,ஒருநளினம் இருக்கத்தான் வேண்டும். நல்லஉடைஅணிந்துபொறுமையும்,நகைச்சுவைஉணர்வும் கொண்டு,பயணிகளைமகிழ்ச்சியுடன் வரவேற்றால் மயங்காதார் யார் ? எனவேஒருவழிகாட்டிக்குநல்ல இனிய தோற்றமும்தேவைப்படுகிறது.சுவரைவைத்துத் தான் சித்திரம் எழுதவேண்டும்.

**குரல் வளம்**

சுற்றுலாவழிகாட்டி,குரல்வளமும் பெற்றிருக்கவேண்டுவதுஅவசியம். குரலிலேஒரு இனிமையும் அதேநேரத்தில் தெளிவும் அழுத்தமும் இருக்கவேண்டும். குரலிலேமென்மை,வன்மை, இனிமை,தெளிவு,குழைவு,கம்பீரம்,நல்லஉச்சரிப்புஆகியனவழிகாட்டிக்கு இருக்கவேண்டியசொத்துக்கள் ஆகும். பேசும்போதுஅழுத்தம் கொடுக்கவேண்டிய இடத்தில் அழுத்தமும்,துணிவு இருக்கவேண்டிய இடத்தில் துணிவும் இருத்தல் நல்லது. குரல்வளம் கொண்டவழிகாட்டிவெற்றிகரமானவழிகாட்டியாகத் திகழ்வான்:பயணிகளைக் காந்தம்போல் கவர்ந்திழுப்பான்.

**நினைவாற்றல்**

சுற்றுலாவழிகாட்டிக்கு இருக்கவேண்டியபண்புகளுள் நினைவாற்றலும் ஒன்று. ஒருவழிகாட்டிநாட்டிலுள்ளபலசுற்றுலாமையங்களின் சிறப்புப் பற்றிப் பல நூல்களின் மூலம் கற்கிறார். அவற்றைசுற்றுலாப் பயணிகளுக்குவிளக்கிக் கூறுகிறார். மறதிமிகுதியானசுற்றுலாவழிகாட்டி,ஒருகோயிலுக்குச் சொல்லவேண்டியதைமற்றொருகோயிலுக்குச் சொல்லிவிடுவார். இதனால் குழப்பமேமிஞ்சும். ஜஹாங்கீருக்கும் ஷாஜகானுக்கும் வித்தியாசம் தெரியாதஒருவழிகாட்டிதருமபுரிஅருகில் மேஜர் குளோவர் என்னும் வீரன் தனதுமனைவியின் பெயரில் எழுப்பியுள்ளநினைவுச் சின்னத்தைவிளக்கிக் கூறும்போது ஜஹாங்கீர் தனது ஆசை மனைவியானமும்தாஜ்மஹாலுக்குபளிங்குக்கல்லால் ஆன தாஜ்மஹாலைக் கட்டியதுபோன்று,மேஜர் குலோவர் எளிமையானமுறையில் தனது. ஆசை மனைவிக்கு இந்தநினைவுச் சின்னத்தைஎழுப்பியுள்ளார் என்று கூறி விட்டாராம் ! இதுபோல் மறந்துபோய் தவறானசெய்தியைக் கூறக்கூடாது. மறதியின் காரணமாக ஜஹாங்கீரின் மருமகள், ஜஹாங்கீருக்குமனனவியாகஆக்கப்படுவதுகொடுமையல்லவா? மறதியின் காரணமாகப் பலசிக்கல்கள் எழலாம். சிலசமயங்களில் மறதியினால்,முன்னேற்பாடாகச் செய்யவேண்டியகாரியங்களைச் செய்யாமல் விட்டுவிடலாம். அல்லதுசிலஆவணங்களைஎடுத்துவராமல் வீட்டிலேயேவைத்துவிட்டால் சுற்றுலாப் பயணமேநின்றுவிடலாம். எனவேசுற்றுலாவழிகாட்டிநினைவாற்றல் மிக்கவராக இருப்பதுநலம்.

**நேர்மைநாணயம்**

நேர்மை,நாணயம்,நம்பிக்கைமுதலான இனிய பண்புகள் வழிகாட்டியின் அணிகலன்களாகும். சிலவழிகாட்டிகள் அயல்நாட்டுப் பயணிகளிடம் பணம் பறிப்பதையேகுறியாகக் கொண்டுசெயல்படுவர். இதனால் நம்நாட்டின் பெருமையும் மதிப்பும் வெளிநாட்டினரிடையேகுறைந்துவிடும். ஓட்டல்களில் கமிஷன் பெற்றுக் கொண்டு,உணவுக் கட்டணம்,அறைக்கட்டணம்பணமாற்றுக் கட்டணம் ஆகியவற்றைஅதிகஅளவில்ஏற்றிவிடும் வழிகாட்டிகளும் இருக்கத்தான் செய்கின்றனர். இதனால் அயல்நாட்டுப் பயணிகள்,தாங்கள் ஏமாற்றப்பட்டதாகவும்,கொள்ளையடிக்கப்பட்டதாகவும் அங்கலாய்க்கின்றனர். சிலவழிகாட்டிகள் கோயில்களைச் சுற்றிக்காட்டும் போதுபலபுராணக்கதைகளையும்,கட்டுக் கதைகளையும் உண்மைநிகழ்ச்சிபோல் எடுத்துரைப்பர். திருவரங்கம் கோயிலைநான் பார்க்கச் சென்றபோது,அங்குள்ளவழிகாட்டிரெங்கநாதரைப் பற்றிக் கற்பனைக் கதைகளைக் கூறியதைக் கேட்டுநான் வியந்தேன்.

மாமல்லபுரத்தில் பஞ்சபாண்டவர்ரதங்கள் எனப்படும் ஒற்றைக்கல் தேர்கள் உள்ளன. இங்குவரும் பயணிகளிடம் அங்குள்ளவழிகாட்டிகள்,"இங்குதான் தருமர் தூங்கினார், இங்குதான் திரௌபதிகுளித்தாள்"என்று புளுகு மூட்டைகளைஅவிழ்த்துவிடுவர். இதனைப் போன்றபுளுகர்கள் நம்நாட்டில் மட்டுமின்றிஅயல்நாடுகளிலும் உள்ளனர். இதுபற்றிவெளிநாடுகளில் பயணம் செய்தமணியன் அவர்கள் சுவைபடஎழுதியுள்ளார். மணியன்,கெய்ரோஅருங்காட்சியகத்தைப் பார்வையிட்டபோதுஅங்குள்ள ராஜா,ராணிசிலைபற்றிவழிகாட்டிசிலகதைகளைஅவிழ்த்துவிட்டாராம். இதுபற்றிமணியன் கீழ்க்கண்டவாறுஎழுதுகிறார். "எங்கெங்குகலைக் காட்சிகள் இருக்கின்றனவோஅங்கெல்லாம், இப்படிச் சிலகைடுகள் இருப்பார்கள்,எங்கெல்லாம் அப்படிப்பட்டகைடுகள் இருக்கிறார்களோஅங்கெல்லாம் இத்தகையகட்டுக் கதைகளும் இருக்கும்". எனவேவழிகாட்டிகள் உண்மைகளை,வரலாறுகளை,கல்வெட்டுச் செய்திகளைக் கூற வேண்டுமேயன்றிபுராணங்களையும்,புனைந்துரைகளையும் கூறிநம் நாட்டைப் பற்றிவெளிநாட்டினர் தவறாகஎண்ணவழிகோலக் கூடாது. வழிகாட்டிபிறரதுநம்பிக்கைக்குஉரியவராகவும் நடந்துகொள்ளவேண்டும். நம்பிக்கையும்,நாணயமும்,உண்மையேபேசுதலும் வழிகாட்டியின் பெருமையைஉயர்த்தும் சுற்றுலாவையும் மேம்படுத்தும் நம் நாட்டின் பெருமையையும் பறைசாற்றும்.

**பன்மொழிப் புலமை**

சுற்றுலாவழிகாட்டிபலமொழிகளில் புலமைபெற்றிருப்பதுஅவசியம். வெளிநாட்டுப் பயணியர் பலர் நம்நாட்டைப் பார்வையிடவருகின்றனர். இவர்களுள் பலருக்குஆங்கிலம் தெரியும். சிலருக்குஆங்கிலம் தெரியாது. சிலர் ரஷிய மொழியையும் சிலர் ஜெர்மன் மொழியையும் சிலர் பிரெஞ்சுமொழியையும்பேசுவர். எனவே நம் நாட்டிலுள்ளஒருவழிகாட்டிதமிழ், இந்தி,ஆங்கிலத்துடன் பிரெஞ்சு, ஜெர்மன், ஜப்பானியமொழிகளையும் ஓரளவுகற்றிருத்தல் அவசியமாகிறது.

எல்லாவழிகாட்டிகளும் பன்மொழிப் புலவர்களாக விளங்குதல் அரிது. இருப்பினும் வேறுஅந்நியமொழிகளில் உரையாடவோஅல்லதுஒருசிலமுக்கியமானசொற்களைத் தெரிந்திருப்பதோநல்லது. அயல்நாட்டினரிடம் அவர்களதுமொழியில் பேசுவதுஅவர்களுக்குநிச்சயமாகமகிழ்ச்சியைஊட்டும். எடுத்துக்காட்டாக ரஷ்ய நாட்டுப்பயணிஒருவரைப் பார்த்தவுடன் "தராஸ்திவிச்ச" (வணக்கம்) கூறுவதும்,அவர் செய்தஉதவிக்கு'ஸ்பஸீபா" (நன்றி) எனச் சொல்வதும் இரவில் உறங்கச் சொல்லும் போது "ஸ்பக்கோய் நிநோச்சி" (இரவில் அமைதியாகஉறக்கம் வரட்டும்) என்று கூறுவதும்,பயணம் முடிந்துஅவர்களைப் பிரிந்துசெல்லும் போது, "தஸ்வீ,தான்ய,சிஸ்லீவ் (போய் வருகிறேன் அதிர்ஷ்டம் உண்டாகட்டும்) என்று கூறுவதும் நிச்சயமாகஅவர்களைமகிழ்விக்கும். அடுத்து அஸ்லென் (ருநடஉழஅந),சுக்ரான் கதீர் (மிக்கநன்றி),சபால் கீர் (காலைவணக்கம்) மசாதீர் (மாலைவணக்கம்) மாசலரிமி(புழழன டீரந)முதலானஅரபிச் சொற்களையும் கற்பதுநல்லது.

**பல்துறைஅறிவு**

சுற்றுலாவழிகாட்டி,மொழித்திறன் மட்டும் பெற்றிருந்தால் போதாது. அவருக்கு இலக்கியம்,வரலாறு,புவியியல்,கட்டடக்கலை,சிற்பக்கலை,ஓவியக்கலை,உளவியல்,அறிவியல், இசைக் கருவிகள்,நாட்டுப்புறக் கலைகள் போன்றதுறைகளிலும் ஓரளவுபுலமைபெற்றிருத்தல் நல்லது. கட்டடக்கலையும் சிற்பக் கலையும் தெரியாதஒருவழிகாட்டி,தமிழ்நாட்டுக் கோயில்களைப் பற்றிச் சரியாகவிளக்கமுடியாது. மிருகக்காட்சிசாலை,பறவைகள் சரணாலயம்,பூங்காக்கள் ஆகியவற்றையும் பயணிகளுக்குக் காண்பிக்கவேண்டியிருந்ததால் பறவைகள்,விலங்குகள்,தாவரங்கள் பற்றியஅறிவும் வழிகாட்டிக்குஓரளவாகிலும் இருத்தல் அவசியம். பல்துறைஅறிவுநிரம்பப் பெற்றஒருசுற்றுலாவழிகாட்டி,மிகச் சிறப்பாகத் தனதுதொழிலைச் செய்வார்.

**பிறர் பண்பாடறிந்துபழகுதல்**

வழிகாட்டியானவன் பலவிதமானபயணிகளிடமும் பலநாட்டுப் பயணிகளிடமும் பழகவேண்டியவன்,பிறரைப் பற்றிஅறிந்து,உணர்ந்துஅதற்கேற்பநடக்கவேண்டியவன். அவர்களதுசமயஉணர்வு,உணவுமுறைகள்,பழக்கவழக்கம்,பண்பாடு,நடைஉடைபாவனைகள் ஆகியவற்றைஉய்த்துணர்ந்துஅவர்களிடம் பழகவேண்டும். பயணிகளின் விருப்பம் யாது? அவர்களதுஎதிர்பார்ப்புகள் யாவை? என்பதனைஅறிந்து -அதற்கேற்பவழிகாட்டிநடந்துகொள்வதேசாலச் சிறந்தது. பயணிகளின் பாங்கறிந்து கூறப்படும் விளக்கங்களும் உரைகளும் அவர்களைமகிழ்விக்கின்றன. இதுவேபண்பாடு: இதுவேநாகரிகம். பசி நேரத்தில் விளக்கவுரைகளைக் குறைத்துக் கொள்வதுநல்லது. பொழுதுபோக்குகளையும் கேளிக்கைகளையும் பயணியரின் விருப்பம் அறிந்து,ஏற்பாடுசெய்தல் இன்றியமையாதது.

**தம் நாட்டின் வரலாறுபண்பாட்டுப் பெருமையைஅறிதல்**

ஒருநல்லவழிகாட்டிதனதுநாட்டின் வரலாற்றையும்,பண்பாட்டுப் பெருமையையும் தெரிந்துகொள்ளவேண்டியதுஅவசியம். நம் நாட்டின் பெரும்பாலானசுற்றுலாமையங்கள் கோயில்களும் கோட்டைகளும் நினைவுச் சின்னங்களுமேயாகும். எனவேநம்நாட்டுவரலாற்றையும் பண்பாட்டையும் கற்றிருக்கவேண்டியதுவழிகாட்டிகளின் கடமையாகும். எடுத்துக்காட்டாகதஞ்சைநகருக்குப் பயணிகளைஅழைத்துச் செல்லும் ஒருவழிகாட்டிமுத்தரையர்,சோழர்,பாண்டியர், இராமநாதபுரத்துசேதுபதிகள்,புதுக்கோட்டைதொண்டைமான்கள்,தஞ்சைநாயக்கர்,தஞ்சைமராட்டியர்,பேரர்த்துக்கீஸியர். ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியார் போன்றோரின் வரலாறுபற்றிஅறிந்திருக்கவேண்டும் . தஞ்சைப் பெரியகோயிலில் முத்தரையர்,சோழர்,தஞ்சைநாயக்கர்,தஞ்சைமராட்டியர் ஆகியோரதுகலைப் பணிகள் உள்ளன. இவைகளைவிளக்கியும்,வேறுபடுத்தியும் கூறுவதுநல்லது.

கோயில் கட்டடக் கலையும்,சிற்பக் கலையும் (நாட்டியகரணங்கள்) ஓவியக் கலையும்,நமதுபண்பாட்டின் மறு பதிப்புகளே. எனவேசிறந்தவழிகாட்டியாகப் புகழ்பெறவிரும்பும் ஒருவர்,தமதுவரலாற்றையும்,பண்பாட்டையும் அறிந்தவராகவிளங்கவேண்டுவதுஅவசியமாகிறது.

எனவேசுற்றுலாவழிகாட்டியானஒருவர் நன்னடத்தை,தெளிவாகப் பேசும் ஆற்றல்,பல்துறைபன்மொழிஇஅறிவுநல்லதோற்றம்,கற்பனைத் திறம்,சிரித்தமுகம், இனிமை,சூழ்நிலைக்கேற்பச் செயல்படும் திறன்,கலையார்வம்,பயிற்சி,படிப்பு,சுற்றுலாமையம் பற்றியபூரணஞானம் முதலானவற்றில் மேம்பட்டவராகவிளங்கவேண்டும் என்பதுஅறியப்படுகின்றது. சுற்றுலாவழிகாட்டிசுற்றுலாவளர்ச்சியின்கலங்கரைவிளக்கம், இவரேபயணிகளின் நண்பர்,ஆசான் மற்றும் நெறியாளர்,ஒருநாடுசுற்றுலாமேம்பாட்டையவழிகாட்டியேஉயிர்நாடி,சுற்றுலாவினவளர்ச்சிஅவரதுகையில்தான் உள்ளது.

**சுற்றுலாவும் சுற்றுச்சூழலும்**

சுற்றுலாஎன்பதுஉலகம் தழுவியதிட்டமாகும். சுற்றுலாவைஉலகநாடுகள் ஏற்றுக்கொண்டுள்ளன. அதன் சுற்றுப்புறச் சூழல் நன்றாக இருக்கவேண்டும். ஐ.நா. சபை ஸ்டாக்கோமில் மனிதச் சுற்றுப்புறச் சூழல் பற்றிஒருகருத்தரங்குநடத்தியது. மனிதனின் வாழ்க்கைத்தரம் உயரச் சுற்றுப்புறச் சூழல் சுத்தமாக இருக்கவேண்டும் என்றுஆலோசனை கூறியது. எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்காமல்,மனிதன் இயற்கையில் கிடைக்கும் அனைத்து மூலங்களையும் பயன்படுத்துகிறான். அச்செயல் எதிர்காலத்தில் சிக்கலைவளர்க்கும் என்று

கூறியது. மிகுதியானஆலைகள் உள்ள இடங்களிலும்,மக்கள் நெருக்கமாகவாழும் இடங்களிலும்,அசுத்தக்காற்று இருக்கும். உருசியாவில் உள்ளசோச்சிஎன்னும் கடற்கரையில் யாரும் புகைபிடிக்கக் கூடாதுஎன்றசட்டம் உள்ளது. உணவுவிடுதிகள்,திரைப்படக் கொட்டகைகள்,பேருந்துகள்,மருத்துவமனைகள்,கடற்கரைகள் போன்ற இடங்களில் புகைபிடிக்கக் கூடாதுஎன்னும் சட்டம் உள்ளது.

இந்தியாவில் சுற்றுலாமையங்களுக்குஅருகில் தொழிற் சாலைகள் பெருகிக் கொண்டிருக்கின்றன. சுத்தமான இடங்களுக்கேசுற்றுலாப் பயணிகள் வருவர். அழகானசுற்றுப்புறச் சூழலும்,பொழுதுபோக்குஅம்சங்களும்,கல்விபண்பாடுபோன்றஆர்வங்களும் சுற்றுலாப் பயணிகளைக் கவரும். துப்புரவுசெய்தல்,பழையநினைவுச் சின்னங்களைத் தூய்மைசெய்தல்,பழையநினைவுச் சின்னங்களைச் சுற்றித் தூய்மைசெய்தல்,சுற்றுலாமையங்களைமேம்படுத்துதல் போன்றவற்றைச் செய்யவேண்டும்.

**உலகச் சுற்றுலாக் கழகத்தின் சுற்றுப்புறச் சூழ்நிலைக் குழு**

1981ஆம் ஆண்டுமேமாதத்தில் மேட்ரிட் என்னும் இடத்தில் உலகச் சுற்றுலாக் கழகத்தின் சுற்றுப்புறச் சூழ்நிலைக் குழுவின் முதல் கூட்டம் நடந்தது. அக்குழுசுற்றுலாவிற்கும் துப்புரவிற்கும் உள்ளஉறவுகளைஎடுத்துக் கூறி,சுற்றுலாமையங்களைச் சுத்தமாகவைத்துக் கொள்ளவேண்டியதன் தேவையைவலியுறுத்தியது. தேவையானகொள்கைகளைப் பின்பற்றிச் சுற்றுலாமையங்களைச் சுத்தமாகவைத்துக் கொள்ளஅக்குழுபல்வேறுஆலோசனைகளைவழங்கியுள்ளது:

1. இயற்கையானதேசியப் பூங்காக்களைஉருவாக்கவேண்டும்.
2. வரலாற்றுப் புகழ் மிக்கநகரங்களைப் பாதுகாக்கவேண்டும்.
3. சாலைகளைச் சுத்தமாகவைத்துக்கொள்ளவேண்டும்.
4. குறுக்குவழியில் சுற்றுலாமையத்தைஅடையச் சாலைகள் அமைக்கவேண்டும்.
5. பெருகிவரும் நகரங்களினால் சுற்றுலாமையங்கள் கெடாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.
6. சுற்றுலாமையங்களைவட்டாரங்களாகப் பிரிக்கவேண்டும்.
7. கடற்கரை,தொழிற்பேட்டைபோன்ற இடங்களில் மிகுதியானசுற்றுலாமையங்களைஉருவாக்கக் கூடாது.

**இயற்கைச் செல்வம்**

48.3 சதவிகிதஅயல்நாட்டுச் சுற்றுலாப்பயணியர் இந்தியாவின் இயற்கைச் செல்வங்களைக் கண்டுகளிக்கவும் வருகைதருகின்றனர். இயற்கைச் செல்வங்களையும்,பறவைகள்,விலங்குகள்

சரணாலயங்களையும் கொண்டிருப்பதுபாரதம். இங்கு இயற்கைக் காட்சிகளுக்கும்,அருவிகளுக்கும் (ஜயவநச குயடடள)கோடைவாசஸ்தலங்களுக்கும் பஞ்சமில்லை. அடுத்துபாரதத்தின் பல்வேறுபகுதிகளில் நடைபெற்றுவரும் கைவினைப் பொருள் தொழில்களும்,பிறபாரம்பரியக் கலைப் பொருள்,உற்பத்திப் பொருள்களும் அயல்நாட்டுச் சுற்றுலாப்பயணியரைக் கவர்கின்றன.

**வனவிலங்கு,பறவைகள் பாதுகாப்பு**

இந்தியாபல்வேறுநிலஅமைப்புகளைக் கொண்டபரந்தநாடு. எனவேஅந்தந்தப் பிரதேசங்களின் தன்மைகளுக்கேற்பவிலங்கினங்களும் வேறுபடுகின்றன. வடக்கேஉள்ள இமய மலைப் பகுதியில் வாழுகின்றவனவிலங்குகள் தீபகற்ப இந்தியாவில் வாழ்வதில்லை. வனவிலங்குகளைமிருகக்காட்சிசாலைகளில் காண்பதனைவிடவனவிலங்குபுகலிடங்களில் காண்பதுமகிழ்ச்சியளிக்கத்தக்கது. இயற்கையான சூழலில் தன்னிச்சையாகத் துள்ளித் திரியும் வனவிலங்குகளையும்,பறவைகளையும் கண்டுகளிப்பதில் ஒரு தனியின்பம் இருக்கிறது.

நம் நாட்டில் 85 தேசியபூங்காக்களும் 447 வனவிலங்குபுகலிடங்களும், 17 புலிகள் காப்பகங்களும். 49 மான் பூங்காக்களும். 107 உயிரியல் பூங்காக்களும், 6 பாம்புப் பண்ணைகளும், 6 மீன் பண்ணைகளும் உள்ளன. இவற்றில் ஏறத்தாழ 350 வகைவிலங்குகளும். 12000 வகைபறவைகளும், 30000 வகைபூச்சிகளும் மீன்களும்,ஊர்வனவகைகளும் வாழ்ந்துவருகின்றன. இவற்றையும் சிலஅரியவகைவிலங்கினங்களையும் அழிவினின்றும் காப்பது நம் கடமை.

**சுற்றுப்புறச் சூழல் சீர்கேடுஅடைகிறது(Environmental Degradation)**

சுற்றுலாமையம் செல்வாக்கடைந்தபின்னர்,அதிகஅளவில் பயணிகள் வருகின்றனர். இதனால் வாகனங்களின் பேரிரைச்சலும்,பயணிகளின் பரபரப்பும்,அவர்கள் வீசியெறிகின்றபிளாஸ்டிக் பைகளும்,மீதமுள்ளஉணவுப் பொருள்களும் - அங்கிருந்தஅமைதியானசுற்றுச் சூழலைப் பாதிக்கின்றன. எனவேசுற்றுச்சூழல் மாசுத்தன்மை(ழூடடரவழைெ)அடைகின்றது. நினைவுச் சின்னங்களுக்குஅருகில் கடைகள் கட்டுவது. கட்டடங்கள் கட்டுவது,நிலத்தடிநீரைமிகுதியாகப் பயன்படுத்துதல் போன்றவற்றால் சுற்றுச்சூழல் பெரிதும் பாதிக்கப்படுகிறது. எனவே இதற்கானதடுப்புநடவடிக்கைகளைச் சுற்றுலாத் துறைஎடுக்கவேண்டும்.

**சுற்றுலாவும் பிறத்துறையும்,சுற்றுலாவும் வணிகத்துறையும்**

தனிப்பட்டநாடுகளின் செலுத்துதல் சமநிலையின் மூலம் பன்னாட்டுப் பயணத்தின் விளைவால் நாடுகளில் ஏற்படும் சுற்றுலாவின் தாக்கத்தினைஅறியலாம். சுற்றுலாவின் விளைவால்

நாடுகளில் நிகழ்ந்துவரும் பண இயக்கத்தையும் பரிமாற்றத்தையும் கீழ்க்காணும் குறிப்புகளால் அறியலாம்.

அ. சுற்றுலாசெல்லும் நாடுகளில் சுற்றுலாப் பயணிகள் உணவகம்,தங்கும் விடுதி,போக்குவரத்துஆகியவற்றிற்கானசெலவுகள்.

ஆ. சுற்றுலாப் பயணிகள்,சுற்றுலாசெல்லும் நாடுகளில் வாங்கும் மூலதனப் பண்டங்கள்,கலைப் பொருட்கள்,மோட்டார் வாகனங்கள் முதலானவை.

இ. பயணம் செய்யும் போதுகட்டணமாகச் செலுத்தும் தொகைஅதாவதுவிமான,கப்பல் பயணக் கட்டணங்கள்.

ஈ.சுற்றுலாவின் பொருட்டுஏற்றுமதி, இறக்குமதிசெய்யும் பொருள்களாவன : கருவிகள்,மதுவகைகள்,உணவளித்தல் முதலானவற்றிற்கானபணச் செலவுகள்.

உ.அயல்நாட்டுமுதலீடுகள்,குறிப்பாகதங்கும் விடுதிகளுக்காக.

ஊ. லாபப் பங்குகள்,வட்டிவீதங்கள் முதலானவற்றைமுதலீடுசெய்தநாடுகளுக்குத் திருப்பிஅளித்தல் போன்றவை.

எ. பல்வேறுபணமாற்றங்கள். எடுத்துக்காட்டாகதற்சமயம் அயல் நாட்டில் சுற்றலாத்துறைகளில் பணியாற்றும் உள்நாட்டினர் செய்யும் விளம்பரங்கள்,சுற்றுலாஅலுவலங்கள் முதலானவற்றால் உண்டாகும் செலவுகள் போன்றவைகள்.

**சுற்றுலாவும் வருவாய் துறையும்**

ஒருநாட்டின் ஏற்றுமதிப் பொருள்களின் மதிப்புஎப்போதும் ஒரேசீராக இருப்பது இல்லை. இதுநிரந்தரமானதுமல்ல. ஏற்றுமதிகள் ஓராண்டு கூடலாம், மறு ஆண்டுகுறையலாம். ஆனால் சுற்றுலாத் தொழிலோவிரைந்துவளர்ந்துகொண்டுள்ளது. சுற்றுலாவில் வரும் வருவாயும் குறையாமல் கூடிக் கொண்டேஉள்ளது. எடுத்துக்காட்டாக நம் பாரதத்தைஎடுத்துக்கொள்வோம். 1969ம் ஆண்டுசுற்றுலாவின் மூலம் 333 இலட்சங்களைப் பெற்றநாம் 1971இல் 488 லட்சங்களைப் பெற்றுள்ளோம். 1980 இல் இத்தொகை 4820 லட்சங்களாகவும் 1981ல் 5640 லட்சங்களாகவும்,பெருகியுள்ளது. 1982இல் 7500 லட்சங்கள் பெற்றுஅசுரவேகத்தில் முன்னேறியுள்ளோம். 1988ஆம் ஆண்டுநம்நாடுசுற்றுலாவின் மூலம் 2103 கோடிரூபாய் அன்னியச் செலாவணியைப் பெற்றது நம் நாடு. 1994இல் 1990 ஆம் ஆண்டைக்காட்டிலும் 160கோடி ரூபாய் அதிகமாகப் பெற்றது. 1998 இல் 11950 கோடிரூபாயை (3132.53 மில்லியன் டாலர்கள்) இந்தியாவருவாயாகப் பெற்றுள்ளது. 1998 இல் கணினி (கம்ப்யூட்டர்) மென்பொருள் ஏற்றுமதியின் வருவாய் ரூ. 45000 கோடிரூபாய்.எனவேகம்ப்யூட்டர் ஏற்றுமதிவருவாயைவிடரூ.7450 கோடிஅதிகம்

பெற்றுள்ளோம். ஒருஅயல்நாட்டுப்பயணி நம் நாட்டில் சராசரியாகரூ. 16000செலவழிக்கிறார். 8-7-2000 நாளிட்டதினமலரில் இந்தியசுற்றுலாவளாச்சிபற்றிக்கீழக்காணும் செய்திவெளியாகியுள்ளது.

"கடந்த ஆறு மாதங்களில் இந்தியாவிற்கு 1256133 அயல் நாட்டுச் சுற்றுலாப் பயணியர் வந்துள்ளனர். கடந்தஆண்டைவிட இது 6.3மூஅதிகம். 2000 ஜுன் வரையில் 6648 கோடிரூபாய் அந்நியச் செலாவணி மூலம் வருவாய் வந்துள்ளது. இதுகடந்தஆண்டைக் காட்டிலும் 9.8மூ அதிகம். பிப்ரவரியிலமட்டும் 1417 கோடி -ரூபாய் வருவாய் கிடைத்தது. ஒரேமாதத்தில் கிடைத்தவருவாய்களுள் இதுவேஅதிகம்".

இதனால் நாம் சுற்றுலாத்துறையில் முன்னேறிக் கொண்டுள்ளோம் என்பதுதெளிவு.

### சுற்றுலாவும் போக்குவரத்துதுறையும்

போக்குவரத்துச் சாதனங்களும்சுற்றுலாவின் மீதுஅவற்றின் தாக்கங்களும் சுற்றுலாமேம்பாட்டிற்குப் போக்குவரத்தேஉயிர்நாடி. போக்குவரத்துவசதிகளை,அவைபயணம் செய்யும் மார்க்கத்தின் அடிப்படையில் மூன்றாகப் பகுக்கலாம். அவைமுறையே (1) நிலவழி (2) நீர் வழி (3) ஆகாய வழி என்பனவாகும்.நிலவழிப்போக்குவரத்தை (அ) சாலைப் போக்குவரத்து (ஆ) இரயில் போக்குவரத்துஎன இரண்டாகப் பிரிக்கலாம்.

சாலைகளில் மகிழ்வுந்து,பேருந்து,வேன்,ஆட்டோரிஸா. ஷேர் ஆட்டோ,மினி பஸ், குளுகுளு பயணியர் பேருந்துகள், ஜீப்,லாரி. முதலானசிறிதும் பெரிதுமானவாகனங்கள் செல்கின்றன. தற்காலத்தில் அயல்நாட்டுச் சுற்றுலாப் பயணியர் சொகுசானவிலையுயர்ந்தமகிழ்வுந்துகளைவிரும்புகின்றனர். இவற்றுள் சுழட்டள சுழலஉந (3,5 கோடி)'ராயவெழஅ'ழசளஉாந,யுரனைஇ டீநவெடநல யுசயெபநஇ டீஆறுஇ ஆயல டீயஉாஇ ஊயலநநெஇ ஏ6: ஊயலநநெ-ஆளு (5.71),ஊயலநநெவுரசடிழ (ரூ.83 லட்சம்),னுயஅைடநச ஊாசலளடநச (5ரூ. கோடி),லிமோசா - முதலானஅதிநவீனமகிழ்வுந்துகள் குறிப்பிடத்தக்கன. நம்நாட்டிற்குவருகைதரும் அயல் நாட்டுப் பயணியர்க்கு இதுபோன்றகார்களைவழங்கினால் சுற்றுலாமேலும் பெருகும்.

### இரயிலில் பயணிகளுக்கானசலுகைகள்

இன்ட் ரயில் பாஸ் (ஐனெ சுயடை 'யளள) அ. விருப்பப்படிபயணம் செய்யவசதி' அயல் நாட்டுச் சுற்றுலாப் பயணியர்க்கு இந்தியாமுழுவதும் இரயிலில் பயணம் செல்ல 21 நாட்களுக்குச் செல்லுபடியாகும் ஒருடிக்கட். சலுகையுடன் வழங்கப்படுகிறது. ஐரோப்பாவிலுள்ளயூரோரயில் பாஸ்

போன்றதுதான் இது. இன்ட் ரயில் பாஸ் வைத்திருப்போர் எந்தரயிலிலும் இந்தியாவிற்குள் பயணிக்கலாம். முன்பதிவுக் கட்டணமின்றிமுன்பதிவுகள் செய்துகொள்ளலாம்.

**சலுகைகளுடன் கூடியபயணச்சீட்டுகள் :**

உள்நாட்டுமற்றும் அயல் நாட்டுப் பயணியர்க்குக் கோடைவாசஸ்தலங்களுக்குச் செல்லசலுகைப்பயணச்சீட்டுகள் வழங்கப்படுகின்றன.

**கப்பல் போக்குவரத்தின் சிறப்பு**

தொடக்ககாலத்திலிருந்தேமனிதன் கப்பல் வழிப் பயணத்தைமேற்கொண்டான். பயணியரைஏற்றிச் செல்லும் கப்பல்கள் நவீனகாலத்தில் மிதக்கும் ஹோட்டல்கள் எனவும் அழைக்கப்பெறுகின்றன. 1. இக்கப்பல்களில் 2000 பயணியர் பயணிக்கலாம். மிகப் பெரியகப்பல்கள் 1,00,000 டன்கள் வரைஎடையுள்ளவையாகஉள்ளன. இதன் வேகம் மணிக்கு 55 கி.மீ. ஆகும்.இதுபோன்றகப்பல் போக்குவரத்தால் சுற்றுலாமேம்பாட்டைகிறது. அண்மையில் தொடங்கிவைக்கப்பட்டசேதுசமுத்திரத் திட்டத்தால் சுற்றுலாசெல்வோரின் எண்ணிக்கைப் பெருகும். குறைந்த தூரங்களுக்குப் பயணம்,நீண்டகுறுகியகடல்களைக் கடக்கவும் ஜலசந்திகளைக் கடப்பதற்கும் சிறியகப்பல்களே(குநசசல டிழயவள ழச ஊயசபழ ளாிளை)பயன்படுகின்றன.அறிவியல் முன்னேற்றத்தால் இன்றையகப்பல்கள் அளவில் பெரிதாகவும்,அனைத்துவசதிகளைக் கொண்டதாகவும் திகழ்கின்றன. இவற்றில் சொகுசான குளுகுளு வசதியுள்ளஅறைகள்,சாப்பாட்டுஅறை,சமையல் அறை,குளியல் அறை,வங்கி,கடைகள்,திரையரங்குகள்,நீச்சல் குளம் ஆகியவைஉள்ளன.

**விமானப் போக்குவரத்தின் சிறப்பு**

இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் விமானப்பயணம் பெருகிவிட்டது. ஜெட்,போயிங் விமானங்கள் விமானப்பயணத்தைவசதியாக்குகின்றன. விமானப் போக்குவரத்துஅசுரவளர்ச்சிபெற்றுள்ளது. அவசரமான இவ்வுலகில் அவசரமாகச் சென்றுதிரும்பவிமானப் பயணங்களேபெருந்துணைபுரிகின்றன . விமானப் பயணத்தால் உலகம் மிகமிகச் சுருங்கிவிட்டது. கன்கார்டு, ஜெட் போன்றவிமானங்கள் ஆகாயவிமானவரலாற்றில் பெரும் புரட்சியைத் தோற்றுவித்தன. இன்றுபோயிங் 747,ஏர்பஸ் யு 300,மேக்டனால் டு னு.ஊ.10 1011 (வுசளைவயச டு-1011) போன்றமின்னல் வேகவிமானங்கள் சுற்றுலாப் பயணத்தைஎளிதாக்கிவிட்டன. இன்று ஜெட் விமானங்கள் மணிக்கு 1056 கி.மீ. வேகத்தில் 10970 மீஉயரத்திபறக்கின்றன. இன்றுசிலவிமானங்கள் இரண்டடுக்குடன் (னுழரடிடந னுநஉம) 700, 800 பயணியர் வரைஏற்றிச் செல்கின்றன. ஏர் பஸ் வரலாற்றில் 380 புதியசாதனை ப படைத்துள்ளது. இது 555 பயணியருடன் 14,800 மீஉயரம் வரைப் பறக்கிறது. இதன் மதிப்பு 1182.5 கோடிரூபாயாகும்.

இதுபோன்றஅசுரவளர்ச்சியால் விமானக் கட்டணம் குறைந்துவிட்டது. மேலும் பலசலுகைகளும் பயணியர்க்குவழங்கப்படுகின்றன.

**சுற்றுலாவும் மருத்துவத் துறையும்**

மருத்துவத் தொழிலும் மக்கள் பயணம் செய்வதற்கும்,வெளியிடங்களில் சென்றுதங்குவதற்கும் உதவியுள்ளது. 17ஆம் நூற்றாண்டில் மருத்துவர்கள் நோயைக் குணமாக்கஉலோகத் தாதுக்கள் நிறைந்தநீரைப் பரிந்துரைசெய்தனர். 18ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் மட்டும் ஏறத்தாழ 100 நீர் சிகிச்சை இடங்கள் இருந்தன. அவ்விடங்களில் குளிப்பதுநாகரிகமாகக் கருதப் பெற்றது. அவ்விடங்கள் ஓய்வெடுக்கும் இடங்களாகக் கருதப் பெற்றன. பின்னர் அவ்விடங்கள் மருத்துவமையங்களாகவும்,வணிகவிடங்களாகவும்,அரசர்கள் தங்குமிடங்களாகவும் மாறின. அவ்விடங்கள் விடுமுறையைச் செலவிடும் இடங்களாகக் கருதப் பெறாமல்,மருத்துவச் சிறப்புவாய்ந்த இடங்களாகக் கருதப்பெற்றன. அதன்பின் அவ்விடங்களில் கேளிக்கைகள்,பொழுதுபோக்குக் கூட்டங்கள்,பொழுதுபோக்குவிளையாட்டுகள், சூதாட்டம் போன்றவை நடை பெற்றன

**வினாக்கள்**

| வ.எண் | ஐந்து மதிப்பெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | சுற்றுலாவின் முக்கியத்துவம் பற்றிஎழுதுக. | K4 | CO1 | PO4 |
| 2 | சுற்றுலாஅமைப்பாளர்கள் பற்றிகுறிப்புவரைக. | K5 | CO2 | PO5 |
| 3 | சுற்றுலாவின் வகைகள் யாவை? | K3 | CO4 | PO1 |
| 4 | சுற்றுலாவின் பயன்கள் என்னென்ன? | K5 | CO2 | PO2 |
| 5 | உலகநாடுகளில் சுற்றுலாவளர்ச்சிகுறித்துஎழுதுக. | K3 | CO4 | PO3 |

| வ.எண் | எட்டு மதிபெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | சுற்றுலாவின் வகைகளைவிவரி. | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | K2 | CO5 | PO4 |
| 2 | சுற்றுலாவழிகாட்டிகளின் தகுதிகள் குறித்துஎழுதுக. | K3 | CO3 | PO6 |
| 3 | சுற்றுலாவைதிட்டமிடுதலும் மேம்படுத்துதலுக்குமானவழிமுறைகளைவிவரிக்க. | K2 | CO5 | PO5 |
| 4 | சுற்றுலாவும் சுற்றுச்சூழலும் குறித்துகட்டுரைவரைக. | K5 | CO3 | PO6 |
| 5 | சுற்றுலா மூலம் பண்பாடுஎங்ஙனம்வெளிப்படுகிறது? | K3 | CO3 | PO3 |

**அலகு-2**

## காலந்தோறும்சுற்றுலாவளர்ச்சி

## (TOURISM THROUGH THE AGES)

பயணம் என்பது இன்றுநேற்றுதோன்றியதன்று. மனிதன் தோன்றியகாலத்திலேயேபயணமும் தொடங்கியதுஎனக் கூறுதல் மிகையாகாது. வரலாற்றுக்குமுற்பட்டகாலத்திலேயேமனிதன் உணவுதேடிக் காடுமேடெல்லாம் அலைந்தான். பிற்காலமனிதன் திரைகடலோடியும் திரவியம் தேடினான். இன்றையமனிதன் இன்பம் இறைவணக்கம்,பொழுதுபோக்கு,அறிவுவளர்ச்சி,அரியனவற்றைக் கண்டுகளித்தல் இவற்றில் ஏதேனும் ஒன்றிற்காகமேற்கொள்ளும் பயணமேசுற்றுலாவாகச் சொல்லப்படுகிறது. இதனால் நாகரீகம் வளரவளரபயணங்களும் வளரத் தொடங்கியதுஎன்பதுஅறியப் படுகின்றது.

பயணங்களின் வரலாற்றைப் பண்டைக்காலம், இடைக்காலம்,தற்காலம் என மூன்றாகப் பகுக்கலாம். சுற்றுலாவைஎடுத்துக் கொண்டால் பண்டைக்காலம் என்பது கி.பி. 12 ஆம் நூற்றாண்டுவரையிலானகாலக் கட்டமாகும். கி.பி. 12 முதல் 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதிவரையிலானகாலம், இடைக்காலம் ஆகும். அதன் பின் தற்காலம் தொடங்குகிறது. இக்காலப் பகுப்புவரலாற்றுப் பாடத்தின் காலப் பகுப்பினின்றும் வேறுபட்டது' மாறுபட்டதுஎன்பது இங்கேநினைவு கூர்தற்குரியது. “சுற்றுலாகாலங்கள் தோறும் எவ்வாறுவளர்ச்சிபெற்றது?”என்பதைக் காண்பதுசுவைமிக்கது.

**பண்டைக்காலம்**

கற்காலமனிதர்கள் உணவுதேடும் பொருட்டுப் பயணம் செய்தனர். பின்னர்பொருளீட்டப் பயணம் மேற்கொண்டனர். புண்ணியபூமிகளுக்குப் புனிதப் பயணம் புரிந்தனர். கல்வியின் நிமித்தமும் பழஞ்சுவடிகளைத் தேடியும் ஓர் இடம் விட்டுமற்றோர் இடத்திற்கு இடம் பெயர்ந்தனர். நாடோடிக் கூட்டங்களின் நெடும் பயணத்தாலும் படையெழுச்சியாலும் உலகின் பலபகுதிகளில் பெரியமாற்றங்கள் நிகழ்ந்தன. ஆரியர் வருகையால் இந்தியவரலாற்றில் மாற்றங்கள் ஏற்பட்டதனையும்,மிலேச்சர்களின் படையெடுப்பால் உரோமானியப் பேரரசுவீழ்ந்ததையும் இங்கேநாம் எடுத்துக்காட்டாகச் சுட்டலாம்.

கிரேக்கர்களின் பயணமோகத்தை ஓமரின் “ஒடிசி’’சித்திரிக்கின்றது,உரோமானியர்களும் ஆர்வத்துடன் இன்பஉலாக்கள் சென்றனர். வியத்தகுஎகிப்தியபிரமிடுகள்,மத்தியதரைக் கடற்பகுதிக் கோயில்கள்,வீரத்தைவெளிக்காட்டும் ஒலிம்பிக்விளையாட்டுகள் முதலானவைஉரோமானியரின் கருத்தைக் கவர்ந்தன.

புதிதாகக் கண்டறியப்பட்டவணிகவழிகள் வணிகர்களின் பயணத்தைஎளிதாக்கிற்று. தக்கபாதுகாப்புடன் இவர்கள் அயல் நாடுகளுடன் வணிகத் தொடர்புகொண்டனர். வணிகத் தொடர்புகள் பண்பாட்டுத் தொடர்புகளாகமலர்ந்தன. சுமேரியர்களது (பாபிலோனியா) நாணயக் கண்டுபிடிப்பும்,கி.மு. நான்காயிரத்திற்குப் பின்னர் தோன்றியவணிகமுன்னேற்றமும் பயணவரலாற்றில் புதியதோர் காலக் கட்டத்தைத் தோற்றுவித்தது. பண்டையபாபிலோனியமன்னரான “ஷல்கி“ (ளுாரடபப)சாலைகளைச் செப்பனிட்டுப் பயணியர் நலன் கருதிப் பலஆய்வில்லங்களைக் கட்டினார்.இம்மன்னன் கட்டியதங்குமனைகளே இன்றையதங்குமிடவசதிகளின் முன்னோடியாகும்.

**பொனீஷியா:**வணிகநிமித்தமாகப் பலநாடுகளுக்குப் பயணம் செய்துள்ளமையால் பொனீஷியர்களே இன்றையபயணத்தின் முன்னோடிகள் எனலாம். வணிகர்கள் என்றவகையில் இவர்கள் மத்தியதரைக்கடற் பகுதிமுழுவதிலும் பயணம் செய்தனர். கிறித்துபிறப்பதற்குமுன்னமேயே,அயல்நாட்டுவணிகர் பலர் இந்தியாவில் பயணம் செய்தமை இலக்கியகல்வெட்டு,நாணயச் சான்றுகளால் அறியப்படுகின்றன. இந்தியாவும்,சீனாவும் பண்டைக்காலமுதலேசெல்வவளத்தில் மேம்பட்டிருந்ததால்,உலகின் பலபகுதிகளிலிருந்தும் வணிகர்கள் இவற்றுடன் வாணிகம் செய்யத் தலைப்பட்டனர்.

வணிகம் மற்றும் பொருளீட்டல் வணிகர்களைப் பலநாடுகளுக்குப் பயணம் செய்யத் தூண்டியது. துணிகரச் செயல் புரியும் வேட்கையும் மனிதர்கள் பயணம் மேற்கொள்ளமற்றொருகாரணமாகஅமைந்தது. இறைவனின் அருளைப் பெறும் நோக்கத்துடனும் பக்தகோடிகள் பலர் புனிதத் தலங்களைநோக்கித் திருப்பயணங்களைமேற்கொண்டனர்.சிலர் மருத்துவத்தன்மைகொண்டநீர் நிலைகளில் நீராடவும் பயணம் மேற்கொண்டனர். புதியநிலப்

பகுதிகளைக் காணவேண்டும் எனும் ஆர்வமும் சிலரைக் கடல் கடந்தபயணங்களில் ஈடுபடத் தூண்டியது. இப்பயணங்கள் எல்லோராலும் எல்லாக் காலங்களிலும் மேற்கொள்ளப்படவில்லை. காரணம் பாய்மரக் கப்பல்களில் பயணம் செய்தஅவர்கள் பருவக்காற்றுவீசும் காலங்களில் மட்டுமேபயணம் செய்யமுடிந்தது.

**அயல்நாட்டினரின் பயணக் குறிப்புகள்**

பண்டைக்காலத்தில் கிரேக்கர்,உரோமானியர்,சீனர்,பொனீஷியர் ஆகியோர் தமிழகத்துடன் வாணிகம் புரிந்தமைபலசான்றுகளால் உறுதிப்படுகின்றன. இச்சான்றுகளுள் அயல்நாட்டுப் பயணியரின் குறிப்புகளேநமக்குப் பெரிதும் பயன்படுகின்றன. மெகஸ்தனிஸ் எனும் கிரேக்க தூதர்,தாலமிஎனும் கிரேக்கநிலவியலார், ஸ்டிராபோஎனும் நிலநூலார்,பிளினிஎனும் உரோம் நாட்டுவரலாற்றறிஞர்,யுவான்சுவாங்,பாஹியான்,ஈத்சிங் போன்றசீனப் பயணியர் ஆகியோரின் குறிப்புகள் பண்டையமக்களிடையேநிலவியபயணஆர்வத்தைப் படம் பிடித்துக் காட்டுகின்றன. பெரிப்ளுஸ் என்னும் நூல் தமிழகத்திற்குவந்திறங்கியமேலைநாட்டுப் பொருட்களையும் இங்கிருந்தமேலைநாடுகளுக்குச் சென்றபொருட்களையும் விரிவாகப் பேசுகிறது. இடைக்காலத்தில் ஒருமார்க்கோ போலோவும் ஒரு இபின் பதூதாவும் தாம் சுற்றுலாப் பயணம் மேற்கொண்டதனை இலக்கியங்களாகவடித்துச் சென்றனர்.தமிழகத்தைச் சேர்ந்தபோகர் எனும் சித்தர் தாம் சீனாவில் கண்டகாட்சிகளை “போகர் 700” எனும் நூலில் விரித்துக்கூறுகிறார்.

**கிரேக்கர்கள்:**

பண்டையகிரேக்கர்கள் பயணங்களின் மீதுகொண்டிருந்ததனியார்வத்தை ஓமரின் ஓடிசி(ர்ழஅநச“ள ழனலளளநல) சுட்டிக் காட்டுகின்றது. கிரேக்கக் காவியக் கதாநாயகனானஉலிசசின் துணிகரமானபயணஅனுபவங்கள் கிரேக்கர்களின் நெஞ்சில் பயணஆர்வத்தைத் தாண்டினஎனலாம். வரலாற்றுத் தந்தைஎனப் புகழ்ப் பெறுகின்ற.ஹெரடாட்டஸ்,சிறியஆசியா(யுளயை அைெழச)எகிப்துஆகியபகுதிகளில் வரலாற்றுச் சான்றுகளைச் சேகரிக்கஏறத்தாழ 2000 கி.மீ. தொலைவுபயணம் மேற்கொண்டுள்ளார். தாலமி,பிளாட்டோ,அரிஸ்டாடில்,பித்தகோரஸ் - முதலானகிரேக்கஅறிஞர்களும் பலபகுதிகளுக்குப்பயணம் மேற்கொண்டனர். சமயத்தில் நாட்டம் கொண்டுகிரேக்காதமதுதெய்வங்களைவணங்கவும் வீரவிளையாட்டுக்களில் பங்குகொள்ளவும் பயணங்களைமேற்கொண்டனர்.

யூடோக்சஸ் (நுரனழஒரள ழக உலணைஉைரள)என்பவரேகி.மு. 2 ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் முதன் முதலாகஅலெக்சாண்ட்ரியாவிலிருந்து இந்தியாவிற்குப் பயணம் செய்தவர் ஆவார்.

கரூர் அமராவதிஆற்றுப் படுகையில் கிடைத்துள்ளஐம்பதிற்கும் மேற்பட்டகி.மு. 350 க்கும் கி.மு. 100 க்கும் இடைப்பட்டகாலத்தினதானகிரேக்கநாணயங்கள்,தமிழக - கிரேக்கவணிக,கலாச்சாரஉறவுகளைவிளக்குகின்றன. மேலும் யூடோக்சோசின் கடற்பயணம் (ஏழலயபந வா நுரனழஒரள ழக முனைழள)தமிழககிரேக்கவர்த்தகம் வளர்ந்ததையும் இவ்வணிகம் உரோமானியரதுதமிழகவாணிகத்திற்குமுற்பட்டதுஎன்பதையும் அறிவிக்கின்றது.

படையெடுப்பாளர் என்றமுறையில் வரலாற்றில் பயணம் மேற்கொண்டபெருமைஅலெக்சாந்தரையேசாரும். கிரேக்கமாவீரனஅலெக்சாந்தரதுபடையெழுச்சிப் பயணத்தின் போது,வடஇந்தியாவில் நன்குபராமரிக்கப் பட்டசாலைகளும்,சாலையின் இருமருங்கிலும் நிழல் தரும் மரங்களும் இருந்தனவென்றுஅறிகிறோம். ராஜபாட்டைஒன்று(சுழலய ர்பைாறயல), 19 மீட்டர் அகலமும் 1920 கி.மீதொலைவும் இருந்ததாகவும் அதில் மக்கள் தேர்களிலும் பல்லக்குகளிலும் மாட்டுவண்டிகளிலும் குதிரை,யானை,ஒட்டகம் ஆகியவற்றிலும் பயணம் மேற்கொண்டதாகவும் அந்தமாவீரருடன் சென்றவரலாற்றாளர்கள் குறிப்பிடுவர். இதனால் பண்டைய இந்தியாவில் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டதனைஅறியலாம். டிம்பக்டுஎன்னுமிடத்திற்கும் சாலைகள் போடப்பட்டிருந்ததால் அறியலாம். செனோபன் (Xenophon)என்பார் பாரசீகத்திலிருந்துபத்தாயிரம் வீரர்களுடன் சிரியா,ஆசியாவழியாககிரீஸ் நாட்டிற்குத் திரும்பியபயணஅனுபவங்களைஅன்பாலிஸ் எனும் நூலில் சுவைபடக் கூறியுள்ளார்.

**இடைக்காலம்**

உரோமானியபேரரசின் வீழ்ச்சிக் காலத்திலிருந்து (கி.பி.5 ஆம் நூற்றாண்டு),மறுமலர்ச்சிக் காலம் வரையிலானகாலம் ஐரோப்பாவில் இடைக்காலம் என்றேகருதப்பட்டது. ஐரோப்பியநாடுகள் அனைத்தும் இக்காலக் கட்டத்தில் திருச்சபையின் அதிகாரத்திற்குஉட்பட்டேசெயல்பட்டன. எனவே இக்காலத்தில் புதிய கடல் வழிகள் புதியபோக்குவரத்துவசதி,புதியசிந்தனை,தோன்றவில்லை. இதன் விளைவாகச் சுற்றுலாவும் வளரவழியில்லை.

இடைக்காலம் பக்திக் காலம் ஆன்மிகஆர்வம் மிகுந்தகாலம். எனவேசமயபுனிதப் பயணங்கள் மட்டுமேஅன்றுமேற்கொள்ளப்பட்டன. அடுத்துபுதியநாடுகள் கண்டறியப்பட்டதாலும், கி.பி. 15ஆம் நூற்றாண்டில் மறுமலர்ச்சியின் தோற்றத்தாலும் கிறித்துவசமயபோதகர்களின் முயற்சியாலும் இடைக்காலத்தில் பயணங்கள் வளர்ச்சிபெற்றன.

அடுத்து இக்காலக் கட்டத்தில் நிலமானியப் பிரபுக்கள் தமதுவீரர்களுடன் மதத் தொடர்பான இடங்களுக்குப் பயணம் மேற்கொண்டனர். பிரபுக்களின் பிள்ளைகள் அயல்நாட்டுஅரசசபைகளில் கல்விகற்பதன் நிமித்தமும்,நண்பர்கள் சுற்றுலாநிமித்தமும் மாணவர்கள் கல்விகற்றல்பொருட்டும் சென்றனர்.

**இருபதாம் நூற்றாண்டு (நவீனகாலம்) (Tourism in Modern Period)**

இருபதாம் நூற்றாண்டின் தொடக்ககாலத்தில் பன்னாட்டளவில் சுற்றுலாவளர்ச்சிபெறஆரம்பித்தது. சாலை, இரயில்,விமானப் போக்குவரத்துக்களில் ஏற்பட்டுள்ளஅதிநவீனமுன்னேற்றங்கள்,அறிவியல் முன்னேற்றம்,மனிதனின் இன்பநாட்டமும் அரிய,பெரியனவற்றைக் கண்டுகளிக்கும் பேரார்வமும்,கல்விஆராய்ச்சியில் நாட்டமும்,அயல்நாட்டுமக்களின் நடைஉடைபாவனைகளைநேரில் காணும் ஆர்வமும் சுற்றுலாவின் தூண்டுசக்திகளாகஉள்ளன. இன்றுஅதிவிரைவில் அயல்நாடுகளுக்குப் பத்திரமாகச் சென்றுதிரும்பும் நிலைஏற்பட்டுள்ளதால் பலரும் சுற்றுலாவில் நாட்டம் கொண்டுள்ளனர்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே இன்பநோக்கிற்காகப்பயணம் செய்யும் நிலைவளர்ந்தது. இருப்பினும் முதல் கால் நூற்றாண்டுகளில்,பணம் படைத்தோர் மட்டுமேசுற்றுலாவில் பங்குபெறும் நிலை இருந்தது. காரணம் சுற்றுலாக்கள் அன்றுஆடம்பரமிக்கதாகவேகருதப்பட்டது.அதிகபணச் செலவுமிக்கதாகவும் இருந்தது. ஆடம்பரமானபுலமேன் கோச்சுகளைக் கொண்டநவீனமயமானநீண்ட தூர இரயில்களானகவீன் மேரி,கோரியன்ட் எக்ஸ்ப்ரஸ்,ப்ளூாரைபேண்ட் ஆகியவைசுற்றுலாப் பயணிகளின் கண்ணையும் கருத்தையும் கவர்ந்தன.

அடுத்துநகரங்களும் தொழில்களும் வளர்ச்சிபெற்றதனால்,நகரங்களில் வாழ்ந்தசிலரதுபொருளாதாரநிலைஉயர்ந்தது. அவர்களதுவாங்கும் சக்தியும் (ரசஉாயளைபெ ீழறநச)அதிகரித்தது. எனவே இவர்கள் ஆடம்பரச் சுற்றுலாக்களில் ஈடுபடுவதில் ஆர்வம் கொண்டனர். அடுத்துகவர்ச்சிகரமானஒருங்கமைக்கப்பட்டசுற்றுலாக்கள்,விடுமுறைநாள் மகிழ்வுப் பயணங்கள்,குடும்பத்துடன் இளைப்பாறச் செல்லும் இன்பப் பயணங்கள் ஆகியனமக்களின் கவர்ச்சிக் கன்னிகளாகத் திகழ்ந்தன. சுற்றுலாவணிகமும் வளர்ந்தது. இருப்பினும் பெரும்பான்மையானமக்கள் சுற்றுலாவின் சுகங்களைஅனுபவிக்க இயலவில்லை.

**யுவான்சுவாங் :**

இவர் கி.பி. 630 முதல் 644 முடிய இந்தியாவின் பலபகுதிகளைப் பார்வையிட்டார். “பயணிகளின் இளவரசர்’’எனும் பெருமையைப் பெறும் இவர் சீனாவிலிருந்துபுறப்பட்டுத் தாஷ்கண்ட்,சாமர்க்கண்டஆகியவற்றைக் கடந்துகாந்தாரம் சென்றார். பின்னர் கபிலவஸ்து,காசி,குசிநகரம்,கயா முதலானபுனிதத் தலங்களைவழிபட்டு,ஆசியாவின்

புகழ்மிகுபல்கலைக்கழகமானநாளந்தாவில் தங்கிப் படித்துப் பின்னர் தமிழகத்தின் காஞ்சிமாநகர் வரையில் பயணம் செய்தார். இவர் எழுதியநூல் “சியூகி”ஆகும். இதில் இவரதுபயணம் பற்றியபலசுவையானசெய்திகள் இடம் பெற்றுள்ளன.

**பாகியான் :**

இவர் ஒருசீனப் பயணி. பௌத்தசமயத் துறவி. இந்தியாவைப் பற்றியகுறிப்புகள் எழுதியசீனப் பயணியருள் இவரேமுதன்மையானவர். கி.பி. 399 இல் சிலதுறவியருடன இந்தியாவிற்குவந்துபயணம் செய்து, கி.பி. 414 முடிய 15 ஆண்டுகள் இங்குதங்கியிருந்தார். இவரதுகுறிப்புகள் அடங்கிய நூல் போகோசி(குழு முருமு ஊர்ஜ)எனஅழைக்கப் பெறுகிறது. இவர் ஏறத்தாழமுப்பதுநாடுகளில் பயணம் மேற்கொண்டுள்ளார். தரை வழியாக இந்தியாவிற்குவந்த இவர் கடல் வழியாகத் திரும்பினார்.

இரண்டாம் சந்திரகுப்தரதுஆட்சிக் காலத்தில் இந்தியாவிற்குவருகைதந்தபாகியான்,குப்தர் காலத்தியசமூகவாழ்க்கைபற்றிவிரிவாகக் குறிப்பிட்டுள்ளார். இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் புருஷபுரம் தட்ச்சீலம்,மதுரா,பாடலிபுத்திரம், கயா ஆகியபகுதிகளின் வழியாக இவர் பயணம் மேற்கொண்டார். புத்தரதுவாழ்க்கைத் தொடர்பானலும்பினி,வைசாலி,நாளந்தா, ராஜகிருகம்,புத்தகயாஆகியபுனிதத் தலங்களையும் இவர் பார்வையிட்டார். பாடலிபுத்திரத்தில் மூன்றாண்டுகள் தங்கியபாகியான்,அசோகரின் அரண்மனையைக் கண்டுவியந்தார். பின்னர் சிந்துவிலிருந்துவடமதுரைக்குயமுனைஆற்றின் வழியாகப்பயணமானார்.இந்தியப் பயணத்தின் இறுதியில் தாம்ரலிபதிதுறைமுகத்தில் கப்பலேறி இலங்கை, ஜாவாவழியாகத் தாயகம் திரும்பினார்.

**மார்க்கோபோலோ(MARCOPOLO)**:

இடைக்காலப் பயணியருள் மிக்கபுகழ் பெற்றவர்.மார்க்கோபோலோ ஆவார். கி.பி 1254 இல் இத்தாலியில் உள்ளபெனிங் நகரில் பிறந்த இவர் தனதுதந்தையாரைப் போல் (நிக்காலோபோலோ) பயணம் செய்வதில் பேரார்வம் மிக்கவர். கி.பி. 1271 இல் தந்தையும் மகனும் இணைந்துபாரசீகம்,ஆப்கானிஸ்தானம் என்னும் நாடுகளுக்குப் பயணம் செய்தனர். இவர்களதுபயணம் பாமீர் பீடபூமிவழியாகத் தொடங்கியது. அடுத்துசீனாவிற்குச் சென்றுஆங்கு இருபதுஆண்டுகள் தங்கிசுற்றுப்பயணம் செய்தார். பின்னர் தனதுநாடுதிரும்பினார்.வரும் வழியில் இவர் இந்தியா, ஜாவா,சுமத்ராமுதலானநாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டார்.

தென்னிந்தியாவிலுள்ளமலபாருக்குப் பயணம் செய்த இவர்,பாண்டியநாட்டைப் பற்றியும் பாண்டியரின் ஆட்சிமுறைபற்றியும் விரிவாகஎழுதியுள்ளார். தென்னிந்தியப்பறவைகள்,விலங்குகள்,ஆகியவைபற்றியும் விளைபொருள்களைப் பற்றியும் குறித்துள்ளார். கொல்லம்,காயல்,குமரிஆகியவைபற்றியும் இவர் பலஅரியசெய்திகளைச்

சேகரித்துக் கூறுகிறார். இலங்கையில் கிடைக்கும் வைரம்,மாணிக்கம்,மரகதம் முதலானவிலையுயர்ந்தகற்களைப் பற்றியும் விவரிக்கிறார்.

இவரது‘‘பயணக் குறிப்புகள்” என்னும் நூல் பிற்காலப் பயணிகளுக்குமிகச் சிறந்தவழிகாட்டியாகவிளங்குகிறது. ஐரோப்பியநாடுகளுக்கும் தூரக்கிழக்குநாடுகளுக்கும் நேரடித் தொடர்பைமுதன் முதலில் ஏற்படுத்தியபெருமை இவரையேசாரும். இவரதுபயணங்கள் வணிகநோக்கம் கொண்டவை.

**சுற்றுலாவும் இலக்கியங்களும்:**

தொடக்கநாள் முதலேமனிதனின் வாழ்வில் பயணங்களும் தொடங்கிவிட்டன. இவை பண்டைமனிதனின் வாழ்வோடு இரண்டறப்பின்னிப்பிணைந்துள்ளன. சிலா்தமதுபயணஅனுபவங்களைப் பிறரும் அறிந்துகொள்ளும்வகையில்சுவைபடஎழுதியுள்ளன. இவைபயண இலக்கியங்கள் எனஅழைக்கப்பெறுகின்றன. பயண இலக்கியங்களைப்பற்றிஆக்ஸ்போர்டுபேரகராதி,‘‘தாம் சென்றுகண்ட இடங்களையும் அங்குதமக்குஏற்பட்டஅனுபவங்களையும் உரியசித்திரம் முதலியவற்றால் ஒருவா்விளக்கிவிரித்துரைப்பதேபயண இலக்கியங்கள் ஆகும்’’எனவிளக்குகின்றது. பயண இலக்கியங்கள் படிப்பவரின் பொதுஅறிவைப்பெருக்குகின்றன,பிறபகுதிமக்களின் வாழ்க்கைமுறை,பண்பாடுஆகியவற்றைஅறியப்பயன்படுகின்றன.

தமிழ் நாட்டில் பலா்பலநாடுகளுக்குச் சென்றுதமதுபயணஅனுபவங்களை நூல் வடிவில் தந்துள்ளனர். பயண இலக்கியங்களைஐந்துவகைகளாகப் பகுக்கலாம். அவை 1. அரசியல் பயணம், 2 கலைபண்பாட்டுப்பயணம், 3.ஆன்மீகத்தொடர்பான பயணம் 4 கல்விதொழில் நுட்பப் பயணம் 5.பெரியோரைக் காணச்செல்லும் பயணம் ஆகும்.

1. **அரசியல் பயணம்**:திரு.சி.சுப்பிரணியம்,அவர்கள் அரசியல் தொடர்பாகசுவீடன், இங்கிலாந்து- முதலானநாடுகளுக்குச் சென்றுஅதன் அனுபவங்களைஉலகம் சுற்றினேன்,நான் கண்டநாடுகள் எனும் நூல்களில் எழுதியுள்ளார். இவற்றைக் கொண்டுமேலைநாட்டினரின் அரசியல்,கல்வி,தொழில் வளர்ச்சிகளைஅறிந்துகொள்ளலாம்

2. **கலை,பண்பாடு,மக்கள் இனத் தொடர்பானபயணம்:**பிறநாடுகளின் பண்பாடு,நாகரிகம்,கலை,பொழுதுபோக்குஆகியவற்றைஅறிய இப்பயணங்கள் பயன்படுகின்றன.

முனைவர் மு.வரதராசனாரின்யான்கண்ட இலங்கைதிரு.ஏ.கே. செட்டியாரின் பிரயாணக் கட்டுரைகள் முனைவர் சு.ந. சொக்கலிங்கம் அவர்களின் ஜப்பானில் கண்டதும் கேட்டதும்,சோவியத்துநாட்டில் நான் கண்டதும் கேட்டதும் முதலானவைவெளிநாட்டினரின் வாழ்க்கைமுறைகளைப்படம் பிடித்துக் காட்டுகின்றன.

**3. ஆன்மீகத் தொடர்பான நூல்கள்:**ஆன்மீகப் பயணம் தொடர்பாகச் சங்க இலக்கியங்களில் குறிப்புகள் உள்ளன. இவற்றுள் பத்துப்பாட்டில்முதலாவதாகக் கூறப்படும். 'திருமுருகாற்றுப்படை'முதன்மையானது. திரு. அவிநாசிலிங்கம் செட்டியார் எழுதியதிருக்கேதாரயாத்திரைபோன்றநூல்கள் இத்துறையில் புகழ் பெற்றுள்ளன.

**4. கல்வி,தொழில் நுட்பப் பயணம்:**பிறநாடுகளில் காணப்படும் கல்வி,தொழில் நுட்பங்களைஅறிந்துவருதல் நம் நாட்டின் கல்வி,தொழில் நுட்பவளர்ச்சிகளுக்குத் துணைபுரியும். இவ்வகையில் திரு.நெ.து. சுந்தரவடிவேலுஅவர்களதுபுதிய ஜெர்மனியில் எனும் நூல் சிறப்பானது.

**5.பெருந்தலைவர்களைப் பார்க்கச் சென்றபயணம்:**உலகப் புகழ் பெற்றதலைவர்களையும்,சமயச் சான்றோர்களையும்,சாதனைவீரர்களையும் காணச் சென்றமைபற்றிய நூல்கள் சிலஎழுந்துள்ளன. இவற்றுள் திரு. பரணீதரனின் புனிதப் பயணம் குறிப்பிடத்தக்கது. அடுத்துத்தமிழ் இலக்கியங்கள் கூறும் பயணங்கள் பற்றிக்காண்போம்.

**ஆற்றுப் படை நூல்கள்**

ஆற்றுப்படுத்துதல் என்பதற்குவழிகாட்டுதல் என்பதுபொருளாகும். ஆற்றுப்படையின் இலக்கணத்தைத் தொல்காப்பியர் சிறப்பாகவிளக்கியுள்ளார்.

''கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்

ஆற்றிடைக் காட்சியுறழத் தோன்றிப்

பெற்றபெருவளம் பெறாஅர்ககறிவுறீஇச்

சென்று பய னெதிரச் சொன்னபக்கமும்''

(தொல்காப்பியம்,புறம்.30)

ஐயனாரிதனார் எழுதியபுறப்பொருள் வெண்பாமாலையில் பாணராற்றுப் படை, கூத்தராற்றுப்படை,பொருநராற்றுப்படை,விறலியாற்றுப்படை,புலவராற்றுப்படை - எனும் ஐந்தனுக்கும் விளக்கங்கள் காணப்படுகின்றன.

வறுமையில் உழலும் புலவர்,பாணர்,பொருநர்,விறலியா, கூத்தர் ஆகியோர் கானகத்திடைச் செல்கின்றனர். அப்போதுபரிசில் பெற்றுத் திரும்பும் இரவலன் ஒருவன் அவர்களைக் கானகத்தில் சந்தித்துப் புரவலனின் நாடு,கொடை, ஊர் ஆகியவற்றைப் புகழ்ந்துபேசி,அக்கலைஞர்களையும் அப்புரவலனிடம் செல்லும்படி வழி கூறி ஆற்றுப்படுத்துகிறான் இதுவேஆற்றுப்படையின் விளக்கமாகும்.சுருங்கச் சொன்னால் பரிசில்பெற்றஒருவன்,பரிசில் பெறத்துடிக்கும் ஒருவனைத் வள்ளலைக்காணவழிகாட்டுதலேஆகும்.

**புறநானூறு**

புறநானூற்றின் 68,69, 70, 138, 141, 155,180- ஆகியபாடல்கள் பாணாற்றுப்படையையும், 64, 103, 105, 133- ஆகியபாடல்கள் விறலியாற்றுப் படையையும், 48, 141 ஆகியபாடல்கள் புலவராற்றுப் படையையும் சித்திரிக்கின்றன. பாடல் 141 பாணராற்றுப்படையும் புலவராற்றுப் படையும் விளங்குகின்றன.

புறம் 68, 69, 70, 105 -ஆம் பாடல்களும் பயணங்கள் பற்றிக் கூறுகின்றன. கடலில் கப்பலில் செல்லும் போதும்,பாசறைக்குச் செல்லும் போதும் பெண்களுடன் செல்வதில்லை. பொழில் விளையாடல்,பூம் புனல் ஆடல் ஆகியவற்றிற்குப் பெண்களையும் அழைத்துச் செல்வர். சேரன் செங்குட்டுவன் தன் மனைவியுடன் மலைவளம் காணச் சென்றதைச் சிலப்பதிகாரம் விரித்துக்கூறும். இவைஈகோ- டூரிசம். ஏனெனில் இதில் இயற்கைக் காட்சிகளைக் கண்டுகளித்ததுபற்றியேபேசப்படுகின்றது.

மாடலன் போன்றமறையவர்களும்,காந்தியடிகள் போன்றதுறவியரும் ஓரிடத்தேநில்லாமல் ஆன்மிகச் சொற்பொழிவுகளில் பங்குகொள்ளும் பொருட்டுத் தமிழகத்தின் பலபகுதிகளுக்கும் சென்றுள்ளனர்.

மாடலமறையோன் போன்றோர் தமிழகத்திலிருந்துவடநாட்டில் உள்ளகங்கையில் நீராடச் சென்றதாகச் சிலப்பதிகாரம் செப்புகின்றது. வடநாட்டுமக்கள் தென்கோடியில் உள்ளகுமரித்துறையில் வந்துநீராடிப் புண்ணியம் பெற்றதாகப் பெரிப்ளுஸ் நூல் கூறுகின்றது. உலா இலக்கியம் என்னும் ஒருவகை இலக்கியம் தமிழில் வளர்ந்திருப்பதே,மக்கள் ஓரிடத்தில் நிலையாக இல்லாமல் பல இடங்களுக்கும் சென்றுவந்தனர் என்பதனைவிளக்குகிறது. சீவகசிந்தாமணிசுரமஞ்சரியார் இலம்பகத்தில் தலைவன் குமரியாடப் போந்ததாகக் கூறுவது,அக்காலவடநாட்டினர்தெற்கேகுமரியாடுதலைஒருகுறிக்கோளாகக் கொண்டிருந்தனர் என்பதைஉணர்த்துகின்றது.

இதனைநாம் உடல்நலம் பேணும் சுற்றுலாவாகக் (ர்நயடவா வுழரசளைஅ) கொள்ளலாம். அல்லதுபுனிதப் பயணமாகவும் (சுநடபைழைரள வுழரச)கருதலாம். தமிழிலக்கியத்தில் பலபாடல்கள் மக்கள் பயணங்கள் மேற்கொண்டுமகிழ்ந்ததைப்படம் பிடித்துக் காட்டுகின்றன.

திருப்பரங்குன்றத்தில் வரையப்பட்டிருந்தஅகலிகைக் கதையைவிளக்கும் ஓவியக் காட்சியைச் சுட்டிக்காட்டி “இவள் அகலிகை, இப்பூனை இந்திரன்’’என்றுதலைவிக்குத் தலைவன் கூறுவதாகமற்றொருபரிபாடலில்வந்துள்ளது. இதுபோன்றஓவியக் காட்சிகளைநெடுநல்வாடைமுதலான நூல்களிலும் காணலாம்.

**சுற்றுலாத்தலங்கள்**

பூம்புகார்,உறையூர்,மதுரை,வஞ்சி,முதலானபெருநகரங்கள் அன்றுசிறந்தசுற்றுலாத் தலங்களாகத் திகழ்ந்தன. அங்குக் கோட்டைகொத்தளங்களும்,மாடமாளிகை கூட கோபுரங்களும்,சித்திரமாடங்களும்,திருக்கோயில்களும் பார்வையாளர்களைப் பெரிதும் கவர்ந்தன. அப்பெருநகரங்களில் நிகழ்ந்தபெருவிழாக்கள் மக்களைமகிழ்வித்தன. எடுத்துக்காட்டாகபூம்புகாரில் தொடர்ந்துஒருமாதகாலம் கொண்டாடப்பட்ட இந்திரவிழாவைச் சுட்டலாம். இவ்விழாவிற்கு இந்தியாவின் பலபகுதிகளில் இருந்தும் பெருமளவில் மக்கள் (விஞ்சையர் உட்பட ) திரண்டுவந்து,கண்டுகளித்ததாகச் சிலப்பதிகாரம் கூறும். எனவேஅன்றும் இன்பநோக்கம் கருதிமக்கள் இடம் பெயர்ந்துஉலவியதனைஅறியலாம்.

**பத்துப்பாட்டு**

தமிழிலக்கியத்தில் பத்துப்பாட்டில் 1.திருமுருகாற்றுப்படைஎன்னும் புலவராற்றுப்படை 2. பொருநராற்றுப்படை 3. சிறுபாணாற்றுப்படை 4. பெரும்பாணாற்றுப்படை 5. மலைபடுகடாம் என்னும் கூத்தராற்றுப்படைஎனும் ஐந்துஆற்றுப்படை நூல்கள் உள்ளன. இவற்றுள் முதலாவதாகவைக்கப் பெறுவதுதிருமுருகாற்றுப்படை. இதுபுலவராற்றுப்படைஎனவும் அழைக்கப்பெறுகிறது.

இந்நூல் முருகப் பெருமான் அருள் பெற்றபுலவன் ஒருவன் திருமுருகனதுஅருளைப் பெறவிரும்பும் புலவன் ஒருவனைஅத்தெய்வத்தின்பால் ஆற்றுப்படுத்துவதைவிளக்குகின்றது. இதில் மலை வளம்,கடற்காட்சி,இயற்கைக் காட்சிகள் ஆகியசுற்றுலாமையங்களைப் பற்றியும்குரவைக்கூத்து, இசை, இசைக்கருவிகள் ஆகியபொழுதுபோக்குகளைப் பற்றியும் மக்களின் சமுதாயவாழ்க்கைபற்றியும் கூறப்பட்டுள்ளது. ஆற்றுப்படை நூல்களில் கூத்தர்,பாணர்,பொருநர்,விறலியர்,புலவர் ஆகியோர் காடு,மலை, ஆறு,நாடு, ஊர் ஆகியவற்றைக் கடந்துநடந்துசென்றசெய்திகள் இடம் பெற்றுள்ளன.

கரிகால் சோழனிடம்பரிசில் பெற்றபொருநன் நான்குகுதிரைகள் பூட்டப்பெற்றதேரில் பயணம் செய்ததாகப் பொருநராற்றுப்படைசெப்புகின்றது. இதனைக் கீழ்க்காணும் பாடலடிகளால் அறியலாம்.

”பால்புரைபுரவிநால்குடன் பூட்டிக்

காலின் ஏழடிப் பின்சென்றுகோலின்

தாறுகளைந்துஏறென்றுஏற்றிவீறுபெறு

பேர்யாழ் முறையுளிக் கழிப்பி….(வரிகள் 165-168)

தொண்டைமான் இளந்திரையன் பெரும்பாணர்களைவெள்ளைக்குதிரைபூட்டியதேரில் அமர்த்திஅனுப்பியதாகக் கீழ்க்காணும் பெரும்பாணாற்றுப் பாடலடிகளால் அறியலாம்.“வளைகண்டன்னவாலுளைப்புரவி,துணைபுணர் தொழிலநால்குடன் பூட்டி” (பெரும்,488-89)

ஆற்றுப்படைநூல்களைக் கொண்டுகலைஞர்கள் பரிசில்பெறச் செல்லும் போதுநடைப்பயணமாகவேசென்றதனைஅறிகிறோம். எனவே இது ஓர் நடைப்பயணம். ஆனால் பரிசில் பெற்றுத் திரும்பிவரும் போதுதேர்களிலும் யானைகளிலும் குதிரைகளிலும் இவர்கள் வந்ததாகக் கூறுப்படுகிறது. யானை இன்றையலாரிபோன்றுசரக்குகளைக் கொண்டுசென்றன.

அன்றும் வசதிபடைத்தவர்கள் தேர்,குதிரை,பாண்டில்,யானை,சிவிகை,போன்றவற்றைவாகனங்களாகப் பயன்படுத்தினர். சிலர் கோவேறுகழுதைகளிலும் சென்றனர்.கலைஞர்கள் இசைக் கருவிகளுடன் பயணம் செய்தனர். எனவேஅக்காலத்திலும் தனிநபர் சுற்றுலாவும் குழுச் சுற்றுலாவும் இருந்தமைபுலனாகும்.

இன்றுபல இசைக்கருவிகள் இருப்பதுபோல் அன்றும் யாழ், குழல்,கொம்பு,மத்தளம்,ஆகுளி,கடிகை, தூம்பு,சல்லி,பாண்டில்,நெடுவங்கியம்,மாக்கிணை - முதலான இசைக்கருவிகள் இருந்தன.கலைஞர்கள் இவற்றை இசைத்துத் தாம் இன்புற்றதுடன் மக்களையும் மகிழ்வித்தனர். அன்றுமக்கள் ஆற்றிலும் அருவியிலும் நீராடி,நீந்திவிளையாடிமகிழ்ந்தமை இன்றையசுற்றுலாப் பயணிகளின் நீர்விளையாட்டை(ருயுவுநுசு ளுீழுசுவுளு) நினைவுபடுத்துகின்றது.

பத்துப்பாட்டில் மட்டுமன்றிப் பதிற்றுப் பத்து,புறநானூறுஆகியஇலக்கியங்களிலும் தொல்காப்பியம்,புறப்பொருள்வெண்பாமாலைமுதலானஇலக்கணங்களிலும் பயணங்கள் பற்றியசெய்திகள் காணப்படுகின்றன.

இன்றுசுற்றுலாப் பயணியர் புனிததலங்களில் நடைபெறும் திருவிழாக்களைக் கண்டுகளிப்பதுபோல் அன்றும் தமிழர்கள் வெளியூர்களில் நடைபெறும் ஆன்மிகத் திருவிழாக்களில் பங்குகொண்டுமகிழ்ந்தனர் என்பதனை இலக்கியச் சான்றுகளால் அறியலாம்.இவையனைத்தும் ஆன்மிகச் சுற்றுலாவேயாகும். இன்று இயற்கையானசூழலில் அமைந்துள்ளவிலங்குகள் சரணாலயங்களில் காடுகளில் மான்,மயில், முயல், புலி, கரடி,காட்டெருமை,காட்டுப்பன்றிஇகுயில்,மைனா,கிளி,கொக்கு,நாரை,காட்டுக்கோழிமுதலானவற்றைவா ழும் இயற்கைச் சூழலிலேயேகண்டுமகிழ்ந்தனா். இன்றுபோல் அன்றுபயணியர்க்குப் பாதுகாப்பில்லைஎன்பதுமட்டும் உண்மை.

**கோவூர் கிழார்**

புலவர் பெருமக்கள் அன்றுநாட்டின் பலபகுதிகளுக்குப் பயணம் செய்துகொண்டே இருந்தனர். புரவலர்களைப் பாடிக் கொண்டே இருந்தனர். இதனால் இலக்கியங்கள் வளர்ந்தன,சங்க இலக்கியங்களைக் கூர்ந்துநோக்குங்கால்,கோவூர் கிழார் தமிழகத்தின் பெரும்பாலான இடங்களைச் சுற்றிவந்தபெரும் பயணியாகத் தோன்றுகிறார்.

கோவூர்கிழாரைப் போன்றுபலபுலவர்கள் பயணங்களில்ஈடுபட்டிருந்தனர் என்பதனை இலக்கியங்கள் வாயிலாகஅறிகிறோம்.

இதுகாறும் கூறியவற்றான் தமிழில் பயண இலக்கியங்கள் பலதோன்றி,மக்கள் வாழ்க்கையைவிளக்கினஎன்பதும் தமிழ் இலக்கியங்களில் சுற்றுலாமையங்கள்,பயணியர்,பொழுதுபோக்குஆகியவைபற்றியபலசெய்திகள் இடம் பெற்றுள்ளனஎன்பதும் அறியப்படுகின்றன.

**புகழ்பெற்றபயண இலக்கியங்கள்**

உலகம் சுற்றும் தமிழன் - அ. க. செட்டியார்

பிரயாணநினைவுகள் - அ. க. செட்டியார்

கனடாமுதல் கரிபியன் வரை - அ. க. செட்டியார்

மகாத்துமாவின் அடிச்சுவட்டில் - அ. க. செட்டியார்

எனதுபிரயாணநினைவுகள் - சோமலெ

பிரிட்டனில்... - நெ. து. சுந்தரவடிவேலு

புதியஜெர்மனியில் - நெ. து. சுந்தரவடிவேலு

சோவியத் நாட்டில் - நெ. து. சுந்தரவடிவேலு

சோவியத் மக்களோடு - நெ. து. சுந்தரவடிவேலு

உலகத் தமிழ் - நெ. து. சுந்தரவடிவேலு

இதயம் பேசுகிறது (தொகுதிகள்) - மணியன்

அலைகடலுக்குஅப்பால் - சாரதாநம்பியாரூரான்

நவகாளியாத்திரை - சாவி

வடுகபட்டிமுதல் வால்காவரை - வைரமுத்து

கொய்ரோவில் - வா. மு. சேதுராமன்

நூலகநாட்டில் நூற்றியிருபதுநாட்கள் - அ. திருமலைமுத்துசுவாமி

வேங்கடம் முதல் குமரிவரை - 4 பாகங்கள் - தொ. மு. பாஸ்கரதொண்டைமான்

வேங்கடத்திற்குஅப்பால்.. - தொ. மு. பாஸ்கரதொண்டைமான்

தேசாந்திரி - எஸ்.ராமகிருஷ்ணன்

**சுற்றுலாதொடர்புடையதொழில்நுட்பங்களும் கருவிகளும்:**

**தொழில் நுட்பக் காரணங்கள்:**

போக்குவரத்துத் தொழில் நுட்பமுன்னேற்றம் அதிலும் சிறப்பாகவிமானப் போக்குவரத்து,சுற்றுலாவிற்குமுழுக்கமுழுக்கப்புதியதோர் அர்த்தத்தைத் தந்துள்ளது. மூலைமுடுக்குகளில் எளிதில் போய்ச்சேரமுடியாதுஎனக் கருதப்பட்டஇடங்களுக்கெல்லாம், இப்போதுசெல்லவசதிகள் உள்ளன. நெடுந்தொலைவுசுற்றுலாக்களைமேற்கொள்ளும் சுற்றுலாப் பயணியரின் எண்ணிக்கைகடந்தஇருபதுஆண்டுகளில் அதிகரித்துள்ளது.ஆயிரக்கணக்கானகி.மீதொலைவில் உள்ள இடங்களுக்கும் மிகவிரைவில் சென்றுவரமுடிகின்றது. வாடிக்கையானவிமானப் பயணம்,குறைந்தகட்டணத்தில் விமானத்தைவாடகைக்குஅமர்த்திக் கொள்ளும் பயணம் என இரு வகையாகப் பிரித்திருப்பதுவிமானப் பயணத்தைமேற்கொள்வோரின் எண்ணிக்கையைப் பெருக்கியுள்ளது. ஒழுங்கமைக்கப் பட்டபயணம் (தொடர் பயணம் அல்லதுகட்டுமுறைபயணம் - ீயஉமயபந வுழரசள) சுற்றுலாவளர்ச்சியில் பெரும்பங்குவகிக்கின்றன.

போக்குவரத்து,தங்கும் வசதி,சுற்றிப் பார்க்கும் வசதிகள்,முதலானஅனைத்துவசதிகளையும் செய்துகொடுத்து,விடுமுறைப் பயணங்களைத் திட்டமிட்டுச் செயல்படுத்திஎண்ணிறந்தபயணிகளைஅவற்றில் ஈடுபடச் செய்யும் போதுசெலவுகள் கணிசமாகக் குறைகின்றன. இதுபோன்றகுழுச் சுற்றுலாசிக்கனமானது. காரணம் தனிநபர் சுற்றுலாவில் ஒருவர் ஏற்கும் செலவைவிட,குழுச் சுற்றுலாவில் ஒருநபரின் செலவுகுறைகிறது. இதன் விளைவாககுறைந்தவருவாய் பெறுவோரும் சுற்றுலாசெல்லமுடிகிறது.அடுத்துகுறிப்பாகவளர்ந்துவரும் நாடுகள் புத்தம் புதியசுற்றுலாமையங்களைஉருவாக்குகின்றன. புதியமையங்களுக்குப் பயணிகளைகவருவதற்காகபுதிதுபுதிதாகவசதிகளைச் செய்துதருகின்றனர். தனியார்சுற்றுலாப் பணிநிறுவனங்களும் சுற்றுலாவளர்ச்சிக்குஅளப்பரியதொண்டு புரிந்துள்ளன. தொழில் வளமிக்கநாடுகளும் வளர்ச்சியுற்றநாடுகளிலும்பெரும்பாலானோர் அதிகவருவாய் பெறுவதால் அதில் ஒருபகுதியைசுற்றுலாவிற்காகஒதுக்கிவைக்கமுடிகிறது.

**சுற்றுலாதொடர்பானபுள்ளிவிவரங்கள்**

**சுற்றுலாவின் மூலம் இந்தியவருவாய்**

நம் பாரதமும் சுற்றுலா மூலம் கணிசமானஅந்நியச் செலாவணியைப் பெறுகிறது. உலகில் அதிகமானஅந்நியச் செலாவணியைப் பெறும் நாடுகளில் நம் நாடு,நான்காவது இடத்தைப் பெறுகிறது. இதன் விளைவாகநேரடியாகவும் மறைமுகமாகவும் நம் நாட்டின் வருவாய் பெருகுகிறது.

சுற்றுலாவின் மூலம் நமதுநாடு 1698 முதல் 1972 வரையிலானஐந்துஆண்டுகளில் 214.5 கோடிரூபாய் தேசியவருவாயாகவும் 32.18 கோடி வரி வருவாயாகவும் பெற்றுள்ளது. 1999-இல் மட்டும் நம் பாரதம் 13041 கோடிரூபாயைச் சுற்றுலா மூலம் பெற்றுள்ளது. இவ்வாறு நம் நாடும் அண்மைக் காலத்தில் சுற்றுலாத் துறையைவிரிவுபடுத்திஅந்நியச் செலாவணியைஈட்டிவருகிறது.

**அந்நியச் செலாவணியைப் பெறுதல்**

இன்றுஉலகஅளவிலானசுற்றுலாத் தொழில் வர்த்தகமதிப்பு 350 மில்லியன்அமெரிக்கடாலர்களாக இருக்கிறது. உலகநாடுகள் அயல்நாட்டுச் சுற்றுலாப் பயணியரின் வசதிக்காகப் பிறநாடுகளிலிருந்து இறக்குமதிசெய்தசொகுசுகார்,நவீனஆகாயவிமானம் போன்றவற்றிற்காகச் செலவுசெய்யவேண்டியுள்ளது. அடுத்துதன் நாட்டவர்அயல்நாடுகளில் சுற்றலாமேற்கொண்டுசெலவழிக்கும் தொகையும் உள்ளது. அந்த இரண்டுசெலவுத் தொகைகளையும் கழித்துபோகஎஞ்சியுள்ளதொகையேஉலகநாடுகளின் நிகரலாபமாகும். இந்நிகரலாபம் வளரும் நாடுகளில் அதிகமாகவேஉள்ளது. எனவேசுற்றுலாவின் மூலம் வளரும் நாடுகளும்,பின்தங்கியநாடுகளும் பெருமளவில் அந்நியச்செலாணியைஈட்டிவருகின்றனஎன்பதுபுலனாகும். நம்நாடு 1987-88 இல் 1856.1 கோடிரூபாய்கள், 1988-89 ஆம் ஆண்டில் 2103 கோடிரூபாய்கள் 1989-90 இல் 2456 கோடிரூபாய்கள் மதிப்புள்ளஅந்நியச் செலவாணியைச் சுற்றுலாத் துறையின் மூலம் ஈட்டியுள்ளது. 1999 இல் ஒருஅயல்நாட்டுப் பயணி நம் நாட்டில் சராசரியாகரூ. 16,000 செலவழிக்கிறார்.

**வேலைவாய்ப்பு**

சுற்றுலாஒருநாட்டின் வருவாயைப் பெருக்குவதுடன் பலருக்குவேலைவாய்ப்பையும் வழங்குகிறது. இதனால் வேலையில்லாத் திண்டாட்டமும் ஓரளவுகுறைகிறது. பன்னாட்டளவில் பல்வேறுதொழில்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் மொத்தஎண்ணிக்கையில் ஏழு சதவிகிதத்திற்குமேற்பட்டோர் சுற்றுலாத்துறையில் பணிபுரிகின்றனர் என்றுஅறிஞர் லிகோர்ஸ் என்பார் கணித்துள்ளார். பிறதொழில்களைக் காட்டிலும் சுற்றுலாத்தொழில் அதிகப் பேர்களுக்குவேலைவாய்ப்பினைநல்குகிறது. சுற்றுலாத் தொழிலில் வேலையாட்கள் முதலீடுவிகிதமானதுமற்றதொழில்களைக் காட்டிலும் அதிகம்.எடுத்துக்காட்டாக 10,00,000 ரூபாய் முதலீடுசெய்தால் (1985-86 ஆம் ஆண்டின் விலையின் அடிப்படையில்) சுற்றுலாத் தொழிலில் 89 ஆட்களுக்குவேலைகொடுக்கமுடியும். விவசாயத்துறையில் 45 ஆட்களுக்கும்,உற்பத்தித் தொழில்

துறையில் 13 ஆட்களுக்கும் வேலைகொடுக்க இயலும். இதனால் விவசாயம் மற்றும் உற்பத்தித் தொழில்களைவிட,சுற்றுலாத் தொழிலில் அதிகஅளவிலானவேலைவாய்ப்புகள் கிடைக்கின்றதுஎன்பதனைஅறியலாம்.

உலகச் சுற்றுலாவர்த்தகத்தில் நம் பாரதத்தின் பங்கு 0.4 சதவிகிதமாகஉள்ளது.சுற்றுலாத்துறைநேரடியாகவும் மறைமுகமாகவும் பலருக்குவேலைவாய்ப்பைவழங்குகிறது. எடுத்துக்காட்டாகசுவிட்சர்லாந்தில் விடுதிகள்,உணவகங்கள்,விமானநிலையங்கள்,ரயில்கள் மற்றும் போக்குவத்துநிறுவனங்களில் மட்டும் ஆறு சதவிகிதத்தினர் பணிபுரிகின்றனர். இதுபோன்றநேரடிவேலைவாய்ப்புடன்,சுற்றுலாத் தொடர்பானநிறுவனங்களில் மறைமுகவேலைவாய்ப்பிலும் பலர் ஈடுபட்டுள்ளனர். இவர்களுள் ஆண்களும் பெண்களும் அடங்குவர். 1996-97 இல் இந்தியாவில் சுற்றுலாவின் மூலம் மொத்தம் 211 மில்லியன் பேர்கள் வேலைவாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

பெரும்பாலானமேலைநாடுகளில் ஆண்களைக் காட்டிலும் பெண்களேசுற்றுலாத்துறையில் பணிபுரிகின்றனர். குறிப்பாகஅதிலும் சிறப்பாகபிரிட்டனில் விடுதிகளிலும் விடுமுறைத் தொழில்களிலும் ஏறத்தாழ 70 சதவீதம் பெண்கள் பணிபுரிகின்றனர். இந்தியாவிலோஆண்கள் அதிகம் பணிபுரிகின்றனர். அண்மைக்காலத்தில் பெண் பணியாளர்களின் தொகைஅதிகரித்துவருகிறது. இந்தியாவில் ஏறத்தாழநாலரைமில்லியன் பேர்கள் சுற்றுலாவினால் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர். 1994 ஆம் ஆண்டில் இதன் எண்ணிக்கை கூடியது.

**சுற்றுலாவருவாய் அதிகரிப்பு**

ஒருநாட்டின் ஏற்றுமதிப் பொருள்களின் மதிப்புஎப்போதும் ஒரேசீராக இருப்பது இல்லை. இதுநிரந்தரமானதுமல்ல. ஏற்றுமதிகள் ஓராண்டு கூடலாம், மறு ஆண்டுகுறையலாம். ஆனால் சுற்றுலாத் தொழிலோவிரைந்துவளர்ந்துகொண்டுள்ளது. சுற்றுலாவில் வரும் வருவாயும் குறையாமல் கூடிக் கொண்டேஉள்ளது. எடுத்துக்காட்டாக நம் பாரதத்தைஎடுத்துக்கொள்வோம். 1969ம் ஆண்டுசுற்றுலாவின் மூலம் 333 இலட்சங்களைப் பெற்றநாம் 1971இல் 488 இலட்சங்களைப் பெற்றுள்ளோம். 1980 இல் இத்தொகை 4820 லட்சங்களாகவும் 1981ல் 5640 லட்சங்களாகவும்,பெருகியுள்ளது. 1982இல் 7500 லட்சங்கள் பெற்றுஅசுரவேகத்தில் முன்னேறியுள்ளோம். 1988ஆம் ஆண்டுநம்நாடுசுற்றுலாவின் மூலம் 2103 கோடிரூபாய் அன்னியச் செலாவணியைப் பெற்றது நம் நாடு. 1994இல் 1990 ஆம் ஆண்டைக்காட்டிலும் 160கோடி ரூபாய் அதிகமாகப் பெற்றது. 1998 இல் 11950 கோடிரூபாயை (3132.53 மில்லியன் டாலர்கள்) இந்தியாவருவாயாகப் பெற்றுள்ளது. 1998 இல் கணினி (கம்ப்யூட்டர்) மென்பொருள் ஏற்றுமதியின் வருவாய் ரூ.45000 கோடிரூபாய். எனவேகம்ப்யூட்டர் ஏற்றுமதிவருவாயைவிடரூ.7450 கோடிஅதிகம் பெற்றுள்ளோம். ஒருஅயல்நாட்டுப்பயணி நம் நாட்டில் சராசரியாகரூ. 16000.∴செலவழிக்கிறார்.8-7-2000 நாளிட்டதினமலரில் இந்தியசுற்றுலாவளர்ச்சிபற்றிக் கீழக்காணும் செய்திவெளியாகியுள்ளது.

“கடந்த ஆறு மாதங்களில் இந்தியாவிற்கு 1256133 அயல் நாட்டுச் சுற்றுலாப் பயணியர்வந்துள்ளனர். கடந்தஆண்டைவிட இது 6.3மூஅதிகம். 2000 ஜூன்வரையில் 6648 கோடிரூபாய் அந்நியச் செலாவணி மூலம் வருவாய் வந்துள்ளது. இதுகடந்தஆண்டைக் காட்டிலும் 9.8மூஅதிகம். பிப்ரவரியில்மட்டும் 1417 கோடி -ரூபாய் வருவாய் கிடைத்தது. ஒரேமாதத்தில் கிடைத்தவருவாய்களுள் இதுவேஅதிகம்”.

**உலகநாடுகளின் சுற்றுலாவருவாய்:**

உலகநாடுகள் அனைத்தும் சுற்றுலாத்துறையைமுனைப்புடன்முன்னேற்றிவருகின்றன.பெரும் பொருள் ஈட்டிவருகின்றன. 1792-ஆம்ஆண்டில் உலகநாடுகள் சுற்றுலாவின் மூலம் 20.5 பில்லியன் ரூபாயைவருவாயாகப் பெற்றுள்ளன. ஆண்டுதோறும் சுற்றுலாவின் வருவாய் 20மூகூடிக்கொண்டுள்ளது. இன்றோஉலகசுற்றுலாத்தொழிலின்வர்த்தகமதிப்பு350 மில்லியன் அமெரிக்கடாலர்களாகஉயர்ந்துள்ளது. 1969-இல் இந்தியா333 மில்லியன் ரூபாயைச் சுற்றுலாமூலம் அந்நியச் செலாவணியாகச்சம்பாதித்தது. 1981 ஆம் ஆண்டில் இது 5640 மில்லியன்ரூபாயாகஉயர்ந்தது.இது 1969 ஐக் காட்டிலும் 17மடங்கு அதிகம் என்பது இங்கேகுறிப்பிடத்தக்கது. 1988 ஆம் ஆண்டில் இது 2103 கோடிரூபாயாகவும் 1989-இல் 2456 கோடிரூபாயாகவும் உயர்ந்தது. 1991-ஆம் ஆண்டு இந்தியச் சுற்றுலாஆண்டாகஅறிவிக்கப்பட்டது. எனவேஅந்தஆண்டில் இந்தியா கூடுதலாக 160 கோடிரூபாய் அந்நியச் செலாவணியைஈட்டும் என்றும் இரண்டுமில்லியனுக்குமேற்பட்ட அயல் நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிற்குவருகைபுரிவர் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் பலஎதிர்பாராதகாரணங்களால் நமதுஎதிர்பார்ப்புகள் பொய்த்துவிட்டன. 1991- ஆம் ஆண்டில் 12,36,120 அயல் நாட்டுப் பயணியரேவருகைபுரிந்தனர். 3318 கோடிஅந்நியச் செலாவணியாகப் பெற்றோம். 1992 ஆம் ஆண்டு 14,34,737 அயல் நாட்டுப் பயணியரும் 1993- ஆம் ஆண்டு 14, 42, 46 அயல் நாட்டுப் பயணியரும் வருகைபுரிந்துள்ளனர்.

1991செப்டம்பர் முதல் ஜெர்மனியில் இந்தியக் கலைவிழாநடத்தப் பெற்றது. அமெரிக்கா, இங்கிலாந்து, ரஷ்யா,பிரான்சுமுதலானநாடுகளிலும் இந்தியக் கலைவிழாநடந்த ஸ்பெயின் நாட்டிலிருந்து இந்தியாவிற்குஅதிகஅளவில் பயணியர் வருகைபுரிந்தனர். இருப்பினும் 1992 ஜனவரிமுதல் செப்டம்பர்முடிய நம் நாட்டிற்கு 13,30,274 பயணிகளேவருகைபுரிந்தனர். மீதமுள்ள மூன்றுமாதங்களில் அயல்நாட்டுப் பயணியர் தொகைஅதிகரிக்கவில்லை. பம்பாய் கலவரம்விமானஊழியர்களின் வேலைநிறுத்தம்,வன்முறைஆகியவற்றால் பலவெளிநாட்டுப் பயணியர் பயணத்தைரத்துசெய்துவிட்டனர். இதனால் நம் நாட்டின் செலுத்துதல் சமநிலைபாதிக்கப்பட்டது.

நமதுபாரதத்தின் பொருளாதாரநிலைஉயர,அந்நியச்செலாவணியைஅதிகஅளவில் சம்பாதிக்க,நாம் சுற்றுலாவைமேம்படுத்துவதுஅவசியமாகிறது. மக்கள் பொறுப்புடன்,நாட்டுப்

பற்றுடன் பணியாற்றி, இந்தியஒற்றுமையைக் காத்து,அமைதிச் சூழ்நிலையை உருவாக்கிச் சுற்றுலாவைமேம்படுத்தஉதவவேண்டும். சுற்றுலாவருவாய் ஆண்டுதோறும் உயர்ந்துகொண்டேஉள்ளது. 1997- இல் நம் பாரதம் சுற்றுலாமூலம் அந்நியச்செலாவணியாக 3151.70 மில்லியன் டாலர்களையும், 1998 - இல் 3132. 53 மில்லியன் டாலர்களையும் பெற்றது. கணினி (கம்ப்யூட்டர்) பொருள் ஏற்றுமதிவருவாயைவிடச் சுற்றுலாத் தொழிலின் வருவாய் அதிகம். 1998- இல் கணினிமென்பொருள் மூலம் பெற்றவருவாய் ரூ. 4500 கோடி. ஆனால் வெளிநாட்டுச் சுற்றுலா மூலம் நாம் பெற்றதுரூ.12,000கோடி. ஜனவரி 2000 முதல் ஜூன் 2000 வரையில் நம்பாரதம் அந்நியச் செலாவணி மூலமாகஆறாயிரத்துஅறுநூற்றுநாற்பத்தெட்டு (6648) கோடிரூபாய் வருவாயாகப் பெற்றது. இதுகடந்தஆண்டைவிட 9.8மூஅதிகம். மேலும் கடந்தபிப்ரவரியில் மட்டும் 1417 கோடிரூபாய் வருவாய் கிடைத்துள்ளது. ஒரேமாதத்தில் அதிகவருமானம் கிடைப்பது இதுவேமுதன் முறை. 2000-ல் இந்தியாவிற்குவந்தஅயல்நாட்டுப் பயணியர்

இங்கிலாந்து

3.54.217

ஸ்ரீலங்கா

1,28,444

ஆஸ்திரேலியா

90,456

ஜெர்மனி

84,789

மலேஷியா

57,927

அமெரிக்கா

3.09.309

கனடா

98.259

பிரான்ஸ்

89.565

ஜப்பான்

79.167

இத்தாலி

52.529

**உலகப் புகழ்பெற்றசுற்றுலாத் தலங்கள்**

**உலகஅதிசயங்கள்**

**பண்டையஉலகஅதிசயங்கள்**

பழங்காலஉலகின் ஏழு உலகஅதிசயங்கள் (ளுநஎநஙெ றுழனெநசள ழக வாந யுஙெநைவெ றுழசடன)மனிதரால் கட்டப்பட்டஅமைப்புக்களாகும். இவ்வதிசயங்களைப் பட்டியலிட்டவர்,சிடோனின் அண்டிப்பேற்றர் என்றுபொதுவாகக் கருதப்படுகிறது. கி.மு 140 அளவில் எழுதப்பட்டகவிதையொன்றில், இவ்வமைப்புக்களைப் பெருஞ்சாதனைகளாக இவர் குறித்துள்ளார். இதற்குமுன்னரும், ஹீரோடோட்டஸ் என்பவரும்,சைரீனின் கல்லிமாச்சுஸ் என்பவரும் இதுபோன்றபட்டியல்களைஉருவாக்கியிருந்ததாகக் கருதப்படுகின்றதுஎனினும், இவை பற்றியகுறிப்புக்கள் மட்டுமேகிடைத்துள்ளன. பண்டையஉலகஅதிசயங்கள் (வலமிருந்து இடமாக,மேலிருந்துகீழ்) கிசாவின் பெரியபிரமிட்,பாபிலோனின் தொங்குதோட்டம்,ஒலிம்பியாவின் சேயுஸ் சிலை,எபிசஸ்லில் உள்ளஆர்ட்டிமிஸ் கோயில்,மௌசோல்லொஸின் மௌசோலியம்,ரோடொஸின் கொலோசஸ் மற்றும் அலெக்ஸாந்திரியாவின் கலங்கரைவிளக்கம் ஆகியவை 16-ம் நூற்றாண்டைசேர்ந்தடச்சுஓவியர் மார்த்தன் வான் யீம்சூகெர்க் என்பவரால் சித்தரிக்கப்பட்டது.

கிசாவின் பெரியபிரமிட்,பழங்காலஎகிப்தியபாரோ (அரசன்) கூபுவின் சமாதியாகும் இது. கி.மு 2680ல் கட்டிமுடிக்கப்பட்டதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

பபிலோனின் தொங்குதோட்டம் மற்றும் பபிலோனின் சுவர் என்னுமிரண்டும்,நெபுச்சட்னெஸ்ஸார் என்பவனால்,கி.மு 600ல்,ஈராக்கில் கட்டப்பட்டது.

ஒலிம்பியாவின் ஸேயுஸ் சிலை, இன்றையகிரீஸில்,கி.முஐந்தாம் நூற்றாண்டில்,கிரேக்கச் சிற்பி,பீடியாஸ் என்பவரால் செதுக்கப்பட்டது.

ஆர்ட்டெமிஸ் கோயில்,கி.மு 350ல், இன்றையதுருக்கியிலுள்ளஎபேசஸ் என்னுமிடத்தில் கட்டப்பட்டது.

மௌசோல்லொஸின் மௌசோலியம்,காரியாவின் பாரசீகசத்ரப்பினால், ஹலிகர்னாசஸ் எனஅழைக்கப்பட்ட, இன்றையதுருக்கியிலுள்ளபோட்றம் என்னுமிடத்தில் கட்டப்பட்டது.

ரோடொஸின் கொலோசஸ்,ஹெலியோசின் பிரம்மாண்டமானசிலை. தற்காலகிரீசில்,கி.மு 280ல் உருவாக்கப்பட்டது.

அலெக்சாந்திரியாவின் கலங்கரைவிளக்கம், இன்றையஎகிப்திலுள்ளது. கி.மு 3ஆம் நூற்றாண்டில்,சொஸ்த்திராட்டஸ் என்பவரால் கட்டப்பட்டது. இவற்றில் தலா இரண்டுஅதிசயங்கள், இன்றையஎகிப்து,கிரீஸ்,துருக்கிஆகியநாட்டின் எல்லைகளுக்குள்ளும்,ஒன்றுஈராக்கிலும் அமைந்திருந்தன. இன்றுவரைதப்பியிருப்பதுகிசாவின் பெரியபிரமிட் மட்டுமே. இவற்றுள் மிகக் குறைந்தகாலம் நிலைத்திருந்தது,ரோட்ஸின் கொலோசஸ் ஆகும். நின்றநிலையில் 56 ஆண்டுகள் மட்டுமேயிருந்த இது,பூமியதிர்ச்சியொன்றினால் விழுந்துவிட்டது.

**உலகின் புதிய ஏழு அதிசயங்கள்**

இந்தியாவின் தாஜ்மஹால்,சீனாவின் பெருஞ்சுவர்,பிரேசிலின் கிறிஸ்ட் திரிடீமர் சிலை,பெருவின் மச்சுபிச்சு, ஜோர்டானின் பெட்ரா, இத்தாலியின் கொலோசியம் மற்றும் மெக்சிகோவின் சிச்சென் இட்சாஆகியவைஉள்ளன. உலகின் சமீபத்திய ஏழு நவீனஅதிசயங்கள். இவ்விடங்களுக்குஆண்டுதோறும் பலமில்லியன் மக்கள் சுற்றுலாசெல்கின்றனர்.

**இந்தியாவின் உலகப் பாரம்பரியகளங்கள் (UNESCO)**

இந்தியாவில் நூற்றுக்குமேற்பட்டகவர்ச்சிமிக்கநினைவுச் சின்னங்கள் உள்ளன. யுனெஸ்கோ(ருநேுளுஊழு)நிறுவனம் உலகின் பலவேறுபகுதிகளில் உள்ளபழைமைமிக்கபண்பாட்டுமற்றும் இயற்கைஅழகுமிக்கமையங்களாக 288 இடங்களைஅடையாளங் காட்டியுள்ளது. இப்பண்பாட்டுப் பெட்டகங்கள் அனைத்தும்,பிற்காலச் சமுதாயத்திற்கும் பயன்படும்வகையில் பாதுகாக்கப்படவேண்டும் என இது வேண்டுகோள் விடுத்தது. முதல் கட்டமாகஅறிவிக்கப்பட்ட 288-இல் பாரதத்தைச் சேர்ந்தவை 19 மையங்கள் அவை : அஜந்தாக் குகைகள்,எல்லோராக் குகைகள். ஆக்ராகோட்டை,தாஜ்மஹால்,கொனாரக் சூரியனார் கோயில்,மாமல்லபுரம் நினைவுச் சின்னங்கள்,கோவாவின் மாதாக் கோவில்கள் மற்றும் மடங்கள்,கஜுராகோநினைவுச் சின்னங்கள். நினைவுச் சின்னங்கள்,பதேபூர் சிக்ரி,பட்டடக்கல் நினைவுச் சின்னங்கள்,எலி∴பெண்டாகுகைகள்,தஞ்சைப் பெருவுடையார் கோயில்,கியலாடோதேசியப் பூங்கா,மனோஸ் விலங்குகள் சரணாலயம்,காசிரங்காதேசியப் பூங்கா,சுந்தர் பன்ஸ் தேசியப் பூங்காஆகியனவாகும். அடுத்துடெல்லியிலுள்ளதீமாயூன் கல்லறை,குதுப்மினார்,டார்ஜீலிங் இமாலயவில்பாதை,புத்தகயாவின் மஹாபோதிகோயில் வளாகம்,கங்கைகொண்டசோழபுரம்

சிவன்கோயில்,தாராசுரம் ஐராவதேசுவரர் கோயில்,சாஞ்சியின் புத்தசமயத் தொடர்பானநினைவுச் சின்னங்கள்,நந்ததேவிதேசியபூங்கா,உத்ராஞ்சலிலுள்ளபூங்காக்கள் பள்ளத்தாக்கு(Valley of Flowers)தேசியபூங்காஅம்பேட்காபாறைதங்குமிடம்(Rock Shelters of Bhimbetka) பவகத் தொல்லியல் பூங்கா,சத்திரபதிசிவாஜி சதுக்கம் (பழையவிக்டோரியாடர்மினஸ்),நீலகிரிமலைரயில் ஆகியனவும் சிறப்புமிகுமையங்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

யுனெஸ்கோவின் கிளைநிறுவனமானஐகோமாஸ் (International Council for Monuments and Sites)ஆண்டுதோறும் ஏப்ரல் 18 ஆம் நாள் உலக மரபுரிமைநாளாகக் (World Heritage Day)கொண்டாடும்படிஅறிவித்துள்ளது. கோயில்கள் சமயப் பழக்கவழக்கங்கள் மனிதப் பண்பாடுகளைஉறுதிப்படுத்துவதில் முக்கியப் பங்குவைப்பதாகச் சமயப் பெரியோர்கள் கூறுவர். அத்தகையசமயப் பழக்கவழக்கங்கள் நாளடைவில் சமயநம்பிக்கைகளாகஉருப்பெற்று,ஆன்மீகக் கோட்பாடுகளாகி,மக்கள் உள்ளங்களில் நிலைபெறுகின்றன. அவ்வாறுநிலைபெற்றுவிட்டஆன்மீகக் கோட்பாடுகளின் பால் அசையாநம்பிக்கைமக்களிடத்திலேசுற்றுலாப் பயணங்களுக்குத் தூண்டுகோலாகிறது. மக்களைஆன்மீகச் சுற்றுலாவிற்குஅணியமாக்குகிறது.

**இந்துக்களின் புனிதத்தலங்கள்**

கோயில் இல்லாஊரில் குடியிருக்க வேண்டாம் என்பதுமுதுமொழி. நம் பாரதபுண்ணியபூமியில் இந்துக்களுக்குஎண்ணிந்ததிருக்கோயில்கள் உண்டு. அவற்றைப்பட்டியல் போடுவது இயலாது. காளகஸ்தி,கொல்லூர்,சிருங்கேரி,பத்ரிநாத்,உடுப்பி,திருப்பதி,பழனி,மேல்மருவத்தூர்,ஸ்ரீவில்லிபுத்தூர்,திருவரங்கம்,திருவானைக்காவல்,சமயபுரம்,திருச்செந்தூர்,திருத்தனி,குமாரவயலூர்,திருநள்ளாறு,ஸ்ரீவைகுண்டம்,திருக்கடயூர்,சிதம்பரம்,வைத்தீஸ்வரன்கோயில்,தஞ்சாவூர் மாரியம்மன்கோயில்,மாங்காடு,மைலாப்பூர், இராமேசுவரம்,காசி, ஜெய்ப்பூர்,பிர்லாமந்திர்,டெல்லிபிர்லாமந்திர்,குருவாயூர்,தாந்தோன்றிமலை,திருப்பரங்குன்றம்,கும்பகோணம்,மதுரை,காஞ்சி,அழகர்கோயில், சூரியனார்கோயில்,சபரிமலை,கொல்லிமலை,ஐயர்மலை,ஆவுடையார்கோயில்,மன்னார்குடிமுதலானஆயிரக்கணக்கானதிருத்தலங்களில் உள்ளதிருக்கோயில்களில் இந்துக்கள் வழிபாடுசெய்கின்றனர். முருகப் பெருமானின் ஆறுபடைவீடுகளும்,சிவபெருமானின் பஞ்சபூதத்தலங்களும் வைணவத் திருப்பதிகளும் இந்துக்களின் மிகச் சிறப்பானபதிகளாகும். காசி,கன்னியகுமாரி, இராமேஸ்வரம்,கங்கைபுனிதநீரில் நீராடுவதும் கும்பகோணம் மகாமகக்குளத்தில் நீராடுவதும்,திரிவேணிசங்கமம்,பவானி கூடுதுறைகளில் புனிதநீராடுதலும் புண்ணியசெயல்களாகக் கருதப்படுகின்றன. திருக்கைலாயயாத்திரைசெல்வதுஆன்மிகவாதிகளின் கடமைகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது.கும்பமேளா இந்தியரைஒன்றுபடுத்துகிறது. மகிழ்விக்கிறது.

**இசுலாமியரின் புனிதத்தலங்கள்**

இஸ்லாமியரின் புனிதத்தலங்கள் அரேபியாவில் மெக்கா,மெதீனாஎன்றாலும் இந்தியாவில்தான்,கலையழகுமிக்கபலமசூதிகளும்,மகான்களின் தர்க்காக்களும் நினைவாலயங்களும் நிறையஉள்ளன. ஸ்ரீநகர் ஹஸ்ரத்பால் மத்தியில்தான் நபிகள் நாயகத்தின் தலைமுடி இருக்கும் மிகச்சிறந்தபுனித்தலமாகும். அஜ்மீரிலுள்ளகுவாஜா முய்னுத்தீன் சிஸ்தியின் தாகா இந்தியாவிலுள்ளதர்க்காக்கள் அனைத்திலும் மிகப் புனிதமானதாம். ஆண்டுதோறும் இத்தர்க்காவில் நடைபெறும் உர்ஸ் கந்தூரி விழாவிற்கு இந்தியாமுழுவதிலிமிருந்துபக்தர்கள் வந்துதிரள்வார்கள். தமிழ்நாட்டில் இத்தகையசிறப்புவாய்ந்ததர்க்காநாகூர்மீரான் சாகிப் ஆண்டவர் தர்க்காவேஆகும். மேலும் ஏர்வாடிசுல்தான் சையத இப்ராஹீம் காகீத்தர்கா,திருச்சிநாதாவாலிதாகா, ஷேகநசருதீன் தர்கா,போன்றவையும் புகழ் பெற்றவை. பீஜப்பூர் கோல்கும்பாஸ் கல்லறை,தாஜ்மஹால் போன்றவைசிறப்புடையதாகும். கோல்கும்பாஸ் பீஜப்பூர் சுல்தான் முகமதுஅடில்ஷாவின் மிகப்பெரியநினைவுச் சின்னமாகும். இதனுடையமாடம் உலகிலேயேமிகப்பெரிய இரண்டாவதுமாடமாகும். இவ்வட்டமாடத்தின்விட்டம் 124 அடிகள் கொண்டதாகும். இங்குள்ளமுணுமுணுப்பைஎதிரொலிக்கும் கூடத்தில் (ஷூளைிநசவைெ புயடடநசல) ஒருதடவைஎழுப்பியமெல்லியஒலி 12 முறைஎதிரொலிக்கிறதாம்.

### கிறித்துவபுனிதத் தலங்கள்

கிறித்துவபுண்ணியத்தலம் பாலஸ்தீனம் என்றாலும் போப்பாண்டவர் தொடர்பால் உரோம் புனிதநகரமாயிற்று. அதுபோல இந்தியாவிலும் கிறித்துவப் புனிதர்கள் தொடர்பால் இங்கேநிறையதேவாலயங்கள் உள்ளன. புனிதபிரான்சீஸ் சேவியரின் பாடம் செய்யப்பட்டபூதஉடல் பாம்ஜீசஸ் பேராலயத்தில் பாதுகாக்கப்படுவதால் கோவாவைகீழ்த்திசைரோம்! என்றுஉலகம் அழைக்கின்றது. உலகம் முழுவதும் இருந்துகிறித்துவச் சமயப் பயணிகள் கோவாவந்துசெல்கின்றனர். சென்னையில் சாந்தோம் பேராலயமும்,பறங்கிமலைத் தேவாலயமும் முக்கியகிறித்துவசமயவழிபாட்டுத் தலங்களாகஉள்ளன. வேளாங்கண்ணிமேரிஅன்னையின்பேராலயம் இந்திய லூர்து (டுழரசனநள) தேவாலயம் எனப் புகழப்படுகிறது. பன்னாட்டுகிறித்துவசமயப் பயணிகளும் பக்தர்களும் உள்நாட்டுப் பயணிகளும் பக்தர்களும் விழாக் காலங்களில் மட்டுமின்றி,ஆண்டுமுழுவதும் இங்குவந்துவழிபட்டுச் செல்கின்றனர். வீரமாமுனிவர் வாழ்ந்ததிருக்காவலூர் (ஏலாக்குறிச்சி,பெரம்பலூர் மாவட்டம்) வடுகர் பேட்டை (திருச்சிமாவட்டம்) கிறித்துவர்கள் வழிபடும் தலங்களாகும். அண்மையில் பூண்டி புதுமை மாதாக் கோயிலும் புகழ் பெற்றுள்ளது.

### சீக்கியரின் புனிதத் தலங்கள்

குருநானக் தோற்றுவித்தசீக்கியசமயத்துக் குருத்துவாராக்களும் இங்குநிறையஉண்டு. இவை சீக்கியர்களின் வழிபாட்டுத்தலங்களாகும். அமிர்தசரஸ் பொற்கோவில் சீக்கியர்களின் மிகப் புகழ்பெற்றகுருத்வாராஆகும். 1579ஆம் ஆண்டுகுருராம்தாஸ் அமிர்தசரஸ் குருத்வாராவைத்

தோற்றுவித்தார். இதனுடையசிறப்பானஅமைப்புக்குகுரூராம்தாஸ்,குருஅர்ஜுன்,ரஞ்சித் சிங் ஆகிய மூவருமேகாரணம் ஆவர். கோயிலைஅடையபளிங்குப் பாலப்பாதைஉள்ளது. சுவர்களிலும் தளங்களிலும் கறுப்பு,வெள்ளைத் தங்கவண்ணப் பளிங்குகள் பதிக்கப்பட்டுள்ளன. ஒருபட்டுஅலங்காரக் குடையின் கீழ் சீக்கியபுனிதநூலானஆதிகிரந்தம் வைக்கப்பட்டுள்ளது. கோயில் கோபுரத்தில் குருநானக்கின் வாழ்க்கைநிகழ்ச்சிகள் ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன.

**யூதர்களின் புனிதத் தலங்கள்**

கிறித்துசகாப்தத்திற்குமுன்பேயூதர்கள் (துநறள) கேரளத்தின் பலபகுதிகளில் குடியேறியிருந்தனர். கேரளத்தில் கொச்சங்காடிசைனகோ (முழஉாயபெயனை ளுலயெபழபரந) கொச்சிசைனகோஆகியவை இவர்களதுபுனிதத் தலங்களாகும். இத்திருக்கோயில்களுக்குஅயல்நாட்டிலிருந்தும் யூதர்கள் வந்துவழிபடுகின்றனர். இவர்கள் புத்தாண்டு,பாஸ்கா(யளளழஎநச) டபர்ன்கிள்ஸ் (வுழடிநசயெஉடநள) முதலானதிருநாளைக் கொண்டாடுகின்றனர். 1968ஆம் ஆண்டுகொச்சிசைனகோவின் நானூறாவதுஆண்டுவிழாவினை,முன்னாள் பிரதமர்திருமதி.இந்திராகாந்திஅவர்கள் தொடங்கிவைத்தபோதுஅன்னியநாட்டினின்றும் யூதப் பெருமக்கள் பலர் கலந்துகொண்டனர்.

**வரலாற்றுசின்னங்கள்**

இந்தியாவில் வெளிநாட்டுச் சுற்றுலாப்பயணிகளைக் கவரக் கூடியபலவரலாற்றுச் சின்னங்கள் உள்ளன. தென்னாட்டில் உள்ளபல்லவர் காலத்தில் கட்டப்பட்டபலகோயில்களும்,மாமல்லபுரச் சிற்பக் கோயில்களும்,சோழர் காலத்தில் கட்டப்பட்டபலஉயர்ந்தகோயில்களும் தஞ்சாவூர்,கங்கைகொண்டசோழபுரம்,தாராசுரம்,திரிபுவனம் கோயில்கள் என்றென்றும் சுற்றுலாப் பயணிகளின் கவனத்தைஈர்ப்பனஅதுபோன்றேகொனாரக்கில் உள்ளசூரியன் கோயில்,ஆக்ராவில் உள்ளஆக்ராக் கோட்டை அஜந்தா,எல்லோராச் சிற்பக் கோயில்கள், ஹம்பிநினைவுச் சின்னங்கள்,பதேப்பூர் சிக்ரியில் உள்ளநினைவுச் சின்னங்கள் போன்றவைகுறிப்பிடத்தக்கவைமேலும் கோவாவில் உள்ளதேவாலயங்கள்,பட்டக்கல் எலிபெண்டாகுகைக்கோயில் போன்றனவும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் விரும்பிப் பார்க்கும் இடங்கள் ஆகும்.

இந்தியா இயற்கைஎழில்கொஞ்சும் பல இடங்களைப் பெற்றுள்ளநாடு, இங்கேபார்த்துமகிழும் கோடைவாழ் இடங்களும்,எழில் நிறைந்தகட்டடங்களும் நிரம்பஉண்டு. இந்தியாவிற்குவரும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளும்,உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளும் இவற்றைவிரும்பிக் காண்பதால்,சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கைஒவ்வொருநாளும் அதிகரித்துக் கொண்டேஉள்ளது. இந்தியாவில் ஆண்டுமுழுமையும் அதாவதுஎல்லாக் காலச் சூழலிலுமேசுற்றுலாப் பயணிகள் வந்துபோகின்றனர்.

இங்குபயணிகளுக்கேற்றநல்லவசதிமிக்கதங்குமிடங்களும் உண்டு. நல்லகாலச்சூழலும், (தட்பவெப்பம்) இயற்கைவனப்புமிக்ககாட்சிகளும்,கண்களைக் கவரும் கைவினைப் பொருள்களும் சுற்றுலாப்பயணியரைக் கவர்ந்திழுக்கும் வகையின.

**தாவரவியல் பூங்காக்கள்**

பெங்களூர் என்றதுமேநமதுநினைவில் தோன்றுவதுலால் பாக் தாவரவியல் பூங்காதான். பெங்களூர் நகரின் அணியெனத் திகழும் இப்பூங்கா கி.பி. 1760-இல் ஐதர்அலியால் தோற்றுவிக்கப்பட்டு,பின்னர் அவரதுஅருமந்தபுதல்வராம் திப்புவால் 210 ஏக்கர் பரப்பளவிற்குவிரிவாக்கப்பட்டது. இந்தியாவின் வேறெந்தப் பகுதியிலும் காணக் கிடைக்காத 1000த்திற்கும் மேற்பட்டபுதுவகைத் தாவரங்கள் மற்றும் பூச்செடிகளை இங்கேஒரு இடத்தில் காண்பதுதான் இப்பூங்காவின் தனிச் சிறப்பாகும். லால்பாக்கில் நிர்மாணிக்கப்பட்டுள்ளகண்ணாடிமாளிகை, ஓர் அற்புதக் கலைப்படைப்பேஎன்பது இங்கேகுறிப்பிடத்தக்கது.லண்டன் மாநகரில் உள்ளகிரிஸ்டல் அரண்மனையுடன் (ஊசலளவயட ீயடயஉந) இதனைஒப்பிட்டுமகிழலாம். ஆண்டுதோறும் ஜனவரிமற்றும் ஆகஸ்ட் மாதங்களில் இப்பூங்காவில் மலர்க் கண்காட்சிநடைபெறும். 1969- ஆம் ஆண்டுலால்பாக்கில் உள்ளகண்ணாடிமாளிகையில் காங்கிரசுக் கட்சியின் மாநாடுநடைபெற்றதும். அதுபோதுஅக்கட்சியில் பிளவுஏற்பட்டு இரண்டாகஉடைந்ததும். இந்தியஅரசியல் வரலாற்றில் மறக்கவியலாநிகழ்ச்சியாகும்.

**கப்பன் பூங்கா**

லால் பாக்கிற்குச் சற்றும் குறையாதஅழகும் இணையானஎழிலும் கொஞ்சும் மற்றொருபூங்கா,கப்பன் பூங்காவாகும். 300 ஏக்கர் பரப்பளவும்,லால்பாக்கைவிடப் பெரியதுமான, இப்பூங்காகண்டோன்மென்ட் பகுதிக்குஅருகில் உள்ளது. இதனைநிறுவியபெருமைஆங்கிலேயர்களைச் சாரும்.

கி.பி. 1864 ஆம் ஆண்டுஅமைக்கப்பட்ட இப்பூங்கா இன்றும் குழந்தைகளின் உல்லாசபூமியாகவும் சொர்க்கபூமியாகவும் திகழ்கின்றது. ஜவகர் பால்பவன்,குழந்தைகளுக்கானதிரையரங்கம்,விளையாட்டரங்கம் ஆகியனகுழந்தைகளின் உள்ளத்தைக் கவர்ந்துநிற்கின்றன. 18 வழக்குமன்றங்கள்,உயர்நீதிமன்றம்,பொது நூலகம் (ீரடிடனை டுடைசயசல) ஆகியனபார்வையாளர் அனைவரையும் மகிழ்விக்கின்றன. தாமரைக்குளம்,மான் வனம், ரோஜாப் பூங்கா,நீர் ஊற்றுக்கள்,அரசினர் அருங்காட்சியகம்,விஸ்வேஸ்வரய்யாஅறிவியல் தொழில் நுணுக்கஅருங்காட்சியகம்,வெங்கடப்பாகலைக்கூடம்,மீன் காட்சியகம்,ஆகியவைகப்பன் பூங்காவின் ஓரப்பகுதிகளில்தான் அமைந்துள்ளன. இவை பெங்களூர் நகரின் அழகுக்குஅழகூட்டுகின்றன. கண்

சிமிட்டும் மாலை நேர வண்ணவிளக்குகள் இப்பூங்காவை‘மண்ணுலகில் காணும் விண்ணுலகோ’எனஅதிசயிக்கச் செய்கின்றன.

**ஊட்டிதாவர இயல் பூங்கா**:

1847-ல் மார்குவிஸ் டுவீடேல் (ஆயசஙரநைள வுறநநனனயடந) அவர்களால் நிறுவப்பட்டதாவரவியல் பூங்காவில் உலகின் பலபாகங்களில் வளரும் 2000 வகையானமரங்களையும்,செடிகளையும் கண்டுகளிக்கலாம். உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் மலர்க்காட்சியும்,காய்கறிக் காட்சியும்,நாய் இனக் காட்சியும் (னுழப ளூழற) கோடைவிழாவும் இப்பூங்காவில் மேமாதம் நடைபெறுகின்றன. ஐம்பதுஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளதாவரவியல் பூங்கா,தாவரவியல் மாணவர்களின் ஆய்விற்குத் தோன்றாததுணையாகவிளங்குகிறது. இதனருகேதான் தமிழகஆளுநரின் ஊட்டி ராஜ்பவன் செம்மாந்துநிற்கிறது. கோடையில் கார்னிவெல் விழாவும் இங்குநடைபெறுகிறது. கொண்டாடப்படுகிறது. இதுஆண்டுதோறும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

**விலங்குகள் சரணாலயம்**

நம் நாட்டில் 85 தேசியபூங்காக்களும் 447 வனவிலங்குபுகலிடங்களும், 17 புலிகள் காப்பகங்களும், 49 மான் பூங்காக்களும். 107 உயிரியல் பூங்காக்களும். 6 பாம்புப் பண்ணைகளும், 6 மீன் பண்ணைகளும் உள்ளன. இவற்றில் ஏறத்தாழ 350 வகைவிலங்குகளும். 12000 வகைபறவைகளும், 30000 வகைபூச்சிகளும் மீன்களும். ஊர்வனவகைகளும் வாழ்ந்துவருகின்றன. இவற்றையும் சிலஅரியவகைவிலங்கினங்களையும் அழிவினின்றும் காப்பது நம் கடமை. இங்குநாம் ஒருசிலமுக்கியமானவிலங்குபறவைபுகலிடங்களைப் பற்றிக் காண்போம்.

**அ. வனவிலங்குபுகலிடங்கள்**

**காசிரங்காபுகலிடம்**:- இந்தியவிலங்குப் புகலிடங்களுள் புகழ்மிக்கது அஸ்ஸாம் மாநிலத்திலுள்ளகாசிரங்காவனவிலங்குபுகலிடம் இது பெரியஒற்றைக் கொம்புடையகாண்டாமிருகங்களுக்குப் பெயர் பெற்றது. காட்டெருமைகளும்,புலிகளும்,மிலாஎன்னும் கடமான்களும் (ளுயஅடியச) வேறுசிலவிலங்குகளும் இங்குவாழ்ந்துவருகின்றன.ஆசியாவிலுள்ளஎல்லாக் காண்டாமிருகங்களையும் விட இந்தியாவில் வசிக்கும் ஒற்றைக் கொம்புகாண்டாமிருகமேகம்பீரமானது. அடுத்துஉலகத்துக் காட்டுக் கால் நடைகளிலேயேஎடைமிகுந்ததும்.வலுவானதும்.கொடியதும் இந்தியக்காட்டெருமைகளேயாகும்.இதன் கம்பீரத் தோற்றம் பார்ப்போரைப் பரவசப் படுத்துகின்றது. இப்புகலிடத்தின் பரப்பளவு 42996 ச.கி.மீ. ஆகும்

**ஜல்தபாராபுகலிடம்**:-

மேற்குவங்காளத்திலுள்ள ஜல்தபாராபுகலிடத்திலும் புகழ்மிக்கஒற்றைக் கொம்புகாண்டாமிருகங்கள் பெருமளவில் வாழ்கின்றன. காட்டெருமை,சிறுத்தை,காட்டாடுகள். மான் வகைகள் முதலானவையும் இங்குவாழ்கின்றன.

**இரான்தம்பார் தேசியபூங்கா:-**

இப்புகலிடம் இராசஸ்தான் மாநிலம் சவாய் மதோப்பூருக்குஅருகில் 392 ச.கி.மீ. பரப்பளவில் அமைந்துள்ளது. புலி,சிறுத்தை,சாம்பார்,மானினங்கள் போன்றவிலங்குகள் இங்குவாழ்கின்றன.

**மனாஸ் புகலிடம்:-**

அஸ்ஸாமிலுள்ளமனாஸ் புகலிடத்தில் புலி,யானை,சிறுத்தை,காட்டெருமை,ஒற்றைக் கொம்புகாண்டாமிருகம். மான் வகைகள்,காட்டுமாடு வகைகள் முதலானவிலங்குகள் வாழ்ந்துவருகின்றன. கம்பீரமிக்ககாட்டெருமைகள் இங்குஅதிகம் ஜம்முகாஷ்மீரில் உள்ளதக்சிகம் புகலிடம் காச்மீரமான்களுக்குப் புகழ் பெற்றது. அங்குப் பலசமயங்களில் கபிலக்கரடிகளும் (Brown Bear) கஸ்தூரி மான்களும் (Musk Deer) வந்துதங்குகின்றன.. தென்னிந்தியாவிலும் விலங்குகள் புகலிடம் பலஉள்ளன. ஆந்திரப் பிரதேசமாநிலத்தின் ஸ்ரீ சைலத்தில் 3000 ஏக்கர் பரப்பளவில் தூலாப்பள்ளிமலைக்காடுகளில் புலிகளின் புகலிடம் ஒன்றுஅமைந்துள்ளது. இங்குபுலிகள் பாதுகாப்பாகவாழ்கின்றன. இம்மாநிலத்தின் வாரங்கல் மாவட்டத்தில் பர்க்கல் என்னுமிடத்தில் உள்ளபுகலிடத்தில் புலி,சிறுத்தைநீல்கைமான்இபுள்ளிமான்இஆகியவை இருக்கின்றன. கர்நாடகமாநிலத்தில் பண்டிபூர்,நகர் ஹோல்,டண்டேல் முதலான இடங்களில் வன விலங்குபுகலிடங்கள் உள்ளன. யானைகள்,காட்டெருமைகள்,மான் இனங்கள்,குரங்குகள் - முதலானவிலங்குகள் இவ்விடங்களில் வாழ்ந்துவருகின்றன.

**முதுமலைபுகலிடம்:-**

தமிழ்நாட்டின் மிகப்பெரியவனவிலங்குபுகலிடம் முதுமலையில் உள்ளது. 1940-ல் உருவாக்கப்பட்ட இப்புகலிடம் உதகமண்டலம் மைசூர் சாலையில் 67 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. 32100 எக்டேர் பரப்பளவில் அமைந்துள்ள இப்புகலிடத்தில் காட்டெருமை. யானை,புள்ளிமான்,காட்டுமாடுமுதலானவிலங்குகள் கூட்டங்கூட்டமாகச் செல்வதைக் காணலாம். புலிகள்,சிறுத்தைகள்,பெரியஅணில்கள். குரைக்கும் மான்கள் முதலானவிலங்குகளும் இங்குகண்டுகளிக்கத்தக்கன. இங்குமலைப் பாம்புகள்,கட்டுவிரியன் பாம்புகள் அதிகம் முதுமலையின் மத்தியப் பகுதியில் தெப்பக்காடுஎன்னுமிடத்தில் யானைப் பண்ணைஒன்றுள்ளது.இங்குயானைகள் வளர்க்கப்படுகின்றன. பழக்கப்படுத்தப்படுகின்றன. இங்குள்ளயானைக் குட்டிகள் பயணியரின் கண்ணையும் கருத்தையும் கவர்கின்றன. இங்குயானைசவாரியும் செய்யலாம்.

**ஆணைமலை( இந்திராகாந்திவிலங்குகள் புகலிடம்)**

மேற்குத் தொடர்ச்சிமலையைச் சேர்ந்த ஆணை மலையில் டாப்ஸ்லிப் (வழி ளுடனி) என்னுமிடத்தில் கடல் மட்டத்திலிருந்து 2000 அடி உயரத்தில் இப்புகலிடம் உள்ளது.கோவைமாவட்டத்திலுள்ளபொள்ளாச்சியிலிருந்துபேருந்திலோதொடர் வண்டியிலோசென்றால் இப்புகலிடத்தைஅடையலாம். இதன் பரப்பளவு 985 ச.கி.மீஆகும் இதன் பருவகாலம் பிப்ரவரி - ஜூன் 1973-ஆம் ஆண்டுதொடங்கப்பட்ட இப்புகலிடத்தில் யானை,காட்டெருமை புலி காட்டுப்பன்றிசிறுத்தை, கரடி,சிங்கவால் குரங்கு,முள்ளம்பன்றி,நான்குகொம்புகள் கொண்டமறிமான்,புள்ளிமான் பறக்கும் அணில்இ புனுகு பூனை - முதலானவிலங்குகளைக் காணலாம். இங்குகொக்கு,நத்தைக் குத்தி,நாரை,வௌவால்,உல்லான் - போன்றபறவைகளையும் கண்டுகளிக்கலாம்.

**முண்டந்துரை:-**

புலிக்கள்காப்பகம் திருநெல்வேலியிலிருந்து 50 கி.மீ. தொலைவில் இப்புகலிடம் உள்ளது. குற்றாலத்திலிருந்து இது 75 கி.மீ. தெற்கேஅமைந்துள்ளதால் குற்றாலம் வரும் பயணிகள் பலர் இங்குவருகைபுரிகின்றனர். கேரளஎல்லையோரப் பகுதியில் அமைந்துள்ள இப்புகலிடப் பகுதியில் 10 வகையானகாடுகள் உள்ளன. எனவே 17 வகைவிலங்குகள், 2105 தாவர இனங்கள் இங்கேகாணப்படுகின்றன. இப்புகலிடத்தில் புலிகள் மட்டுமின்றிசிங்கவால் குரங்கு. 18 வகையானகுரங்குகள். காட்டுப் பன்றி. முள்ளம் பன்றி,பலவிதமானமான்கள்,சிறுத்தைப் புலி,கீரிப்பிள்ளையானைமுதலானவிலங்குகள் வசிக்கின்றன இங்குநல்லபாம்பு ராஜ நாகம்,கண்ணாடிவிரியன். சாரைப்பாம்பு - முதலானபாம்பினங்களும் 80க்கும் மேற்பட்டபறவை இனங்களும் காணப்படுகின்றன.

**அருங்காட்சியகம்**

இந்தியாவிலுள்ளகலை,வரலாறுமற்றும் தொல்லியல் அருங்காட்சியகங்கள் அவை இருக்கும் மாநிலங்களின் அடிப்படையில் பட்டியலிடப்பட்டுள்ளன. இந்தியஅருங்காட்சியகம் (Indian Museum) எனப் பெயர் கொண்டஅருங்காட்சியகம் இந்தியாவின் மேற்குவங்காளமாநிலத்தின் தலைநகரமானகொல்கத்தாவுக்குஅருகில் உள்ளசெராம்பூர் என்னுமிடத்தில் உள்ளது. டென்மார்க்கைச் சேர்ந்ததாவரவியலாளரானமருத்துவர் நத்தானியேல் வாலிக் (Nathaniel Wallich) என்பவரால் 1814 ஆம் ஆண்டில் இது நிறுவப்பட்டது. ஒருபல்துறைநிறுவனமான இது உலகின் மிகப்பழையஅருங்காட்சியகங்களில் ஒன்றாகும்.

சென்னைஅரசுஅருங்காட்சியகம் (Government Museum) சென்னையின் எழும்பூர்ப் பகுதியில் அமைந்துள்ளது. 1851 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்தஅருங்காட்சியகத்

தொகுதிஇன்று, 16.25 ஏக்கர் (66,000 சதுரமீட்டர்) பரப்பளவுள்ளநிலத்தில் அமைந்த ஆறு கட்டிடங்களுடனும் அவற்றில் அடங்கிய 46 காட்சிக்கூடங்களுடனும் விளங்குகிறது. தொல்லியல்,நாணயவியல்,விலங்கியல், இயற்கைஅறிவியல்,சிற்பம் ஆகியதுறைகளைச் சேர்ந்தஏராளமானபொருட்கள் இங்கேகாட்சிக்குவைக்கப்பட்டுள்ளன.

மதுரையில் காந்திநினைவுஅருங்காட்சியகம் 1959 ஆம் ஆண்டுகட்டமைக்கப்பட்டது. நாத்தூராம் கோட்சேவினால் மகாத்மாகாந்திபடுகொலைசெய்யப்பட்டபொழுதுஅணிந்திருந்தமேல்துண்டு இந்தஅருங்காட்சியகத்தில் இரத்தக்கறையுடன் காட்சிக்குவைக்கப்பட்டுள்ளது. இந்தியாமுழுவதும் சுற்றுப்பயணம் செய்தமகாத்மாகாந்தி இதுவரை 20 முறைதமிழகம் வந்துள்ளார். அதில், 5 முறைமதுரைக்குவந்திருக்கிறார் என்பதுகுறிப்பிடத்தகுந்தவிசயம். தேசியஅருங்காட்சியகம், புது டில்லி இந்தியாவின் மிகப்பெரியஅருங்காட்சியகம் ஆகும். இங்கேவரலாற்றுக்குமுந்தியகாலத்தைச் சேர்ந்தபொருட்களிலிருந்துதற்காலக் கலைப்பொருட்கள் வரைஉள்ளன. இது இந்தியஅரசின் பண்பாட்டுஅமைச்சின் கீழ் இயங்கிவருகிறது. இந்தஅருங்காட்சியகம், ஜன்பாத்தும்,மௌலானாஆசாத் சாலையும் சந்திக்கும் இடத்தில் அமைந்துள்ளது.

சாலார்சங் அருங்காட்சியகம் (Salarjung Museum) ஐதராபாத்திலுள்ளஒருஅருங்காட்சியகமாகும். ஏழாவதுநிசாம்,நவாப் மிர் ஓசுமான் அலிகானின் (Nawab Mir Osman Ali Khan),ஏழாவதுநிசாமின் முதன்மைஅமைச்சராக,மிர் யுசுப் அலிகான் (Mir Yusaf Ali Khan) மூன்றாவதுசாலார் சங் (Salar Jung 111) 1899 முதல் 1949 வரையில் இருந்தார். இவர் ஒருசிறந்தகலை இரசனையாளர். இவரதுசொந்தமுயற்சியினால் சேகரிக்கப்பட்டகலைநயம் மிக்கபொருட்களே இந்தஅருங்காட்சியகத்தில் உள்ளவை. மக்களைக் கவரும் ஒருமுக்கிய இடமாக இது விளங்குகிறது. முதலில் இவ்வருங்காட்சியகம் சாலார்சங் குடும்பமாளிகையானதிவான் டியோரியில்தான் (Dewan Deorhi) அமைக்கப்பட்டிருந்தது. 1968 ல் தான் முசிஆற்றின் தென்கரையிலுள்ளபுதியகட்டிடங்களுக்குமாற்றப்பட்டது. இந்தியநாட்டிலுள்ள மூன்றுதேசியஅருங்காட்சியகங்களுள் இதுவும் ஒன்று. இங்குஉலகெங்கிலுமிருந்துசேகரிக்கப்பட்டஅதிகமானகலைப்பொருட்கள் உள்ளன. ஆறு பகுதிகளைக் கொண்டுள்ளது. இந்திய,மத்தியகிழக்கு,நேப்பாளம்,திபெத்து,மியன்மார், தூரகிழக்குமற்றும் ஐரோப்பியகலைப் பொருட்களும் சிறுவர் பகுதியும் உள்ளன. இது ஒருகலைப் பொருட்களுக்கானஅருங்காட்சியகம் ஆகும். இங்கேயானைத் தந்தம்,சலவைக்கல் போன்றவற்றால் செய்யப்பட்டபலவிலைமதிப்பற்றபொருட்கள் உள்ளன. இது இந்தியாவின் மூன்றாவதுபெரியஅருங்காட்சியகமும்,ஒருமனிதனால் சேகரிக்கப்பட்டஅரும்பொருட்களின் தொகுதிகளில் உலகிலேயேமிகப்பெரியதும் இதுவாகும். கிபிமுதலாம்

நூற்றாண்டிலிருந்துபலநாகரிகங்களையும் சேர்ந்தமதிப்புமிக்கசேகரிப்புக்களைக் கொண்ட இந்தஅருங்காட்சியகம் இந்தியாமுழுவதும் பெயர் பெற்றது.

**அகழாய்விடம்**

**இந்தியத் தொல்லியல் ஆய்வகம் (Archaeological Survey of India)**

இந்தியாவின் தொன்மையைப் பறைசாற்றும் எல்லாவகையானசின்னங்கள்,கட்டிடங்கள், இடங்கள்,பொருள்கள் இவை அனைத்தையும் பாதுகாப்பதும் பராமரிப்பதும் இதன் தலையாயபணிகளாகும். இந்தியாவின் பாரம்பரியநினைவுச்சின்னங்கள் பாதுகாப்புவிதி 1958இன் கீழும், இந்தியதொல்பொருள் மற்றும் கலைக்களஞ்சியபாதுகாப்புவிதி 1972இன் கீழும் இந்தியநாட்டின் அனைத்துதொல்பொருள் ஆராய்ச்சிகளும்இவ்வமைப்பினால்முறைப்படுத்தப்படுகிறது.

அண்மைக்காலமாக,கீழடி,அழகன்குளம்,கொற்கை,சிவகங்கை,ஆதிச்சநல்லூர்,கொடுமணல்,மயிலாடும்பாறை,கங்கைகொண்டசோழபுரம் ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்டஅகழாய்வுகள் தமிழகத்தின் தொன்மையைப் புதியகாலக்கணிப்பு மூலம் பல நூற்றாண்டுக் காலத்திற்குமுன்னோக்கிஎடுத்துச் சென்றுள்ளதுஎன்றால் அதுமிகையாகாது.

கீழடிஅகழாய்வுமற்றஅகழாய்வுகளுக்குமுன்னோடிஅகழாய்வாகத் திகழ்கிறது. இதுவரைகங்கைச் சமவெளியில் கி.மு. ஆறாம் நூற்றாண்டிலிருந்த‘‘நகரமயமாக்கம்’’தமிழ்நாட்டில் இல்லையென்றும்,பிராமிஎழுத்துமௌரியர் தோற்றுவித்ததுஎன்றும் கருதுகோள்கள் இருந்தன. அத்தகையகருதுகோள்களுக்குஅறிவியல்பூர்வமாகவிடையளித்துள்ளதுகீழடிஅகழாய்வு.

**நினைவகங்கள்**

**திருவள்ளுவர் சிலை**

ஒருபழம்பெரும் கவிஞருக்குஅஞ்சலி.சுற்றிலும் அலைகள்.அவரதுகவிதைகளின் வார்த்தைகளைநினைவூட்டுகின்றன.பல்வேறுஉணர்ச்சிகள் நிறைந்தஉயர் மற்றும் தாழ்வானஅலைகள்,மிகவும் ஆழமானவைமற்றும் நேர்த்தியானவை. கன்னியாகுமரியில் உள்ளதிருவள்ளுவர் சிலைஒருஅற்புதமானகலைப் படைப்புமட்டுமல்ல,தலைமுறைதலைமுறையாகதலைசிறந்தபடைப்பாகும். வெகுதொலைவில் இருந்துபார்க்கும் திருவள்ளுவர் சிலையின் கம்பீரம் பார்ப்பதற்குஒருகாட்சி. இது 41 மீட்டர் உயரத்தில் உள்ளது,ஆழமானநீலவானம் மற்றும் ஒளிரும் கடல் பின்னணியில் உள்ளது. கன்னியாகுமரியில் விவேகானந்தர் பாறைநினைவிடத்திற்குப் பக்கத்தில்,ஒருபாறையில் அமைந்துள்ள,திருவள்ளுவரின் மூச்சடைக்கும் சிலை, இந்தியசிற்பிவி.கணபதி ஸ்தபதியால்

உருவாக்கப்பட்டு, ஜனவரி 1, 2000 அன்றுஅப்போதையதமிழ்நாடுமுதல்வரான மு. கருணாநிதியால் தமிழகமக்களுக்குஅர்ப்பணிக்கப்பட்டது.

**விவேகானந்தர் இல்லம் மற்றும் அருங்காட்சியகம்**

ஸ்ரீ ராமகிருஷ்ணமடத்தின் சென்னைபிரிவு 1897 முதல் 1906 வரை இங்குசெயல்பட்டது. இன்று, இந்தவரலாற்றுசிறப்புமிக்க இடத்தை, “அனுபவவிவேகானந்தர் அருங்காட்சியகம்’’என்றபெயரில் அருங்காட்சியகமாக இயக்குகிறது. இந்தஅருங்காட்சியகம் இந்துமதத் துறவியைப் பின்பற்றுபவர்களுக்குஒருபுனிதயாத்திரைமையம் போன்றது.

இந்தியகலாசாரத்தைஅறியவும்,சுவாமிவிவேகானந்தரின் வாழ்க்கையைஅறியவும் விரும்புபவர்களுக்கு இந்தஅருங்காட்சியகம் ஒருஅருமையானவாய்ப்பாகும். பிக்சர் கேலரிகள்,ஆக்மென்டட் ரியாலிட்டி (ஏஆர்) மற்றும் விர்ச்சுவல் ரியாலிட்டி (விஆர்) ஆகியவைதுறவி,அவர் அமைத்தபணிமற்றும் அதன் செயல்பாடுகள் பற்றிஅறியஉதவுகிறது. இந்தியாவின் வளமானகலாச்சாரபாரம்பரியம்,சுவாமிவிவேகானந்தரின் குழந்தைப் பருவத்தில் நடந்தசுவாரசியமானசம்பவங்கள்,அவரதுஅலைந்துதிரிந்தநாட்கள் மற்றும் பிறநிகழ்வுகளைகலைக்கூடங்கள் காட்சிப்படுத்துகின்றன. “விவேகானந்தரின் கண்ணீர்“ என்றதலைப்பில் 4னுஏசுதிரைப்படம்,அவர் இந்தியாவில் இருந்தநாட்களின் காட்சிகளையும்,உலகமதங்களின் பாராளுமன்றத்தில் அவர் ஆற்றியபுகழ்பெற்றஉரையையும் வழங்குகிறது. தவிர,மதங்களின் பாராளுமன்றம் மற்றும் மைண்ட் யுவர் மைண்ட் என்ற இரண்டு 3னுதிரைப்படங்களும் இங்கேகாட்டப்பட்டுள்ளன. துறவியுடன் ஒருமெய்நிகர் தொடர்புக்குவாய்ப்பளிப்பதால்,யுசுஅனுபவம் மிகவும் அற்புதமானது. பார்வையாளர்கள் பட்டியலிலிருந்துகேள்விகளைக் கேட்கலாம்,சுவாமிவிவேகானந்தர் அவர் உயிருடன் இருப்பதைப் போலபதிலளிக்கிறார்.

**அப்துல் கலாம் தேசியநினைவகம்**

அப்துல்கலாம் மணிமண்டபம் என்பதுதமிழ்நாட்டின், இராமநாதபுரம் மாவட்டம், இராமேசுவரம் தீவில் பேக்கரும்புஎன்ற இடத்தில் அமைந்துள்ளஅப்துல்கலாம் நினைவிடத்தில் அமைக்கப்பட்டுள்ளஒருநினைவுமண்டபமாகும். இதுசுமார் மூன்றரைஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ளது.இதன் தோற்றம்,டெல்லியில் உள்ளகுடியரசுத் தலைவர் மாளிகையைபிரதிபலிப்பதுபோன்றுஅமைந்துள்ளது.இதில் உள்ள கூடம் நான்குபிரிவுகளாகஉள்ளன.அதில் அப்துல்கலாம் விஞ்ஞானியாகப் பணியாற்றியகாலம்,கண்டுபிடிப்புகளைஉருவாக்கியகாலம்,அறிவியல் ஆலோசகராகபணியாற்றியகாலம்,குடியரசுத் தலைவராகபணியாற்றியகாலம் எனஉள்ளன. மேலும் கலாம் வீணைவாசிப்பது,குடியரசுத் தலைவராகபதவியேற்றபோதுகுதிரைகள் பூட்டப்பட்டசாரட்

வண்டியில் வருவது,சகோதரர் முத்துமீராமரைக்காயர்,உலகத் தலைவர்கள் மற்றும் குழந்தைகளுடன் கலாம் இருக்கும் ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன.கலாம் தொடர்பானஓவியங்கள்,ஒளிப்படங்கள்,கலாம் கண்டுபிடிப்பின் மாதிரிகள்,கலாம் பயன்படுத்தியபொருட்கள், நூல்கள்,உடைகள் உள்ளிட்டவை இந்தமணிமண்டபத்தில் பார்வைக்குவைக்கப்பட்டுள்ளன. மேலும்,குழந்தைகளுடன் கலாம் விளையாடுவது,குழந்தைகளுடன் கிரகங்களைபார்வையிடுவது,குழந்தைகளைபுத்தகங்கள் படிக்கத் தூண்டுவது,குழந்தைகளைகைத்தூக்கிஉதவுவதுஉள்ளிட்ட 4 சிலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

**இராஜீவ் காந்திநினைவகம் (Rajiv Gandhi Memorial)**

முன்னாள் இந்தியப் பிரதமர் இராஜீவ் காந்திநினைவாக,அவர் படுகொலைசெய்யப்பட்ட இடமான,தமிழ்நாட்டின் காஞ்சிபுரம் மாவட்டம்,திருப்பெரும்புதூர் வட்டம் சிறிபெரும்புதூரில் நிறுவப்பட்டநினைவகம் ஆகும். இந்நினைவகம் கே.டி. இரவீந்திரன் என்பவரால் வடிவமைக்கப்பட்டு, இந்தியஅரசின் பொதுப் பணித்துறையால் கட்டப்பட்டு, 2003-ஆம் ஆண்டில் சோனியாகாந்திமற்றும் அப்துல் கலாம் ஆகியோரால் திறந்துவைக்கப்பட்டது.

**கோட்டைகள்**

இந்தியாவில் உள்ளகோட்டைகளின் பட்டியல். மாநிலங்கள் வாரியாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

**தெலங்கானாரூஆந்திரப்பிரதேசம்**

ஆதோனிக் கோட்டை

கந்திகோட்டா

கொண்டவீடுகோட்டை

புவனகிரிக் கோட்டை

சந்திரகிரிகோட்டை

தேவரக்கொண்டா,

நால்கொண்டாமாவட்டம்

கண்டிக்கொட்டா

கோல்கொண்டா

கூட்டி

குராம்கொண்டா

சகித்தியால்,

கரீம்நகர் மாவட்டம்

கம்மம் கோட்டை

கொண்டபள்ளி

குர்நூல்

மேடக் கோட்டை

மொலங்கூர்,

கரீம்நகர் மாவட்டம்

நிசாமாபாத் கோட்டை

பேனுக்கொண்டா

ராச்சகொண்டா

ராயதுர்க் கோட்டை

வாரங்கல் கோட்டை

யெலகண்டல் கோட்டை.

**பீகார்**

ரோட்டசுகர்க் கோட்டை

முங்கர்க் கோட்டை

பீகார் தேவ் கில்லா

ராஜ் தர்பங்கா

சலகர் கோட்டை.

**டெல்லி**

தொகு

செங்கோட்டை

ஃபெரோஸ் ஷா கோட்லா

புராணாகிலா.

**கோவா**

தொகு

அகொண்டாக் கோட்டை

சப்போராகோட்டை

அகுவாடாகோட்டை

ரெயிசுமாகோசுக் கோட்டை

திராக்கோல் கோட்டை.

**கர்நாடகம்**

குல்பர்காகோட்டை

சித்திரதுர்க்காகோட்டை

சிறீரங்கப்பட்டணக் கோட்டை

பசவகல்யாணக் கோட்டை

**கேரளா**

தொகு

பெக்கால் கோட்டை

சந்திரகிரிக் கோட்டை

பாலக்காட்டுக் கோட்டை

பள்ளிபுரம் கோட்டை

பொவ்வல் கோட்டை

தலைச்சேரிக் கோட்டை

ஒசுதுர்க் கோட்டை

ஈக்கேரிக் கோட்டை.

**மகாராட்டிரம்**

தொகு

ராய்கட் கோட்டை

முருத்-ஜாஞ்சிராகோட்டை

புரந்தர் கோட்டை

சனிவார்வாடா

சிவனேரி

சின்ஹகட்

தோங்கிரிகோட்டை

தோரணக் கோட்டை

பாலாபூர் கோட்டை

இரத்னகிரிகோட்டை

சிந்துதுர்க் கோட்டை

விஜயதுர்க்கம் கோட்டை

ஹரிஹர் கோட்டை

அஜிங்கியதாராகோட்டை.

**தமிழ்நாடு**

தொகு

ஆலம்பரைக் கோட்டை

திண்டுக்கல் கோட்டை

துரூக் கோட்டை,

குன்னூர்

சென் ஜார்ஜ் கோட்டை

செஞ்சிக் கோட்டை

கிருட்ணகிரிக் கோட்டை

நாமக்கல் கோட்டை

இராசகிரிக் கோட்டை

இரஞ்சன்குடிகோட்டை

சங்ககிரிக் கோட்டை

திருமயம் கோட்டை

திருச்சிராப்பள்ளிமலைக் கோட்டை

வட்டக் கோட்டை

வேலூர்க் கோட்டை

துருவன் கோட்டை.

**அணைகள்**

இந்தியாவின் மிகப்பெரியஅணையானதெஹ்ரி அணை,கங்கைநதியின் துணைநதியானபாகீரதிஆற்றின் மீதுஒருபல்நோக்குபாறைமற்றும் மண் நிரப்பும் அணையாகும். இங்கேசிலமுக்கியகட்டமைப்புஅம்சங்கள் மற்றும் விவரக்குறிப்புகள் உள்ளன: உயரம்: 260.5 மீட்டர் (855 அடி) நீளம்: 575 மீட்டர் (1,886 அடி). பக்ராஅணைஇந்தியாவின் மிகஉயரமானஅணையாகும், இது 226 மீட்டர் (741 அடி) உயரம் கொண்டது. இமாச்சலப் பிரதேசத்தில் சட்லஜ்ஆற்றின் மீதுஅமைந்துள்ள இது 1963 இல் கட்டிமுடிக்கப்பட்டுகான்கிரீட் புவியீர்ப்புஅணையாகசெயல்படுகிறது.

**தமிழ்நாட்டில் உள்ளமுக்கியஅணைகள்** (Important Dams in Tamilnadu)

மேட்டூர் அணைதமிழ்நாட்டில் அமைந்துள்ளது. இது இந்தியாவின் மிகப்பெரியஅணைகளில் ஒன்றாகும் மற்றும் தமிழ்நாட்டின் மிகப்பெரியஅணையாகும். இதுகாவிரிஆற்றின் குறுக்கேஅமைந்துள்ளது.இதுசேலம் மாவட்டத்தின் மேட்டூர் வட்டத்தின் நிர்வாகத் தலைமையிடமானமேட்டூர் என்னும் ஊரில் கட்டப்பட்டுள்ளதால் அவ்வாறுஅழைக்கப்படுகிறது. இதுஅணையைக் கட்டிய ஸ்டேன்லிஎன்பவரின் பெயரால் ஸ்டேன்லிநீர்த்தேக்கம் என்றும் அழைக்கப்படுகிறது.

**வைகைஅணை**

வருசநாட்டில் உருவாகும் வைகையின் குறுக்கேஆண்டிபட்டிஎனும் ஊரில் இந்தவைகைஅணைகட்டப்பட்டுள்ளது. வைகைஅணையின் நீர் கொள்ளளவுஉயரம் 111 அடிகளைகொண்டுள்ளது.

**பாபநாசம் அணை:**

திருநெல்வேலியிலிருந்துபாபநாசம் அணையானதுசுமார் 50 கிமீதொலைவில் அமைந்துள்ளது. திருநெல்வேலிமாவட்டத்திற்குமுக்கியமானஅணையாக இருக்கிறது. இந்தஅணையின் உயரம் 143 அடி. பாபநாசத்தின் நீளமானது 744 அடியாகும். அணையின் மொத்தகொள்ளளவு 5,500 பில்லியன் கன அடி உள்ளது. ஆங்கிலேயர் ஆட்சிசெய்தகாலத்தில் 1942 ஆம் ஆண்டுபாபநாசம் அணைகட்டப்பட்டது.

**கல்லணை**

தமிழகத்தின் முதன்மையானஅணைகல்லணை. இந்தகல்லணையைகரிகாலசோழனால் காவிரிநதிகுறுக்கேகட்டப்பட்டது. இது 2000 ஆண்டுகளுக்கும் மேலாகபயன்பாட்டில் உள்ளது. கல்லணையின் நீர் கொள்ளளவு 66 அடியைகொண்டுள்ளது.

**மணிமுத்தாறுஅணை**

மணிமுத்தாற்றின் அருகில் திருநெல்வேலிமாவட்டத்தில் குறுக்கேகட்டப்பட்டஅணை. இந்தநீரானதுமழைக்காலத்தில் தாமிரபரணியில் தேவையில்லாமல் கடலில் கலப்பதைதடுப்பதற்காககாமராஜரால் கொண்டுவரப்பட்டஅணைத்திட்டமாகும். 1958 ஆம் ஆண்டுகட்டிமுடிக்கப்பட்டது. இந்தஅணையின்மொத்தநீளம் 3 கி.மீஆகும். அணையின் மொத்தகொள்ளளவு 5,511 பில்லியன் கன அடியாகும்.

**கட்டுமானம்**

தாஜ்மஹால் உலகஅதிசயங்களில் ஒன்றாகும். இதுஆக்ராவில் அமைந்துள்ளது. முழுவதும் பளிங்குக் கற்களாலான இக்கட்டிடம்,ஆக்ராநகரில் யமுனைஆற்றின் கரையில் கட்டப்பட்டுள்ளது. இதுகாதலின் சின்னமாகஉலகப் புகழ் பெற்றது. ஏழு உலகஅதிசயங்களின் புதியபட்டியலில் தாஜ்மகாலும் சேர்க்கப்பட்டுள்ளது. இக்கட்டிடம் முகலாயமன்னனான ஷாஜகானால், இறந்துபோனஅவனது இளம் மனைவிமும்தாஜ் நினைவாக 22,000 பணியாட்களைக் கொண்டு 1631 முதல் 1654 ஆம் ஆண்டுக்கு இடையில் கட்டிமுடிக்கப்பட்டது. தாஜ்மகாலின் மையம் வெண்ணிறச் சலவைக்கல்லாலானசமாதிக் கட்டிடம் ஆகும். இதுசதுரமானதளம் ஒன்றின்

மீதுஅமைந்த,சமச்சீர் வடிவம் கொண்டதும்,வளைவுவடிவிலானநுழைவாயில்,பெரியகுவிமாடம் ஆகியவற்றைக் கொண்டதுமானஒருகட்டிடம். பெரும்பாலானமுகலாயச் சமாதிகளைப் போலவே இதன் அடிப்படைக் கூறுகளும் பாரசீகக் கட்டிடக்கலைசார்ந்தனவாகும்.

**மைசூர் அரண்மனை**

மைசூர் அரண்மனை (Mysore Palace) அல்லதுஅம்பாவிலாஸ் எனப்படும்.இது இந்தியாவின் கர்நாடகமாநிலம்,மைசூரில் அமைந்துள்ளஅரண்மனைஆகும். இது 1897-ம் ஆண்டுஅக்டோபர் மாதம் கட்டதுவங்கப்பட்டது. 1912-ம் ஆம் ஆண்டில் கட்டிமுடிக்கப்பட்டது.

**தஞ்சைபிரகதீஸ்வரர் கோவில்**

இந்தியாவின் ஆகமிகப்பெரியகோவில்களில் ஒன்றானபெருவுடையார் கோவில் என்றழைக்கப்படும் பிரகதீஸ்வரர் கோவில் தஞ்சாவூரில் அமைந்துள்ளது. பிரமாண்டமான “லிங்கமாக“ எழுந்தருளியிருக்கும் சிவபெருமானுக்குஅர்ப்பணிக்கப்பட்ட இக்கோயில், கி.பி. 1010 ஆம் ஆண்டுசோழமன்னன் முதலாம் இராஜராஜ சோழனால் கட்டப்பட்டது. கோயிலின் கல்வெட்டுகள் மற்றும் ஓவியங்கள் தஞ்சைநகரத்தின் எழுச்சிமற்றும் வீழ்ச்சிவரலாற்றின் கதையைவிவரிக்கின்றன. சிவலிங்கம் கோபுரத்தால் மேலே சூழப்பட்டு,சாந்துபயன்படுத்தாதகற்களால் கட்டப்பட்டுள்ளது. இன்னும் ஒருஅதிசயத்தைமேலேகாணலாம் - மேலேஉள்ளகல் கிட்டத்தட்ட 80 டன் எடைகொண்டது. ஒருகாலத்தில் இப்பகுதியைஆண்டசோழவம்சத்தின் பெருமைமற்றும் வலிமைக்கு இந்தகோயில் ஒருபொருத்தமானசான்றாகவிளங்குகிறது. இந்தபிரமாண்டமானகோவில் வளாகத்தின் கட்டுமானம் முடிவடையகிட்டத்தட்ட 7 ஆண்டுகள் ஆனதுஎன்றுநம்பப்படுகிறது. சிற்பங்களின் நுணுக்கம்,கலைத்தன்மையின் பெருமைமற்றும் கோவில் வளாகத்தின் அளவைக் கருத்தில் கொண்டால் இந்தகாலஅளவைமிகப்பெரியசாதனையாகும்.

**எல்லோராகைலாசநாதர் கோயில்**

எல்லோராகைலாசநாதர் கோயில் (Kailashnath Temple, Ellora) தக்கணத்துக் கோயிற் கட்டுமானங்களில் ஒன்றாகும். இந்தியாவில் மகராஷ்டிரமாநிலத்திலுள்ளஎல்லோராவில் அமைந்துள்ளகுகைக்கோயில்களில் இதுவும் ஒன்று. பெரியதொருமலையைக் குடைந்து இவை அடுத்தடுத்துஉருவாக்கப்பட்டுள்ளன. இராஷ்டிரகூடஅரசன் முதலாம் கிருஷ்ணன் ஆட்சிக் காலத்தில் இவை உருவாக்கப்பட்டன. இக்கோயில் மலைத்தளிவகையைச் சார்ந்தது. திராவிடகலைப்பாணிக்குரியபண்புகளையும், இராஷ்டிரகூடகலைப்பாணியின் அம்சங்களையும் ஒருங்கேகொண்டுவிளங்குகின்றது. எல்லோராஒருஉலகபாரம்பரியக் களம் ஆகும்.

இக்கோயில் ஒற்றைக்கல் கோயில் வகையைச் சேர்ந்தது. சிவனின் இருப்பிடமானகைலாசத்தைப் போன்றுவடிவமைக்கப்பட்டுள்ளது. மலைஉச்சியிலிருந்துதொடங்கிசெங்குத்தாகக் குடையபட்டுள்ளது. இந்தஒற்றைகல் கோயிலைஉருவாக்கபலநூறு ஆண்டுகளாக,கிட்டத்தட்ட 400,000 டன் எடையுள்ளபாறைகள் குடைந்தெடுக்கப்பட்டிருக்கவேண்டுமெனகணக்கிடப்பட்டுள்ளது. கோவில் சுவற்றில் காணப்படும் உளிகளின் தடங்களைக் கொண்டு மூன்றுவிதமானஉளிகள் பயன்படுத்தப்பட்டுள்ளதாகக் தொல்லியல் ஆய்வாவாளர்கள்,கருதுகின்றனர்.

**பாம்பன் பாலம்**

இந்தியாவின் மிகச்சிறந்தபொறியியல் அதிசயங்களில் ஒன்றுராமேஸ்வரத்தில் உள்ளபாம்பன் ரயில் பாலம். ராமேஸ்வரம் தீவைபிரதானநிலப்பகுதியுடன் இணைக்கிறது. இந்தியாவில் கடலின் குறுக்கேகட்டப்பட்டமுதல் பாலம் வரலாற்றுச் சிறப்புமிக்கபாம்பன்பாலம் வளைகுடாவின் மீதுகட்டப்பட்ட இந்தியாவின் மிகநீளமானபாலமாககருதப்படும் பாம்பன் ரயில் பாலம் 1988 வரைராமேஸ்வரத்திற்கும் பிரதானநிலப்பகுதிக்கும் இடையிலானஒரே இணைப்பாக இருந்தது,அதன் பிறகுஅதற்கு இணையாகஒருசாலைப் பாலம் கட்டப்பட்டது. நகரின் செழிப்பானபகுதியானதனுஷ்கோடியைகடுமையாகபாதித்தபெரிய சூறாவளிகளில் இருந்துபாலம் தப்பிப்பிழைத்துள்ளது. பாலம் பின்னர் 46 நாட்களில் புதுப்பிக்கப்பட்டது. 2009ல் சரக்குபோக்குவரத்துக்காகமேலும் பலப்படுத்தப்பட்டது. புதியபாம்பன் பாலம் அதிநவீனதொழில்நுட்பங்களுடன் கட்டப்பட்டுவருகிறது, இது இந்தியாவின் முதல் செங்குத்துலிப்ட் ரயில்வே கடல் பாலமாகமாறும். புதியபாலம் சுமார் 2.2 கிமீநீளம் இருக்கும்,மேலும் கடல் மட்டத்திலிருந்து 22 மீட்டர் உயரத்திற்குஅதைஉயர்த்தமுடியும். புதியகட்டுமானமானதுராமேஸ்வரம் மற்றும் தனுஷ்கோடிக்குஒவ்வொருஆண்டும் பக்தர்கள் வருகையைஎளிதாக்கும் என்றுஎதிர்பார்க்கப்படுகிறது.

**அருவிகள்**

குற்றாலஅருவிகள் என்பன இந்தியாவின் தமிழ்நாடுமாநிலத்தில் அமைந்துள்ளதென்காசிமாவட்டகுற்றாலம் பேரூராட்சியில்,மேற்குத் தொடர்ச்சிமலையில் அமைந்துள்ளவை. இதுதென்னகத்தின் ”மருத்துநீருற்று” (ஆரோக்கியநீருற்று) என்றழைக்கப்படுகிறது. ஜூன் மாதத்தில் தென்மேற்குபருவகாலம் ஆரம்பித்தவுடன் குற்றாலஅருவியில் நீர் ஆர்ப்பரித்துவிழும். இவ்வாறுசுற்றுலாமக்களைக் கவரும் ஜூன், ஜூலை,ஆகஸ்டு மாதங்கள் ‘‘குற்றாலசீசன்’’எனஅழைக்கப்படுகிறது. சிலஆண்டுகளில் இயற்கைமாற்றங்களினால் மேமாதபாதியிலேயேசீசன் ஆரம்பித்துவிடும். குற்றாலத்தில்

பேரூராட்சிமற்றும் தனியாருக்குசொந்தமானவிடுதிகள் உள்ளன. முக்கியஅருவிஎனப்படும் பேரருவியில் பெண்கள் குளிப்பதற்குதனியான இடம் அமைக்கப்பட்டுள்ளது.

ஒகேனக்கல் அருவி, (Hogenakal Falls) இந்தியாவின் தமிழ்நாடுமாநிலத்தில் காவிரிஆற்றில் அமைந்துள்ளது. இதுதருமபுரியில் இருந்து 46 கி.மீதொலைவிலும்,பெங்களூரில் இருந்து 180 (வழி ரே7) கி.மீதொலைவிலும் அமைந்துள்ளது. ஒகேனக்கல்லில் உள்ளதுஒற்றைஅருவிஅல்ல,பலஅருவிகளின் தொகுப்பாகும். “உகுநீர்க்கல்’’என்றதமிழ்ச் சொல்லேமருவி “ஒகேனக்கல்“ என்றானது.ஹொகேனேகல் என்றகன்னடசொல்லுக்குபுகையும் கல்பாறைஎன்றுபொருள் என்பர்.

உப்பலமடுகுநீர்வீழ்ச்சி (தடாஅருவி,கம்பகம் அருவி) இது இந்தியாவின் சித்தூர் மாவட்டத்தில் உள்ள ஸ்ரீசிட்டிக்குவடக்கேஅமைந்துள்ளது. புச்சிநாயுடுகன்ரிகாமற்றும் வரதையாபாளம் மண்டலத்தின் கீழ் வரும் இந்நீர்வீழ்ச்சி,சென்னையிலிருந்து 80 கி.மீ (50 மைல்) தொலைவிலும், ஸ்ரீகாளஹஸ்தியிலிருந்து 35 கி.மீ (22 மைல்) தொலைவிலும் அமைந்துள்ளது ஹுண்ட்ருஅருவி (Hundru Falls), இந்தியாவின் சார்க்கண்டுமாநிலத்தில் ராஞ்சிமாவட்டத்தில் அமைந்துள்ளஅருவியாகும். இது இந்தியாவின் 34 வதுமிகஉயர்ந்தஅருவியாகும். இது இப்பகுதியில் மிகவும் பிரபலமானசுற்றுலாத்தலங்களில் ஒன்றாகும். அதிரப்பள்ளிஅருவி (யுவாசையீடைடல குயடடள) என்பதுகேரளாவின் திருச்சூர் மாவட்டத்தில் அதிரப்பள்ளிஊராட்சியில் அமைந்துள்ளஒருஅருவியாகும். 24 மீட்டர் உயரமுடைய இந்தஅருவிசாலக்குடிஆற்றில் வழச்சல் மற்றும் சோலையாறுகாட்டுப்பகுதிக்குஅருகில் உள்ளது. இந்தஅருவிக்குமேற்பகுதியிலுள்ளசாலக்குடிஆற்றில் அணைகட்டகேரளஅரசுமுன்மொழிந்ததிட்டம் சர்ச்சையைகிளப்பியது. 1990 முதல் 2007 வரை இச்சர்ச்சைநீடித்தது. அதிரப்பள்ளிஅருவிக்குஅருகிலுள்ளதொடருந்துநிலையம் 30 கிமீதொலைவிலுள்ளசாலக்குடியில் உள்ளதுஆகும். வானூர்திநிலையம் 54 கிமீதொலைவிலுள்ளகொச்சிபன்னாட்டுநிலையமாகும். திருச்சூர் 58 கிமீதொலைவில் உள்ளது. சாலக்குடியில் இருந்துவாடகைமகிழுந்துகள் மூலமும் பேருந்துகள் மூலமும் இவ்வருவிக்குஎளிதில் செல்லலாம். கேரளாவின் மிகப்பெரியநீர்வீழ்ச்சியானஅதிரப்பள்ளிநீர்வீழ்ச்சிதென் இந்தியாவின் நயாகராஎன்றபெயரால் அழைக்கப்படுகிறது.

குடமுட்டிஅருவி (Kudamutti Falls) என்பது இந்தியாவின்,கேரளத்தின்,கொல்லம் மாவட்டத்தில் உள்ளஅழகியஅம்பநாடுமலைகளில் அமைந்துள்ளஒருஅருவிஆகும். இதுஒருபருவகாலஅருவிஆகும் . இந்தஅருவிஒருபெரியதனியார் தோட்டத்திற்குள் அமைந்துள்ளது,பார்வையாளர்கள் தனியார் தோட்டத்தின் வழியாகவேஅருவியைஅடையவேண்டும். குடமுட்டிஅருவிஅம்பானாடுமலைப்பகுதியில் உள்ளமுக்கியசுற்றுலாதலங்களில் ஒன்றாகும்.

தலையாறுஅருவி (Thalaiyar Fallsஅல்லது Rat Tail Falls) என்பதுதமிழ்நாட்டின்,தேனிமாவட்டம்,தேவதானப்பட்டிஅருகேஉள்ளஒருஅருவியாகும். இது 975 அடி (297 மீ)உயரமானதமிழ்நாட்டின் உயரமானஅருவியாகவும், இந்தியாவின் ஆறாவதுஉயர்ந்தஅருவியாகவும்,உலகின் 267வது உயர்ந்தஅருவியாகவும் உள்ளது. கொடைக்கானல் மலைப்பகுதியில் இந்தநீர்வீழ்ச்சிஅமைந்துள்ளது.கர்நாடகாவின் ஷிமோகாமாவட்டத்தில் உள்ளகுஞ்சிக்கல் நீர்வீழ்ச்சி 1493 அடி உயரத்துடன் இந்தியாவின் மிகஉயரமானநீர்வீழ்ச்சியாகும்.

**விடுதிகள்:**

ஒருசுற்றுலாமையம் சிறப்புமிக்கதாகஅமைந்திடின்,அதனைக் காணவெளியூரிலிருந்தும்,உலகின் பலபாகங்களில் இருந்தும் சுற்றுலாபயணியர் பலர் வருகைதருவர். அவ்வாறுவருகைபுரியும் பயணிகள் வசதியாகத் தங்கிஓய்வெடுக்கத் தேவையானசொகுசானதங்குமிடங்கள் அல்லதுவிடுதிகள் பலஅவ்விடத்தில் இருத்தல் வேண்டும். சுற்றுலாப் பயணியரின் எண்ணிக்கைபெருகப் பெருகவிடுதிகளின் எண்ணிக்கைகளையும் வசதிகளையும் விரிவுபடுத்தவேண்டியஅவசியம் ஏற்படுகின்றன. இத்தகையவிடுதிகளின் அமைப்பும் வசதிகளும் நாட்டுக்குநாடுமாறுபடுகின்றன.

**தங்குமிடங்களின் முக்கியத்துவம்**

தங்குமிடத்தைநாம் விடுதிகள் என்றும் கூடுதல்தங்குமிடங்கள் (supplementary accomodation) என்றும் இருவகைப்படுத்தலாம். விடுதிகள் பலவகைப்படும்.இதனைப் போன்று கூடுதல் தங்குமிடங்களிலும் சேவைஅமைப்புஆகியவற்றின் அடிப்படையில் பலபிரிவுகள் காணப்படுகின்றன. எனவேசுற்றுலா முன்னேற்றத்திற்குத் தங்குமிடங்கள் மிகவும் முக்கியம் பெற்றுள்ளமைவிளங்கும். சுற்றுலாவளர்ச்சியின் முதுகெலும்பு இருப்பிடவசதியேயாகும். சுற்றுலாமையம் எத்துணைப் பெருமையும் சிறப்பும் கவர்ச்சியும் பெற்றிருப்பினும் அங்குஉண்ண,தங்கதக்கவசதிகள் இல்லையேல்,அச்சுற்றுலாமையத்தைக் காணப் பயணிகள் வரத்தயங்குவர். எனவேசுற்றுலாமையம் சிறப்புறவேண்டுமெனில் அவ்விடத்தில் தங்கும் வசதிகள் இருத்தலோடுஅவைவசதிகள் நிறைந்ததாக இருத்தலும் அவசியமாகிறது.

**தங்கும் விடுதிகளின் வரலாறு**

ஓரிடத்திலிருந்துமற்றொரு இடத்திற்குப் பயணம் செய்பவர்,தனது இருப்பிடத்திற்குஉடனடியாகத் திரும்ப இயலாது. எனவே இரவைக் கழிக்கஅவர்கள் ஓரிடத்தில்

தங்கவேண்டியிருந்தது. பண்டைக் காலத்தில் பயணியரும் வழிப்போக்கரும் தங்கசத்திரங்கள் அமைக்கப்பட்டிருந்தன. அங்கேஅவர்கள் திருடர் பயமின்றி,தமது,உடைமைகளைப் பாதுகாப்பாகவைத்துக் கொண்டனர்.உணவும் தங்குமிடமும் இலவசமாகப் பெற்றனர். உரோமானியநாட்டில் இதனைப்போன்றசத்திரங்கள் பல இருந்தன. உலகின் பிறபகுதிகளிலும் பண்டைக் காலத்தில் வணிகர்கள் தங்கபலசத்திரங்கள் கட்டப்பட்டிருந்தன. கி.பி.500 அளவில் உரோமப் பேரரசுஅழிந்தபோது இச்சத்திரங்கள் பராமரிப்பின்றிவிடப்பட்டன. இதன் விளைவாகப் பயணியரின் எண்ணிக்கையும் குறைந்துவிட்டன.

பின்புமாதாக் கோயில்கள் வழிப்போக்கா்களுக்குத் தங்கும் வசதிகளைஅளித்தன. பெரும்பாலும் சமயத்தைப் பரப்பும் நோக்குடன் பயணம் செய்தகிறித்துவப் பாதிரிமார்கள் இங்கேதங்கினா். பின்னர் பாதிரிமார்களின் வசதிக்காகமடாலயங்கள் அமைக்கப்பட்டன. அங்குஉணவும் உறையுளும் அளிக்கப்பட்டன. கி.பி. 15 ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்து,பிரான்சுபோன்றஐரோப்பியநாடுகளில் மிகுதியானவிடுதிகள் அமைக்கப்பட்டன. சிலவிடுதிகளில் முப்பதுக்கும் மேற்பட்டஅறைகள் இருந்தன. விடுதியின் உரிமையாளர் பயணியரிடமிருந்துஒருகுறிப்பிட்டதொகையைஉணவு,தங்குமிடம் அளித்தமைக்காகவசூலிப்பர். சத்திரங்கள்,விடுதிகளைப் போன்றுஐரோப்பியநாடுகளிலும் அமெரிக்காவிலும் இண் (Inn) டேவர்ன் (Tavern) என்னும் பெயர்களில் பலஅருந்தகங்கள் செயல்பட்டுவந்தன. அருந்தகங்களில் மது,உணவு,தண்ணீர் ஆகியனவழங்கப்பட்டன. இதனைப்போன்றஅருந்தகம் ஒன்று கி. பி. 1634 ஆம் ஆண்டுசாமுவேல் கோல்ஸ் என்பவரால் அமெரிக்காவில் திறக்கப்பட்டது. கி. பி. 1780 ஆம் ஆண்டுவாக்கில் இதனைப் போன்றஅருந்தகங்களுக்குநல்லசெல்வாக்கும் மதிப்பும் ஏற்பட்டன. 1825ஆம் ஆண்டு இங்கிலாந்தில் ரயில் போக்குவரத்துத் தொடங்கப்பட்டதால் பலசத்திரங்கள் செல்வாக்கிழந்தன.

இந்தியாவிலும் பழங்காலமுதற்கொண்டே,வணிகர்களும்,வழிப்போக்கர்களும்,சமயப் பயணிகளும் தங்குவதற்கெனதா்மசத்திரங்கள்,விகாரைகள் (விஹாரங்கள்) சராய்கள்,தர்மசாலைகள் ஆகியதங்குமிடங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இவ்விடங்களில் அவர்களுக்குஉணவும் நீரும் இருப்பிடவசதியும் அளிக்கப்பட்டன. கல்வியாளர்களும்,வீரர்களும்இவற்றில் தங்கினர். வணிகர் பலர் விகாரைகளுக்குநன்கொடைகள் வழங்கியதாகஅறிகிறோம்,புத்தசமயம் செல்வாக்குப் பெற்றிருந்தகாலத்தில் புத்தசங்கத்தினரும்பிறரும் குகைகளில் சமயப் பணியாற்றிவந்தனர். பண்டையதர்மசத்திரங்கள் பெரும்பாலும் வழித்தடங்களிலும் அமைந்திருந்தன. எடுத்துக்காட்டாகதிண்டுக்கல்,ஒட்டன்சத்திரம் வழியாகப் பழனிசெல்லும் பாதையில் பலசத்திரங்கள் இருந்ததனைதமிழ்ஊர்ப் பெயர்கள் மூலம் அறியமுடிகிறது. தமிழ் நாட்டில் மதுரை,தஞ்சைநாயக்கர்களும் சேதுபதிமன்னர்களும் சத்திரங்கள்பலவற்றைப் பராமரித்துவந்ததனைக் கல்வெட்டுகள் சுட்டிக்காட்டுகின்றன.

**இலண்டனில் முதல் விடுதி**

தொழிற்புரட்சிக்குப்பின் ஐரோப்பியநாடுகளில் கிராமவாசிகள் பலர் நகரங்களில் குடியேறிதொழிற்சாலைகளில் பணிபுரியஆரம்பித்தனர். இந்நிலையில் ரயில் போக்குவரத்தும் அதிகரித்து. எனவேநகரங்களில் மக்கள் கூட்டம் பெருகியது. இவர்களதுஉணவுத் தேவையைப் பூர்த்திசெய்யவிடுதிகள் பலஉருவாயின. தற்காலத்தில் காணப்பெறும் உணவகம் போன்றவிடுதிமுதன் முதலாகலண்டனில் தோற்றுவிக்கப்பட்டது. கி.பி. 1774-இல் டேவிட் லோஎன்பவர் இதனைத் தோற்றுவித்தார். இவருக்குப்பின் 50 ஆண்டுகளில் இங்கிலாந்துமுழுவதும் பலவிடுதிகள் உருவாயின. இவற்றுள் பகஸ்டன்,பிரைட்டன் போன்ற இடங்களில் கட்டப்பட்டவிடுதிகள் குறிப்பிடத்தக்கன. இருப்பினும் சுற்றுலாப் பயணிகளுக்குப் பயன்தரும் வகையிலான விடுதிகி.பி. 1820-இல் முதன் முதலாக ஸ்விட்சர்லாந்தில்தான்தோற்றுவிக்கப்பட்டது.

**விடுதிகளின் வகைகள்**

சுற்றுலாப்பயணியர் ஒருபகுதியிலிருந்துமற்றொருபகுதிக்கும்,ஒருநாட்டிலிருந்துமற்றொருநாட்டிற்கும் பெரியஅளவில் செல்லமுற்பட்டபோதுபலவகையானவிடுதிகள் தோன்றின. இவற்றைவணிகவிடுதிகள்,தங்கல் விடுதிகள்,பொழுதுபோக்குவிடுதிகள்,நட்சத்திரவிடுதிகள் (ஆடம்பரமானவை) எனவகைப்படுத்தலாம்.

**1. வணிகவிடுதிகள்**

வணிகரதுநலன் கருதிஅமைக்கப்பெறுபவை “வணிகவிடுதிகள்”எனப்படுகின்றன. வணிகர்களேபெரும்பாலும் இவற்றில் வாடிக்கையாகத் தங்குவர். இவைகுழுப்பயணியரைக் காட்டிலும் தனிப் பயணியரையேகவரும் வண்ணம் செயல்படுகின்றன. இவை பெரும்பாலும் தனிப்பட்டமுதலாளிகளால்,வாணிகநகரங்களிலேயேநடத்தப்பெறும். இவற்றில்உணவகமும்,கார் நிறுத்துவதற்கானவசதிகளுமஅமைந்திருக்கும். விடுதிப் பணியாளர்,வாடிக்கையாளர்களைநன்குஉபசரித்துஅனைத்துவசதிகளும் செய்துதருவர்,நம்பிக்கை,நாணயம்,பணிவிடை இவையே இத்தகையவிடுதிகளின் சிறப்பம்சமாகும்.

சிலவணிகவிடுதிகளில் பலர் சேர்ந்துதங்குவதற்கான தூங்கும் முறைகளும் (னுழசஅவைழசநைள) உள்ளன. மேலும் இரவுநேரத்தைமட்டும் கழிப்பதற்கென்றுபொதுப்படுக்கைவசதிகளும் (Common Bed) சிலஉணவகங்களில் உள்ளன. இப்படுக்கைகள் பெரியஅறையில் வரிசையாகபோடப்பட்டிருக்கும். இவைகுறைந்தகட்டணத்தில் கிடைக்கும். எனவேசிறுவியாபாரிகள் இதனையேவிரும்புகின்றனர்.

**2.தங்கல் விடுதிகள்**

தங்கல் விடுதிகள் ஆங்கிலத்தில் சுநளனைநவெயைட ர்ழவநடளஎன்றுஅழைக்கப் பெறும். இதில் அடுக்கடுக்காகஅறைகள் இருக்கும். எனவே இதனைஅடுக்கறை (யுயசவஅநவெ) விடுதிகள் என்றும் அழைப்பர். தங்குமிடம் மட்டுமே இங்கேஅளிக்கப்படும் உணவுவசதி இங்கேகிடைப்பதில்லை. இங்கேஅறைகள் மாதவாடகைக்கும்,அரையாண்டு,ஆண்டுவாடகைக்கும் விடப்படுகின்றன. இங்கேவாடகைகுறைவு. ஆயினும் வசதிகளும்,சேவைகளும் மிகுதி,எனவேபலர் மாதக்கணக்கில் தங்குவர். இதனைப் போன்றஉணவகங்கள் மேற்குஐரோப்பா,அமெரிக்காஆகியநாடுகளில் அண்மைக்காலத்தில் செல்வாக்குப் பெற்றுள்ளன. இவை தங்கும் விடுதி (டுழனபந) என்றும் அழைக்கப்பெறுகின்றன. சென்னை,பெங்களுர்,மற்றும் மாவட்டத் தலைநகரங்களில் இதனைப் போன்றதங்கும் விடுதிகள் பலஉள்ளன. திருச்சியில் "ஜெயந்திலாட்ஜ்''பெங்களுரில் "கங்கம் லாட்ஜ்''கரூரில் "அரசிலாட்ஜ்,நந்தினிஹோட்டல்''ஆகியனசிலதங்கும் விடுதிகள் ஆகும்.

**3. பொழுதுபோக்குவிடுதிகள்**

இவைபொதுவாகசுற்றுலாப் பயணிகள் பொழுதுபோக்கும் இடங்களில் அமைத்திருப்பவை. விடுமுறையைக் கழிக்கவிரும்புவோர்,உடல்நலம் பேணுவதற்குஓரிடத்தில் இருந்துமற்றோர் இடத்திற்குச் செல்வோர்,சுற்றுலாப் பயணிகள் ஆகியோர் பொழுதுபோக்குவிடுதிகளை (சுநளழசவ ர்ழவநடள) நாடுகின்றனர். இவைகுறிப்பாக இயற்கையெழில் கொஞ்சும் ஏரி, கடல்,மலை,காடு,பூங்காமுதலான இடங்களில் அமைந்திருக்கும். இவைசெல்வந்தர்களால் மட்டும்தான் விரும்பப்படுகின்றன. கேளிக்கை,விளையாட்டு,பொழுதுபோக்கு,ஓய்வு இவற்றைஅடிப்படையாகக் கொண்டுஇவை நடத்தப்படுகின்றன. இங்கே இல்லகவிளையாட்டுகளே (Indoor Games) நடைபெறும்.எடுத்துக்காட்டாகடென்னிஸ்,நீச்சல்,படகோட்டுதல்,பனிச்சறுக்கு,கோல்ப்,முதலானவிளையாட்டுகள் நடைபெறும்.இங்கேமீன் பிடித்தலும் ஒருமுக்கியபொழுதுபோக்குஆகும். விடுதிவளாகத்தில் அரங்குகள் இருக்கும். அதில்ஆடல்,பாடல் நடைபெறலாம்.கேளிக்கைவசதிகள் இங்குமிகுதி. இவற்றைபராமரிக்கச் செலவுகள் அதிகம் ஆவதால்,வாடிக்கையாளரிடம் அதிகப் பணம் வசூலிக்கப்படுகிறது.

பொழுதுபோக்குவிடுதிகளைக் கோடைக்காலவிடுதிகள்,பனிக்காலவிடுதிகள்,உடல்நலம் பேணும் விடுதிகள்,மலைவாழ் விடுதிகள் கடற்கரைவாழ் விடுதிகள் போன்றுபலவகைகளாகப் பிரிக்கலாம். இவைஅந்தப்பருவகாலங்களில் அதிகப்பயணிகளைஈர்க்கின்றன. பருவம் முடிந்தபின்புஅங்குமனிதநடமாட்டத்தைக் காண்பதரிது. ஆனால் அண்மைக் காலத்தில் இதற்குமாற்றுஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. சாதாரணகாலங்களில் குறைந்தவாடகைக்குவிடுவதும்,கேளிக்கைகளுக்குமிகக்குறைந்த (Minimum) கட்டணத்தில்

அனுமதிப்பதும்,கண்காட்சிகள் நடத்துவதும் இவ்விடுதிகளின் வருமானத்தைஓரளவுநிறைவுபடுத்துகின்றது.

**4. நட்சத்திரவிடுதிகள்**

நவீனஉலகின் கவர்ச்சிக் கன்னிநட்சத்திரவிடுதிகள் ஆகும். இவைமேல் நாட்டுப் பாணியில் உருவான,ஆடம்பரஆரவாரமிக்கவிடுதிகள்,பன்னாட்டுவிடுதிகள். இந்தநட்சத்திரவிடுதிகள் (Star Hotels) நாட்டின்தலைநகரங்களிலும்,பெருநகரங்களிலும்,புகழ்மிக்கசுற்றுலாமையங்களிலும் கட்டப்பட்டுள்ளன. இவற்றுள் பல தரங்கள் உள்ளன.ஒன்றுமுதல் ஐந்துநட்சத்திரம் வரைவசதிக்குஏற்றவகையில் இவற்றின் தரம் மாறுபடுகின்றன. இவற்றுள் ஐந்துநட்சத்திரவிடுதிகளேஅனைத்துவசதிகளும் கேளிக்கைகளும் மிக்கவை.

ஐந்துநட்சத்திரவிடுதிக்குமேல் சொகுசுநட்சத்திரவிடுதிகளும் (5 Star Deluxe),அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டபாரம்பரியப் பெருமைமிக்கவிடுதிகளும் (Heritage Hotels) உள்ளன.

**5. பாரம்பரியவிடுதிகள்**

இவைபுகழ்மிகுஅரண்மனைகளிலும், கோட்டைகளிலும்,வசந்தமண்டபங்களிலும;(Palaces, Havelis, Castles and Residences Built Prior to 1950) அமைக்கப்பட்டுள்ளன. 1998-இன் இறுதியில் இந்தியாவில் 64,573அறைகளைக் கொண்ட 1164 விடுதிகள் உள்ளதாகச் சுற்றுலாத்துறைஅதிகாரபூர்வப் பட்டியல் கூறுகிறது. இப்பட்டியலில் 142 ஒருநட்சத்திரவிடுதிகளும் 318 இருநட்சத்திரவிடுதிகளும், 283 மூன்றுநட்சத்திரவிடுதிகளும், 74 நான்குநட்சத்திரவிடுதிகளும் 56 ஐந்துநட்சத்திரவிடுதிகளும் 43 ஐந்துநட்சத்திரசொகுசுவிடுதிகளும் 46 பாரம்பரியவிடுதிகளும், இப்பாரம்பரியவிடுதிகளில் 1292 அறைகளும் இடம் பெற்றுள்ளன. தொன்மைமிகுஅரண்மனைப் பொருட்களைப் பாரம்பரியவிடுதிகளில் வைக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

நட்சத்திரவிடுதிகள் எனும் தகுதி (அந்தஸ்து) எவ்வாறுவழங்கப்படுகிறது?

இந்தியஅரசின் சுற்றுலாத்துறையினரால் நியமிக்கப்பட்டநட்சத்திரஆய்வுக்குழு (Star Classification Committee) ஒவ்வொருமாநிலத்திலும் செயல்பட்டுவருகிறது. நட்சத்திரத் தகுதிபெறவிரும்பும் ஓட்டல்காரர்கள் இந்தஆய்வுக் குழுவிடம் விண்ணப்பிப்பர். பின்னர் இக்குழுஅவர்களைப் பாவையிட்டு,சேவை,வசதிஅடிப்படையில் ஒருநட்சத்திரவிடுதி, இரண்டு,ஐந்துநட்சத்திரவிடுதிஎனும் தகுதியைவழங்கும். அதிகபட்சவசதிகளைக் கொண்டவற்றிற்கு "ஃபைவ் ஸ்டார்ஸ் டீலக்ஸ்"எனும் தகுதிவழங்கப்படுகிறது. "நட்சத்திரஆய்வுக்குழு" மூன்றாண்டுகளுக்குஒருதடவைநட்சத்திரவிடுதிகளைப் பார்வையிட்டுஅவற்றின் செயல்பாடுகள்குறித்துஆராயும்.

**6.இந்தியாவின் முன்னணிசொகுசுவிடுதிகள்**

வெல்கம் குருப்,ஓபராய் மற்றும் தாஜ் குரூப் சொகுசுவிடுதிகள் இந்தியாவில் முன்னணியில் உள்ளன. வெல்கம் குருப்பின் கீழ்,நாடுமுழுவதிலும் 18 சொகுசுவிடுதிகள் இயங்கிவருகின்றன. தமிழ்நாட்டில் வெல்கம் குருப்பின் கீழ் சென்னையில் சோழா ஷெரட்டனும் பார்க் ஷெரட்டனும் இயங்கிவருகின்றன. இந்தியசுற்றுலாக் கழகத்தார் டெல்லியில் அசோகா,கனிஷ்கர்,அக்பர் முதலானஐந்துநட்சத்திரசொகுசுவிடுதிகளை இயக்கிவருகின்றனர். இதனைப்போன்றுபம்பாயில் தாஜ்,தாஜ் இண்டர்நேஷனல் சொகுசுவிடுதிகளும்,பெங்களூரில் அசோகா,வெஸ்ட் என்ட,சென்னையில் சோழா,கன்னிமரா,சுதர்சன் இண்டர்நேஷனல் சொகுசுவிடுதிகளும் சுற்றுலாப் பயணிகளுக்குச் சேவைபுரிகின்றன. பம்பாயின் தாஜ் சொகுசுவிடுதிகடற்கரையில் அமைந்து,வானுயரநிற்பதுகண்கொள்ளாக் காட்சியாகும்.

இத்தகையசொகுசுவிடுதிகளைநிர்வகிப்பதுஎளிதல்ல. பன்னாட்டுச் சங்கிலித் தொடர் சொகுசுவிடுதிநிறுவனங்களும் கூட்டுவணிகநிறுவனங்களும்,மத்தியஅரசும்,கோடிஸ்வரர்களும் இத்தகையவிடுதிகளைநிர்வகிக்க இயக்குநர் குழு,பொதுமேலாளர்,பலமேலாளர்கள் (ஒவ்வொருதுறைக்கும் ஒருவர்) மொத்தப் படித்தநிர்வாகிகள்,பலதரப்பட்டபணியாளர்கள் முதலானோர்தேவைப்படுகின்றனர். மத்திய,மாநிலஅரசுகள் நடத்திவரும் சிலவிடுதிகள் நட்டத்தில் இயங்குவதால், இவை அண்மையில் தனியார் வசம் நெடுங்காலவாடகைக்குவிடப்பட்டுள்ளன. மேலும் பலசுற்றுலாவிடுதிகள் தனியாருக்குவிடப்பட்டுள்ளன.

**ஐந்துநட்சத்திரசொகுசுவிடுதிவசதிகள்**

1. விடுதியின் முகப்புத் தோற்றம்,கட்டடஅமைப்புகவர்ச்சிகரமாகசொகுசுவிடுதிகளுக்குஉரியனவாக இருத்தல் வேண்டும்.

2.பொதுஅறை,தனிஅறை, குளுகுளு வசதிநிரம்பியதாக இருத்தல் வேண்டும்.

3. இருவர் தங்கும் அறை 60 சதுரமீட்டரும்,ஒருவர் தங்கும் அறை 55 சதுரமீட்டர் பரப்பளவும் இருத்தல் வேண்டும். அறையின் தரையில் தரமானவிரிப்புகள் விரிக்கப்பட்டிருக்கவேண்டும். திரைச் சீலைகளும் உயர்ரகத் துணிகளாக இருத்தல் அவசியம்.

4. விடுதியில் குறைந்தது 25 படுக்கைஅறைகள் இருத்தல் வேண்டும்.

5. ஷவர்பாத்வசதிகொண்டகுளியல் அறை,அவற்றில் 24 மணிநேரமும் வெந்நீரும் தண்ணீரும் வரவேண்டும்.

6. விடுதியின் சுற்றுப்புறச் சூழல் சிறப்பாக இருத்தல் வேண்டும்.

7. கார்கள், ஸ்கூட்டர்கள் நிறுத்தத் தனியிடங்கள் வேண்டும்.

8. கலைஞர்களைக் கொண்டுஅழகுபடுத்தப்பட்டஅறைகள்.

8. குறைந்தது இரண்டுமாடிக் கட்டடம்.

9. நல்லவடிவமைப்புகொண்ட, தூய நீரைக் கொண்டுள்ளஅழகியநீச்சல் குளம்.

10. ஏற்றியம் (டுகைவ) 24 மணிநேரமும் இயங்கவேண்டும்.

11. அறைகளில் ஒலிப்பெருக்கி,வானொலி,தொலைக்காட்சிவசதிகள்.

12. 24 மணிநேரமும் வேலைக்காரப்பையனின் சேவை.

13.பலமொழிகள் அறிந்தபெண் வரவேற்பாளர் (சுநஉநிவழைைளைவ) வரவேற்பறையில் அமர்ந்திருத்தல். வரவேற்பறை 24 மணிநேரமும் திறந்திருக்கவேண்டும்.

14. முகப்பறைவிசாலமானதாகவும் அழகாகவும் இருத்தல். அதில் தட்டுமுட்டுப் பொருள்களுடன் பயணிகளின் பொருள்களைவைப்பதற்கும் ஏற்றதாக இருத்தல் அவசியம்.

15. வங்கி

16. உணவகம்

17. மதுவகம் (டீயச)

18. பெரியஅரங்குகள்

19. பூங்கா

20. புத்தகக் கடை

21. மருந்துக் கடை

22. சரக்கறை

23. அழகுநிலையங்கள்

24. உடற்பயிற்சியகம்

25. முடிதிருத்தகம் (சலூன்)

26. சலவையகம்

27. டெலக்ஸ்வாதி

28. பணம் செலுத்துமிடம்

29.செய்தித் தொடர்புஅலுவலகம்

30. வெளிநாட்டுப்பணம் மாற்றுமிடம்

31. நடன வசதியுடன் கூடியஉணவகம்

32.பயிற்சியும்அனுபவமும் மிக்ககல்விகற்றபணியாளர் போன்றவசதிகள் இருத்தல் வேண்டும்.

33. விடுதியின் நடுவில் குடிநீர் குளிர்சாதனக் கருவி

34. இந்தியஅயல்நாட்டுப்பானங்களும்,உணவுவகைகளும்

**7. மிதக்கும் விடுதிகள்.**

தண்ணீரின் மீதுகட்டப்படும் விடுதிகள் மிதக்கும் விடுதிகள் ஆகும் ஏரி,குளம்,கடல்,ஆறு ஆகியவற்றில் இவை மிதக்கின்றன. மற்றவிடுதிகள் போன்று இங்குஎல்லாவசதிகளும் உண்டு,மிதக்கும் விடுதிகள் (குடழயவவைபெ ர்ழவநடள) அயல்நாடுகளில் மிக்கசெல்வாக்குப் பெற்றுள்ளன. சிலநாடுகள் பழுதுபட்டகப்பல்களைச் சீர்செய்துமிதக்கும் விடுதிகளாகமாற்றியுள்ளன. இதில் தங்குவது இதமானது, புதுமை மெருகுடையது. அடுத்து நூதனமானஅனுபவத்தை இது வழங்குகிறது. எனவேதான் இவற்றைஅயல்நாட்டுப் பயணிகள் பெரிதும் விரும்புகின்றனர். தமிழ்நாட்டில் காஷ்மீர் ஏரிகளில் காணப்படும் மிதக்கும் விடுதிகள்,படகுவீடுகள் என்னும் பெயரில் உள்ளன. இவற்றுள் காஷ்மீர் தால் ஏரிப்படகுவீடுகள் குறிப்பிடத்தக்கவை.

**8. துணைதங்கும் விடுதி (Supplementary Accommodation)**

இதுவும் விடுதியைப் போன்றதோர் அமைப்புதான். இருப்பினும் இதில் ஆதாயம் அதிகம் இருப்பதாலும் வாடகைகுறைவாக இருப்பதாலும் இதனைப் போன்றஅமைப்புகள் அயல்நாடுகளில் மிகவும் செல்வாக்குப் பெற்றுள்ளன. இவ்வமைப்புகள் சுற்றுலாபயணிகளுக்குத் தங்குமிடம்,உணவுஆகியவசதிகளைச் செய்துதருகின்றன. வசதியைப் பொறுத்தமட்டில் விடுதிகளைக் காட்டிலும் இது சற்றுகுறைவானதுதான். இதில் வேறுபலஆதாயங்கள் இருக்கத்தான் செய்கின்றன. இதில் கட்டுப்பாடுகள் குறைவுசுதந்திரம் அதிகம். விளையாட்டுகள்,கேளிக்கைகள்,பொழுதுபோக்குகள் அதிகஅளவில் பயணிகளுக்கு இவை வழங்குகின்றன. இதனால் இதில் தங்குவோரிடையேநல்லபழக்கத்தையும் அறிமுகத்தையும் தோழமைஉணர்வையும்எல்லாவற்றிற்கும் மேலாகஒருவருக்கொருவர்நெருக்கத்தையும் ஏற்படுத்துகிறது.எனவேதான் பிரான்ஸ்,இத்தாலிமுதலானநாடுகளில் இது போன்ற கூடுதல் தங்கும் விடுதிகளில் பயணிகள் தங்கவிரும்புகின்றனர்.விடுதிகளுக்கு இணையானவசதிகள் வழங்கும் இவை உள்நாட்டுப்பயணிகளின் தேவைகளையும்,நிறைவுசெய்கின்றன.

துணைதங்கும் விடுதிகளைநாம் கீழ்க்காணும் ஆறு பிரிவுகளாகப் பிரிக்கிறோம். 1. மோட்டல், 2. இளைஞர்விடுதி, 3. வழியிடைத்தங்கல் மனை 4. ஊதிய இல்லங்கள், 5.படுக்கையும் சிற்றுண்டிவசதியும் கொண்டவிடுதிகள்,6. விடுமுறைச் சுற்றுலாக் கிராமங்கள்.

### அ. மோட்டல்கள் (Motels)

நகரங்களுக்குஅப்பால்சாலையின் ஓரத்தில் நிறுவப்பட்டுள்ளவிடுதிகள் மோட்டல்கள் எனஅழைக்கப்படுகின்றன. தமிழ்நாட்டிலும் நீங்கள் பெருநகரங்களுக்குஅப்பால் அமைக்கப்பட்டுள்ளமோட்டல்களைஉங்கள் நெடுந்தூரப் பயணத்தில் கண்டிருப்பீர்கள். தங்கவும்,உண்ணவும்,சற்றேஓய்வெடுத்துக் கொள்ளவும் (Relax) இவை பயன்படுகின்றன. இவை பொதுவாகமனிதசந்தடிஅதிகம் இல்லாது இருக்கும் இடத்தில் அமைக்கப் பெறும். பெரியமோட்டல்களில் பெட்ரோல் பங்குகள்,கார் பழுதுபார்த்தல்,உதிரிபாகங்கள் விற்பனைபோன்றவசதிகளும் உள்ளன. பொதுவாக இரவுநேரங்களில் மோட்டல்களில் கும்பல் அதிகம் இருக்கும். இங்கேசிற்றுண்டிச் சாலைகளும்,மற்றதேவைகளுக்கேற்றபொருள்களும் உண்டு. சென்னை - திருச்சிசாலைகளில் சிலபுகழ்மிகுமோட்டல்கள் உண்டு. பலர் இரவுஉணவை இங்குதான் உண்பர்.

### ஆ. இளையோர் விடுதி (Youth Hostel)

இத்தகையவிடுதிகள் பெரும்பாலும் படித்த இளைஞர்களுக்காகவேகட்டப்பட்டன. 1900 ஆம் ஆண்டில் முதன் முதலாக ஜெர்மனியில்தான் இளைஞர் விடுதிகள் ஓர் அமைப்பாகவும் இயக்கமாகவும் மலர்ந்தன. பின்னர் இவைபலபகுதிளுக்கும் பரவின. பொதுவாக இளம் ஆண் பெண்களுக்குஅதிலும் சிறப்பாகமாணவ,மாணவியருக்குகுறைந்தசெலவில் தங்குமிடமும் உணவும் வழங்குவதே இவற்றின் நோக்கம் ஆகும். இவ்விடுதிகளின் சிலஅறைகளில் சமையல் அறையும் உள்ளன. இங்கேஅயல்நாட்டுப் பயணிகள் தாம் விரும்பும் உணவைத் தாமேதயாரித்துக் கொள்ளும் வசதிகள் இருந்தன. சுத்தமான இவ்விடுதிகள்,கல்வியறிவைத் தேடிச் செல்லும் மாணவர்களின் புகலிடமாகத் திகழ்ந்தன. அயல்நாட்டிலிருந்துவரும் இளைஞர்களும் இங்கேதங்குவர் இதன்விளைவாககலாச்சாரப் பரிமாற்றமும் ஏற்படும். உண்டி,உறையுள் பொழுதுபோக்குவசதிகளும்,படிக்க நூலகவசதிகளும் ஆசிரியர்களுடன் சுற்றுலாச் செல்லும் மாணவமாணவியர்க்கெனத் தனித்தனியாகதங்கவசதிகள் அளிக்கப்பட்டுள்ளன. இத்தகையவிடுதிகள்இரண்டாம் உலகப் போருக்குபின்னர் பெருமளவில் உருவாயின.

இந்தியாவில் அரசே இதனைப் போன்றவிடுதிகளைக்கட்டியுள்ளன. இங்கேமிகக் குறைந்தகட்டணமேவிடுதிகளைவசூலிக்கப்படுகின்றபன்னாட்டளவில் 3.5 மில்லியன் இளைஞர் விடுதிஅங்கத்தினர் உள்ளனஎன்றும்,அவர்களுள் இந்தியாவில் மட்டும் 23,700 பேர்கள்உளளனர்

என்றுகணக்கிடப்பட்டுள்ளது. இளைஞர்களிடையேசுற்றுலாஎண்ணத்தைஊக்குவிப்பதில் இவை பெரும்பங்குவகிக்கின்றன.

**இ. வழியிடைத்தங்கல் மனை**

இவைநெடுஞ்சாலைகளில் நெடுந்தூரம்பயணம்செய்பவர்களுக்காகநிறுவப்பட்டவைஆகும். அனைத்துவசதிகளும் கொண்ட இம்மனைகள் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் செல்வாக்குபெற்றுள்ளன. திறந்தவெளி கூடாரவிடுதிகள் (ஊயஅி ளுவைநள) எனவும் இவை அழைக்கப் பெறுகின்றன. இவை பெரும்பாலும் பெருநகரங்களுக்குள் நீர்நிலைகளுக்குஅருகாமையில் திறந்தவெளியில் அமைக்கப்பெறும் இவ்விடுதிகளில் சிற்றுண்டி,தண்ணீர்,பெட்ரோல்,குளியல் வசதி,கார்நிறுத்தவசதி,சுகாதாரவிடுதிமுதலானஅனைத்துவசதிகளும் உண்டு.பொழுதுபோக்கு,வசதிகளும் கூட இங்கேஉள்ளன. நம் நாட்டில் என்.சி.சிசாரணர் தொண்டர்களும் இத்தகைய கூடாரங்களைஅமைத்துத் தங்குவர்.

**ஈ. ஊதிய இல்லங்கள்**

இத்தாலி, ஜெர்மனி,சுவிட்சர்லாந்து,சிரியா, ஆஸ்திரியாபோன்றநாடுகளில் இவை செல்வாக்குப் பெற்றுள்ளன. குடியிருக்கும் வீட்டின் ஒருபகுதிவிடுதியாகமாற்றப்பட்டு,வாடகைக்குவிடப்படுகின்றன. இதனைத்தான் ஓய்வு இல்லம் (ீநளெழைெ) என்கிறோம். பெரும்பாலும் குடும்பத்துடன் உள்ளவர்களே இங்கேதங்கஅனுமதிக்கப்படுவர்.

குறைந்தசெலவில் நிறைந்ததிருப்தி இங்கேகிடைக்கிறது. வீட்டின்சொந்தக்காரரே இதனைநிர்வகிப்பார். விருந்தினர் இல்லம்,உண்டுறை இல்லம்,குடும்பவிடுதிமுதலானபெயர்களாலும் இவை அழைக்கப்பெறுகின்றன. இந்தியாவில் இதனை‘‘பணம் செலுத்தும் விருந்தாளிீயலைபெ ஙரநளவ), இல்லம்” எனச் சிறப்பிப்பர்.

**உ. படுக்கையும் சிற்றுண்டிவசதியும் கொண்டவிடுதிகள்**

இவ்விடுதிகள் வணிகர்களுக்கேபெரிதும் பயன்படுகின்றன. இங்கேபயணிகளுக்குச் சிற்றுண்டியும்,சிறிது நேரம் ஓய்வெடுக்கவும் படுக்கைவசதிஅளிக்கப்படுகின்றன. இங்கேசாப்பாடுகிடைக்காது. படுக்கையும்,சிற்றுண்டிவசதியும் கொண்டவிடுதிகள் (டீநன யனெ டீசநயமகயளவ நளவயடிடளைாஅநவெள) பெருநகரங்களிலும் சந்தைப் பேட்டைகளிலும்,கடற்கரைப்பகுதிகளிலும்அமைக்கப்படுகின்றன.

**ஊ. சுற்றுலாவிடுமுறைகிராமங்கள்**

இவைபெரும்பாலும் கடற்கரைகளிலும்,சுற்றுலாமுக்கியத்துவம் பெற்ற இடங்களிலும் அமைந்துள்ளன. இரண்டாம் உலகப்போருக்குப் பின்னரே இவ்வகையிலானகிராமங்கள் ஐரோப்பியநாடுகளில் முக்கியத்துவம் பெற்றன. பொழுதுபோக்குமன்றங்கள்,சமூகசேவைநிறுவனங்கள்,சுற்றுலாநிறுவனங்கள் ஆகியவை இவற்றைநிறுவின. இத்தாலி, ஸ்பெயின் முதலானநாடுகளின் நலிந்தபகுதிகளில் இவை அமைக்கப்பட்டுபொருளாதாரம் சீர் செய்யப்பட்டது.

இங்கேஉறையுளும் உணவும் அளிக்கப்படுவதுடன் பொழுதுபோக்கிற்கானவிளையாட்டுஅரங்குகளும்,கேளிக்கைவசதிகளும் செய்துகொடுக்கப்படும். கோல்ப்,பூப்பந்து,கால்பந்து,கைப்பந்துஆகியனவும் குதிரைச் சவாரி,யோகாசனங்கள் ஆகியனவும் நடைபெறும். அங்காடிகளும்,மருத்துவவசதியும் இங்கேஉண்டு. தாங்களேதமதுகுடும்பத்தினருக்குச் சமைத்து,பரிமாறிக் கொள்ளும் வசதியும் இங்குண்டு. இனிமையாகவாழ்வதற்குச் சிறந்தபயிற்சிக் கூடமாகவும்,ஒருவருக்கொருவர் மனம்விட்டுப் பழகும் பாங்கும் இதன் சிறந்தஅம்சங்களாகும். வானொலி,தொலைக்காட்சி,செய்தித்தாள் முதலானவசதிகளும் இருப்பதால் பொழுதுபோக்குவதுபயனுடையதாகவும் ஆகிறது.

முதலாவதுசுற்றுலாவிடுமுறைகிராமம் (Tourist Holiday village) 1950 ஆம் ஆண்டில் ஸ்பேனிஷ்தீவில் அமைந்துள்ளமஜோர்காஎன்னுமிடத்தில் நிறுவப்பட்டது. இதனைமத்தியதரைக்கடல் கழகம் நிறுவியது. இந்நிறுவனம் ஏறத்தாழ 100 சுற்றுலாகிராமங்களைநிறுவிப் புகழ் பெற்றுள்ளது. இவற்றுள் சிலபணக்காரர்கள் மட்டுமேதங்கக்கூடியசொகுசும் ஆடம்பரமும் மிக்கவை. அன்றாடவாழ்வில் சோர்வுற்றநகரவாசிகளும்,தொழிற்சாலைகளில்யந்திரங்களுடன் போராடிஅயர்ந்ததொழிலாளர்களும் இது போன்றகிராமங்களைநாடிமகிழ்கின்றனர். இக்கிரமங்களில் தங்கவிரும்புவோர்உணவு இருப்பிடம்,பொழுதுபோக்குஆகியஅனைத்திற்கும் முன்கூட்டியேபணத்தைச் செலுத்தவேண்டும் என்பதுவிதியாகும்.

**உணவகங்கள் (HOTELS)**

“உண்டிமுதற்றேஉலகு” என்பது முதுமொழி. உணவுமனிதனின் உயிர்நாடி. சுற்றுலாப் பயணிகளுக்கும் உணவு இன்றியமையாததுதான். வீட்டையும் நாட்டையும் விட்டுவெளியேறிபல இடங்களைச் சுற்றிப்பார்த்துமகிழும் சுற்றுலாப் பயணி,தான்விரும்பும் உணவுவகைகளைஉண்ணவிரும்புவான். இச்சூழ்நிலையில் தான்உணவகங்கள் தோன்றாத் துணையாகவிளங்குகின்றன. உணவுசமைப்பதும் அவற்றைவாடிக்கையாளர்களுக்குப் படைப்பதும் மேலைநாடுகளில் இன்று ஓர் நுண்கலையாகவேபின்பற்றப்படுகிறது. உணவகங்கள் உணவையும்,பருகும் பானங்களையும் வழங்கிவருவாயைப் பெறுகின்றன.

உணவகங்கள் நாட்டுக்குநாடுவேறுபடுகின்றன. பயணிகளுக்குஉறுதுணைபுரியும் உணவகங்கள் சிலதங்குவதற்குப் பயணிகளிடம் பணம் வசூலிக்கும் போதுஉணவிற்காகவும்,கட்டணம் வசூலிக்கின்றன. இவ்வாறுபயணிகளிடம் உண்ணவும்,தங்கவும் கட்டணம் வசூலிப்பதில் ஒருசிலதிட்டங்கள் நடைமுறையில் உள்ளன. இத்திட்டங்களுள் கண்டத் திட்டம் (Continental Plan),ஐரோப்பியத் திட்டம்,பொமுடாதிட்டம்,அமெரிக்கத் திட்டம் முதலானவைமிகவும் குறிப்பிடத்தக்கன. கண்டத் திட்டம் என்பதுஒருபயணியிடம் அறைவாடகையுடன்,அதிகாலையில் வழங்கப்படும்,படுக்கைக் காப்பி,மற்றும் ரொட்டிவெண்ணெய் வகையறாச் சிற்றுண்டிஆகியவற்றினகட்டணமும் சேர்த்துவசூலிக்கப்படுவதுஆகும். எனவே இத்திட்டம் “படுக்கைமற்றும் காலையுணவுத் திட்டம்” (Bed and Breakfast) எனவும் அழைக்கப் பெறுகிறது. கண்டத் திட்டச் சிற்றுண்டியுடன் கூடுதலாகத் தானியவகைஉணவு,முட்டை,கீரைமுதலானவைசேர்க்கப்பட்டால் அதுபெர்முடாதிட்டம் ஆகும். மேற்கூறியதிட்டங்களைக் காட்டிலும் அமெரிக்கத் திட்டம் விரிவானது. இதனை‘‘அனைத்தும் உள்ளடக்கியதிட்டம்’’எனவும் அழைக்கலாம். ஏனெனில் இத்திட்டத்தில் தங்கும் கட்டணத்தோடுகாலையில் பெட்காபி,டிபன் ஆகியவற்றுடன் மதியஉணவு, இரவுஉணவுஆகியவற்றின் கட்டணத்தையும் சேர்த்துவசூல் செய்வதாகும். ஆனால் வேறுசிலஉணவகங்களில் மதியஉணவு, இரவுஉணவு இவற்றில் ஒன்றிற்குமட்டும் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

**ஐரோப்பியசிறப்புத் திட்டம்:**

உணவகமும் தனித்தனியேஉள்ளன. உணவகங்களைநாம் வகைப்படுத்துதல் கடினம். காரணம் அவற்றுள் பல்வேறு வகைகள் உள்ளன. ஐரோப்பியநாடுகளில் மருந்துக் கடைகளும்,சிறப்புபேரங்காடிகளும் கூட உணவப் பொருள்களைவிற்பனைசெய்வதனைக் காணலாம். கப்பல்,விமானம்,ரயில் போக்குவரத்துநிறுவனங்களும் கூட உணவகசேவைவழங்குகின்றன. பள்ளிகள்,கல்லூரிகள்,தொழிற்சாலைகள் மருத்துவமனைகள்,பெரியஅலுவலகங்கள் ஆகியவற்றிலும் இன்றுசிற்றுண்டியகங்கள் கேண்டீன்கள் செயல்படுகின்றன.

பலவகையானஉணவுகள்,பலஇடங்களில் பலவகைகளில் பரிமாறப்படுகின்றன. விருந்துமண்டபம்,நீச்சல்குளக்கரை,உணவுஅரங்கு,தங்கும் அறை,சுற்றுலாமையம் ஆகிய இடங்களில் பயணிகள் உணவுஉட்கொள்கின்றனர். சில இடங்களில் பணியாளர்கள் உணவுபரிமாறுகின்றனர். சிலபெரியஉணவகங்களிலும் விருந்துமண்டபங்களிலும் தங்களுக்குத் தாங்களேபரிமாறிக் கொள்ளும் (டீரகககநவ) முறையும் உள்ளது. இம்முறையில் உணவுவகைகளுக்கும் பானங்களுக்கும் உரியவிலையைநாம் முன்கூட்டியேசெலுத்திவிடுகிறோம். ஆடம்பரமானவிருந்துகளிலும் கூட இம்முறைபின்பற்றப்படுகிறது. ஆனால் சிலஉணவகங்களில் வாடிக்கையாளர் என்னவிரும்புகிறார் என்பதனைக் கேட்டறிந்து,அதன் பிறகுதயாரித்தும்

வழங்குகின்றனர். சிலவிடுதிகள் சுடச்சுடஉணவுப் பண்டங்களைப் பரிமாறிவிருந்தினரைமகிழ்விக்கின்றன.

பலவிடுதிகள் சுற்றுலாப் பயணியரைநிறைவுபடுத்தும் வகையில் செட்டிநாடுஉணவு,கோவாவகைஉணவு,கேரளவகைஉணவு,ஆந்திராவகைஉணவு,பிரெஞ்சுவகைஉண வு,மெட்ராஸ்வகைஉணவு,பம்பாய் உணவுவகைமுதலானபலசிறப்புஉணவுகளைத் தயாரித்துஉணவுவிழாக்களைவிமரிசையாகநடத்துகின்றன் இதனால் இலாபம் பெறுகின்றனர். விடுதிஉரிமையாளர் பயணிகளைக் கவரபலவகைளில் முயற்சிசெய்கின்றனர். மொட்டைமாடியில் உணவுவழங்கல்,பூங்காக்களில் உணவுவழங்கல்,கார்களில் அமர்ந்தபடியேஉணவுபரிமாறுதல்,வெளிச்சம் குறைந்தஅறைகளில் உணவுவழங்கல் போன்றமுறைகளையும் பின்பற்றுகின்றனர். இப்புதியசூழலில் உணவுஉண்பதனை இளங்காதலர் விரும்புவர். பயணிகளும் எப்போதும் தாம் உண்டசூழலைக் காட்டிலும்,புதியகுழலில் உண்ணவேஆசைப்படுவர். உணவுபரிமாறும் பணியாட்களின் உடைகளில் கவர்ச்சியைச் சேர்த்தும்,மாறுவேடமிட்டும் கூட சுற்றுலாப் பயணிகளைக் கவர்வர்.

**போக்குவரத்து (TRANSPORT)**

அ. போக்குவரத்துச் சாதனங்களும் சுற்றுலாவின் மீதுஅவற்றின் தாக்கங்களும் சுற்றுலாமேம்பாட்டிற்குப் போக்குவரத்தேஉயிர்நாடி. போக்குவரத்துவசதிகளை,அவைபயணம் செய்யும் மார்க்கத்தின் அடிப்படையில் மூன்றாகப் பகுக்கலாம். அவைமுறையே (1) நிலவழி (2) நீர் வழி (3) ஆகாய வழி என்பனவாகும்.நிலவழிப் போக்குவரத்தை (அ) சாலைப் போக்குவரத்து (ஆ) இரயில் போக்குவரத்துஎன இரண்டாகப் பிரிக்கலாம்.

சாலைகளில் மகிழ்வுந்து,பேருந்து,வேன்,ஆட்டோரிக்ஷா, ஷேர் ஆட்டோ,மினி பஸ், குளுகுளு பயணியர் பேருந்துகள், ஜீப்,லாரி,முதலானசிறிதும் பெரிதுமானவாகனங்கள் செல்கின்றன. தற்காலத்தில் அயல்நாட்டுச் சுற்றுலாப் பயணியர் சொகுசானவிலையுயர்ந்தமகிழ்வுந்துகளைவிரும்புகின்றனர். இவற்றுள் Rolls Royce (&. 3>5 Nfhb )>Phantom, Porsche, Audi, Bentley Arnage, BMW, May Bach, Cayenne, V6: Cayenne-_S (5.71), Cayenne Turbo (ரூ.83 லட்சம்), Daimler Chrysler (5 &. கோடி),லிமோசா - முதலானஅதிநவீனமகிழ்வுந்துகள் குறிப்பிடத்தக்கன. நம்நாட்டிற்குவருகைதரும் அயல் நாட்டுப் பயணியர்க்கு இதுபோன்றகார்களைவழங்கினால் சுற்றுலாமேலும் பெருகும்.

**சாலைப் போக்குவரத்தின் சிறப்பு :**

தரைவழிப் போக்குவரத்தேஅனைத்துபோக்குவரத்திற்கும் அடிப்படையானது. கப்பலில் சென்றாலும் விமானத்தில் சென்றாலும் இறுதியாகஒருசுற்றுலாப்பயணி,தான்

பார்க்கவேண்டியசுற்றுலாத் தலத்திற்குத் தரை வழியாகத் தான் செல்லவேண்டியுள்ளது. சாலைவளர்ச்சிக்காக இந்தியஅரசுஒன்பதாம் திட்டக்காலத்தில் 7929 கோடிரூபாய்களைஒதுக்கிசுற்றுலாவைமேம்படுத்தஉதவுகிறது.

உலகின் பலபகுதிகளிலும் நெடுஞ்சாலைகளைஏற்படுத்தும் திட்டம் அதிகரித்துவருகிறது. இதன் காரணமாகசுற்றுலாப் பயணியரின் பயணத்திட்டம் எளிமைப்படுவதுடன் துரிதமும் அடைகிறது. 1. டிரான்ஸ் ஆப்பிரிக்கன் நெடுஞ்சாலை (வுசயளௌ-யுகசஉையெ ர்பைாறயல) 2. டிரான்ஸ் மேற்குஆப்பிரிக்கநெடுஞ்சாலை 3. டிரான்ஸ் கிழக்குஅப்பிரிக்கநெடுஞ்சாலை 4. டிரான்ஸ் ஐரோப்பியவடக்கு - தெற்கு பேரூந்து வழி 5. பான் - அமெரிக்கன் நெடுஞ்சாலை 6.ஆசிய நெடுஞ்சாலைஆகியவைஉலகளவில் குறிப்பிடத்தக்கனவாகும். நம் பாரதத்தில் 60க்கு மேற்பட்டநெடுஞ்சாலைகள் உள்ளன. அவற்றுள் டெல்லி - அம்பாலா - அமிர்தசரசு - பாகிஸ்தான் எல்லை. (ரே-1)இவாரனாசி - நாகபுரி - பெங்களூர் - கன்னியாகுமரி (ரே-7),டெல்லிகான்பூர் - அலகாபாத் - கொல்கத்தா (ரே-2),துலே - நாகபூரி - சம்பல்பூர் - கொல்கத்தா (ரே-6),போன்றவைகுறிப்பிடத்தக்கனவாகும். நம் நாட்டுப் பெருவழிகளின் மொத்தநீளம் - 58, 112 கிலோமீட்டர் இந்தியச் சாலைகளின் மொத்தநீளம் 3.3 மில்கி.மீஆகும். பாரதப் பிரதமர் யு.டி.வாஜ்பாய் பத்தாவதுஐந்தாண்டுத் திட்டகாலத்தில் இந்தியாவின் அணைத்துநகரங்களையும் இணைக்க,தங்கநாற்கரச் சாலை, ஆறு வழிச் சாலைமற்றும் 25 சுற்றுலாச் சாலைகள் (வுழரசளைவ ஊசைஉரவைள) அமைக்கத்திட்டமிட்டார் இந்தியநெடுஞ்சாலைத் துறைவரலாற்றில் வாஜ்பாய் ஆட்சிக்காலம் ஒருபொற்காலம்.

**இரயில் போக்குவரத்தின் சிறப்பு:**

சுற்றுலாப்பயணம் மகிழ்வுடன் திகழ இரயில் பயணங்களேபெருந்துணைபுரிகின்றன. இந்திய இரயில்வேஆசியாவில் முதல் இடத்தையும் உலகில் நான்காவது இடத்தையும் பெற்றுள்ளது. அன்றாடம் 13 கோடிப் பயணியர் 2 இரயிலில் பயணம் செய்கின்றனர். ஏறத்தாழ 60,000 கி.மீ. நீளமுள்ள இந்தியரயில்வே - அகல,நடுத்தர,குறுகியமற்றும் மலைப்பாதைரெயில் சிரிவுகளைக் உச்சிக்குச் சுற்றுலாப்பயணியர் செல்லவிஞ்ச் என்னும் மலைரயில்கள் உள்ளன. உதகமண்டலம்,பழனி,சிங்காரா,மோயாறு - போன்ற இடங்களில் விஞ்ச் பயணியரைமகிழ்விக்கின்றன. மேட்டுப்பாளையத்திலிருந்துஉதகமண்டலத்திற்குமலைரயிலில் செல்வதும் டார்ஜிலிங் மலைரயிலில் பயணிப்பதும் புதியஅனுபவங்களைத் தரவல்லது. அதிவிரைவுவண்டி,விரைவுவண்டிமற்றும் பாஸஞ்சர் வண்டிகள் உள்ளன. பெருநகரங்களானடெல்லி,மும்பை,சென்னைநகரங்களில் மின்சாரரயில் வசதிகள் உள்ளன. டெல்லிமற்றும் கொல்கத்தாவில் பாதாளரயில் சேவையும் உண்டு. இவை பயணியர்க்குவரப்பிரசாதமாகஅமைந்துள்ளன. கொல்கத்தாவில் டிராம் வண்டிவசதியும் உண்டு.

**இரயிலில் பயணிகளுக்கானசலுகைகள்**

இன்ட் ரயில் பாஸ் (ஐனெ சுயடை ீயளள) அ. விருப்பப்படிபயணம் செய்யவசதிஅயல் நாட்டுச் சுற்றுலாப் பயணியர்க்கு இந்தியாமுழுவதும் இரயிலில் பயணம் செல்ல 21 நாட்களுக்குச் செல்லுபடியாகும் ஒருடிக்கட்,சலுகையுடன் வழங்கப்படுகிறது. ஐரோப்பாவிலுள்ளயூரோரயில் பாஸ் போன்றதுதான் இது. இன்ட் ரயில் பாஸ் வைத்திருப்போர் எந்தரயிலிலும் இந்தியாவிற்குள் பயணிக்கலாம். முன்பதிவுக் கட்டணமின்றிமுன்பதிவுகள் செய்துகொள்ளலாம்.

ஆ. சலுகைகளுடன் கூடியபயணச்சீட்டுகள்:உள்நாட்டுமற்றும் அயல் நாட்டுப் பயணியர்க்குக் கோடைவாசஸ்தலங்களுக்குச் செல்லசலுகைப்பயணச்சீட்டுகள் வழங்கப்படுகின்றன.

**கப்பல் போக்குவரத்தின் சிறப்பு**

தொடக்ககாலத்திலிருந்தேமனிதன் கப்பல் வழிப் பயணத்தைமேற்கொண்டான். பயணியரைஏற்றிச் செல்லும் கப்பல்கள் நவீனகாலத்தில் மிதக்கும் ஹோட்டல்கள் எனவும் அழைக்கப்பெறுகின்றன. 1. இக்கப்பல்களில் 2000 பயணியர் பயணிக்கலாம். மிகப் பெரியகப்பல்கள் 1,00,000 டன்கள் வரைஎடையுள்ளவையாகஉள்ளன. இதன் வேகம் மணிக்கு 55 கி.மீ. ஆகும்.இதுபோன்றகப்பல் போக்குவரத்தால் சுற்றுலாமேம்பாடடைகிறது. அண்மையில் தொடங்கிவைக்கப்பட்டசேதுசமுத்திரத் திட்டத்தால் சுற்றுலாசெல்வோரின் எண்ணிக்கைப் பெருகும். குறைந்த தூரங்களுக்குப் பயணம்,நீண்டகுறுகியகடல்களைக் கடக்கவும் ஜலசந்திகளைக் கடப்பதற்கும் சிறியகப்பல்களே (குநசசல டிழயவள ழச ஊயசபழ ளாிள) பயன்படுகின்றன. .

அறிவியல் முன்னேற்றத்தால் இன்றையகப்பல்கள் அளவில் பெரிதாகவும்,அனைத்துவசதிகளைக் கொண்டதாகவும் திகழ்கின்றன. இவற்றில் சொகுசான குளுகுளு வசதியுள்ளஅறைகள்,சாப்பாட்டுஅறை,சமையல் அறை,குளியல் அறை,வங்கி,கடைகள்,திரையரங்குகள்,நீச்சல் குளம் ஆகியவைஉள்ளன. எத்தனையோவசதிகள் இருப்பினும் சுற்றுலாப்பயணியர் நீண்டநெடுந்தூரம் கப்பலில் செல்வதைவிரும்பாது,அண்டைநாடுகளுக்கேகப்பலில் செல்கின்றனர். இந்தியப் பயணியர் சிங்கப்பூர்,மலேஷியா, இலங்கை,மொரிஷியஸ்,அந்தமான் நிக்கோபார், ஜாவா,சுமத்ராமுதலானபகுதிகளுக்குச் செல்வதையேவிரும்புகின்றனர். இதுபோன்றகடற்பயணங்கள் விமானப் பயணங்களைக் காட்டிலும் மிகவும் சிக்கனமானதுவசதியானது. அதிகஎண்ணிக்கையில் பயணியர் செல்லகப்பல்களேபயன்படுகின்றன.

**விமானப் போக்குவரத்தின் சிறப்பு**

இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் விமானப்பயணம் பெருகிவிட்டது, ஜெட்,போயிங் விமானங்கள் விமானப்பயணத்தைவசதியாக்குகின்றன. விமானப் போக்குவரத்துஅசுரவளர்ச்சிபெற்றுள்ளது. அவசரமான இவ்வுலகில் அவசரமாகச் சென்றுதிரும்பவிமானப் பயணங்களேபெருந்துணைபுரிகின்றன. விமானப் பயணத்தால் உலகம்

மிகமிகச் சுருங்கிவிட்டது. கன்கார்டு, ஜெட் போன்றவிமானங்கள் ஆகாயவிமானவரலாற்றில் பெரும் புரட்சியைத் தோற்றுவித்தன. இன்றுபோயிங் 747,ஏர்பஸ் யு 300,மேக்டனால; L D.C.10 (McDonnell - Douglas D.C.10)இ (Tristar L-1011)போன்றமின்னல் வேகவிமானங்கள் சுற்றுலாப் பயணத்தைஎளிதாக்கிவிட்டன. இன்று ஜெட் விமானங்கள் மணிக்கு 1056 கி.மீ. வேகத்தில் 10970 மீஉயரத்தில்பறக்கின்றன. இன்றுசிலவிமானங்கள் இரண்டடுக்குடன் (Double Deck) 700, 800 பயணியர் வரைஏற்றிச் செல்கின்றன. ஏர் பஸ் வரலாற்றில் யு 380 புதியசாதனைபடைத்துள்ளது. இது 555 பயணியருடன் 14.800 மீஉயரம் வரைப் பறக்கிறது. இதன் மதிப்பு 1182.5 கோடிரூபாயாகும். இதுபோன்றஅசுரவளர்ச்சியால் விமானக் கட்டணம் குறைந்துவிட்டது. மேலும் பலசலுகைகளும் பயணியர்க்குவழங்கப்படுகின்றன.

வாயுதூரத் விமானசர்வீஸ்,விமானடேக்சிகள்,ஹெலிகேப்டர்கள் ஆகியனவும் சுற்றுலாப் பயணியருக்குப் பயன்படுகின்றன. ஆகாயவிமானவேகமும்,மக்களின் வாழ்க்கைத் தரமும் உயர்ந்துள்ளதால் இன்றுசுற்றுலாப் பயணம் பெரிதும் முன்னேற்றமடைந்துள்ளது.

நம் நாட்டில் இந்தியின் ஏர்லைன்ஸ், ஏர் இந்தியாநிறுவனங்களும் ஜெட் ஏர்வேஸ், ஏர் டெக்கான்,கிங் பிஷர் ஏர் சஹாராமுதலானதனியார் நிறுவனங்களும் சுற்றுலாத் தேவையைப் பூர்த்திசெய்கின்றன. பன்னாட்டுஆகாயபோக்குவரத்தமைப்பின் கணக்கின்படி இந்தியன் ஏர்லைன்ஸ் உள் நாட்டுப் போக்குவரத்தில் மூன்றாவது இடத்தைப் பெறுகிறது. ஏர்-கனடாமுதல் இடத்தையும் ஜப்பான் ஏர்லைன்ஸ் இரண்டாவது இடத்தையும் பிடித்துள்ளன. பாரதத்தில் 5 பன்னாட்டுவிமானத்தளங்களும் 100 உள் நாட்டு. விமானதளங்களும் உள்ளன. இதனை 400 ஆகஉயர்த்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. (அண்மையில் இந்தியன் ஏர் லைன்சும், ஏர் இந்தியாவும் ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளது.) ஏர் இந்தியாஉலகின் பலநகரங்களுக்குப் பறக்கிறது. இது 1. இந்தியா - ஜப்பான். 2. இந்தியா ரஷ்யா, 3. இந்தியா ஆஸ்திரேலியா, 4. இந்தியா - பிரிட்டன், 5. இந்தியா - ஆப்பிரிக்கா,எனும் ஐந்துமுதன்மைவழிகளில் பறக்கின்றது. இந்தியன் ஏர் லைன்ஸ் நிறுவனம் இந்தியாவின் அனைத்துமுக்கியநகரங்களுக்கும் செல்கிறது.புது டெல்லியிலிருந்துமும்பை,கொல்கத்தா,ஐதராபாத்,அகமதாபாத்,சென்னை,வரைதினசரிதொடர் சேவைபுரிகிறது.

விமானநிறுவனங்கள் பயணியர்க்குப் பலவிதமானசலுகைகளைவழங்குகிறது. இதன் விளைவாகச் சுற்றுலாபெரிதும் வளர்ந்துள்ளது. இந்தியவிமானப் போக்குவரத்துதனிஅமைச்சகத்தின் கீழ் பணிபுரிகின்றது. இவ் அமைச்சகத்தின் கீழ் இந்திராகாந்திதேசிய ஊரன் சங்கம் எனும் தன்னாட்சிநிறுவனம் செயல்படுகிறது. (ஐனொசைய புயனொை சுயஎளாவசலைய யுஉயனநஅல)

**பன்னாட்டுப் புகழ் மிகுவிமானதளங்கள்** : டோக்கியோ (ஜப்பான்). சிங்கப்பூர், ஹாங்காங்,லண்டன், (கிரேட்பிரிட்டன்),பிராங்க் பர்ட் (மேற்கு ஜெர்மனி) நியூயார்க்,சிகாகோ,அட்லாண்டா

(அமெரிக்கா),சிட்சி (ஆஸ்திரேலியா), சூரிச் (ஸ்விட்சர்லாந்து),ரோம் (இத்தாலி),கெய்ரோ (எகிப்து), ஷாங்கை (சீனா),டெஹ்ரான் (ஈரான்),ரியோடி ஜெனிரோ (பிரேசில்),கொழும்பு (இலங்கை) மும்பை, புது டெல்லிமுதலானபன்னாட்டுவிமானதளங்கள் உலகசுற்றுலப்பயணியரைப் பெரிதும் கவர்ந்துள்ளன.

**இந்தியத் திருவிழாக்கள் INDIAN FESTIVAl**

சுற்றுலாவளர்ச்சியில் திருவிழாக்களும் பொருட்காட்சிகளும் பெரும்பங்குவகிக்கின்றன. திருவிழாக்கள் சமயநம்பிக்கையையும் பண்பாட்டையும் அடிப்படையாகக் கொண்டவை. இவை கொண்டாடுவோருக்குமட்டுமின்றிக் காண்போருக்கும் மகிழ்ச்சியைஅளிக்கின்றன. நம் நாட்டின் பலபகுதிகளில் பலவிதமானவிழாக்கள் நடைபெறுகின்றன. அவற்றுள் புகழ்மிக்கசிலவிழாக்களைப் பற்றி இங்கேகாண்போம்.

டேராடுனில் – இந்தியாவின் வடகோடியில் இமயமலையின் அடிவாரத்தில் அமைந்துள்ளநகரம் டேராடுன். இங்கே இயற்கையழகிற்குப் பஞ்சமில்லை. இப்பகுதியில் ஜண்டாமேளா,தெப்கேஷ்வர்,மகாதேவர் மேளாஆகியவிழாக்கள் சிறப்பாகக் கொண்டாடப் பெறுகின்றன. ஜண்டாமேளா,குருராம்ராய் பதினேழாம் நூற்றாண்டில் இங்குவந்துதங்கியதன் நினைவாகக் கொண்டாடப்படுகின்றது. தெப்பகேஷ்வர் விழாசிவபெருமானுக்காகஎடுக்கப்படுகிறது. சிவபெருமான் பிறந்தநாளானசிவன் ராத்திரி இங்குமிகச்சிறப்பாகக் கொண்டாப்படுகின்றது. டேராடுனிலிருந்து 5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளதெப்பகேஷ்வரில் சிவபெருமானுக்காகக் குகை ஒன்றுள்ளது. இக்குகையிலுள்ளஒருபாறையிலிருந்துதண்ணீர் சொட்டு,சொட்டாகபன்னூறு ஆண்டுகளாகவிழுந்துகொண்டிருப்பதுவிந்தைசெய்தியாகும். எனவேசுற்றுலாப் பயணியர் இவ்விழாவைக் காண்பதில் ஆர்வம் காட்டுகின்றனர்.

வாரணாசியில்-இந்துக்களின் புனிதத்தலமானவாரணாசியில் (காசி)புத்தபூர்ணிமா,கங்காதசராதிருவிழா,கும்பமேளாமுதலானதிருவிழாக்கள் கொண்டாடப்படுகின்றன. பக்தகோடிகள்மட்டுமின்றிச் சுற்றுலாப் பயணியரும் இவற்றைமகிழ்ச்சியுடன் கண்டுகளிக்கின்றனர். பகவான் புத்தரின் பிறந்தநாள் மேமாதத்தில் விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. இதன் தொடர்பாகசாரநாத்தில் புத்தரதுபுனிதப் பொருட்கள் மக்களின் பார்வைக்குவைக்கப்படும்’ பெரியசமயஊர்வலமும் நடைபெறும். இவ்விழாவிற்கு நம் நாட்டினர் மட்டுமின்றி ஸ்ரீலங்கா,பர்மா, ஜப்பான்முதலான அயல் நாடுகளிலிருந்தும் பக்தகோடிகள் வருகின்றனர். திரிவேணிசங்கமத்தில் 12 ஆண்டுகளுக்கொருதடவை ஜனவரியில் கும்பமேளாவிழாமிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. 2001இல் இங்குஒருகோடிக்குமேற்பட்டபக்தர்கள் நீராடினர். அயல் நாட்டுச்சுற்றுலாப்பயணியரும் இப்புனிதநீரில் நீராடிமகிழ்ந்தனர்.

ஜெய்ப்பூரில் -இந்தியாவின் வரலாற்றுப் புகழ்மிக்கநகரங்களுள் ஜெய்ப்பூரும் ஒன்று. ஜீலைஆகஸ்ட் மாதங்களில் இங்குதீஜ் எனும் விழாசிறப்புடன் நடைபெறுகின்றது. இவ்விழாவில் வண்ணவண்ணஉடைகளில் பெண்கள்கலந்துகொண்டு,பலவிதமானவிளையாட்டுகளில் பங்குபெற்றுமகிழ்வர். அடுத்துகங்கௌர் விழாவும் இங்குசிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இதுபார்வதிக்காகபெண்கள் எடுக்கும் விழாவாகும்.

ஜோத்பூரில்- விலங்குகள் கண்காட்சிவிழாவும் அயல்நாட்டுபயணியரைக் கவரும் வகையில் அமைந்துள்ளது. இதில் ஓட்டகங்கள்,குதிரைகள்,மாடுகள்,ஆயிரக்கணக்கில் கொண்டுவரப்பட்டு,விற்கப்படுகின்றன. இவ்விழாவிற்குப் பலபகுதிகளிலிருந்தும் மக்கள் கூடுகின்றனர்.

கோவாவில் - சுற்றுலாப்பயணியரின் சொர்க்கபூமிகோவா. கீழ்த்திசையின் உரோம் எனப் புகழப்பெறும் கோவாவில் ஆகஸ்ட் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரைஅறுவடைவிழாமக்களால் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. இந்நகரில் ஆகோதிருவிழாவும்,தசரா,தீபாவளி,கிருஸ்துமஸ் திருவிழாக்களும் மிகச்சிறப்பாகநடைபெறுகின்றன. டெலிகாவோஎன்னுமிடத்தில் கொண்டாடப்படும் ஆகோதிருவிழாசற்றுவிநோதமானது. ஐந்நூறு ஆண்டுகட்குமுன்புடெலிகாவோகிராமமக்கள் போர்த்துகீசியருடன் செய்துகொண்டஒப்பந்தத்தின் நினைவாக இவ்விழாஎடுக்கப்பெறுகிறது.

அகமதாபாத்தில் - மகாசங்கராந்திவிழாஜன்டஷ்தமி,டத்னேடார் விழா,ஆகியனவிமரிசையாகக் கொண்டாடப்படுகின்றன. மகாசங்கராந்திவிழா, குஜராத்தில் பட்டம் பறக்கவிடும் விழாவாகக் கொண்டாடப்படுகின்றது. ஒவ்வொருஆண்டும் ஜனவரித் திங்கள் 14-ஆம் நாள் அகமதாபாத்தில் இந்தியாவின் பலபகுதிகளிலிருந்தும் தேர்ச்சிமிக்கவர்கள் போட்டிபோட்டுக் கொண்டுமிகஉயரத்தில் பட்டம் விடுவர். இவ்விழாவை குஜராத் சுற்றுலாக் கழகம் நடத்திவருகிறது.

டர்னேடர்என்னுமிடத்தில் சிறப்பானவிழாக்கள்கொண்டாடப்படுகின்றன. இங்குகவர்ச்சிமிகு ஹீடோநடனம் செப்டம்பர்அக்டோபர் மாதங்களில் சிறப்பாகநடைபெறுகின்றது. இதனைக் கண்டுமகிழ்ச்சியில் திளைக்கச் சுற்றுலாப் பயணியர் வருகின்றனர்.

மும்பையில்-பங்கங்கா,எலிபெண்டதிருவிழாக்கள் ஆடம்பரஆரவாரத்துடன் கொண்டாடப்பெறுகின்றன. பங்கங்காதிருவிழாஒருகலாசாரத் திருவிழாவாகும். 1922 ஆம் ஆண்டுமுதன் முதலாகக் கொண்டாடப்பட்ட இவ்விழாவிற்கு இராமபிரானின் வாழ்க்கைநிகழ்ச்சிஅடிப்படையாகஅமைந்துள்ளது. இராமபிரான் இலங்கைக்குச் செல்லும் வழியில் மும்பைதீவில் தங்கினார். நீர் வேட்கைஏற்பட்ட இராமர் தண்ணீர் கிடைக்காததால் தரையில் அம்பொன்றினைஎய்த்தாகவும் உடனேதண்ணீர் குபு,குபுவென்றுவந்துநிறைந்துபங்கங்காஏரியாகஉருவானதாகவும் கூறப்படுகிறது.

மும்பையின் அருகாமையிலுள்ளசிறியதீவானஎலிபெண்டாவில் நடைபெறும் திருவிழாவும்,மும்பைநகரவாசிகளால் குதூகலத்துடன் கொண்டாடப்படுகின்றது. இந்தியநுழைவாயிலிருந்துபடகுகளில் செல்லும் மக்களைப் பலவண்ணஉடைகளில் உள்ளகோலிநடனக்கார்கள் ஆரவாரத்துடன் வரவேற்ப்பதுகண்கொள்ளாக்காட்சியாகும். எலிபெண்டாதிருவிழாமுதன் முதலாக 1989-இல் மகாராஷ்டிராசுற்றுலாவளர்ச்சிக் கழகத்தாரால் தொடங்கப்பட்டது.

அடுத்துநவம்பர் மாதம் முதல் மேமாதம் முடியஞாயிற்றுக்கிழமைகளில் ஒவ்வொருஆண்டும் இங்கேசுற்றுலாபிளாசாஎன்னுமோர் விழாவும் நடைபெறுகின்றது. இதில் ஜோசியக்காரர்கள்,பாம்பாட்டிகள்,மேற்கத்திய இந்திய இசைப் பாடகர்கள்,கயிற்றின் மீதுநடப்பவர்கள்,வளையல் வியாபாரிகள் முதலானோர் பங்குகொள்கின்றனர். இதுபோன்றவித்தியாசமானவிழாக்களைக் கண்டுகளிக்கஅயல்நாட்டுப் பயணியரும் மும்பையில் கூடுகின்றனர்.

புனேயில் விநாயகர் விழா - புனேயில் வரலாற்றுச் சிறப்புமிக்கவிநாயகர் திருவிழாமிகச்சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. இந்தியவிடுதலைபோராட்டக்காலத்தில் இந்தியரிடையேவிடுதலைவேட்கையைத் தூண்ட, 1892-இல் பாலகங்காதரதிலகரால் இவ்விழாதொடங்கப்பட்டது. விநாயகப்பெருமானின் திருவுருவச்சிலையைஅமைத்து, 11 நாட்கள் கொண்டாடி, இறுதியாக இது கடலில் கரைக்கப்படும். இவ்விழாவின் தொடர்பாகமகாராஷ்டிராசுற்றுலாவளர்ச்சிக் கழகம் பல்வேறுபொழுதுபோக்குநிகழ்ச்சிகளைநடத்துகின்றது.எனவே இவ்விழாசுற்றுலாப் பயணிகளைவெகுவாகக் கவர்கின்றது. இன்றும் இந்தியாமுழுவதிலும் விநாயகர் சதுர்த்திவிழாபுதியஎழுச்சியுடன் கொண்டாடப்படுவதனைக் காணலாம்.

ஓரிசாமாநிலத்தின்-பலபகுதிகளில் அக்னித் திருவிழா, ஜொராண்டாமேளாமுதலானதிருவிழாக்கள் உற்சாகத்துடன் கொண்டாடப்படுகின்றன. பூரியில் ரதயாத்திரைத் திருவிழாஒருவாரகாலம் சிறப்பாகநடைபெறுகின்றது. ஒரிசாமாநிலத்தின் தலைநகரானபுவனேஷ்வரில் பழங்குடியினர் திருவிழாசிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. பழங்குடியினர் நடனம்,நாட்டுப்புற,கலைகள்,கைவினைப் பொருட்கள் ஆகியவை இதில் இடம் பெறுகின்றன. பூரிக்கருகில் உள்ளகொனராக்கில் சூரியக் கடவுளின் திருவிழாவானமகாசப்தமி,சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. வண்ணமயமான இந்திருவிழாவிற்கு இந்தியாவின் பலபகுதிகளிலிருந்தும், அயல் நாடுகளிலிருந்தும்பல்லாயிரக்கணக்கில் பயணியர் கூடுகின்றனர். இவ்விழாத் தொடர்பாகபுவனேஷ்வருக்குஅருகில் அமைந்துள்ளகாந்தகிரமலையில் பொருட்காட்சிஒன்றும் நடைபெறுகிறது.

மைசூரில் தசராவிழா - சிறந்தசுற்றுலாமையமாகத் திகழும்மைசூரில் சுற்றுலாப் பயணியரைக் கவரும் சிலதிருவிழாக்களும் நடைபெறுகின்றன. அவற்றுள் தசராவிழாசிறப்பானது. இவ்விழாஒவ்வொருஆண்டும் செப்டம்பர் அக்டோபர் மாதங்களில் கொண்டாடப்படுகிறது. இவ்விழாவின் சிறப்புஅம்சமாக,அலங்கரிக்கப்பட்டயானைகளின் ஊர்வலத்துடன் அன்னைசாமுண்டீஸ்வரி மைசூர் நகரவீதிகளில் உலாவருதல் கண் கொள்ளாக்காட்சியாகும். இதனைப் போன்று ஹம்பியில் விநாயகர் விழாவும் தர்மராயத் திருக்கோயிலில் கரகவிழாவும் வெகுஉற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது. இவையனைத்தும் அயல் நாட்டுப் பயணியரையும் தம்பால் ஈர்க்கின்றன.

ஐதராபாத்தில் சங்கராந்திவிழா - ஆந்திரப் பிரதேசமாநிலத்தின் தலைநகரானஐதராபாத்தில் ஜனவரியில் சங்கராந்திவிழாசிறப்பாகக் கொண்டாடப்படுகிறது இதில் அனைத்துமதத்தினரும் கலந்துகொண்டு,பட்டம் பறக்கவிடும் காட்சிகண்டுமகிழத்தக்கதுபெண்கள் தமதுவீடுகளில் ரங்கோலிக் கோலங்கள் போட்டுஅழகுக்குஅழகு கூட்டுவர்.சங்கராந்திவிழாமட்டுமின்றிஉகாதி,முகரம் முதலானதிருவிழாக்களும் இந்நகரில் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

தெலிங்கானாப்பகுதியில்- ஒவ்வொருஆண்டும் அக்டோபர் - நவம்பர் மாதங்களில் பத்கம்மாவிழாமிகவும் பக்தியுடனும் ஆடம்பரஆரவாரத்துடனும் நடைபெறுகின்றது. இவ்விழாவின் போதுபெண்களும் சிறுவர்களும் அழகியதட்டுக்களில் வண்ண,வண்ணமலர்களைஏந்திஅவற்றைநதிகளிலும் ஏரிகளிலும் மிதக்கவிடுவது கண் கொள்ளாக்காட்சியாகும். அயல் நாட்டுப் பயணியரையும் இவ்விழாக்கள் கவர்கின்றன.

கேரளாவில் - கேரளமாநிலத்தில் நடைபெறும் திருவிழாக்களுள் மிகவும் புகழ் மிக்கதுஓணம். கேரளமாநிலம் முழுவதும் இவ்விழர் செப்டம்பரமாதத்தில் கொண்டாடப்படுகிறது. கேரளசுற்றுலாக்கழகம் இவ்விழாவைஒருவாரகாலகலாசாரத் திருவிழாவாகக் கொண்டாடுகிறது. மாபலிசக்ரவர்த்திமக்களின் நலன் கருதிபாதாளஉலகத்திலிருந்துமீண்டும் வருவதைக் குறிப்பதே இவ்விழாஎன்றுபுராணங்கள் கூறுகின்றன. ஒவ்வொருஆண்டும் ஆரன் முழா எனும் ஊரில் செப்டம்பர் மாதம் இரண்டாம் வாரத்தில் படகுப் போட்டிகுதுகலத்துடன் நடைபெறுகிறது. இப்படகுகள் பாம்புவடிவில் அமைந்துபார்ப்போரைமகிழ்ச்சியில் ஆழ்த்துகின்றன. அடுத்துதிருச்சூரில் ஏப்ரல் மாதம் மூன்றாம் வாரத்தில் பூரம் திருவிழாவடக்குநாதன் கோயிலில் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. இவ்விழாவின் போதுஅலங்காரயானைகளின் அணிவகுப்பு அயல் நாட்டுப் பயணியரைப் பெரிதும் மகிழ்ச்சியில் ஆழ்த்துகின்றது. சம்பக்குளமஎன்னுமிடத்தில்நடைபெறும் பாம்புப்படகுப்போட்டியும் பார்ப்போரைப்பரவச மூட்டவல்லது. சம்பக்குளம்,ஆலப்புழையில் இருந்து 5 கிமீ,தொலைவில் உள்ளது. திருவனந்தபுரம் பத்மநாபசாமிகோவிலிலஆரத்திருவிழாசிறப்பாகக் கொண்டாடப்படுகிறதுஅதுபோழ்துஅலங்கரிக்கப்பட்டயானைகளின் அணிவகுப்புகண்டுகளிக்கத் தக்கது. 5000 ஆண்டுபழமைமிக்கபத்மநாதசாமிதிருக்கோயிலில் 1750 முதல் ஆறு

ஆண்டுகளுக்குஒருதடவை ஜனவரி 16-இல் லட்சதீபவிழாசிறப்பாகநடைபெறும். இதில் பல்லாயிரகணக்கிலபக்தர்கள் கூடுவர். கேரளமாநிலத்தில் நடைபெறும் மேற்கூறப்பட்டதிருவிழாக்கள் சுற்றுலாப்பயணியரைக் கவர்ந்திழுக்கின்றன.

**தமிழ்நாட்டுதிருவிழாக்கள்-**

திருவிழாக்களையும் பொருட்காட்சிகளையும் மேம்படுத்துவதன் மூலம் அயல் நாட்டுப்பயணியரையும் உள் நாட்டுப்பயணியரையும் கவரமுடியும். இவ்வகையில் பண்பாட்டுச் சுற்றுலாவும் ஊக்குவிக்கப்படுகிறது. கீழ்க்காணும் திருவிழாக்கள் தமிழ்நாட்டில் சுற்றுலாத் துறையினரால் சிறப்பாகநடத்தப்பெறுகின்றன.

**மாமல்லபுரத்தில் நடனவிழா**ஒவ்வொருஆண்டும் ஜனவரிமாதம் முழுவதும் மாமல்லபுரத்தில் நடனவிழாமிகச் சிறப்பாகநடைபெறுகிறது. இதில் நாட்டியக் கலைஞர்கள் தமதுநாட்டியத்தைநிகழ்த்திக் காட்டுகின்றனர். அயல் நாட்டுப் பயணியரும் உள் நாட்டுப்பயணியரும் இதனைக் கண்டுகளிக்கின்றனர்.

**குன்னூரில் தேயிலைசுற்றுலாவிழா**குன்னூரில் ஒவ்வொருஆண்டு ஜனவரியிலும் தேயிலைமற்றும் சுற்றுலாவிழாமத்தியஅரசின் நிதியுதவியுடன் சிறப்பாகநடைபெறுகின்றது.

**சுற்றுலாப் பொருட்காட்சி**தமிழ்நாடுசுற்றுலாவளர்ச்சிக்கழகம், ஜனவரியில் சென்னைதீவுத்திடலில் சுற்றுலாத் தொழில் பொருட்காட்சியைப் பாராட்டத்தக்கஅளவில் நடத்திவருகிறது. மத்தியமாநிலஅரசுத் துறைகளும் தனியார் நிறுவனங்களும் இப்பொருட்காட்சியில் அரங்குகளைஅமைக்கின்றன. ஏறத்தாழ ஆறு மாதங்கள் நடைபெற்றுவரும் இப்பொருட்காட்சியில்,சுற்றுலாமையங்களைப் பற்றியும் தமிழகமற்றும் பிறமாநிலப் பண்பாட்டுச் சிறப்புகளைப் பற்றியும் பார்வையாளர்கள் அறிந்துகொள்ளஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஆண்டுதோறும் 50 லட்சம் பார்வையாளர்கள் இதனைக் கண்டுகளிக்கின்றனர்.புத்தகக் காட்சிகளும் இங்கேசிறப்பிடம் பெறுகின்றன.குழந்தைகள் இன்பப்பொழுதுபோக்கப்பலவிளையாட்டுகள் இங்கேநடைபெறுகின்றன.

**மதுரையில் சித்திரைத் திருவிழா**ஆண்டுதோறும் சித்திராபௌர்ணமியன்றுமதுரைமாநகரில் சித்திரைத் திருவிழாமிகவிமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. தனதுதங்கைமீனாட்சியின் திருமணவிழாவிற்காகமதுரைவரும் அழகர்,வெள்ளைக் குதிரைவாகனத்தில் அமர்ந்தவெண்கொற்றக்குடைமின்னவைகைஆற்றில் இறங்குவதே இவ்விழாவின் சிறப்புஅம்சமாகும். இலட்சகணக்கானமக்கள் இவ்விழாவைப் பக்திப் பரவசத்தோடுகண்டுகளிப்பர்.அழகர் ஆற்றில் இறங்குவதற்குமுன்புபூப்பல்லக்குஊர்வலம்,எதிர்சேவைநிகழ்ச்சி,அழகர் வண்டியூர் தெப்பக்குளத்திற்க்குச் செல்லுதல் முதலானநிகழ்ச்சிகளும் விமரிசையாகநடைபெறும். எதிர்சேவைஎன்பதுவைகைஆற்றின் வடகரையில் உள்ளதல்லாகுளம் பகுதிக்குகள்ளழகர்

பல்லக்கில்ஏறிவரும் போது,அன்னைமீனாட்சிஅண்ணனைமற்றொருபல்லக்கில் எதிர்த்திசையில் வரவேற்கவருவார். இவ்விருபல்லக்குகளையும் கண்டுதரிசிக்கஆயிரக்கணக்கில் பக்தர்கள் திரண்டுவருவர்.மீனாட்சிகல்யாணம்,அழகர் பழமுதிர் சோலைக்குத் திரும்பிச் செல்லுதல்முதலானநிகழ்ச்சிகளும் கண்டுகளிக்கத்தக்கவையாகும்.சித்திரைத் திருவிழாவினையொட்டிமதுரைதமுக்கம்மைதானத்தில் சித்திரைப் பொருட்காட்சிமிகச் சிறப்பானமுறையில் நடைபெறும்.

**பொங்கல் விழா**சுற்றுலாப் பயணிகளைமிகவும் கவர்ந்துவரும் விழாக்களுள் பொங்கல் விழாவும் ஒன்று. தமிழர் திருநாள் எனவும் இவ்விழாஅழைக்கப்பெறுகிறது. தைத் திங்கள் முதல் நாள் தமிழகம் முழுவதும் இத்திருவிழாசிறப்பாகநடைபெறுகிறது. பெரும் பொங்கல் நாளினைஅடுத்துமாட்டுப் பொங்கல்,காணும் பொங்கல் ஆகியனவும் நடைபெறுகின்றன.

**தமிழகக் கலைப் பண்பாடும் சுற்றுலாவும்:**

‘‘பாருக்குள்ளேநல்லநாடு - நம் பாரதநாடு” என்றுபுதுவைக் கவிஞனும் புதுமைக் கவிஞனுமானபாரதியார் பாடியதுஉண்மைதான். ஆம்அவ்வாறு நம் பாரதம் உயர்வடையக் காரணம் நமதுபண்பாட்டுப் பெருமைதான்.தொன்மைச் சிறப்பும்,பழம் பெருமையும் மிக்க இந்தியாஉலகஅரங்கில்பண்பாட்டுச் சுற்றுலாவிற்கோர் சிறந்தநாடாகத் திகழ்கிறது. நம் பாரதத்தில் உள்ளஆயிரக்கணக்கானவரலாற்றுச் சிறப்புமற்றும் தொல்லியல் முக்கியத்துவமும் மிக்கநினைவுச் சின்னங்கள் அயல்நாட்டுப்பயணியரைக் காந்தம் போல் கவர்ந்திழுக்கின்றன. 1968 ஆம் ஆண்டுபசிபிக் பகுதிப்பயணநிறுவனமும் 1968-69 மற்றும் 1972-73 ஆம் ஆண்டுகளில் சுற்றுலாத்துறைஎடுத்தகணக்கெடுப்புகளும் மேற்கூறப்பட்டகருத்துக்களையேவலியுறுத்துகின்றன.

உலகப் பயணியர் இந்தியாவின் விந்தையைக் (ஊரசழைளவைல)கண்டுகளிக்க (42மூ) வும் இந்தியக்கலைமற்றும் பண்பாட்டைக்காண (34மூ)வும் தான் வருகைபுரிகின்றனர் என்பதும் சுற்றுலாத்துறையின் கணிப்பாகும். எனவே இந்தியாவின் கவர்ச்சிஅதன் பண்பாட்டுப் பாரம்பரியத்தில் தான் உள்ளதுஎன்பதுபுலனாகும்.

**இந்தியாவின் உலகப் பாரம்பரியமிக்கநினைவுச் சின்னங்கள்**

இந்தியாவில் நூற்றுக்குமேற்பட்டகவர்ச்சிமிக்கநினைவுச் சின்னங்கள் உள்ளன. யுனெஸ்கோநிறுவனம் உலகின் பல்வேறுபகுதிகளில் உள்ளபழைமைமிக்கபண்பாட்டுமற்றும் இயற்கைஅழகுமிக்கமையங்களாக 288 இடங்களைஅடையாளங் காட்டியுள்ளது. இப்பண்பாட்டுப் பெட்டகங்கள் அனைத்தும்,பிற்காலச் சமுதாயத்திற்கும் பயன்படும் வகையில்,பாதுகாக்கப்

பெறவேண்டும் என்றும் இந்நிறுவனம் உலகமக்களுக்குவேண்டுகோள் விடுத்துள்ளது. 288 உலகப் புகழ் மிகுமையங்களுள் பாரதத்தைச் சேர்ந்த 17மையங்கள் சிறந்தவையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனஎன்பதுபெருமைக்குரியஒன்றாகும். இவற்றுள் 13 பண்பாட்டுப் புகழ்மிகுமையங்களும், 4 இயற்கையெழில் மிக்க இடங்களும் அடங்கும். அவை

**அ. பண்பாட்டுப் பெருமைமிகுமையங்கள்**

1. அஜந்தாக் குகைகள் (153)
2. எல்லோராக் குகைகள் (154)
3. ஆக்ராகோட்டை (155)
4. தாஜ்மகால் (ஆக்ரா) (156)
5. கொனாரக் சூரியனார் கோயில்(185)
6. மாமல்லபுரம் நினைவுச் சின்னங்கள் (186)
7. கோவாவின் மாதாக் கோவில்கள்,மடங்கள் (Convents) (239)
8. கஜுராகோநினைவுச் சின்னங்கள் (240)
9. ஹம்பியின் நினைவுச் சின்னங்கள் (241)
10. மொகலாயநகரமானபதேபூர் சிக்ரி (242)
11. பட்டடக்கல் நினைவுச் சின்னங்கள் (260)
12. எலி∴பெண்டாகுகைள் (265)
13. தஞ்சைப் பெருவுடையார் திருக்கோயில் (266)

**ஆ. கவின்மிகு இயற்கைமையங்கள்**

14. கியலாடோதேசியப் பூங்கா (Keoladeo) (212)
15. மனோஸ் விலங்குகள் சரணாலயம் (213)
16. காசிரங்காதேசியப் பூங்கா (214)
17. சுந்தர் பன்ஸ் தேசியப் பூங்கா (215) ஆகும்.

யுனெஸ்கோவின் ஒருபிரிவானஐகோமாஸ்(International Council for Monuments and Sites)ஆண்டுதோறும் ஏப்ரல் 18 ஆம் நாள் உலகமரபுரிமைநாளாகக் (றுழசடன ர்நசவையபந

னுயல) கொண்டாடும் படிஅறிவித்துள்ளது. இதனால் உலகின் நினைவுச் சின்னங்களைப் பராமரிக்கவும் பாதுகாக்கவும் முயற்சிகள்மேற்கொள்ளப்படுகின்றன. நம் பாரதத்தில் முன்னாள்பாரதப் பிரதமரானதிருமதி.இந்திராகாந்தியின் நினைவுநாளானநவம்பர் 19 ஆம் தேதிதொடங்கிஒருவாரம் நாடுமுழுவதும் உலகமரபுரிமைநாள் கொண்டாடப்படுகின்றது.

ஒருமேற்கூறப்பட்ட 17 நினைவுச் சின்னங்களேயன்றி நம் பாரதத்தின் பலபகுதிகளிலும் காணப்படும் நூற்றுக் கணக்கானவரலாறுமற்றும் தொல்லியல் நினைவுச் சின்னங்கள், நம் நாட்டின் பண்டையகலாச்சாரத்தின் சிறப்பினை அயல் நாட்டினருக்குஅறிவித்துக் கொண்டுள்ளன. எனவேதான் அயல் நாட்டுச் சுற்றுலாப் பயணியர் நமதுபண்பாட்டுப் பெருமையைக் கண்டுகளிக்க இங்குவருகின்றனர். நமதுஇந்தியஅரசு 1968 இல்யுனெஸ்கோநிறுவனத்தினைநாடி,நமதுபண்பாட்டுச் சுற்றுலாவைமுன்னேற்றவழிவகைகளைக் கூறக் கேட்டுக் கொண்டது. எனவே 1969 ஆம் ஆண்டுஅறிஞர் நு.சு. அல்ச்சின் இந்தியநினைவுச் சின்னங்களைப் பற்றிஆய்வுசெய்துஅறிக்கைதந்தார். அதில் இந்தியாவின் நினைவுச் சின்னங்கள் கலைப் பெருமைவாய்ந்தவை. எனவேதான் பன்னாட்டுப் பயணியருள் 54 சதவிகிதப் பேர்கள் கட்டடக் கலைச் சிறப்பைக் காணவே இந்தியாவிற்குவருவதாகக் கூறினார். அத்துடன் இந்தியாவின் நினைவுச் சின்னங்களைநான்குவகையினவாகப் பகுத்தார். 1 புத்தசமயத் தொடர்பானவை. 2. இந்துசமயத் தொடர்பானவை. 3. இந்திய இஸ்லாமியத் தொடர்பானவை 4. ஐரோப்பியமற்றும் பிரிட்டிஷ் தொடர்புடையவை.

எல்லாவற்றிற்கும் மேலாகபாரதத்தின் சமயம் சார்ந்தகட்டடங்களே,பல அயல் நாட்டுச் சுற்றுலாப் பயணியரைக் கவர்ந்துவருவதாகவும்,அல்ச்சின் குறிப்பிட்டுள்ளார். எடுத்துக்காட்டாக ஜப்பான்,தாய்லாந்து,சிரீலங்காநாடுகளைச் சேர்ந்தசுற்றுலாப் பயணியர் இந்தியாவிலுள்ளபுத்தசமயத் தொடர்பானநினைவுச் சின்னங்களையும்,அமெரிக்காமற்றும் ஐரோப்பியச் சுற்றுலாப் பயணியர் கிறித்துவசமயமாதாக் கோயில்களைக் கண்டுகளிக்கவருவதைச் சுட்டலாம்.

**இயற்கைச் செல்வம் :** 48.3 சதவிகிதஅயல்நாட்டுச் சுற்றுலாப் பயணியர் இந்தியாவின் இயற்கைச் செல்வங்களைக் கண்டுகளிக்கவும் வருகைதருகின்றனர். இயற்கைச் செல்வங்களையும்,பறவைகள்,விலங்குகள் சரணாலயங்களையும் கொண்டிருப்பதுபாரதம். இங்கு இயற்கைக் காட்சிகளுக்கும்,அருவிகளுக்கும் (Water Falls),கோடைவாசஸ்தலங்களுக்கும் பஞ்சமில்லை. அடுத்துபாரதத்தின் பல்வேறுபகுதிகளில் நடைபெற்றுவரும் கைவினைப் பொருள் தொழில்களும்,பிறபாரம்பரியக் கலைப் பொருள்,உற்பத்திப் பொருள்களும் அயல்நாட்டுச் சுற்றுலாப் பயணியரைக் கவர்கின்றன.

**கவின் கலைகள்** :பாரத்தின் நாட்டியம், இசைமுதலானகவின் கலைகளும்,பண்பாட்டுச் சுற்றுலாவில் அடங்கும். கதக்களி,குச்சுப்பிடி,பரதநாட்டியங்களும்,மோகினிஆட்டங்களும்,கர்நாடக இந்துஸ்தானி

இசையும் ஓரளவிற்குஅயல்நாட்டுப் பயணிகளைக் கவர்ந்துவருகின்றன. தமிழகத்திற்குவரும் சுற்றுலாப்பயணியர்பொய்க்கால் குதிரை,மயிலாட்டம்,காளையாட்டம், ஜல்லிக்கட்டு,குறவன் குறத்திஆட்டம்,ஆகியனவற்றைக் காண்பதில் ஆர்வம் கொண்டுள்ளனர். தமிழ்நாட்டின் கரகாட்டமும்,நாட்டுப்புறநடனங்களும் பலவெளிநாட்டுப் பயணியரால் பாராட்டப்பட்டுள்ளன.

**பழங்கள்** :நம்நாட்டின் பழங்கள்,காய்கறிகள்,திண்பண்டங்களும்கூட அயல்நாட்டுப் பயணியர் சிலரைக் கவர்ந்துள்ளன. இருப்பினும் சுகாதாரக் கேடுவிளைவிக்கக் கூடும் என்றும்,வெளிநாட்டார் அச்சம் கொள்கின்றனர். எனவேஇப்பண்டங்கள் சுகாதாரமுறைகளில் சுத்தமாகத் தயாரிக்கப் பெறல் வேண்டும். நம்நாட்டுமாம்பழங்கள் சுவையானவைஎன்றுவெளிநாட்டினரேஒத்துக் கொள்கின்றனர்.

**அல்ச்சின் கருத்து:**

டாக்டர் இ.ஆர். அல்ச்சின் இந்தியாவின் பண்பாட்டுப் பெருமையைப் பலபடப் பாராட்டியுள்ளார். இந்தியாபழம்பெரும் பாரம்பரியம் மிக்க,பெருந்தொகையானமக்கள் தொகையைக் கொண்டபெரியநாடென்றும்,நான்காயிரம் ஆண்டுகளாகநாகரிகம் பெற்றுள்ளதுடன்,உலகின் புகழ்மிகுநாகரிகங்கொண்டநாடுகளின் வரிசையில் முன்னணியில் நிற்கிறதுஎன்றும் அவர் குறிப்பிடுவார். அயல்நாட்டுப் பயணியரும், இந்தியாவின் பண்பாட்டுப் பாரம்பரியப் பெருமைக்காகவேபண்பாட்டுச் சுற்றுலாவில் ஈடுபடுகின்றனர் எனவும் சுட்டிக் காட்டுகிறார். பெரும்பாலானஅயல்நாட்டுச் சுற்றுலாப் பயணியர்,குறிப்பாகஐரோப்பிய,அமெரிக்கப் பயணியர், இந்தியாவிற்குசுற்றுலாவருவதன் காரணமேஅதன் வரலாற்றுபண்பாட்டுப் பெருமைதான் என்றுஆணித்தரமாகஅல்ச்சின் கூறுவார். எனவேஅரிய,பெரிய,பண்பாட்டுமற்றும் பலதரப்பட்ட,தனித்தன்மைவாய்ந்தசுற்றுலாமையங்களைப் பெற்றுள்ளபாரதம்,பண்பாட்டுச் சுற்றுலாவில் முன்னணியில் நிற்கும் என்பதில் ஐயமில்லை. அண்மைக் காலங்களில் நம் பாரதத்தைப் பார்வையிட்டஐ.நா.சபையின் சுற்றுலாவல்லுநர்களும்,டாக்டர் அல்ச்சின் அவர்களது இந்தியப் பண்பாட்டுப் பெருமைபற்றிக் கூறியகருத்துக்களையேகொண்டுள்ளனர் என்பது இங்கேகுறிப்பிடத்தக்கது. நாம் நம் பாரதத்தின் பண்பாட்டுச் சுற்றுலாமையங்களைமேலும் அழகுபடுத்தி,அயல்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்து,பெரும்பொருளைஈட்டத் தகுந்தநடவடிக்கைகளைமேற்கொள்ளவேண்டும். இவ்வகையில் தனியாரும்,மத்தியஅரசுடன் இணைந்துசெயல்பட்டுவருவதுநமக்குநம்பிக்கை ஊட்டுகிறது.

**வினாக்கள்**

| வ.எண் | ஐந்து மதிப்பெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | விடுதிகள் பற்றிகுறிப்புவரைக. | K2 | CO2 | PO4 |
| 2 | மார்க்கோபோலாபயணஅனுபவகுறிப்பைசுட்டுக. | K4 | CO3 | PO5 |
| 3 | புகழ்பெற்றபயண இலக்கியங்கள் யாவை? | K1 | CO4 | PO1 |
| 4 | உலகஅதிசயங்கள் குறித்துவிளக்குக. | K5 | CO5 | PO2 |
| 5 | இந்தியாவின் உலகபாரம்பரியகளங்கள் குறித்துவிளக்குக. | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | K3 | CO4 | PO3 |

| வ.எண் | எட்டு மதிபெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | சுற்றுலாவும் இலக்கியங்களும் குறித்துகட்டுரைக்க. | K3 | CO4 | PO4 |
| 2 | தமிழககலைப் பண்பாடும் சுற்றுலாவும் - விவரி. | K4 | CO2 | PO6 |
| 3 | இந்தியாவில் உள்ளகோட்டைகளின் பட்டியலைஎடுத்துரைக்க. | K1 | CO1 | PO5 |
| 4 | சுற்றுலாதொடர்புடையதொழில் நுட்பங்களும் கருவிகளும் குறித்துவிவரி. | K5 | CO5 | PO6 |
| 5 | காலந்தோறும் சுற்றுலாவளர்ச்சிகுறித்துகட்டுரைஎழுதுக. | K6 | CO3 | PO3 |

அலகு- 3

**இந்தியச் சுற்றுலாவளர்ச்சிக் கழகம் (ITDC)**

இந்தியச் சுற்றுலாவளர்ச்சிக் கழகங்களை இந்தியாவின் நடுவண் அரசும்,மாநிலஅரசுகளும் நடத்துகின்றன. ஜாஆய்வுக்குழுவின் பரிந்துரைப்படி 1965 ஆம் ஆண்டு இந்தியஓட்டல் கழகம் இந்தியச் சுற்றுலாப் போக்குவரத்துநிறுவனம் ஆகியவற்றைப் பொதுத்துறையில் இந்தியஅரசுஅமைத்தது. இவற்றின் முக்கியப் பணிகளாவன. 1.பொதுத்துறையில் ஓட்டல்களைநிறுவுதல், 2. சுற்றுலாவிளம்பரத்திற்கானசாதனங்களைஉருவாக்குதல்,3.சுற்றுலாப்பயணிகளுக்குத் தக்கபோக்குவரத்துவசதிகளைவழங்குதல் ஆகியன 1965 இல் ஜாஆய்வுக்குழுப்

பரிந்துரைப்படிஅமைக்கப்பட்டமேற்சொன்ன மூன்றுநிறுவனங்களையும் ஒன்றிணைத்து 1966 ஆம் ஆண்டு இந்தியசுற்றுலாவளர்ச்சிக் கழகத்தைஅரசுஅமைத்தது.

**இந்தியசுற்றுலாவளர்ச்சிக் கழகத்தின் நோக்கம்**

**நோக்கம்** : 1சுற்றுலாப் பயணிகளுக்குத் தங்கும் வசதிகளைச் சிறப்பாகவழங்க,நல்லதரமானஉணவகங்கள்,தங்குமிடங்கள், (ஓட்டல்கள்,மோட்டல்கள்) சுற்றுலாமாளிகைகள்,விருந்தினர் இல்லங்கள்,கடற்கரைப் பொழுதுபோக்கு இடங்கள் போன்றவற்றைஉருவாக்கிநிருவகித்தல், 2.நல்ல போக்குவரத்துவசதிகளைப் பயணிகளுக்குஏற்படுத்தித் தருதல், 3. கலைவிருந்துகளான இசைக்கச்சேரிகள்,ஒலி-ஒளிக் காட்சிகள் போன்றகேளிக்கைநிகழ்ச்சிகளைஅவர்களுக்கெனஏற்பாடுசெய்தல். 4. பயணிகளுக்குத் தேவையானபொருள்கள் கிடைக்கஅங்காடிகளைஅமைத்தல், 5.இந்தியச் சுற்றுலாவுக்கானவிளம்பரங்களைஉள்நாட்டிலும்,வெளிநாடுகளிலும் உருவாக்கித் தருதல்,போன்றநோக்கங்களை இந்தியசுற்றுலாவளர்ச்சிக் கழகம் நிறைவேற்றிவருகிறது.

**சுற்றுலாச் சேவைகள்**

மேற்கண்ட 5 நோக்கங்களைஅடிப்படையாகக் கொண்டு இந்தியச் சுற்றுலாவளர்ச்சிக் கழகம் சுற்றுலாவளர்ச்சிக்கானபல இன்றியமையாச் சேவைகளைச் செய்துவருகிறது. தொடக்கத்தில் இக்கழகம் 129 அறைகளைக் கொண்டஓட்டலும், 50 சொகுசுக்கார்களும்,பேருந்துகளுமேபெற்றிருந்தது. ஆனால் இப்போது இந்தியசுற்றுலாவளர்ச்சிக் கழகம் அறுபதாயிரம் அறைகள் கொண்டஓட்டல்களையும்,முந்நூறுக்கும் மேற்பட்டநல்லபோக்குவரத்துவாகனங்களையும் கொண்டபெரியநிறுவனமாகவளர்ந்தோங்கிச் செயல்படுகிறது. தற்போது 2,12,858 அறைகள் கட்டப்பட்டுவருகின்றன. இதுவே இந்தியாவில் உள்ளபிறதங்குமிடநிறுவனங்களைக் (வுவுனுஊ)நமதுநடுவண் அரசுசுற்றுலாத் துறைக்குச் சிறப்புநிலைகொடுப்பதைப் போன்றுதமிழகஅரசும் இத்துறைச் சிறப்புநிலைஎய்தப் பலவிதமானசெயல்பாடுகளைமேற்கொண்டுவருகின்றது. இதன்பயனாகத் தமிழகமண்ணிற்குவருகைபுரியும் வெவ்வேறுநாட்டுப் பயணிகளின் எண்ணிக்கைமிகுந்தஅளவில் உயர்ந்துவருகின்றது. குறிப்பாகக் கூறின் 1986ஆம் ஆண்டில் இந்தியமண்ணைநோக்கி 10 இலட்சத்திற்குமேற்பட்டஅயலகப்பயணியர்களின் எண்ணிக்கை 2,98,290 ஆகும். மேலும்,அண்மைநாடான ஸ்ரீலங்காவிற்குச் செல்லும் அயலகப்பயணியர்களுள் பெரும்பாலோர் தமிழகத்தில் சிலநாட்கள் தங்கிச் செல்கின்றனர். இவ்வகையில் தமிழகத்திற்குவருகைபுரியும் பயணியரின் எண்ணிக்கைசிறப்பானதொருநிலையில்காணப்படுகின்றது. எனவே,இந்தியஅளவில்தமிழ்நாடு,அயல்நாட்டுப் பயணிகளைப் பெருமளவுகவர்ந்திழுக்கும் மாநிலங்களுள் ஒன்றாகத் திகழ்கின்றது. தமிழ்நாடு இந்தியாவில் சுற்றுலாவளர்ச்சியில் மூன்றாவது இடத்தைஎட்டியுள்ளது.

**தமிழகசுற்றுலாவளர்ச்சிநிலையில் இந்தியஅரசின் பணி:**

இந்தியஅரசு 1991 ஆம் ஆண்டைசுற்றுலாஆண்டாகஅறிவித்தது. இதனை“இந்தியாவிற்குவருக” என்றவாசகவிளம்பரத்தின் வழிக் காணலாம். இந்தியாவில் குறிப்பாகபஞ்சாப், அஸ்ஸாம் முதலானமாநிலங்களில் பயங்கரவாதிகளும்,தீவிரவாதிகளும் நாட்டின் சமூகஅமைதிச் சூழல்களுக்கு மாசுஏற்படுத்தினர். இதன் காரணமாகஅயல்நாட்டுப் பயணியர் வட இந்தியாவிற்குச் செல்லஅஞ்சினா். இச்சூழலைஉணர்ந்தமத்தியஅரசுதென்னிந்தியாவில் குறிப்பாகத் தமிழகத்தில் சுற்றுலாவைவிரிவுபடுத்தமுயன்றது. இதன் பொருட்டுசிலபுதியசுற்றுலாவழித் தடங்களைஅறிவித்தது. அவற்றைஅயல்நாடுகளில் விளம்பரப்படுத்தியது. அத்தோடுமட்டுமல்லாமல் அறிவிக்கப்பட்ட இப்புதியவழித்தடங்களில் பலநவீனவசதிகளையும் அரசுசெய்தது. அவையாவன

1 கொச்சி-அலப்பே-கோட்டயம் - தேக்கடி - கொடைக்கானல் -மதுரை

2. கோவை -குன்னூர் - ஊட்டி - முதுமலை- மைசூர்- பெங்களூர்

3. சென்னை - மகாபலிபுரம்-காஞ்சி - பாண்டி

4. திருச்சி - தஞ்சை-நாகப்பட்டினம்-சிதம்பரம் -கங்கைகொண்டசோழபுரம்

**தமிழகச் சுற்றுலாவளர்ச்சிக்குத் தமிழகஅரசின் செயல்பாடுகள்**

சுற்றுலாவின் பயன்பாட்டையும் சிறப்பையும் ஆர்வத்தையும் உள்நாட்டுமக்களிடையேவளர்க்கும் பொருட்டு,தமிழகஅரசுமாவட்டந்தோறும் இரண்டுசுற்றுலாமையங்களைஉருவாக்கமுடிவுசெய்துள்ளது. இவ்வகையில் இவ்வரசு 40 இடங்களைமாவட்டச் சுற்றுலாமையங்களாகத் தேர்ந்தெடுத்துள்ளது. இம்மையங்களைபுனரமைக்கப் புதியதோர் திட்டத்தையும் அரசுமுனைப்புடன் செயல்படுத்திஉள்ளது. இதன் தொடர்பாகஒவ்வொருமாவட்டத்திலும் இயங்கிவரும் போக்குவரத்துக் கழகங்கள் தம்மிடம் உள்ளஉபரிப் பணத்தை இச்சுற்றுலாமையங்கள் மேம்பாட்டையப்பயன்படுத்தவேண்டும் என்பதாகும். இதன் அடிப்படையில் இச்சுற்றுலாமையங்களுக்கு 1986 - 87 ஆம் ஆண்டில் ரூ.8 இலட்சம் ஒதுக்கீடுசெய்துசெலவினப் படுத்தியுள்ளது. இத்தகையதோர் திட்டத்தைமுதன் முதலாகச் செயற்படுத்தியசிறப்புத் தமிழகத்தையேசாரும்.

தமிழகஅரசுசுற்றுலாவைமேன்மைபெறச் செய்யும் பொருட்டு இதற்குத் தொழில் மதிப்பைவழங்கிஉள்ளது. இம்மதிப்பார்ந்தநிலையில் தொழில் துறைகளுக்குவழங்கப் பெறும் அனைத்துச் சலுகைகளும் இத்துறைக்கும் தமிழகஅரசால் வழங்கப் பெறுகின்றது. இத்தகையசிறப்புநிலையில் தமிழகஅரசுசுற்றுலாவைவிரிவாக்கும் பணியில் 1971 ஆம் ஆண்டு “தமிழ்நாடுசுற்றுலாவளர்ச்சிக் கழகம்” எனும் அமைப்பைநிறுவியது. இத்தகையஅமைப்பின் அடிப்படையானசெயல்பாடுகள் கீழ்க்குறித்தனவாகஅமைகின்றன.

1. குறைந்தவருமானம் பெறுவோர் தங்குவதற்குரியஓய்வுவிடுதிகளைநிர்மாணித்துநிர்வாகம் செய்தல்.
2. சுற்றுலாமையங்களைநவீனப்படுத்துதல்
3. சுற்றுலாபற்றிவிளம்பரம் செய்தல்
4. தொடர் பயணசுற்றுலாக்களைநடத்துதல்

**தமிழகச் சுற்றுலாவளர்ச்சிக் கழகத்தின் சிறப்புப் பணிகள்**

இக்கழகம் முதன்முறையாக இதுகாறும் அரசின் பொறுப்பில் இருந்தசுற்றுலா இல்லங்களைத் தனதுமேற்பார்வையின் கீழ்க் கொண்டுவந்தது. சுற்றுலாப்பயணிகளுக்குக் குறைந்தசெலவில் தங்கும் வசதிகளை இக்கழகம் ஏற்பாடுசெய்கிறது. பயணிகளைப் பல்வேறுசுற்றுலாமையங்களுக்குஅழைத்துச் செல்லத் திட்டங்கள் தீட்டிச் செயல்படுத்துகிறது. புகழ்மிகுசுற்றுலாமையங்களில் உண்ணும் விடுதிகளையும் தங்கும் விடுதிகளையும் கட்டிச் சேவைபுரிகிறது. இக்கழகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் ஏறத்தாழ 32 தங்கும் விடுதிகள் உள்ளன. இவற்றுள் நட்சத்திரத் தகுதிபெற்றஓட்டல்கள் ஐந்துஉள்ளன. இவை முறையேமதுரை,கோயம்புத்தூர்,ஒக்கேனக்கல்,ஏற்க்காடுஆகியனவாகும். இந்நான்கு இடங்களில் உள்ளவைஒருநட்சத்திரஓட்டல்களாகும். மதுரையில் இரண்டுநட்சத்திரஓட்டல் ஒன்றுஉள்ளது. இக்கழகம் திருநெல்வேலி,கன்னியாகுமரி,ராமேஸ்வரம்,திருச்சி,தஞ்சை,சிதம்பரம்,கொடைக்கானல்,ஊட்டிமுதலான இடங்களில் விடுதிகளையும்,அமைத்துநிருவகித்துவருகிறது. மேலும் கிருஷ்ணகிரி,ராணிப்பேட்டை,உளுந்தூர்ப்பேட்டைஆகிய இடங்களிலும் தமிழ்நாடுசுற்றுலாவளர்ச்சிக்கழகம் விடுதிகளைநிறுவியுள்ளது. கடற்கரைவிடுதியையும் நடத்திவருகிறது. மேற்கூறப்பட்டநட்சத்திரஓட்டல்கள்,விடுதிகள் மட்டும்அன்றிஅக்கழகம் தமிழ்நாடுமுழுவதிலும் 10 இளைஞர் விடுதிகளையும் ஏற்படுத்தியுள்ளது. இவைமண்டபம், இராமேஸ்வரம்,கன்னியாகுமரி,கொடைக்கானல்,பிச்சாவரம்,ஊட்டி,முதுமலை,கோத்தகிரி, ஏலகிரி,ஏர்க்காடுமுதலான இடங்களில் அமைந்துள்ளன.

கோடைவாழிடங்களையும் கோயில்களையும் விடுமுறைப் பொழுதுபோக்குமிடங்களையும் பார்வையிடுவதில் அயல்நாட்டுப்பயணிகள் மிகுந்தஆர்வம் காட்டுகின்றனர். ஆதலின் இக்கழகம் கொடைக்கானல்,முட்டுக்காடு,பிச்சாவரம்,அண்ணாநகர், (சென்னை) ஊட்டி,ஏற்க்காடுமுதலான இயற்கைஅழகுமிக்க இடங்களில் படகுவீடுகளைக் கட்டி,சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்துவருகின்றது. முட்டுக்காட்டில் அயல்நாட்டுப் பயணிகளைக் கவரும் வகையில் பலபுதியநீர் விளையாட்டுக்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

தமிழ்நாடுஅரசுசுற்றுலாதகவல் நிலையங்கள் - தமிழ்நாடுசுற்றுலாத்துறைசென்னை,மதுரை,திருச்சிராப்பள்ளி,தஞ்சாவூர்,திருநெல்வேலி,கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலும் ஐதராபாத்,திருவனந்தபுரம்,பெங்களுர் முதலான இடங்களிலும் சுற்றுலாத்தகவல் நிலையங்களைநிறுவியுள்ளது. இந்நிறுவனம் தமிழ்நாட்டில் சென்னை,மாமல்லபுரம்,தஞ்சாவூர்,சேலம்,மதுரை,உதகமண்டலம்,கொடைக்கானல்,தருமபுரி,சிதம்பரம்,பூம்புகார்,திருச்சிராப்பள்ளி,கன்னியாகுமரி, இராமேசுவரம்,திருநெல்வேலிமுதலான இடங்களிலும் பிறமாநிலங்களில் டெல்லி,மும்பை,கல்கத்தா,கோவாமுதலானநகரங்களிலும் சுற்றுலாஅலுவலங்களையும் திறந்துள்ளது.

**தமிழ்நாடுசுற்றுலாவளர்ச்சிக்கழகம்**

1) சென்னைமாநகரைச்சுற்றிப் பார்க்கஒருநாள் சுற்றுலா.

2) திராவிடப் பண்பாட்டுச் சுற்றுலா (காஞ்சி,மாமல்லை,முத்துக்காடு)

3) பாண்டிச்சேரிச்சுற்றுலா.

4)தொண்டைநாட்டுத் திருத்தலச் சுற்றுலா,திருப்பதிச்சுற்றுலா (இரவுப்பயணம்) சத்திச்சுற்றுலா(தேவியரைவணங்கும் சுற்றுலா)திருமால்தரிசனச் சுற்றுலா(சென்னையைச் சுற்றியுள்ள 9 வைணவத்தலங்கள்) சுற்றுலாவைநடத்துகின்றது.

தமிழ்நாட்டிற்குவெளியே(அ) 7 நாள் மூகாம்பிகைசுற்றுலா (பெங்களுர்.∵.பேலூர்.∵. ஹளபிடு.∵. ஹசன்.∵.சிருங்கேரி.∵.உடுப்பி.∵.தர்மசாலா.∵.மைசூர்.∵.ஒகனேக்கல்)(ஆ) 7நாள் கோவா.∵.மந்தராலயம் சுற்றுலா(இ) 8 நாள் ஆந்திரச் சுற்றுலா (ஈ) 8 நாள் தமிழகச் சுற்றுலா (பாண்டி,பிச்சாவரம்.∵.சிதம்பரம்.∵.வைத்தீசுவரன் கோயில்.∵.நாகூர்.∵.வேளாங்கண்ணி.∵.தஞ்சை.∵. இராமேசுவரம்.∵.மண்டபம்.∵.கன்னியாகுமரி.∵.சுசிந்திரம்.∵.மதுரை.∵.கொடைக்கானல்.∵.திருச்சிராப்பள்ளி) (உ) 8 நாள் தென்னிந்தியச் சுற்றுலா(ஊ) 12 நாள் மும்பை.∵. அஜந்தா,எல்லோராசுற்றுலா.(எ) 14 நாள் பூரி.∵.கயா.∵.காசி-.∵.அலகாபாத்சுற்றுலாமுதலானசுற்றுலாக்களைநடத்திவருகின்றது.

புகழ்மிகுசுற்றுலாத்தலங்கள்,கோடைவாழிடங்கள் எனும் தலைப்பில் உள்ள இடங்களையும் இத்தலைப்பில் இணைத்துப் படிக்கலாம்.தமிழ்நாடுசுற்றுலாவளர்ச்சிக்கழகம் கீழ்க்காணும் தலங்களுக்கு 29 வகையானசுற்றுலாக்களையும் நடத்திவருகிறது. 1 நாள் மாமல்லபுரம், 1 நாள் திருப்பதி, 1 நாள் திருவண்ணாமலைகிரிவலம், 1 நாள் சுருட்டப்பள்ளி, 1 நாள் வல்லக்கோட்டை - திருத்தணி,1 நாள் கொளவாய் ஏரி - வண்டலூர் உயிரியல் பூங்கா - கிஷ்கிந்தா, 1 நாள் தென்னங்கூர் - உத்திரமேரூர் மதுராந்தகம், 1 நாள் திருத்தணி - காளஹஸ்தி - கல்லாத்தூர் - மாத்தூர், 3 நாள் பஞ்சபூதத்தலங்கள், 3 நாள் நவக்கிரகத்தலங்கள், 4 நாள் சோழநாட்டுத் - திருப்பதிகள், 5 நாள் பாண்டியநாட்டுத் திருப்பதிகள், 5 நாள் ஐதராபாத் விஜயவாடா, 8 நாள்

கிழக்கு-மேற்குகடற்கரைச் சுற்றுலா, 14 நாள் மும்பை அஜந்தா - எல்லோரா 14 நாள் பூரி - கயா - காசிஅலகாபாத் மற்றும் மாணவர்க்கான 16 வகையானசிறப்புச் சுற்றுலாக்கள்.2003-2004 ஆம் ஆண்டில் (அ) சுகாதாரச் சுற்றுலா (ஆ) மலைத்தோட்டச் சுற்றுலா (இ) சாகசச் சுற்றுலா, (ஈ) சுற்றுச் சூழல் சுற்றுலாமுதலானவற்றைமேம்படுத்தத் தமிழ்நாடுசுற்றுலாவளர்ச்சிக்கழகம் திட்டமிட்டுள்ளது.

தமிழ்நாட்டிற்குஅயல்நாட்டுப் பயணியரைக் கவரும் நோக்குடன்,மாநிலசுற்றுலாவளர்ச்சிக்கழகம் தனியாருடன் இணைந்தும், இதரமாநிலங்களுடன் ஒருங்கிணைந்தும் சிலதிட்டங்களைச் செயல்படுத்தஉள்ளது. ஆந்திரம்,கர்நாடகம்,உத்திரப் பிரதேசம்,உத்ராஞ்சல், இராஜஸ்தான் ஆகியமாநிலங்களுடனும் புதுடில்லியுடனும், இந்தியஅரசுசுற்றுலாவளர்ச்சிக் கழகத்துடனும் இணைந்துசெயல்படஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன. தமிழகக் கடற்கரைகளில் தனியார் உதவியுடன் பொழுதுபோக்குப் பூங்காக்கள் அமைக்கநடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. தமிழ்நாடுசுற்றுலாவளர்ச்சிக் கழகம் தனியார் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளவிருக்கும் கேளிக்கை - பூங்காக்கள்,கம்பிவழி பயணவசதி, கடல் பயணிகள் இறங்கும் தளங்கள் (Cruise Terminals) ஆகாயபூங்கா (Air Park) ஒலி - ஒளிக்காட்சிமுதலானபேரளவில் வருவாய் ஈட்டும் தமிழகஅரசின் திட்டங்களுக்கு,மையஅரசுஉரியமானியம் அளித்துஊக்குவிக்கின்றது.

**திட்டங்கள்:**

ஒருநாட்டிற்குஅந்நியச் செலாவணியைஈட்டித் தரும் தொழில்களுள்,சுற்றுலாத் தொழில் முக்கிய இடம் பெறுகிறது. சுற்றுலாவருவாய் கண்ணுக்குத் தெரியாதவருவாயாகும். சுற்றுலாவினால் தேசியவருவாய் கூடுகிறது. நாட்டின் முன்னேற்றத்திற்குஉறுதுணைப்புரியும் சுற்றுலாத் தொழிலைமேம்படுத்துவதில் அனைத்துநாடுகளும் முனைப்புடன் செயல்படுகின்றன. எனவேஅரசாங்கம் சுற்றுலாத் தொழிலின்வளர்ச்சிக்காகஆண்டுதோறும் நிதிஒதுக்கீடுசெய்து,அவற்றைச் செலவுசெய்து,சுற்றுலாமையங்களைஅழகுபடுத்துவதுடன்,தேவையானபோக்குவரத்துவசதிகளையும் தங்குமிடவசதிகளையும் பெருக்குகிறது. இதற்காகச் செலவுசெய்யப்படும் பணம் வீணாவதில் மாறாகப் பன்மடங்குவருவாயைஈட்டித்தருகிறது. இதில் ஒருரூபாய் முதலீடுசெய்தால் ஐம்பதுரூபாய்க்குமேல் லாபம் கிடைக்கிறது. தேசியஒருமைப்பாட்டையும்,பன்னாட்டுநல்லுறவையும் வளர்ப்பதுடன் பல்லாயிரக் கணக்கானமக்களுக்குவேலைவாய்ப்பளிக்கும் சுற்றுலாத் தொழிலைமுன்னேற்ற, நம் பாரதஅரசும் ஐந்தாண்டுத் திட்டங்களில் சுற்றுலாவணிகத்தைவளர்ச்சியடையச் செய்யத் திட்டங்கள் தீட்டியதுபற்றிக் காண்போம்.

**அ. முதலாவதுஐந்தாண்டுத் திட்டம் (1951-1956)**

இத்திட்டக் காலத்தில் சுற்றுலாவின் முக்கியத்துவம் உணரப்படாததால் சுற்றுலாவின் மீதுகவனம் செலுத்தப்படவில்லை. எனவேஅதன் வளர்ச்சிக்காகநிதிஒதுக்கப்படவில்லை. இருப்பினும் இத்திட்டக் காலத்தில்தான் நியூயார்க்,லண்டன்,பாரிஸ்,கொழும்புமுதலானஒன்பது இடங்களில் இந்தியச் சுற்றுலாஅலுவலகங்கள் திறக்கப்பட்டன.

**ஆ. இரண்டாவதுஐந்தாண்டுத் திட்டம் (1956-1961)**

இக்காலக்கட்டத்தில் சுற்றுலாத் தொழிலின் முக்கியத்துவம் ஓரளவுஉணரப்பட்டதுஎனவேபாரதஅரசு 3.36 கோடிரூபாய் நிதிஒதுக்கியது. சுற்றுலாவிற்கெனதனித்துறைஉருவாக்கப்பட்டது (1958),சுற்றுலாவளர்ச்சிக்கானஅடிப்படைவசதிகளைச் செய்வதில் இத்துறைஆர்வம் காட்டியது.

**இ. மூன்றாவதுஐந்தாண்டுத் திட்டம் (1961-1966)**

இத்திட்டகாலத்தில் பாரதஅரசுசுற்றுலாவைமுன்னேற்றுவதில் பேரார்வம் காட்டியது. எனவேஎட்டுகோடிரூபாய் நிதிஒதுக்கீடுசெய்யப்பட்டது. புவனேசுவரம், கஜீராஹோ,கொனாரக்,மாமல்லபுரம்,தஞ்சாவூர் - முதலானமையங்கள்,சிறப்பானதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு,முன்னேற்றத்திற்கானசெயல்வடிவங்கள் தீட்டப்பட்டன. எதிர்பாராதவகையில்,பாகிஸ்தானின் ஆக்கிரமிப்பு இக்காலக் கட்டத்தில் நிகழ்ந்ததால் இதன் வளர்ச்சிதடைப்பட்டது. ஐந்தாண்டுத் திட்டம் கைவிடப்பட்டு,மூன்றாவதுஆண்டுத் திட்டமுறைஅமுலுக்குவந்தது. எனவே இத்திட்டகாலத்தில் (1966-69) சுற்றுலாமேம்பாட்டிற்காக ஏழு கோடிரூபாய் மட்டுமேஒதுக்கப்பட்டது.

**ஈ. நான்காவதுஐந்தாண்டுத் திட்டம் (1909-1974)**

சுற்றுலாத்துறையில் இத்திட்டகாலம் ஒருமைல் கல் ஆகும்.ஏனெனில் சுற்றுலாவிற்குத் தொழில் துறைதகுதிவழங்கப்பட்டது.இக்காலத்தில் தான்,பாரதஅரசுசுற்றுலாவிற்காக 36 கோடிரூபாய் ஒதுக்கியது.இதில் 11 கோடிரூபாய் மாநிலங்களின் சுற்றுலாத் திட்டங்களுக்குவழங்கப்பட்டது. சுற்றுலாஏற்பாடுசெய்துவரும் தனியார் துறைகளுக்குசொகுசுவாகனங்கள் வாங்கவும்,சொகுசுவிடுதிகள் கட்டவும் கடன்வழங்கப்பட்டன. மத்தியஅரசுசுற்றுலாவைஊக்குவிக்கவாகனவசதிகளையும் சாலைவசதிகளையும் பெருக்குவதில் ஆர்வம் காட்டியது

**உ.ஐந்தாவதுஐந்தாண்டுத் திட்டம் (1974-1979)**

இத்திட்டகாலத்தில் சுற்றுலாமேம்பாட்டிற்காக 40.74 கோடிரூபாய் ஒதுக்கப்பட்டது. இதில் இந்தியசுற்றுலாத் துறைக்கு (ஐவுனுஊ) 2632 ரூபாய் ஒதுக்கப்பட்டு,வளர்ச்சிப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 17.12 கோடிரூபாய் நிதிஇந்தியசுற்றுலாவளர்ச்சிக் கழகத்திற்கும்

ஒதுக்கப்பட்டது. இக்காலக் கட்டத்தில் ஒருங்கிணைந்தசுற்றுலாவளர்ச்சித் திட்டத்திற்குமுன்னுரிமைவழங்கப்பட்டு,கோவளம்,கோவா,குலமார்க் - முதலானநகரங்களைஅழகுபடுத்தும் பணிமேற்கொள்ளப்பட்டன. மேலும் இளையோர்விடுதிகள் (லுழரவா ர்ழளவநடள)சுற்றுலாசிங்காரமாளிகைகள்,காட்டுவிடுதிகள் ஆகியனஅமைக்கப் பெறவும் நிதிஒதுக்கப்பட்டது.

**ஊ. ஆறாவதுஐந்தாண்டுத் திட்டம் (1980-1985)**

பண்பாட்டுச் சுற்றுலா,கோடைவாழிடச் சுற்றுலா,வனவிலங்குப் புகலிடச்சுற்றுலா,சுற்றுலாப் பயிற்சித் திட்டங்கள் - ஆகியவற்றைமேம்படுத்த இத்திட்டகாலத்தில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. பணக்காரநாடுகளிலிருந்துசுற்றுலாப்பயணிகளைப் பாரதத்திற்குவரவழைப்பதற்கானசெயல்திட்டங்கள் தீட்டப்பட்டன. சுற்றுலாத் துறையில் தனியார் துறையினரின் முதலீடுகளைஊக்குவிக்கவும் முடிவெடுக்கப்பட்டது. தங்குமிடவசதிகளைப் பெருக்கும் வகையில் 1985-ஆம் ஆண்டிற்குள் இந்தியச் சுற்றுலாக் கழகம் கட்டும் விடுதிகளின் எண்ணிக்கையைஐந்தாயிரமாகஅதிகரிக்கத் திட்டம் தீட்டப்பட்டது.

**ஊ. ஏழாவதுஐந்தாண்டுத் திட்டம் (1985-1990)**

இக்காலக் கட்டத்தில் சுற்றுலாஅந்நியச் செலாவணியைச் சம்பாதிக்கும் தொழிலாகமேன்மையுற்றது. இத்திட்டகாலத்தில் தான் சுற்றுலாஏற்றுமதித் தொழிலாகஏற்றுக் கொள்ளப்பட்டது. சுற்றுலாவளர்ச்சிக்காகரூ.326.16 கோடிரூபாய் நிதிஒதுக்கீடுசெய்யப்பட்டது. பண்பாட்டுச் சுற்றுலாவிற்கும் சமூகச் சுற்றுலாவிற்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. அயல்நாட்டுச் சுற்றுலாப் பயணிவருகையின் சுற்றுலாவளர்ச்சியைவிரிவுபடுத்தவும்,கைவினைப் பொருள் உற்பத்திமற்றும் கலைப்பொருள் உற்பத்தியைஅதிகரிக்கவும் முடிவெடுக்கப்பட்டது. சுற்றுலாவில் பயிற்சியளிப்பதற்காகப் பலபயிற்சிநிறுவனங்கள் நிறுவப்பட்டன. இதன் விளைவாக 1989-1990 ஆம் ஆண்டுவருகைபுரிந்தசுற்றுலாப் பயணியர் மூலம் அரசுக்கு 24560 மில்லியன் ரூபாய் அந்நியச் செலாவணிகிடைத்தது. இதுசென்றஆண்டைக் காட்டிலும் 16.8 சதவிகிதம் அதிகமாகும். இக்காலக் கட்டத்தில் சொகுசுவிடுதிகளில் 15000 புதியஅறைகள் கட்டப்பட்டன.

**எ) எட்டாவதுஐந்தாண்டுத் திட்டம் (1990 - 95)**

எட்டாவதுஐந்தாண்டுத்திட்டகாலத்தில் சுற்றுலாவளர்ச்சியில் மாபெரும் வளர்ச்சிக்கானத் திட்டங்கள் தீட்டப்பட்டன. 1991இந்தியாவருகஆண்டாகக் கடைப்பிடிக்கப்பட்டதால்,அயல்நாடுகளில் இந்தியச் சுற்றுலாவிழாக்களும் கண்காட்சிகளும் நடத்தத் திட்டங்கள் தீட்டப்பட்டன.

குறிப்பிடப்பட்டசிலசுற்றுலாமையங்களைநவீனப்படுத்தவும்,விடுமுறைச் சுற்றுலாவைமேம்படுத்தவும்,குளிர்காலவிளையாட்டுக்கள்,மலையேற்றம்,நீர் விளையாட்டுகள் - போன்றவற்றைவிரிவுபடுத்தவும் முயற்சிகள் மேம்படுத்தப்பட்டன. இத்திட்டகாலத்தில் 272 கோடிரூபாய் நிதிஒதுக்கப்பட்டது. அதேநேரத்தில் தனியார் துறைகளின் முதலீடுகளைஊக்குவிக்கப்பெருமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதனால் சுற்றுலாவில் முதலீடுசெய்யப்படும் தொகையில் ஐம்பதுசதவிகிதத்திற்குவருமானவரிவிலக்களிக்கப்பட்டது. சுற்றுலாநிதிக்கழகம் தனியார் நிறுவனங்களுக்குசொகுசுவிடுதிகள்,பொழுதுபோக்குப் பூங்காக்கள்,ஓய்வில்லங்கள் - ஆகியனஅமைக்கக் கடன் வழங்கியது. சாலைவசதிகள் விரிவுபடுத்தப்பட்டது. இதன் விளைவாக 1991-இல் உள்நாட்டுப் பிரச்சனைகளின் காரணமாகநமதுசுற்றுலாவருவாய் உயரவில்லை. ஆனால் 1995-1996 ஆம் ஆண்டுகளில் பாரதம் அதிகவருவாய் பெற்றது. உலகச் சுற்றுலாவருவாயில் இந்தியாவின் பங்கு 0.39மூஆகஉயர்ந்தது.

**ஏ) ஒன்பதாவதுஐந்தாண்டுத் திட்டம் (1997-2002)**

இத்திட்டகாலத்தில் மெகா-சுற்றுலாவைமேம்படுத்தத் திட்டங்கள் தீட்டப்பட்டன. 1997-98 இல் 4,728.99 லட்சரூபாய் சுற்றுலாவிற்காகஒதுக்கப்பட்டது. இதில் 11,60725 லட்சம் ரூபாய் மாநிலங்களில் சுற்றுலாவைமேம்படுத்தஒதுக்கப்பட்டது. கைவினைத் தொழில் உற்பத்திக்கும்,பண்பாட்டுச் சுற்றுலாவிற்கும் இத்திட்டகாலத்தில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. அயல்நாடுகளில் சுற்றுலாஅலுவலகங்கள் பலதிறக்கப்படதிட்டங்கள் தீட்டப்பட்டன. வானூர்திவசதிகளைப் பெருக்க,வானூர்திநிலையங்களைவிரிவுபடுத்த,சாலைகள்,சொகுசுவிடுதிகள் அமைத்தல் - முதலானவற்றிற்குமுன்னேற்றமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

**சுற்றுலாத் தலங்களில் கட்டமைப்புவசதிகள் விரிவாக்கம்**

தமிழகசுற்றுலாத்துறை,பிறதுறைகளுடன் இணைந்துசுற்றுலாத் தலங்களில் கட்டமைப்புவசதிகளைமுன்னேற்றிவருகிறது. கடந்த - இரண்டாண்டுகளில் 15 மாவட்டங்களில் உள்ளசுற்றுலாமையங்களில் கட்டமைப்புவசதிகளைமேம்படுத்தசுற்றுலாத்துறைமட்டும் ரூ. ஐந்துகோடிசெலவிட்டுள்ளது. சுற்றுலாத் துறையின் கீழுள்ள 20 சுற்றுலாஅலுவலங்கள், 21 சுற்றுலாத் தகவல் மையங்கள் ஆகியவற்றில் கணினிகள் நிறுவுதல்,நிகரிகுயுஓ) வசதிகள் செய்தல்,ஆகியவற்றைபடிப்படியாகச் செய்துவருகின்றது. அனைத்துஅலுவலகங்களிலும் இவ்வசதிகள் செய்துமுடிக்கப்பட்டபின்னர்சுற்றுலாவளர்ச்சிக் கழகத்தின் பிரிவுகள் ஒன்றோடொன்றுவான் இணைப்பு (றுயபெ ஊழநெஉவளைவைல) மூலம் இணைக்கப்படும். சுற்றுலாபயணத் திட்டங்களில் இருக்கைகள் முன்பதிவுசெய்ய,விடுதிகளில் முன்பதிவுசெய்ய,சுற்றுலாப் பயணிகளுக்குஆன்லைன் (ழுெ டுரைந) வசதிகள் செய்துகொடுப்பதுதான் மாநிலசுற்றுலாக் கழகத்தின் இலக்காகஉள்ளது. தகவல் தொழில் நுட்பமேம்பாட்டால் தமிழகச் சுற்றுலாமேம்படும். தனியார் ஒத்துழைப்புடன் மாமல்லபுரம்

அருகேபண்பாட்டுக் கிராமம் ∴ அமைதிப் பூங்காஅமைத்தல்,முட்டுக்காட்டில் அமைதிப் பூங்காஅமைத்தல் ஆகியனமுடிவுறும் தருவாயில் உள்ளன.

மாமல்லபுரத்திற்குவருகைதரும் சுற்றுலாப் பயணிகளைமகிழ்விக்க,மாமல்லபுரத்திலுள்ளதமிழ்நாடுசுற்றுலாவளர்ச்சிக் கழகவளாகத்தில் கடல் நீர் சாகசவிளையாட்டுப் பூங்காஅமைக்கப்படவுள்ளது. இப்பூங்காவில் வாட்டர் சர்பிங்,வாட்டர் ஸ்கூட்டர்,மீன்பிடித்தல் போன்றபொழுதுபோக்குஅம்சங்கள் இடம்பெறும். கன்னியாகுமரியில் ஸ்பா (ளுிய) உலாத்தலம் அமைக்கத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. உடல்,உள்ளம்,உணர்வு,ஆத்மாஆகியவைகளுடன் நல்லிணக்கமாகவுள்ளபஞ்ச மூலப் பொருட்களுடன் இணைந்துள்ளமுறைமாற்றுமருத்துவமுறை “ஸ்பா’’ஆகும். இதனால் நாம் வெளிநாட்டுப் பயணியரைக் கவரஇயலும்.மதுரைதிருமலைநாயக்கர்மகாலில் உள்ளதைப் போன்றுமாமல்லபுரம்,காஞ்சி,தஞ்சை,கன்னியாகுமரிஆகிய இடங்களில் இந்தியசுற்றுலாவளர்ச்சிக் கழகத் தொழில் நுட்பவசதியுடன் நவீனமயமானஒளி - ஒலிக்காட்சிகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மாநில,தேசியஅளவில் மட்டுமின்றிபன்னாட்டளவிலும் பலமொழிகளில் தமிழகச் சுற்றுலா வளம் பற்றிநவீனமுறையில் விளம்பரங்கள் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

நவம்பர் 2002-இல் லண்டனில் நடைபெற்றஉலகச் சுற்றுலாச் சந்தையிலும் (றுழசடன வுசயளநட ஆயசவ)மார்ச் 2003-இல் பெர்லினில் நடைபெற்றஐவுடீமாநாட்டிலும் பங்கேற்றதமிழ்நாடுசுற்றுலாவளர்ச்சிக் கழகம், 2003 அக்டோபரில் ஸ்கால் அமைப்புடன் (ளுமுயுடு) இணைந்து, ஸ்கால் மாநாட்டைச் சென்னையில் நடத்தஉள்ளது. இதில் 1200க்கும் மேற்பட்டபன்னாட்டுப் பிரதிநிதிகள் கலந்துகொள்வர். சுற்றுலாவுடன் தொடர்புகொண்டபல்வேறுநிறுவனங்களைஒன்றுசேர்க்கும் பன்னாட்டுஅமைப்பே ஸ்கால் ஆகும். இம்மாநாட்டின் மூலம் தமிழ்நாட்டின் கலை,பண்பாடு,கைவினைப் பொருட்கள்,பட்டாடைகள்,பாரம்பரியப் பெருமை,வரலாறுஅயல்நாட்டினரிடையேபரவிஅயல்நாட்டுச் சுற்றுலாப் பயணியரைத் தமிழ்நாட்டிற்குஈர்க்கமுடியும்.

சுற்றுலாஅலுவலகங்கள்,சுற்றுலாதகவல் மையங்கள் மற்றும் தமிழ்நாடுஅயல்நாட்டுப் பயணியரைநம்நாட்டில் அதிகநாட்கள் தங்கவைக்கசுற்றுலாத் தலங்களில் கேளிக்கைவசதிகள்,பூங்காக்கள்,கோல்ப் விளையாட்டுத் திடல்,குதிரைப் பந்தயம்,ஆகாய, கடல் சாகசவிளையாட்டு,மலையேற்றம் முதலானவசதிகளைச் செய்துதரத் தமிழகஅரசுதிட்டமிட்டுள்ளது. முதற்கட்டமாககாஞ்சி,தஞ்சை,கன்னியாகுமரி, இராமேசுவரம்,மதுரைஆகிய இடங்களில் தனியார் பங்கேற்புடன் உலகத் தரம் வாய்ந்தகேளிக்கைவசதிகளைச் செய்துதரத் தமிழகஅரசுமுயற்சிகள்

மேற்கொண்டுவருகின்றன. டிசம்பர் 2002-இல் தமிழகஅரசுசொகுசுவரிகளைக் குறைத்ததால் (5ழுமுதல் 12.5ழுவரை) மாநிலத்தில் சுற்றுலாநன்குவளர்ந்துவருகிறது.

சக்கரத்தில் பாரம்பரியம் (ர்நசவையபந ழுெ றூநநடள) எனும் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டுடன் தென் மாநிலங்களில் உள்ளசுற்றுலாமையங்கள் இணைக்கப்படுகின்றன. 2002-2003இல் இந்திய இரயில்வேசுற்றுலா(ஐனெயைெ சுயடைறயல ஊயவநசபைெ யனெ வுழரசளைஅ ஊழசிழசயவழைெ டுவன)தமிழ்நாடுசுற்றுலாவளர்ச்சிக் கழகம் ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொண்டது. இதன்படிமும்பை,கொல்கத்தா,டில்லிஆகிய இடங்களிலிருந்துதமிழ்நாட்டிற்குச் சுற்றுலாப் பயணங்கள் நடத்தப்பட்டன. இதன் விளைவாகரூ. 51 இலட்சம் வருவாய் கிடைத்தது. எனவேஅகமதாபாத்,லக்னோஆகிய இடங்களுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. வாரணாசி,அலகாபாத்,அயோத்தியாஆகிய இடங்களுக்கும் இத்திட்டம் விரைவில் விரிவுபடுத்தப்படஉள்ளது.தமிழ்நாட்டின் சுற்றுலாவளத்தைமேலும் சிறப்பாகவிளம்பரப்படுத்தும் வகையில் 2001-02இல் ஜெய்ப்பூரிலும்,ஆக்ராவிலும் சுற்றுலாஅலுவலங்கள் திறக்கப்பட்டுள்ளன. ஊட்டி,கொடைக்கானல்,பிச்சாவரம்,முட்டுக்காடு,கொளவாய் ஏரிமுதலான 11 இடங்களில் தமிழ்நாடுசுற்றுலாவளர்ச்சிக் கழகம் படகு இல்லங்களைநிறுவியுள்ளது. முட்டுக்காட்டுக்குஅருகில் இடைக்கழிநாட்டில் புதியதோர் படகு இல்லம் அமைக்கப்படத் திட்டமிடப்பட்டுள்ளது. தற்போது இக்கழகத்திடம் 54 ஓட்டல்கள் உள்ளன. ஆதாயம் இல்லாதஓட்டல்கள் தனியாரிடம் விற்கப்பட்டுவருகின்றன.

தமிழகஅரசின் சீரியமுயற்சிகளால் 2002-03 இல் இக்கழகம் ரூ. 93 லட்சம் இலாபம் ஈட்டியுள்ளது. தமிழ்நாட்டிற்குவருகைபுரிந்தபயணியரின் எண்ணிக்கையும் 254.66 இலட்சமாகஅதிகரித்துள்ளது. 2003 - 2004 இல் தமிழகஅரசுசுற்றுலாத்துறைக்குரூ. 26.79 கோடிநிதிஒதுக்கீடுசெய்துள்ளது. தமிழகஅரசுமலைப்பகுதிமேம்பாட்டுத் திட்டத்திலும் பேரார்வம் கொண்டுள்ளது. சென்னையில் கலைவாணர் அரங்கவளாகத்தில் 2.50 கோடியில் சுற்றுலாவளாகம் ஒன்றுமத்திய - மாநிலஅரசுகளின் நிதியுதவியுடன் கட்டப்பட்டுள்ளது. பிறமாநிலசுற்றுலாஅலுவலங்களும் இதில் இடம் பெற்றுள்ளன. இவற்றால் தமிழகசுற்றுலாமேலும் வளர்கிறது.

**நினைவுச் சின்னங்களைப்பாதுகாத்தல்** (ீசுநுளுநுசுஏயுவுஐழுே ழுகு யுடீஊஐநுவே ஆழுருஆநுவேளு)

பாரதம் பழம் பெரும் நாடு. இங்கேபழமைமிக்கநினைவுச் சின்னங்களும் வரலாற்றுப் புகழ் மிக்ககோட்டைகளும் திருக்கோயில்களும் பலஉள்ளன. இவற்றைக் கண்டுகளிப்பதில் அயல் நாட்டுப் பயணியர் பலர் ஆர்வம் கொண்டுள்ளனர். பண்பாட்டுச் சுற்றுலாபாரதத்திற்குநல்லவருவாயைத் தேடித்தருகிறது. எனவேநினைவுச் சின்னங்களைப்

பராமரித்தலும் பாதுகாத்தலும் நமதுதலையாயகடனாகும். இவற்றைப் பாதுகாத்தலின் வழிமுறைகளைப் பற்றிக் காண்போம்.

1963ஆம் ஆண்டுஐ.நா.சபையின் உலகசுற்றுலாமாநாடுஉரோம் நகரில் கூடியது. அம்மாநாட்டில் சிலமுக்கியமானதீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவற்றுள் ஒன்றுமக்கள் புதியசுற்றுலாமையங்களைக் கண்டுகளிக்கவிரும்புவதால் ஒவ்வொருநாடும் புதியசுற்றுலாமையங்களைஉருவாக்கவேண்டுமென்பதுவே. புதியமையங்களைஉருவாக்குவதுஎளிது. அவற்றைஉரியமுறையில் பராமரிப்பதேகடினமானகாரியம்.

1972-இல் நடைபெற்ற யுனெஸ்கோநிறுவனத்தின் மாநாடுஉலகப் பண்பாட்டுப் பாரம்பரியமிக்கநினைவுச் சின்னங்களும் இயற்கைமையங்களும் பாதுகாக்கப்பெறவேண்டியதன் அவசரத்தைக் கோடிட்டிக் காட்டியுள்ளது. ICOMOS (International Council of Monuments and Sites), IUCN (International Union for theConservation of Nature and Natural Resources), ICCROM (International Center for the Study of the Preservation and Restoration of Cultural Property) - முதலானபன்னாட்டுநிறுவனங்களும் நினைவுச் சின்னங்களைப் பாதுகாக்கும் புனிதப் பணியில் பேருதவிபுரிகின்றன.

பெருமளவில் வருவாய் ஈட்டித்தருவதுசுற்றுலா. இதன் முதுகெலும்பாகத் திகழும் சுற்றுலாமையங்கள் சுற்றுலாப் பயணியரைக் கவர்ந்திழுக்கும் வண்ணம் கவர்ச்சிகரமாகவும்,அவற்றின் சுற்றுப்புறச் சூழல் ரம்மியமாகவும் இருத்தல் வேண்டுமல்லவா? எனவேசுற்றுலாமையங்கள் நன்குபராமரிக்கப்படவேண்டும் என்பதில் ஒவ்வொருநாடும் அக்கறையும் ஈடுபாடும் காட்டிவருகின்றது.

**துப்புரவாகவைத்திருத்தல்**

சுற்றுலாமையங்களில் அயல்நாட்டுப் பயணியரையும் உள்நாட்டுப் பயணியரையும் மகிழ்விக்கக் கூடியஅனைத்துவசதிகளும் இருத்தல் வேண்டும். சுற்றுலாமையங்கள் சுத்தமாகவைக்கப்பெறல் வேண்டும். பயணியர் நிறைய கூடுவதால் அசுத்தப்படுத்துவர். எனவே இவற்றைப் பலதடவைகள் துப்புரவுசெய்தல் அவசியம்.

சுற்றுலாமையம் திருக்கோயிலாக இருப்பின்,அங்குள்ளசிற்பங்கள்,ஓவியங்கள்,கட்டடங்கள் நன்குபாதுகாக்கப் பெறல் வேண்டும். பொதுமக்கள் அவற்றைப் பின்னப் படுத்தாமல் இருக்க,தக்கபாதுகாப்புநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பெறல் வேண்டும் கோயில் கும்பாபிஷேகம் நடைபெறும்போதுகல்வெட்டுகளின் மீதுவண்ணங்கள் தீட்டுதல் கூடாது. அடுத்துதொல்லியல்துறைஅலுவலர்களின் துணையுடன் தான் கோயில்கள் புதுப்பிக்கப்பெறல் வேண்டும். கோயிலின் பழமைக்கும் தொன்மைக்கும் ஊறு நேராவண்ணம் புதுப்பிக்கவேண்டும்.

கோயிலின் சுற்றுச்சுவர்கள் பழுதுபார்க்கப்படவேண்டும். கோபுரங்களின் மீதுமுளைக்கும் செடிகள் உடனடியாகஅழிக்கப்படவேண்டும். ஆற்றோரக் கோயில்கள். அழிந்துபடாமல் இருக்கமுன்னேற்பாடுகள் செய்யப்படவேண்டும்.

கோயில் தலபுராணம் எழுதப்பட்டு,அதில் வரலாற்றுச் செய்திகளும் சிற்பம்,ஓவியம் ஆகியவற்றின்புகைப்படங்களும் இடம்பெறவேண்டும். எனவேதான் இந்தியஅரசு,மாவட்டங்களில் பதிவுஅலுவலர்களைஅமர்த்திசிற்பங்களையும் படிமங்களையும்,பழம் பொருட்களையும் பதிவுசெய்யஏற்பாடுகள் செய்துள்ளன.கடற்கரையில் உள்ளதிருக்கோயில்கள்பயணியரைவெகுவாகக் கவர்கின்றன.அவைநன்குபராமரிக்கப்படவேண்டும் பாதுகாக்கப் பெறல் வேண்டும். உப்புக் காற்றுவீசுவதால் கடற்கரைக் கோயில்கள் அழியும் வாய்ப்புண்டு. எனவேகோயில்களைச் சுற்றிஉயர்ந்தசுற்றுச் சுவர்கள்கட்டப் பெறுதல் வேண்டும். எடுத்துக்காட்டாகத் தரங்கம்பாடிக் கடற்கரையில் உள்ளமாசிலாமணீஸ்வரர் கோயில் கடல் அலைகளின் தாக்குதலால் 50 விழுக்காடுஅழிந்துவிட்டது. சுற்றுச் சுவர் முன்பேகட்டப்பட்டிருந்தால் அதனைநாம் அழிவினின்றும் தடுத்திருக்க ஏலும். மாமல்லபுரம் கடற்கரைக் கோயில் அழிவினின்றும் காக்கப் பெறதடுப்புச் சுவர் கட்டப்பெறவேண்டும்.

சுற்றுலாமையம் கோடைவாசஸ்தலமாக இருப்பின் சாலைவசதியைப் பெருக்கவேண்டும். புதியவிடுதிகள் கட்டப்பட்டு,வெளிநாட்டினர்க்குஏற்றஉணவு வகைகள் பரிமாறப் பெறல் வேண்டும். ஏரிகளில் நவீனபடகுகள் விடப்படவேண்டும். மலர்ச் சோலைகளில் மக்கள் அசுத்தம் செய்யாவண்ணம் பாதுகாத்தல் வேண்டும். ஓரிடத்திலிருந்துமற்றோர் இடத்திற்குச் செல்லவாகனவசதிகள் ஏற்பாடுசெய்தல் வேண்டும். வாகனங்களால் சுற்றுச்சூழல் கெடாமலும் பார்த்துக் கொள்ளவேண்டும்.

சுற்றுலாமையம் அருவியாக (நீர் வீழ்ச்சியாக) இருப்பின் பயணியர் நீராடத் தேவையானபாதுகாப்புவசதிகள் செய்துதரவேண்டும். ஆபத்துமிக்க இடங்களில் பயணியர்நீராடஅனுமதிமறுக்கப்படவேண்டும். அருவிகளின் அருகில் மக்கள் அசுத்தம் செய்வதைத் தடுக்க,அருகருகேபலகழிப்பிடங்கள் அமைக்கப் பெறல் வேண்டும். சுற்றுலாப் பயணியர் தங்கவும்,உணவுதயார் செய்யவும் வசதிமிக்கஅறைகள்,குடில்கள் முதலானதங்குமிடங்கள் அமைக்கப் பெறல்வேண்டும்.

அணைக்கட்டுகளும் அதனைஒட்டியுள்ளபூங்காக்களும் அழிவினின்றும் பாதுகாக்கப்படவேண்டும். அணைக்கட்டின் கால்வாய்களில் பயணியர்நீராடஉரியபடிகள்,துறைகள் முதலானவசதிகள் செய்துதரப்படவேண்டும். பூங்காக்களைச் சுற்றிலும் பாதுகாப்புவேலிகள் அமைக்கப்படவேண்டும். சிலசெடிகளும் புற்களும் அழகாகக் கத்தரிக்கப்படவேண்டும். அயல்நாடுகளில் உள்ளஅழகியபுதியபூஞ்செடிகள் இங்கும் பயிரிடப்படவேண்டும். குழந்தைகள்,சிறுவர்கள்,பெரியோர் ஆகியோருக்குத் தனித்தனியாகப் பொழுதுபோக்குமையங்கள்

அமைக்கப்பட்டு,நன்குபராமரிக்கப் பெறவேண்டும். அங்குள்ளநீரூற்றுகள் (Fountains) நவீனமுறையில் அமைக்கப்படவேண்டும்.

வரலாற்றுப் புகழும் தொன்மைச் சிறப்பும் மிக்கநகரங்கள்,சிறந்தசுற்றுலாமையங்களாகக் கருதப்படுகின்றன. எடுத்துக்காட்டாகமாமல்லபுரம்,மதுரை,திருச்சி,காஞ்சிஆகிய இடங்களைச் சுட்டலாம். பழைமைமிக்கநினைவுச் சின்னங்களுக்குஅருகில் புதியகட்டடங்கள் கட்டப்படுதல் தடுக்கப்படவேண்டும். பழைமையானகோட்டைகள்,அரண்மனைகள் ஆகியவைபழைமைகுன்றாது,புதுப்பிக்கப் பெறல் வேண்டும். பழமைமாறினால் அதன் சிறப்பும் குறைந்துவிடும்.

நம் நாடுஓவியங்களுக்குப் பெயர் பெற்றது. அஜந்தா,எல்லோரா,சித்தண்ணவாசல் குகை ஓவியங்களும்,பழமையானபாறைஓவியங்களும் இவற்றுள் மிகவும் குறிப்பிடத்தக்கவை. சிலஓவியங்கள் மங்கிவருகின்றன. இவை ரசாயனக்கலவைகளால் சுத்தம் செய்யப்படவேண்டும் (Chemical Washing). அடுத்துமேலைநாடுகளைப் போன்றுஓவியங்களின் மீதுகண்ணாடித்தாள்கள் ஓட்டப்படவேண்டும். மனிதனின் மூச்சுக்காற்றால் ஓவியம் மங்கும். எனவேஇவற்றைஅயல்நாட்டுப் பயணிகள்,ஆய்வாளர்கள் மட்டுமேபார்க்கஅனுமதிக்கப் பெறல்வேண்டும். பொதுமக்கள் பார்க்கஅனுமதிக்கக்கூடாது. தஞ்சையில் மராட்டியர் மண்டபத்தில் உள்ளஓவியங்கள் மங்கிவருகின்றன. இவைநவீனதொழில்நுட்பஉதவிகொண்டுபாதுகாக்கப் பெறுதல் வேண்டும்.

மேற்கூறியவகைகளின் மூலமாகநாம் நம் நாட்டுசுற்றுலாத் தலங்களைப் பராமரித்துப் பாதுகாக்கலாம். இவ்வாறுபாதுகாத்தால் தான் நமதுபிற்காலசந்ததியினரும் இச்சுற்றுலாமையங்களைக்கண்டுகளித்துமகிழமுடியும் இவற்றைஅழிவினின்றும் காத்தல் முடியும். நமது இளையதலைமுறையினர்க்குவிட்டுச் செல்லும் சொத்துக்களுள் சுற்றுலாத் தலங்கள் முக்கியமானவைஆகும். நம் நாட்டின் பழமைமிக்ககோட்டைகள் பலஅழிந்துவிட்டன. எஞ்சியுள்ளகோட்டைகளையாவதுஅழிவினின்றும் காப்பது நம் கடமை.

இயற்கையெழில் கொஞ்சும் சுற்றுலாமையங்கள், இயற்கைச் சுற்றுச் சூழல் கெடாதவகையில் பாதுகாக்கப் பெறுவதும் அவசியம்.

சுற்றுலாமையங்களைஉரியமுறையில் பராமரிப்பதும் அவற்றிற்கானமுறைகளைபின்பற்றுதலும் (Need for proper maintenence of Tourist Centres and methods)அவசியத் தேவைமட்டுமின்றிஅவசரத் தேவையுமாகும்.

**சுற்றுலாதொடர்புடையபடிப்புகளும் வேலைவாய்ப்பும்:**

**படிப்புகள்:**

**சுற்றுலாபடிப்புகள்**

சுற்றுலாஎன்பதுவிருந்தோம்பல் துறையின் ஒருபகுதியாகும்,மேலும் சுற்றுலாமேலாண்மையில் ஒருபடிப்புவேட்பாளரைஉணவு,தங்குமிடம் மற்றும் சுற்றுலாத் துறையில் நிர்வாகபதவிக்குதயார்படுத்துகிறது.பாடநெறி இளங்கலைமுதல் டிப்ளமோமற்றும் முனைவர் பட்டம் வரைஒவ்வொருமட்டத்திலும் இயக்கப்படுகிறது.

சாகசசுற்றுலா,விமானடிக்கெட்,வேளாண் சுற்றுலா,கிராமப்புறசுற்றுலா,பயணமேலாண்மைமற்றும் விருந்தோம்பல் மேலாண்மைபோன்றபடிப்புகளையும் மாணவர்கள் தேர்வுசெய்யலாம்.இந்தியாவில் வெளிநாட்டுசுற்றுலாப் பயணிகளின் வருகையின் சராசரிவளர்ச்சிவிகிதம் 15மூஆகும்,மேலும் இது வேகமாகஅதிகரித்து,சுற்றுலாப் படிப்புகளுக்குத் தயாராகும் வேட்பாளர்களுக்குபலவேலைவாய்ப்புகளைத் திறக்கிறது. இந்தத் தொழில் 2025 ஆம் ஆண்டளவில் இந்தியாவில் 45 மில்லியனுக்கும் அதிகமானவேலைகளைஉருவாக்கும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

சுற்றுலாமேலாண்மைபடிப்புகள் பின்வரும் வடிவத்தில் வழங்கப்படுகின்றன:

**இளங்கலைபட்டப்படிப்புகள்**

டிப்ளமோபடிப்புகள்

சான்றிதழ் படிப்புகள்

பிஜி பட்டப்படிப்புகள்

பிஜி டிப்ளமோபடிப்புகள்

சான்றிதழ் படிப்புகள்.

**வேலைவாய்ப்பு**

சுற்றுலாத்துறைவேலைவாய்ப்பினைஅதிகமாகஅள்ளித்தரும் அமுதசுரபியாகவும் திகழ்கிறதுஎன்றால் அதுமிகையாகாது.13 மில்லியன் மக்களுக்குசுற்றுலாவின் மூலம் நேரடியாகவோமறைமுகமாகவோவேலைவாய்ப்புஅளித்துள்ளதாகஅண்மையில் கணிக்கப்பட்டுள்ளது. 1996-97-இல் பாரதம் நேரடியாக 9.1 மில்லியன் பேர்களுக்கும் ஒட்டுமொத்தமாக211 மில்லியன் பேர்களுக்கும் சுற்றுலாத்துறையில் வேலைவாய்ப்பளித்துள்ளது. ஒருஅயல்நாட்டுசுற்றுலாப்பயணி நம் நாட்டிற்குவந்தால்,ஒருவருக்குவேலைவாய்ப்புகிடைக்கிறதுஎன்றும் 65 உள் நாட்டுச் சுற்றுலாப் பயணியின் மூலம் ஒருவருக்குவேலைவாய்ப்புகிடைக்கிறதுஎன்றும் கணிக்கப்பட்டுள்ளது. 1955-ஆம் ஆண்டிற்குமுன்புபோக்குவரத்துவசதியற்றகுக்கிராமமாகக் காட்சிதந்த கஜுராஹோவும் அதன் சுற்றுப்புறமும் இன்றுஆடம்பரமானஓட்டல்களும்,உணவகங்களும்,தொழிற்கூடங்களும்,கடைவீதிகளும்

கொண்டு,ஆரவாரமிக்கநகரமாகக் காட்சிதருவதுசுற்றுலாவால் தானே.இன்று இது ஓர் உலகப் புகழ்மிக்கசுற்றுலாத் தலமாகிஅன்னியப் பயணிகளைக் கவர்ந்திழுக்கிறது. சுற்றுலாவசதிக்குத் தேவையானசாலைகள்,விடுதிகள்,உணவகங்கள்,பேருந்துநிலையங்கள்,விமானநிலையம் - ஆகியவற்றைஉருவாக்கும் பணியில் ஆயிரக்கணக்கானோர் வேலைபெற்றனர். சுற்றுலாப் பணி,போக்குவரத்துநிறுவனங்கள்,விடுதிகள் முதலியனநேரடிவேலைவாய்ப்பினைத் தருவதுடன் அதன் தொடர்பானமற்றதொழில்களிலும் மறைமுகமாகவேலைவாய்ப்புகளைநல்குகிறது. அடுத்துசுற்றுலாப் பயணிகளுக்குவிற்பனைசெய்வதற்கென்றேபலவிதமானகலைப்பொருள்கள் இங்குள்ளகலைக்கூடங்களில் உருவாக்கப்படுகின்றன. இதன் மூலம் பலகலைஞர்களும் கைவினைஞர்களும் வேலைவாய்ப்புகள் பெற்று,நல்லஊதியமும் பெறுகின்றனர். கலைப்பொருள் தொடர்பானகச்சாப் பொருள்களைவழங்குவோரும் இதில் வேலைவாய்ப்பினைப் பெறுகின்றனர். இதனால் பலரதுவருமானம் உயர்கிறதுதேசிய வருவாயும் பெருகுகிறது.

**வினாக்கள்**

| வ.எண் | ஐந்து மதிப்பெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | சுற்றுலாதொடர்புடைய வேலை வாய்ப்புகள் யாவை? | K2 | CO2 | PO4 |
| 2 | சுற்றுலாநினைவுச் சின்னங்கள் பற்றிகுறிப்பிடுக. | K4 | CO3 | PO5 |
| 3 | இந்தியசுற்றுலாவளர்ச்சிக் கழகத்தின் நோக்கங்கள் என்ன? | K1 | CO4 | PO1 |
| 4 | தமிழகசுற்றுலாவளர்ச்சிக் கழகத்தின் பணிகள் குறித்துஎழுதுக. | K5 | CO5 | PO2 |

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | சுற்றுலாதொடர்பானபடிப்புகளைகுறிப்பிடுக. | K3 | CO4 | PO3 |

| வ.எண் | எட்டு மதிப்பெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | சுற்றுலாவளர்ச்சிக்கழகத்தின் செயல்பாடுகள் பற்றிவிளக்குக. | K1 | CO4 | PO4 |
| 2 | சுற்றுலாதொடர்புடையபடிப்புமற்றும் வேலைவாய்ப்பைஆராய்க. | K4 | CO2 | PO6 |
| 3 | சுற்றுலாவளர்ச்சிக் கழகத்தின் திட்டங்கள் குறித்துகட்டுரைவரைக. | K3 | CO1 | PO5 |
| 4 | நினைவுச் சின்னங்களைபாதுகாத்தலில் வளர்ச்சிக் கழகத்தின் பங்குகுறித்துஎடுத்துரைக்க. | K2 | CO5 | PO6 |
| 5 | சுற்றுலாசேவைகள் குறித்துவிவரி. | K4 | CO3 | PO3 |

## அலகு-4

## காலந்தோறும் உணவும் உணவுப் பழக்கவழக்கங்களும்

**தமிழரின் விருந்தோம்பல் மரபு**

**விருந்தோம்பல்**

முகந்தெரியாதஒருவனின் பசிக்குஉணவளிக்கும் போதுஒருவன் பண்பாளனாகிறான். விருந்தோம்பல் என்றதமிழரின் பண்பாட்டுநிலைபசிக்குஉணவளித்தலில் ஆரம்பமாயிற்றுஎனலாம். மக்களின் அன்றாடவாழ்வில் குறிப்பாக இன்றையகிராமங்களில் பழந்தமிழர்களின் நடை,உடை,உணவுபழக்கவழக்கங்கள்,சிந்தனைகள்,மதிப்பீடுகள்,முக்கியமாகவிருந்தோம்பல் போன்றஎல்லாப் பாவனைகளிலும் பழந்தமிழ்ப் பண்பாடுஅழியாது இன்றளவும் நிலவிவருவதுஒருதனிச்சிறப்புஎனலாம். சாவாமருந்தெனினும் விருந்தினரைப் புறக்கணித்துஉண்ணோம் என்றதமிழரின் ஆழ்ந்தஉள்ளக் கிடக்கையை,

**“விருந்துபுறத்ததாத் தான்உண்டல் சாவா**

**மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று”**

என்றகுறளின் மூலமாகவள்ளுவர் தெளிவுபடுத்துகின்றார். இதேசெய்தியை, ..“……இந்திரர் அமிழ்தமியைவதாயினுமினிதெனத் தமியருண்டலுமிலரே ......”என்றபுறநானூற்றுப் பாடலும் சுட்டிச்செல்கின்றது. இந்தப் பண்புநிச்சயமாகக் காலத்திற்கென்றுதமிழர் போட்டுக்கொண்டவேடமன்று. வாழ்வோடு இயைந்தகலப்புஎன்பதைப் பல இலக்கியங்கள் விரிவாகக் கூறுகின்றன. இந்தப் பண்பிற்குத் தலையாயஎடுத்துக்காட்டுதான் சிலப்பதிகாரத்தில் வரும் அறப் பெருஞ்செல்விகண்ணகியின் கூற்றாகவருவது,

**“அறவோர்க் களித்தலும் அந்தணரோம்பலும் துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடலும் இழந்தஎன்னை”**எந்த இழப்பையும் அவள் பெரிதாகக் கருதாமல் வாழ்வின் தேவையானகடமைகளானஅறவோர்,அந்தணர்,துறவோர் முதலியோர்க்குச் செய்யவேண்டியகடமைகளைச் செய்யாமையும் விருந்தினரைஉபசரிக்கமுடியாமையும் எண்ணிவருந்துகின்றாள். அதிலும் “தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடலும்” என்று கூறி ஆண்டாண்டுகாலமாய் மூதாதையரின் பண்புநலன்களுள் குறிப்பிடத்தகுந்ததுவிருந்தோம்பலேஎன்பதைத் தெள்ளத்தெளிவாகத் தமிழரின் பண்புநலனை இளங்கோவடிகள் கண்ணகிவாயிலாகவெளிப்படுத்துகின்றார்.

விருந்தும்,உபசரித்தலும் தமிழ்மக்களின் வாழ்க்கையில் மணம் கமழ்கிறபண்புகள். தமிழ் மக்களின் வாழ்க்கையைக் கவனித்தால் இது புலப்படும். கல்யாணம்,மறுவீடு,புதுமனைபுகுதல்,பூப்புநீராட்டு,குழந்தைக்குப் பெயர் சூட்டுதல் ஆகியஒவ்வொருசடங்கையும் விழாவாகக் கொண்டாடிமகிழ்கிறவர்கள் தமிழர்கள். ஒவ்வொருவிழாவிலும் உற்றார்,உறவினர்,நண்பர்,ஏழை,எளியவர்களைவரவழைத்துவிருந்தளித்துமகிழ்வார்கள். விருந்துநடத்துவதற்கென்றே இந்தவிழாக்களை ஏற்படுத்திக் கொண்டார்களோஎன்றுசொல்லத் தோன்றும். ஒருவர் இறந்துவிட்டாலுங் கூட வேண்டியவர்களைஎல்லாம் அழைத்துவிருந்துண்ணச்

செய்வதுதமிழ் மக்களின் பண்பாடு. ஒருசமுதாயத்தின் மகாஉன்னதமானபண்பாட்டிற்குஅளவுகோலாக இருப்பதுவிருந்தோம்பல்தான். தமிழர்களின் வாழ்வியலைஆராயும் போது இது பலவகைகளில் வெளிப்படுகிறது. "மன்னனுயிர்த்தேமலர்தலையுலகம்"என்பார்கள். மன்னர்களின் விருந்தோம்பல் பண்பு இலக்கியங்களில் பல இடங்களில் வெளிப்படுகிறது.

நாள்தோறும் குறையாதவருவாயைஉடையவர்கள் உழவர்கள். அவர்கள் நெல்லறுக்கின்ற இடத்தில் பிடித்தவாளையையும், "உழுபவர்கள் வாளால் மறிக்கப்பட்டஆமையையும்,கரும்பைக் கொய்பவர்கள் கரும்பினின்றுஎடுத்ததேனையும்,பெண்டிர் கொண்டுவந்துகொடுத்தகுவளையையும் வன்புலத்திலிருந்துவந்தவிருந்தினர்க்குவிரும்பிக் கொடுத்தான் மன்னன் என்றசெய்தியை,

...... **யாணர்த் தாகியரிநர்**

**கீழ்மடைக் கொண்டவாளையுமுழவர்**

**படைமிளிர்ந் திட்டயாமையுமறைநர்**

**கரும்பிற் கொண்டதேனும் பெருந்துறை**

**நீர்தருமகளிர் குற்றகுவளையும்**

**வன்புலக் கேளிர்க்குவருவிருந் தயரும்**

**மென்புலவைப்பினன்னாட்டுப் பொருந"**

என்றபுறநானூற்றுச் செய்யுள் பாடுகிறது. மன்னனுக்குஎவ்வகையிலும் குறைவுற்றவர் அல்லநாங்கள் என்பதுபோலமக்களும் நடந்துகொள்கிறார்கள்.

"வருந்திவந்தவர்க்குஈதலும் வைகலும் விருந்தும் அன்றிவிழைவனயாவையே" என்றபாடல் மூலம் பெண்டிர் எளியோர்க்குஉபசரிப்பதையும் விருந்தினர்களைஅன்போடுபேணுவதையும் குறிக்கோளாகக் கொண்டிருந்தார்கள் என்றுகம்பர் குறிப்பிடுகின்றார். தயிர் கடைந்து,வெண்ணெயெடுத்துமோர்விற்றபணத்தில் பசும் பொன் வாங்காமல் சுற்றத்திற்குஉணவூட்டினாள் இடைச்சிஎன்பதைப் பெரும்பாணற்றுப்படை கூறும்போதுபெண்டிர் தம் விரும்தோம்பும் திறனைஎண்ணிஎண்ணிவியக்கத் தோன்றுகிறது. இதுமட்டுமன்றி இல்லறக் கடமைகளுள் தலையாயதாகவிருந்தோம்பல் இருந்துவந்தது.

தம் உற்றார் உறவினரையேஅன்றிப் புலவர்,பாணர். பொருநர், கூத்தர்,விறலியர் போன்றகலைவாணரையும் வரவேற்றுஉண்டியும்,உறையுளும் தந்துஉபசரித்தலைத் தமிழ்மக்கள்

தங்கள் சிறந்தகடமையாகக் கருதினார்கள் என்பதைஆற்றுப்படை நூற்கள்மெய்ப்பிக்கின்றன. காவல் வீரர்கள்,கருப்பஞ் சாலையில் பணிபுரிந்தவர்,நெற்களங்களில் வேலைசெய்துவந்தஉழவர் போன்றோரும்
பழங்கள்,கருப்பஞ்சாறு,உணவுமுதலியவற்றைமனமுவந்துஉதவியமைகொண்டு,அவர்தம் விருந்துபோற்றும்,சீரியபண்பின் உயர்வினைநாம் நன்குணரலாம்.

**தமிழர் உணவுப் பொருட்களும் அவற்றின் மருத்துவகுணங்களும்:**

பழங்காலத் தமிழர்களின் உண்மையானஉணவில் ஏராளமானவளங்கள் உள்ளன. தமிழகத்தில் உள்ளசித்தர்கள் உணவுமுறைபற்றிகுறிப்பிடுகையில்,‘‘எதுஉனக்குஉணவாக இருக்கிறதோஅதுவேமருந்தாக இருக்கவேண்டும். எதுஉனக்குமருந்தாக இருக்கிறதோஅதுவேஉனக்குஉணவாக இருக்கவேண்டும்’’என்றுகுறிப்பிடுகின்றனர். பண்டையதமிழர்கள்,அவர்கள் வாழ்ந்தநிலத்திற்குஏற்பஉணவுமுறைகள் அமைந்துள்ளன.

**தமிழரின் பாரம்பரியஉணவுமுறை**

தமிழர்களின் உணவுமுறையேசற்றுமாறுபட்டது. அதற்குகாரணம்,‘உணவேமருந்து…மருந்தேஉணவு’எனும் முறைதான். அதுமட்டுமின்றிஅறுசுவைஉணவுகளைஒரேநேரத்தில் தமிழர்கள் உண்ணும் முறையைபின்பற்றுகின்றனர். அறுசுவைஉணவாக இருப்பினும் மருத்துவகுணம் உள்ளதாகத்தான் தமிழர்கள் உண்ணும் உணவே இருந்தது.

உணவேமருந்துஎன்றஒப்பற்றபழக்கம் நம் உணவுபழக்கத்தில் தொன்றுதொட்டு இருந்துவருகிறது. இதற்கு நம் சங்ககால இலக்கியங்களேசான்று. இதைபற்றிஎட்டுத்தொகை,பத்துப்பாட்டு,கலித்தொகை,போன்ற நூல்களிலும் குறிப்பிட்டுள்ளது.

பண்டையதமிழர்கள்,அவர்கள் வாழ்ந்தநிலத்திற்குஏற்பஉணவுமுறைகள் அமைந்துள்ளன.

**குறிஞ்சி:**கிழங்கு வகைகள்,மலையில் விளையும் காய்கறிகள்,சில இறைச்சி வகைகள்,வரகு,சாமை,தினை,கேழ்வரகுபோன்றவையும் உண்டுள்ளனர்.

**முல்லை:**காட்டுவிலங்கின் இறைச்சிகள்,காட்டுக் காய்கறிகள்,சிலநெல் வகைகள்,மாம்பழம்,வாழைப்பழம் போன்றவைஉண்டுவந்துள்ளனர்.

**மருதம்:**நெல் வகைகள்,மரக்கறி வகைகள்,ஊறுகாய்,பயறு வகைகள் போன்றவைஉண்டுவந்துள்ளனர்.

**நெய்தல்:**நெய்தல் நிலத்தில் வாழ்ந்தமக்கள்,நண்டுக் கறி,மீன் வகைகள் போன்றவைஉண்டுவந்துள்ளனர்.

இதில்,கடுகு இட்டுகாய்கறிகளைதாளிப்பது,பசுவெண்ணையில் பொரிப்பதுபோன்றவைபண்டையகாலத்திலேயேகடைபிடிக்கப்பட்டுவந்துள்ளது.

தரையில் சம்மணம் போட்டுவரிசையாகஅமர்ந்துஉண்ணுவதைதமிழர்கள் வழக்கமாககொண்டுள்ளனர். முன்புஎல்லோர் வீட்டிலும் வாழைமரங்கள் இருந்தன. அவ்வாறுவாழையிலைஉணவுஉண்ணபயன்படுத்ததுவங்கியதாக கூறப்படுகிறது. தொடர்ந்துஅந்தவாழையிலையில் சூடானஉணவுபோட்டுசாப்பிடுகையில்,குளோரோ.ஃ.பில் (Chlorophyll) உணவுடன் கலந்து,உடலுக்குஊட்டச்சத்தைதருகிறது.இதுபின்னாளில் தான் கண்டறியப்பட்டது. இந்நாட்களிலும்,விருந்துகளிலும் விசேஷங்கள் போன்றவற்றுக்கும் இலையில் போட்டுசாப்பிடும் பழக்கத்தைகொண்டுள்ளோம்.தொல்காப்பியர் மரபியலில் ‘‘மெய் திரிவகையின் எண்வகைஉணவில் செய்தியும் உரையார்’’என்பார் (பொருளதிகாரம் 623) இங்குஎண்வகைஉணவுகுறிக்கப்படுகிறது.

இளம்பூரணர் இதற்குஉரைகூறும்போதுநெல்,காணம்,வரகு, இறுங்கு,தினை,சாமை,புல்,கோதுமைஎனஎண்வகைத் தானியங்களைக் குறிப்பிடுகிறார். ஆனால் சங்ககாலத் தமிழகத்தில் சாமை, இறுங்கு,கோதுமைபோன்றதானியங்கள் வழக்கில் இல்லை.

உணவைஐவகையாகக் கூறுவதுஒருமரபு.

பெருங்கதையில்,‘‘ஐவேறுஅமைந்தஅடிசிற் பள்ளியும்’’என்றும்,

பிங்கலநிகண்டு - கறித்தல்,நக்கல்,பருகல்,விழுங்கல்,மெல்லல் என்றுபகுத்தும் கூறும். இதனைநாம் நடைமுறையில் உண்பன,தின்பன,கொறிப்பன,நக்குவன,பருகுவனஎன்கிறோம். இந்தப் பாகுபாடுஉணவின் தன்மை,உண்ணும்முறை,சுவைஆகியவற்றால் விளைந்தது.

**உண்பன:**அரிசிச்சாதம்,புழுங்கல்,பொங்கல் போன்றவை. சமைத்தகாய்கறி கூட்டுகள் வரிசையில் பொரியல்,அவியல்,துவையல்.

**தின்பன:**சிற்றுண்டிகள், இட்லி,அப்பம்,

**கொறிப்பன:**வற்றல்,வடாம்.

**நக்குவன:**பச்சடி,பஞ்சாமிர்தம்.

**பருகுவன:**பானகம்,பாயகம்,கஞ்சி.

உணவின் சுவைகள்,உவர்ப்பு,துவர்ப்பு,கைப்பு,கார்ப்பு, இனிப்பு,புளிப்புஎன ஆறு வகைகளில் உள்ளது.

தொல்காப்பியம்,எள்ளைஉணவுப் பொருளாகக் கூறுகிறது.அகநானூறு,கொள்ளும் (காணம்) பாலும் கலந்துவைத்தகஞ்சிபற்றிக் குறிப்புதருகிறது. அவரைவிதையைஅரிசியுடன் கலந்துதயாரித்தகஞ்சிபற்றியகுறிப்பு,மலைபடுகடாம்- இல் உள்ளது. தானியங்களைவெயிலில் காயவைத்துச் சமைக்கும் பழக்கம் பொதுவாக இருந்திருக்கிறது. (அகம் 250 நற் 344).

**சோறு:**

சோறு,அதில் கலந்தபொருளின் அடிப்படையில் பலபெயர்களால் வழங்கப்படுகிறது.

**ஊன் சோறு :**ஊனும் சோறும்

**கொழுஞ்சோறு :**கொழுப்புநிணம் கலந்துஆக்கியது

**செஞ்சோறு :**சிவப்புஅரிசிச் சோறு

**நெய்ச்சோறு :** நெய் கலந்தசோறு

**புளிச்சோறு** : புளிக்குழம்புகலந்தசோறு

**பாற்சோறு :**பால் கலந்தசோறு

**வெண்சோறு :**வெண்ணரிசிச் சோறு

இன்னும் வழக்கில் உள்ளஉளுந்தச்சோறுசங்ககாலத்தில்,மங்கலநிகழ்ச்சிகளில் பரிமாறப்பட்டது. அகநானூறு (86-1-2) "உழுந்துதலைப் பெய்தகொழுங்கழிமிதவை"என்பதில் மிதவைசோற்றைக் குறிக்கிறது.

அரிசியிலிருந்துதயாரிக்கப்பட்டஅவல்,பொரி இரண்டையும் பால் கலந்துசாப்பிடும் பழக்கம் ஆரம்பகால,பிற்காலதமிழகத்திலும் இருந்தது.

**சோற்றுக் கஞ்சி**

கஞ்சிஉடலில் ஏராளமானஊட்டச்சத்துக்கள்,உப்புகள் மற்றும் நீர் இருப்பதால்,வெப்பத்திற்குஎதிராகவலிமைமற்றும் மீள்தன்மைஉறுதிசெய்யப்படுகிறது. வைரஸ் தொற்றுகளுக்குஅரிசிநீர் சரியானவீட்டுவைத்தியம். நோய்த்தொற்றின் போதுஏற்படும் வாந்தியால் ஏற்படும் நீர் இழப்பைத் தடுக்ககாய்ச்சலுக்குமருந்தாககஞ்சிபயன்படுத்தப்படுகிறது.அரிசிகஞ்சியில் கார்போஹைட்ரேட் அதிகம் உள்ளதால் குழந்தைகளுக்குகொடுத்துவரலாம். அவர்களின் உடல் வளர்ச்சிக்குஅதுநலம் சேர்க்கும். இதுஉடலுக்குதேவையானநல்லபாக்டீரியாக்களைக் கொண்டசிறந்தஉணவு.

**திணைஅரிசி**

தினைஅரிசியில் அதிகஅளவுஆன்டிஆக்ஸிடண்ட்ஸ் நிறைந்துள்ளது. இதனைதினமும் உண்டுவந்தால் உங்கள் உடலில் ஏற்படும் செல் அழிவினைதடுத்துஉங்களைஎப்பொழுதும் ஆரோக்கியமாகவாழவழிவகுக்கும்.தினைஅரிசியில் பீட்டாகரோட்டின் நிறைந்துள்ளது. இதனைஉண்டுவந்தால் உங்களின் கண் மற்றும் முடியின் ஆரோக்கியம் மேம்படும்.

தினைஅரிசியில் கால்சியம்,ப்ரோடீன்,நார்ச்சத்துக்கள், இரும்புசத்து,ஆன்டிஆக்ஸிடண்ட்ஸ்,மெக்னீசியம் போன்றபல்வேறுசத்துக்கள் அதிகம் நிறைந்துள்ளது.

தினைஅரிசியில் ஏராளமானநன்மைகள் நிறைந்துள்ளது. அரிசியைகாட்டிலும் பலமடங்குசத்துக்கள் நிறைந்துள்ளது. தினைஅரிசியில் அரிசிமற்றும் ராகியைவிடஅதிகஅளவுநார்ச்சத்துக்கள் நிறைந்துள்ளது. தினமும் உணவாக் தினைஅரிசியினைஉண்டுவரும்பொழுதுஒருநாளிற்குதேவையானநார்சத்துகிடைத்துவிடும்.

**கம்பை கூழ்**

கம்பை கூழ் அல்லதுகளியாகசாப்பிட்டுவந்தால் உடலில் உள்ளகெட்டகொழுப்புகளைகரைக்கிறதுமற்றும் தசைகளுக்குநல்ல இறுக்கத்தைகொடுத்துபலத்தைக் கொடுக்கும்.

நீரிழிவுநோயினால் பாதிக்கப்பட்டவர்கள் சர்க்கரைசத்துக்கள் அதிகமாக இருக்கிறஅரிசிசத்தத்தைசாப்பிடமுடியாதுஅவர்கள் கம்பை கூழ் களிமற்றும் தோசைசெய்துசாப்பிட்டுவந்தால் நீரிழிவு நோய் கட்டுக்குள் வரும் மற்றும் உடல் ஆரோக்கிமாகும்.

கம்புசாப்பிடுவதால் உடலில் நோய் எதிர்ப்புசக்தியைஅதிகரித்துபல நோய் தொற்றில் இருந்துநம்மைபாதுகாக்கிறது.

கம்பில் நார்ச்சத்துக்கள் அதிகம் கொண்டு இருப்பதால் வயிற்றில் செரிமானகோளாறுகள் மற்றும் வயிற்றில் புண்கள் உள்ளவர்களுக்குதொடர்ந்துசிலகாலம் கம்புசாப்பிட்டுவந்தால் வயிறுசம்பந்தமானஅனைத்துபிரச்சினைகளும் நீங்கிவிடும். அதிகஎடைஉள்ளவர்கள் கம்பைதொடர்ந்துசாப்பிட்டுவந்தால் உடலில் உள்ளகெட்டகொழுப்புகளைகுறைத்துசரியானநேரத்தில் பசி எடுக்கவைக்கிறது.

**எள்**

எள் சாப்பிட்டுவருவதுஉடலுக்குநல்லபலத்தைஅளிக்கும். எள் இரும்புச்சத்து, ஜிங்க் எனப்படும் துத்தநாகசத்துஅதிகம் கொண்டது. எள்ளில் இருக்கும் எண்ணெய்கள் உடலின் தோலில் பளபளப்புதன்மையைஅதிகப்படுத்துகிறது. மேலும் தோலில் ஏற்பட்டிருக்கும்

சொறி,சிரங்கு,படைபாதிப்புகளை கூடியவிரைவில் நீக்கும் தன்மைஎள்ளுக்குஉண்டு. கருப்புஎள்ளைஉட்கொள்வதுசர்க்கரைஅளவைக் குறைக்கிறது. இதில் உள்ளகால்சியம் எலும்புகள் மற்றும் பற்களுக்குஉதவுகிறது. இதன் நுகர்வுஎலும்புகளைவலுவாக்கஉதவுகிறது. சர்க்கரை நோய் உள்ளவர்கள் கருப்பு எள் சாப்பிடுவதுஉடலில் இரத்தசர்க்கரைஅளவைக் கட்டுப்படுத்தலாம்.

**சுக்கு**

உலர்ந்த இஞ்சிஅல்லதுசுக்குசெரிமானத்திற்குமிகவும் நல்லது. இதில் அதிகஅளவுநார்ச்சத்துஉள்ளது. அஜீரணம் அல்லதுமலச்சிக்கல் போன்றவயிறுசார்ந்தபிரச்சனைஉள்ளவர்களுக்குசுக்குதண்ணீர் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இதுவளர்ச்சிதைமாற்றத்தைமேம்படுத்தும்.
சுக்குக்குமிஞ்சியமருந்தில்லைஎன்கிறபழமொழிசொல்லப்படுவதுண்டு. குடலில் ஏற்படும் பிணி,அல்சர் போன்றபாதிப்புக்கும் சுக்குசாப்பிடுவதுநல்லபலனைதரக்கூடியதாகும்.

**மிளகு**

நம் அன்றாடஉணவில் சேர்க்கப்படும் பொருளானமிளகுபலமருத்துவகுணங்களைக் கொண்டுள்ளது. "பத்துமிளகு இருந்தாபகைவன் வீட்டிலயும் சாப்பிடலாம் என்றுசொல்லுவார்கள்...! அந்தஅளவுக்குமிளகில் விஷத்தமுறிக்கக் கூடியதன்மைஉள்ளது..." வாதத்தைஅடக்குவதாகவும்,நரம்புமண்டலத்திற்குபுத்துணர்ச்சிதருவதாகவும், இரத்தத்தைசுத்திகரிப்பதாகவும்,உள்ளது.
பசியின்மைசெரியாமைபோன்றகுறைபாட்டுக்குமிளகுநல்லமருந்தா இருக்கும். திரிதோஷம்னுசொல்லப்படுகிறவாதம்-பித்தம்-கபம் தொடர்பானபிரச்சனைகளுக்குதிரிகடுகு (சுக்கு-மிளகு-திப்பிலி) சூரணத்தைதேனில் கலந்துசாப்பிட்டுவந்தால் அந்தபிரச்சனைகளில் இருந்துவிடுபடலாம்.

**கிழங்குகள்**

மரவள்ளிக் கிழங்கில் இருக்கும் நார்ச்சத்து, நம் குடல் ஆரோக்கியத்தைமேம்படுத்துவதுடன்,குடலில் தேங்கியிருக்கும் நச்சுக்களைவெளியேற்றஉதவுகிறது. நம் உணவுசெரிமானமண்டலத்தைசீராக்கி, குடல் இயக்கத்தைசீர் செய்யமரவள்ளிக் கிழங்குபெரிதும் உதவுகிறது. குழந்தைகளின் வளர்ச்சியில் கிழங்குகளுக்குஅதிகப் பங்குஉள்ளது. ஏராளமானதாதுப் பொருள்கள்,எக்கச்சக்கமானவைட்டமின் சத்துகள்,நார்ச்சத்துகள் எனச் சத்துகளின் உறைவிடமாகக் கிழங்குகள் இருக்கின்றன. மரவள்ளிக்கிழங்கு,சேப்பக்கிழங்கு,

சேனைக்கிழங்கு போன்றகிழங்குகளைவேகவைத்துகுழந்தைகளுக்குச் சாப்பிடக் கொடுப்பதுசிறந்தது.

**கீரைகள்**

வீட்டின் கொல்லைப்புறதோட்டத்தில் விளைந்துநின்றகீரையைஅரிந்துஉப்பிட்டுசமைத்துஉண்டதனைபல இலக்கியங்களில் படித்திருப்போம். கீரைகள்,உடல் வளர்ச்சிக்கும் நல்லஆரோக்கியத்திற்கும் மிகவும் அவசியம். இவைஅதிகளவில் சத்துக்களைகொண்டுள்ளன.

தமிழ்நாட்டில் பலவகைகீரைகள் உணவாகஉட்கொள்ளப்படுகிறது. அவற்றில் மிகவும் பெயர் பெற்றவை,அறக்கீரை,பாலக் கீரை,தண்டுகீரை,புளிச்சக் கீரை,வெந்தயக்கீரை,முருங்கக் கீரைமற்றும் புதினாதழைபோன்றவையாகும்.

கீரைகள் குறிப்பாக இரும்புமற்றும் பிறதாதுப்பொருட்களைஅதிகளவில் கொண்டுள்ளன. இரும்புச் சத்துபற்றாக்குறை, இரத்தசோகையினைஏற்படுத்துகிறது. இதுகர்ப்பிணிபெண்கள்,தாய்ப்பால் கொடுக்கும் பெண்கள் மற்றும் குழந்தைகளில் ஏற்படும் பொதுவானஉடல்நலஅசௌகரியமாகும்.கீரைகள் தினமும் உணவில் சேர்த்துக்கொள்வதின் மூலம், இரத்தசோகைவருவதைதடுத்து,நல்லஉடல் நலனைபெறலாம்.கீரைகள் சுண்ணாம்புச் சத்து,பீட்டாகரோடின்,வைட்டமின்-சிபோன்றவற்றைஅதிகம் கொண்டமுக்கிய மூலப்பொருளாகும்.

**உணவேமருந்து**

உடல் நலம் பேணுதல் என்பது ஓர் அரியகலை.அக்கலையைப் பற்றிஅறியாததாலும்,அக்கலையைப் பேணாததாலும் இன்றுநாம் ஆரோக்கியமின்றிபலநோய்களால் அவதிப் படுகின்றோம். இதனைஎளியமுறையில் தீர்க்க இயற்கைமருத்துவம் உணவேமருந்துமருந்தேஉணவுஎன்றதத்துவத்தைமுன்வைக்கிறது. உணவுப் பொருட்களின் தரம் உடலின் பலம். காலத்தின் சிறப்பு,வசிக்கும் இடம் ஆகியவற்றைவரையறுத்துகடைபிடிக்கப்பட்டது. நாம் உண்ணும் உணவுசுவையாகமனதிற்குமகிழ்ச்சிதருவதாகஉடலுக்குஊட்டம் தருவதாக நோய் நீக்குவதாகஅல்லது நோய் வராமல் தடுக்கும் எதிர்ப்புசக்திஉள்ளதாகநலவாழ்வில் நம்மைவழிநடத்துவதாக இருக்கவேண்டும். அதனையே நம் முன்னோர் பருவகாலங்களுக்குஏற்பஉணவுஉண்ணும் முறை,உணவுவகைமாற்றம் என்றுபழக்கத்தில் கொண்டிருந்தனர். அதிலும் சைவஉணவேசிறந்ததுஎன்றும் அதுஉடலுக்குஆரோக்கியத்தையும்,மகிழ்வையும்,அமைதியையும் தரும் என்றும் நம்பினர். மேலும் நோய் வந்தபின் மருந்துஉண்பதைவிடஉணவைமுறைப்படுத்திஉண்டாலேமருந்துதேவையில்லைஎன்றுஉணர்ந்துஅதன் படிவாழ்ந்தனர். உணவைஅளவோடுஉண்டால் இன்பமும்,மிதமிஞ்சஉண்டால் துன்பமும்

உண்டாகும் என்பதைஅறிந்துபிணிவராதஅளவுஉண்ணப்பழகியிருந்தனர். முன்புஉண்டஉணவுசெரித்த பின் அடுத்தவேளைஉண்ணும் முறையைஅறிந்துவாழ்ந்ததால் உடலுக்குமருந்தேதேவையின்றிநீண்டகாலம் வாழ்ந்தனர்.

சான்றாக இன்று நம் வீட்டில் உள்ளமுதியோர் (கொள்ளு,எள்ளுபாட்டி,தாத்தாபோன்றோர்) பெரும்பாலும் நூல்களைவாசிக்கவோபொருட்களைஎடுக்கவோகண்ணாடிஅணிவதில்லை. நிறையமுதியவர்களுக்கு இளநரை இல்லை. அவர்கள் வேலையில் சுறுசு றுப்பாக இருப்பதுடன் தங்கள் வேலையைத் தாங்களேசெய்துகொள்ளும் பழக்கமுடையவர்களாகஉள்ளனர். சான்றாக 20 கிலோபொருளுள்ளஒருபையை (மூட்டை) இடுப்பில் அல்லதுதலையில் தூக்கிவைத்துக் கொண்டுவெகு தூரம் நடக்கும் சக்தியுடையவர்கள் அவர்கள். ஆனால் 5 கிலோகாய்ப்பையை 5 கிலோமீட்டர் தூரம் நடந்துவீடுவருவதற்குள் நாம் குறைந்தது 20 முறையாவதுகையைமாற்றிமாற்றிஅப்பையைத் தூக்குவோம். மேலும் இன்று இதற்குமாறாகச் சிறுபிள்ளைகள் கூடத் தங்கள் வேலையைச் செய்யஅடுத்தவர் தயவைநாடுவதும்,நடப்பதற்குமாறாகவாகனம் நாடுவது, இளமையிலேயேமுதியோர்போல் ஆவதும் கவனிக்கத்தக்கது. இதனைத் தவிர்க்கும் வழிமுறைகள் முதலாவதுஉண்ணும் உணவின் தன்மைநான்காகும். அவை

1. **தின்பன**

வடைதின்போம்

2. **உறிஞ்சுவன**

பாயசம் உறிஞ்சுவோம்

3. **பருகுவன**

நீர்,பால்,மோர் பருகுவோம்

4. **உண்பன**

சோற்றைஉண்போம்.

இவற்றைக் காலைஉணவுலேசாகவும், மதியஉணவுசற்றுக் கூடுதலாகவும், இரவுஉணவுஅந்திமாலையிலேயேமிதமாகவும்,உண்ணப் பழகவேண்டும். அதாவதுகாலை 1∴4 வயிறும்,மதியம் 3∴4 வயிறும் இரவு 1∴2 வயிறுமாக,உண்ணவேண்டும். வயதுஏறஏறஉணவுஉண்ணும் வேளைகளைக் குறைப்பதும். உணவைக் குறைத்துஉண்பதும் உடல் ஆரோக்கியத்திற்கும் வழி வகுக்கும்.

உணவைநன்றாகமென்றுமெதுவாகஉண்ணவேண்டும். நொறுங்கத் தின்றால் நூறு வயதுஎன்பர் நம் முன்னோர். உணவைமென்றுதின்பதால் உமிழ் நீருடன் உணவுநன்குகலந்துஎளிதில் ஜீரணமாகும். அளவுக்கதிகமாகஉண்ணும் முறையும் இதனால் குறைக்கப்படும். தற்காலத்தில் நம் இல்லங்களில் உணவுவகையும். ருசியும் அதிகம் ஆகஆகஉண்ணும் அளவும் மிதமிஞ்சிப் போய் விடுகிறது. நோயும் நிரத்தரமாகிவிடுகிறது. எனவேதான் "வாழ்வதற்காகஉண் - உண்பதற்காகவாழாதேமற்றவர்களுக்காகஉண்ணாதே,அவர்கள் வந்துஜீரணித்துத் தரமுடியாதுஉணவுவீணாகிவிடுமேஎன்றுஉண்ணாதே–அதுஉடல் நலத்தைவீணாக்கிவிடும்''என்றுமருத்துவவல்லுநர்கள் எச்சரிக்கிறார்கள்.

**பருவகாலமும்,உடல் நலத்திற்கேற்றஉணவும் :**

நம் முன்னோர்கள் பருவகாலத்திற்கேற்பஉடல் நலத்திற்குநன்மைதரும் உணவுகளைஅறிந்து,தேர்ந்துபயன்படுத்திவந்துள்ளனர். இதனைக் கீழ்க்காணும் செய்திகள் வழி அறியலாம். இஞ்சிவயிற்றுக் கோளாறுகபம் வராமல் தடுக்கும்.சில இஞ்சித் துண்டுகளைஎடுத்துக் கொண்டுஅதன் மேல் தோலைநீக்கிவிட்டுஅம்மியில் வைத்துநன்குநசுக்கிப்பின் ஒருமண்சட்டியில் அவற்றைப் போட்டு 1 உழக்கு (1 டம்பளர்) நீர் விட்டுஅது 1∴4 பங்குஆகும் வரைசுண்டக் காய்ச்சிப் பின் ஆறவைத்துத் தெளிந்தநீரைஎடுத்துக்கொண்டுஅதனுடன் சிறிதுதேன் கலந்துகாலையும் மாலையும் பருகிவரசளி, இருமல்,வயிற்றுக் கோளாறுநீங்கும். மூன்றுநாட்களில் நோய் வேரோடுஅழியும். காய்ச்சலுக்கும் இம்மருந்தைஉண்ணலாம். வெந்தயம், ஜாதிக்காய்,கசகச்சா, ஏலம்,கிராம்பு,லவங்கப்பட்டை,சீரகம்,சோம்புபோன்றவைவாசனைக்காகவும் சுவையைத் தூண்டவும் உணவுஎளிதில் செரிக்கவும் உணவில்பயன்படுத்தப்படுகின்றன. இவை உடல் உஷ்ணத்தைச் சீராகவைத்துக் கொள்ளப் பயன்படுகின்றன. வயிற்றில் வாயுசேராமல் தடுக்கவும் செரிமானம் அதிகரிக்கவும் ஓமம் பயன்படுத்தப்படுகிறது. கறிவேப்பிலை இட்டுத் தாளிப்பதுமணத்திற்காகவும் சுவையூட்டவும். பித்தம் தணிக்கவும்,எளிதில் செரிமானமாகவும் ஆகும். கடுகுசிறுத்தாலும் காரம் போகாதுஎன்பர். அச்சிறியகடுகுபோட்டுத் தாளிப்பதால் உணவுக்குச் சுவையும்,உடலுக்கு உஷ்ணமும் கிடைக்கிறது. கடுகுஎண்ணெய் மூட்டுவலிகளுக்குபயன்படுகிறது. பெருங்காயம் உடலில் சேரும் அழுக்குகளைவெளியேற்றவும்,வாயுத் தொல்லையைப் போக்கவும். உணவில் சேர்க்கப்படுகிறது. சீரகம் உடலுக்குவலுவைத் தருவதுடன் கண்ணுக்குக் குளிர்ச்சியையும் தரும். பூண்டுகந்தகச் சத்துமிகுந்தது. இதனைஉணவில் சேர்ப்பதால் குடலில் சேரும் நுண் கிருமிகள் அழிக்கப்படுகின்றன. குடலும் பலம் பெறுகிறது. மிளகு உஷ்ணமானது. சளி, இருமல் போக்கக் கூடியது. உஷ்ணத்தால் வரும் வயிற்றுக் கோளாறுகளுக்குஅம்மிளகேமருந்தாகும். மிளகாயின் காரம் உடலுக்கு ஊறு விளைவிக்கும். (காரம் உணவில் குறைப்பதுநல்லது.ஆனால் மிளகின் காரம் உடலுக்குநன்மைதரும். செரிமானமண்டலம் பலம் பெறவும். உணவைப் பக்குவப்படுத்தவும் இது பயன்படுகிறது.

கறிவேப்பிலையும் மல்லியும் உணவில் இரட்டையர்களாகப் பயன்படுத்தப்படுவதுபோல (செரிமானம்,கால்சியம் சத்துக்காக) சீரகம்,பூண்டு,மிளகுஆகிய இம்மூன்றும் மும்மூர்த்திகளாகஉணவில் சேர்க்கப்படுகின்றன. மஞ்சள் கிருமிநாசினி,வாசனையுடையது. அழகுசாதனப் பொருளும் கூட இதனைத் தூளாக்கிசமையலில் பயன் படுத்துவதுபசியைத் தூண்டவும் விஷக்கிருமிகள் இரத்தத்தில் சேராமல் இருக்கவும்,வாதபித்த,கபத்தைச் சமனிலைப்படுத்தவும் ஆகும். வெங்காயம் இல்லாமல் சமையல் இல்லை. நச்சுக் கிருமிகளைக் கொல்லும் கிருமிநாசினியாகவும். இருமல் சளிவராமல் தடுக்கும் வரும்முன் காப்போனாகவும் வெங்காயம் உணவில் செயல்படுகிறது. உடலுக்கு நோய் எதிர்ப்புசக்தியையும். உடலுக்குக் குளர்ச்சியையும் தருவதுவெங்காயம். உடல் உஷ்ணத்தாலும் ஒவ்வாமையாலும் ஏற்படும் சளி, இருமலைப் போக்கவெங்காயம் அருமருந்தாகஉதவுகிறது. ”காயம் காக்கும் வெங்காயம்” என்றேவெங்காயம் சிறப்பிக்கப்படும். சிறியவெங்காயத்தைபசுநெய்யில் வதக்கிப் பனங்கற்கண்டுஅல்லதுவெல்லம் சேர்த்துஉண்ணகபக்கட்டு,சளிநீங்கிவிடும்.

புதினா,மல்லிசெரிமானம் தூண்டும். இவற்றுடன் பிறகீரைகள் பலவற்றையும் ஒருநாளைக்குஒன்றுவீதம் உணவில் சேர்த்துக்கொள்ளஎல்லாவிதமானசத்துக்களும் (வைட்டமின்,பாஸ்பரஸ்,கால்சியம் இரும்பு,அயோடின் போன்றவை) நமக்குநாளும் கிடைக்கும் மலச்சிக்கல் அறவேநீங்கிவிடும். இதேபோலஆகாயம் சமைத்தஉணவுஎன்றுசிறப்பிக்கப்படும் எல்லாவகையானபழங்களும் எல்லாச் சத்துக்களும் நிறைந்தவை. இவற்றைஅந்தந்தசீசனுக்குஏற்பக் கிடைக்கும் போதுஅவற்றைஉண்டால் உடல் நலம் பெறலாம். உடல் நலம் காக்கவும்,உடலைக் குறைக்கவும் திடஉணவைவிடக் கீரைகளும்,பழங்களுமேமேலானவையாகக் கருதப்படுகின்றன. அதனால் தான் ‘‘கீரைத் தோட்டம் ஒருமருந்துப் பெட்டி” என்கிறார் டால்ஸ்டாய். கீரைகளில் வைட்டமின்களும் தாதுஉப்புகளும் அதிகமாக இருப்பதே இதற்குக் காரணம். வளமானவாழ்வுக்குவளம் தரும் கீரைகள் என்றும்,பழம் உண்டார் பிணிநீங்கினார் என்றும் உடல் நலனுக்குவழிவகுக்கும் கீரைகளும்,பழங்களும் போற்றப்படுகின்றன.

காய்கறிகள் எல்லாச்சத்துக்களும் நிறைந்தவை. தேவைப்படும் சத்துக்கேற்பக் காய்களைப் பச்சையாகவோ,சமைத்தோஅளவோடுபயன்படுத்தவேண்டும். காய்கறிகளைப் பொடிப் பொடியாகநறுக்குவதும் காய்களைஅதிகமாகக் கழுவதும் அதிகநீரில் வேகவைத்துக் கொட்டுவதும் தவறாகும். இதனால் அவற்றிலுள்ளநார்ச்சத்தும்,பிறசத்துக்களும் அழிந்துவிடுகின்றன. காய்கறிஉணவைமட்டுமேஉண்பவர்களதுவாழ்நாள் நீடிக்கிறது. குழந்தைகள் விரைவில் நல்லவளர்ச்சிபெறுவர். வயதுஏறஏறக் காய்கள் உண்பதால் இதயக் கோளாறுஎலும்புசம்பந்தப்பட்டநோய்கள் ஏற்படுவதுமிகவும் குறையும். பசுமையானகாய்கறிசாப்பிடுபவர்களை “ஸ்கர்வி’’என்ற நோய் அணுகாதுஎன்கின்றனர் அறிவியல் வல்லநர்கள். அறிவியல் வல்லுநராக இல்லாதிருந்தும் காய்கறிகள்

பற்றியவிழிப்புணர்வுஏற்படுத்தியமைக்காககௌரவிக்கப்பட்டஒருவர் ஜேம்ஸ் குக் அவரைப் பற்றிக் கீழேஉள்ளகுறிப்புஉணர்த்தும்.

‘‘மூன்றுஆண்டுகளில் அறுபதினாயிரம் மைல்களுக்குமேல் கடற்பயணம் செய்தஆங்கிலேயர் கேப்டன் ஜேம்ஸ்குகிதனதுபட்டறிவில் தன்னுடையமாலுமிகளில் பசுமையானகாய்கறிகளைச் சாப்பிட்டவர்களை ஸ்கர்வி நோய் அணுகவில்லை,காய்கறிகள் சாப்பிடாதவர்கள் அந்நோயினால் பாதிக்கப்பட்டார்கள் என்பதைக் கண்டுபிடித்தார். இந்தக் கண்டுபிடிப்பிற்காகவிஞ்ஞானக் கழகம்,விஞ்ஞானப் படிப்பறிவு இல்லாதகேப்டன் ஜேம்ஸ் குக்கைக் கௌரவித்தது”

மாவாக்கக் கூடியஉணவுப் பொருட்களானசேனை,உருளைக் கிழக்குவாழைக்காய்,சர்க்கரைவள்ளிக்கிழங்குபோன்றவைகுடலில் மாவுபோல் ஓட்டிக்கொண்டு (அதிகம் உண்டால்) மலச் சிக்கலைஉண்டுபண்ணும் இயல்புடையவை. ஆனால் இவற்றின் தோலில் அதிகச் சத்துக்கள் உள்ளன. இவற்றைத் தோலுடன் சமைப்பதேநலம் கருணைக் கிழங்குஉடல் நலன் காக்கும்.மூல வியாதிக்குமிகச் சிறந்தமருந்தாக இது பயன்படுகிறது.

‘‘மண்பரவுகிழங்குகளில் கருணையன்றிபுசியோம்” என்றுதேரையர் என்றசித்தர் இக்கிழங்கின் சிறப்பைப் புகழ்கின்றார். மேலும் முள்ளங்கி,கேரட் போன்றவற்றின் தோலில் உயிர்ச்சத்து “சி“மிகுதியாகஉள்ளது. ஆகையால் இவற்றின் தோலையும் சீவாமல் கழுவிப் பின் பயன்படுத்தலாம். செப்புப் பாத்திரத்தில் காய்கறிகளைவேகவைத்தாலும் உயிர்ச்சத்து “சி’’போய்விடும். ஆதலால் நீராவியில் வேகவைக்கலாம்.ஒருமுறைசமைத்ததைமீண்டும் மீண்டும் சுடவைத்துச் சாப்பிடுவதால் சத்துபோய்விட்டஉணவையேசாப்பிடுவதாகும். அதனால் அன்றன்றைக்குத் தேவையானவற்றைமட்டும் சமைத்துச் சாப்பிடவேண்டும் அல்லதுபச்சையாகஉண்ணவேண்டும். சமைத்துக் குளிர் பதனப்பெட்டியில் வைத்துப் (கசனைபந) பலநாட்களுக்குப் பயன்படுத்துவதுபோனநோயைக் கொண்டுவருவதற்கானசெயலாகும்.

சமைக்கும் போதும் சுவைமாறாமல் சமைக்கவேண்டும். இன்றுகசப்பையும்,துவர்ப்பையும் பெரும்பாலும் நாம் விரும்புவதில்லை. தம் உணவில் கசப்புச் சுவைகுறையக்குறைய நோய் எதிர்ப்புசக்திகுறையும். துவர்ப்புச் சுவைகுறையச் குறையப் பெண்களுக்குகர்ப்பப்பைசம்பந்தப்பட்டநோய்கள் ஏற்படும். எண்ணெய்ப் பண்டம் உடலில் கொழுப்பைமிகுவிக்கும். அசைவஉணவும் அதுபோலத்தான்.செரிமானம் ஆவதும் கடினமாகும்.உடல் நலன் காக்கஎண்ணெய்அளவோடுபயன்படுத்தவேண்டும். அதுவேஅதிகமானால் உடல் பருமனாவதுடன் இதயவலிக்கும் அது வழி வகுக்கும். எண்ணெயில் எள் எண்ணெயும்,ஆமணக்குஎண்ணெயும் மிகச் சிறந்தவையாகக் கருதப்படுகின்றன.

**உணவுதிருவிழா**

உணவுத் திருவிழாஎன்பதுஒருதிருவிழாஆகும்,அதில் உணவு,அடிக்கடிஉற்பத்திசெய்வது,அதன் மையக் கருப்பொருளாகஉள்ளது. இந்தபண்டிகைகள் அறுவடையின் கொண்டாட்டங்கள் மூலம் சமூகங்களைஒன்றிணைப்பதற்கும்,ஏராளமானவளரும் பருவத்திற்குநன்றிசெலுத்துவதற்கும் ஒருவழியாகும்.

உலகெங்கிலும் உள்ளஉணவுத் திருவிழாக்கள் பெரும்பாலும் பாரம்பரியவிவசாயநுட்பங்கள் மற்றும் ஆண்டின் பருவங்களைஅடிப்படையாகக் கொண்டவை. உணவுத் திருவிழாக்கள் ஒருபகுதியின் உணவுப் பண்பாட்டுடன் தொடர்புடையவை,பரிமாறப்பட்டஉணவைத் தயாரிப்பதன் மூலமாகவோஅல்லதுபண்டிகைகொண்டாடப்படும் காலகட்டத்தின் மூலமாகவோஉணவுத் திருவிழாக்கள் உள்ளூர் கலாச்சாரபாரம்பரியத்தைவலுப்படுத்தும் முகவர்களாகக் கருதப்படுகின்றன,மேலும் ஒரேநேரத்தில் இந்தசர்வதேசபார்வையாளர்களுக்குபண்டமாக்குகிறது. வரலாற்றுரீதியாககலாச்சாரமுக்கியத்துவம் வாய்ந்தஉணவுஅறுவடைகாலங்களுடன் இணைந்திருந்தாலும்,சமகாலஉணவுதிருவிழாக்கள் பொதுவாகவணிகநிறுவனங்கள் அல்லது இலாபநோக்கற்றநிறுவனங்களுடன் தொடர்புடையவைமற்றும் அவற்றின் திருவிழாக்களுக்கானசந்தைப்படுத்தலில் ஈடுபடுகின்றன,ஏனெனில் அவற்றின் வெற்றிஉள்ளூர் மக்களுக்குஎவ்வளவுவருவாய் ஈட்டுகிறதுஎன்பதைக் கணக்கிடுகிறது. சமூகம்,பகுதிஅல்லதுநிறுவனம் நிகழ்வில் ஈடுபடுகிறது. நவீனஉணவுத் திருவிழாக்கள் உணவுசுற்றுலாத் தொழிலின் பெரும் பகுதியாகும், இது உணவுத் திருவிழாக்கள் மற்றும் பிராந்தியஉணவுவகைகளைஒருகுறிப்பிட்டவட்டாரத்தின் பரந்தசுற்றுலாத் தொழிலுக்குஆதரவாகப் பயன்படுத்துகிறது.

**உணவுசுற்றுலா**

உணவுதிருவிழாக்கள் விரைவில் ஒருபரந்தஉணவுசுற்றுலாத் துறையின் ஒருபகுதியாகமாறிவருகின்றன. உணவுசுற்றுலாஉலகளவில் சுற்றுலாத் துறையில் ஒருமுக்கியஅங்கமாகமாறியுள்ளது,மேலும் உணவுத் திருவிழாக்கள் உள்ளூர் தொழில் வளர்ச்சிக்குஆதரவாகக் காட்டப்படுகின்றன. உணவுத் திருவிழாக்கள் பலபிராந்தியங்களுக்கான இலக்குமுத்திரையின்ஒருமுக்கியபகுதியாகும்,தனிநபர்கள் கவர்ச்சியற்ற இடங்களுக்குச் செல்வதற்கும்,நகர்ப்புறதயாரிப்புசூழலுக்குவெளியேஉள்ளூர் தயாரிப்புகள் மற்றும் சேவைகளைமேம்படுத்துவதற்கும் நிகழ்வுஅடிப்படையிலானகாரணத்தைஉருவாக்குகிறது. உணவுத் திருவிழாக்கள் சமூகநிலைத்தன்மையைமேம்படுத்தும் அதேவேளையில் சுற்றுலாமற்றும் விருந்தோம்பல் தொழில்களைபெரிதும் ஆதரிக்கும் என்றுபலஆய்வுகள் காட்டுகின்றன. உலகெங்கிலும் உள்ளஉணவுத் திருவிழாக்களில் மக்கள் கலந்துகொள்வதற்குஉணவுசுற்றுலாவும் ஒருமுக்கியகாரணமாகும். உணவுசுற்றுலாவுடனானஈடுபாடு,எதிர்காலத்தில் ஒருநபர் மீண்டும்

திருவிழாக்களில் கலந்துகொள்வார் என்பதைக் குறிக்கிறதுஎன்றுஆய்வுகள் காட்டுகின்றன, இது உணவுசுற்றுலாமற்றும் உணவுத் திருவிழாவருகைக்குஒரு கூட்டுறவு கூறுகளைக் குறிக்கிறது

**இலக்கியங்களும்உணவும் :**

தமிழகமக்கள் அனைவரும் ஒரேவகையானஉணவைஉண்டார்கள் என்றுசொல்வதற்குஎவ்விதச் சான்றும் இல்லை.இயற்கையாகஅமைந்தநிலப்பாகுபாடுகளில் ஆங்காங்குக் கிடைத்தபொருள்களையும் தங்கள் முயற்சியால் தட்பவெட்பநிலைக்கேற்பஉற்பத்திசெய்தபொருள்களையும் கொண்டுதங்கள் உணவுவகைகளைத் தயாரித்துக்கொண்டார்கள் என்பதற்குப் பலசான்றுகள் உள்ளன. உணவுப் பொருள்களைஅப்படியேபச்சையாகஉண்ணாமல் நல்லமுறையில் பக்குவம் செய்து,சுவையேற்றிஉண்டுமகிழ்ந்திருக்கிறார்கள்.

**உணவுசமைத்தமுறை**

அடுப்புகளில் வைத்துஉணவுகள் சமைக்கப்பட்டுள்ளனநெருப்பு மூட்டும் கோல் “ஞெலிகோல்” எனஅவர்களால் வழங்கப்பட்டது. அக் கோலால் கடைந்துதீயைஉண்டாக்கி,அடுப்பு மூட்டிவிறகுவைத்துச் சமைத்துள்ளார்கள். உணவுப் பொருள்கள் “குழிசிஎன்னும் பானைகளில் இட்டுஅடுப்பில் வைக்கப்பெற்றனஎனவும் அறிகிறோம். அவ்வாறுவைப்பதை “உலை“வைப்பதுஎனக் கூறுவதுவழக்கம்,உணவுகளைப் பலவகையாகச் சமைத்துஉண்டிருக்கிறார்கள் என்பதற்குப் பலகுறிப்புகள் காணப்படுகின்றன. உணவுகளைப் பலசுவைகளுடன் பலவகையாகச் சமைப்பதை “வீமபாகம்“ எனவழங்குகிறோம். சமையல் குறித்துபல்வகைக் குறிப்புகள் உள்ளன.

**விருந்தோம்பல்**

சங்க இலக்கியங்களில் அரசர்களும் பொதுமக்களும் எவ்வாறுஉணவுபடைத்துவிருந்தோம்பினார்கள் என்பதுசிறப்பாகஎடுத்துப் பேசப்படுகின்றது. கலைஞர்களுக்குஅவர்கள் உணவுதந்துவிருந்தோம்பினார்கள்.”விருந்தோம்பல்“ ஒருசமுதாயஅறப்பண்பாகஅவர்களால் பேணப்பட்டுவந்தது. அப் பண்பைவிளக்கும் பாடல்களிலிருந்துஅக்காலஉணவுவகைகளையும் சுவைகளையும் ஒருவாறுதெரிந்துகொள்ளலாம்.

**குறிஞ்சிநிலமக்களின் உணவுவகை**

சோழநாட்டுக் குறிஞ்சிநிலமக்கள் கிழங்கையும் தேனையும் மகிழ்ந்துஉண்டார்கள். இவ்விரண்டுபொருள்களையும் பிறருக்குவிற்றுஅவற்றிற்குப் பதிலாகமீன் நெய்யையும் நறவையும்

வாங்கிப்போய் உண்டுள்ளார்கள். சிலசிறப்பானநாள்களில்நெய் மிகுதியாகப் பெய்தஉணவுஅவர்களால் உண்ணப் பட்டது. மலைஅடிவாரத்தில் வாழ்ந்தசிற்றூர் மக்கள் தினைச்சோறுசமைத்துநெய்யில் இறைச்சியைவேகவைத்து இரண்டையும் சேர்த்துஉண்டார்கள்.

நன்னனுடையமலைகளில் வாழ்ந்தமக்கள் கடமான் இறைச்சியையும் பெண்நாய் கடித்துக் கொண்டுவந்தஉடும்பின் இறைச்சியையும் உண்டுள்ளார்கள். பலாக்கொட்டை,மா,புளிநீர்,மோர் ஆகியவற்றைக்கொண்டுதயாரிக்கப்பட்டகுழம்பை மூங்கிலரிசியால் சமைக்கப்பட்டசோற்றுடன் கலந்துஉண்டார்கள். மலைநாட்டைக் காவல்புரிந்துவந்தவீரர்கள் இறைச்சியையும் கிழங்கையும் உண்டுவந்தனர். மலைவழிகளில் சென்ற கூத்தர்கள் தினைப்புனங் காவல் செய்தகாவலர்களால் கொல்லப்பட்டகாட்டுப் பன்றிகளைப் பெற்று,அவற்றின் மயிரைப் போக்கிவிட்டு. அங்கே மூங்கில் உராய்வதால் பற்றிஎரிந்துகொண்டு இருக்கும் நெருப்பில் அவற்றைவதக்கிஅந்தப் பன்றிகளின் இறைச்சியைஉண்டார்கள்.

**முல்லைநிலமக்களின் உணவுவகை**

முல்லைநிலத்தில் மாடுகள் வளர்ந்தன. எனவே,அங்குப் பாலுக்குப் பஞ்சமில்லை. பாலையும்தினைஅரிசிச் சோற்றையும் தொண்டைநாட்டுமுல்லைநிலமக்கள் உண்டனர். முல்லைநிலப் பகுதிகளின் சிறுஊர்களில் இருந்தமக்கள் வரகரிசிச் சோறும் அவரைப் பருப்பும் கலந்துசெய்யப்பட்ட கூட்டாஞ்சோற்றைஉண்டுமகிழ்ந்தார்கள்.நன்னன் நாட்டில் முல்லைப் பகுதியில் வாழ்ந்தமக்கள் புளிங்கூழ் செய்துஉண்டார்கள். சிவப்புநிறமுடையஅவரைவிதைகளையும் மூங்கில் அரிசியையும் மேட்டுநிலங்களில் விளைந்தஒருவகைநெல்லரிசியையும் கலந்துபுளிகரைக்கப்பட்டஉலையிற் பெய்துபுளிங்கூழாக்கினார்கள்எனஅறிகிறோம்.பலவகைப் பொருள்களையும் கலந்துபுளிப்புச் சேர்த்துவைத்தஉணவுபலநாள்களுக்குக் கெடாதுஎன்பது இன்றும் அறியப்பட்டஉண்மை,ஆகலே, இந்தஉணவைநாள்தோறும் தயாரிக்காமல்சிலநாள்களுக்கொருமுறைதயாரித்திருக்கவும் கூடும் எனஎண்ண இடமுள்ளது. வழிப்பயணம் போகின்றவர்கள் சுட்டுச்சோறாகப் புளிச்சோறுஎடுத்துச் செல்வதை இன்றும் ஊர்ப்புறங்களில் காண்கிறோம். எனவே, இவ்வகைச் சோறு,எடுத்துச்செல்லவும் பயன்பட்டு இருக்கலாம். பருப்பு,அரிசி,புளிஆகியமூன்றின் கூட்டுக்கலவைசிறந்தஉணவுஎன்பதை இன்றையஅறிவியலும் வற்புறுத்தும். மேலும் பொன் துகள்கள் போன்றசிறுஅரிசியை இட்டு,வெள்ளாட்டு இறைச்சியையும் சேர்த்துஆக்கியசோற்றையும் தினைமாவையும் உண்டார்கள் எனவும்தெரிகிறது. தினைமாவைப் பக்குவப்படுத்தியேஉண்டிருத்தல்கூடும்.முல்லைநிலப் பகுதியில் அவரைபயிரிடப்படும். அவற்றைஉரியகாலத்தில் கொய்வது. மரபு. “அவரைகொய்யுநர்“ என்றே இலக்கியம் பேசுகிறது. இன்றும் ஊர்ப்புறங்களில் “கதிர் கொய்தல்“ என்னும் சொற்றொடர் வழங்குவதைக் காணலாம். அவ்வாறுஅவரைகொய்பவர்களுக்கு ஆயர் மகளிர் உணவுசமைத்துக் கொடுத்தார்கள். வரகைநன்குகுற்றிஅரிசியாக்கிச் சோறுவடித்தனர். தெருஓரங்களில்

முளைத்துள்ளவேளைச் செடியிலுள்ளபூக்களைப் பறித்துவெள்ளியதயிரின்கண் இட்டுச் செய்தபுளிக்குழம்பையும் தயாரித்தனர். பிறகு,வரகுசோற்றையும் வேளைப்பூ மிதக்கும் தயிர்க்குழம்பையும் அவரைகொய்யுநர்க்குவழங்கினர்.

**மருதநிலமக்களின் உணவுவகை**

ஓய்மானாட்டுமருதநிலமக்கள் வெண்மையானநிறத்துடன் கூடியவெண்சோற்றைநண்டும் பீர்க்கங்காயும் சேர்த்துச் செய்யப்பட்டகலவைப் பொரியலுடன் உண்டார்கள் .ஆகவே,நெல் மிகவும் வெண்மைநிறமுடையஅரிசிஆகுமாறுஉமிநீக்கப் பட்டிருக்கவேண்டும் என்றும்,அந்தநெல் ஒருவகைச் சிறப்புநெல்லாக இருந்திருக்கலாமென்றும் எண்ண இடமுள்ளது.தொண்டைநாட்டுமருதநிலத்துச் சிறுபிள்ளைகட்குப் பழையசோறுதரப்பட்டது. இக்காலத்திலும் பழையசோறுஉண்பதுவலுவூட்டும் எனக் கிராமமக்களால் நம்பப்படுகிறது. அதுவும் காலையில் உண்ணப்பட்டால் உடலுக்குவளமாகும் எனஊரிலுள்ளஉழைப்பாளிமக்கள் இன்றும் எண்ணுகின்றனர். ஆனால்,பழையசோறுஎப்பொழுதுஉண்டார்கள் என்பதற்குத் தெளிவானசான்றில்லை. மேலும்,அங்குஅவல் இடித்துஉண்டுள்ளார்கள் என்பதும் தெரியவருகிறது. “அவல்“ கெடாமல் நீண்டகாலம் இருக்கக்கூடியது. ஆகவே,சிறுவர்கள் பசிக்கும்போதுஉடன் உண்ணப் பக்குவமாகத் தயாரிக்கப்பட்டஉணவாகஅவலைக் கருதுவதுதவறாகாது. இன்றும் கிராமவீடுகளில் அவல் சிறுவர்கட்குக் கொடுக்கப்படுவதைப் பார்க்கலாம். அவலைநீரில் சிறிது நேரம் ஊறவைத்துவெல்லப் பொடியுடன் கலந்துகொடுப்பதை இன்றும் காணலாம். அங்குவாழ்ந்தமக்கள் நெல்லரிசிச் சோற்றைப் பெட்டைக் கோழிப் பொரியலோடுஉண்டார்கள்.வெறும் சோற்றுடன் பொரியல் கலக்கப்பட்டுச் சுவையாகஉண்ணுவார்கள் போலும். இன்றும் இவ்வாறுஉண்பவர்களைக் காணலாம்.

**நெய்தல்நிலமக்களின் உணவுவகை**

ஓய்மானாட்டுநெய்தல்நிலமக்கள்,பெண்கள் அளித்தகள்ளையும் உலர்ந்த குழல் மீனின் சூட்டிறைச்சியையும் உண்டார்கள். தொண்டைநாட்டுமக்கள் நெல்லையிடித்துமாவாக்கிப் பன்றிக்கு இட்டுக் கொழுக்கவைத்துநன்குகொழுத்தபின்,அப்பன்றியைக் கொன்றுஅதன் இறைச்சியைச் சமைத்துஉண்டார்கள் எனஅறிகிறோம்.மீனவர்கள் கடல் இறால்மீன்,வயலில் கிடைத்த ஆமை ஆகிய இரண்டையும் பக்குவம் செய்துஉண்டுவாழ்ந்தார்கள்.

**பாலைநிலமக்களின் உணவுவகை**

ஓய்மானாட்டுப் பாலைநிலமக்கள் இனிமையுடையபுளியங்கறிகலந்தசோற்றையும் ஆமாவின் சூட்டிறைச்சியையும் உண்டார்கள். தொண்டைநாட்டுப் பாலைநிலமக்கள் புல்லரிசியைச் சேகரித்துத் திரட்டிநிலத்திலேஉரல் செய்துஅதிலிட்டுக் குற்றிஅரிசியாக்கிப் புல்லரிசிச் சோறுசமைத்துஉப்புக் கண்டத்தோடுஉண்டனர். அவர்கள் விருந்தினர்களுக்கும் உணவுதந்தனர். விருந்தினர்க்குஉணவைத் தேக்கிலையில் படைத்தார்கள்மேட்டுநிலத்தில் ஒருவகைநெல்

விளைந்தது. அந்தநெல் பார்ப்பதற்குஈச்சங்கொட்டைபோன்றிருக்குமாம். அந்தநெல்லிலிருந்துஅரிசிசெய்து,சோறுஆக்கிஅதனுடன் உடும்பின் பொரியலையும் சேர்த்துக்கொண்டுபாலைநிலமக்கள் உண்பர்.

**வினாக்கள்**

| வ.எண் | ஐந்து மதிப்பெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | புணர்ச்சியில் அமையும் மூவகைவிகாரங்கள் யாவை? | K2 | CO2 | PO4 |
| 2 | பூப்பெயர் முன் இனமென்மையும் தோன்றும் சான்றுதருக. | K4 | CO3 | PO5 |
| 3 | வேற்றுமைப் புணர்ச்சிஎன்றால் என்ன? | K1 | CO4 | PO1 |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | திசைப்பெயர்கள் எங்ஙனம் புணரும்? | K5 | CO5 | PO2 |
| 5 | உயிரீற்றுசிறப்புவிதிஎன்றால் என்ன? | K3 | CO4 | PO3 |

| வ.எண் | எட்டு மதிபெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | இலக்கியமும் உணவும் கட்டுரைக்க. | K1 | CO4 | PO4 |
| 2 | தமிழா் உணவுப் பொருட்களும் அவற்றின் மருத்துவகுணங்களையும் விவரிக்க. | K4 | CO2 | PO6 |
| 3 | மருதம் மற்றும் நெய்தல் நிலமக்களின் உணவு வகைகள் குறித்துஎடுத்துரைக்க. | K3 | CO1 | PO5 |
| 4 | குறிஞ்சிமற்றும் முல்லைநிலமக்களின் உணவுமுறைகுறித்துவிவரி. | K2 | CO5 | PO6 |
| 5 | உணவுசுற்றுலாகுறித்துகட்டுரைவரைக. | K4 | CO3 | PO3 |

## அலகு-5

## தமிழர் உணவின் தனித்துவமும் உணவுவணிகமும்

### தமிழர் உணவுப் பொருட்கள்

#### தானியஉணவு

உலகத்திலேஉள்ளஎல்லாமக்களுக்கும் முக்கியஉணவாகஅமைந்தவைதானியவகைகளே. அரிசி,கோதுமைகேழ்வரகு,சோளம். கம்புமுதலியதானிய வகைகள் உணவாகஉண்ணப்படுகின்றன.

சீனா, ஜப்பான்,பர்மா,மலாயா. கிழக்கிந்தியத் தீவுகள், இந்தியா, இலங்கைமுதலியநாடுகளில்,உலகத்திலேயுள்ளஒருபகுதிமக்கள் அரிசியைமுக்கியஆகாரமாகக் கொண்டுவாழ்கிறார்கள். ஐரோப்பா,அமெரிக்கா, ஆஸ்ட்ரேலியாகண்டங்களில் வசிப்பவர் கோதுமையைமுக்கியஉணவாகக் கொண்டுள்ளனர். சிலநாடுகளில் சோளம் முக்கியஉணவாக இருக்கிறது. தென் இந்தியாவில் நாம் அரிசியைமுக்கியஉணவாகக் கொள்கிறோம்.

தானியஉணவில் பொதுவாக (உடம்புக்குஅனலைத் தருகிற) மாவுசத்து இருக்கிறது. ஆகவே இதுஉணவுவகையில் முக்கியமானது. நம்மவர்களில் சரிபாதிபேர்,முக்கியமாகக் கிராமத்தில் வாழ்பவர் கேழ்வரகைமுக்கியஉணவாகக் கொள்கின்றனர். கம்பு,சோளம்,கோதுமையும் சிறுபான்மைநமதுஉணவாக இக்காலத்தில் அமைந்திருக்கின்றன. இந்தஉணவுப் பொருள்களில் உள்ளகுற்றங்குறைகளையும்,நன்மைதீமைகளையும் ஆராய்ந்துதெரிந்துகொள்ளவேண்டியதுஉடல் நலம் பெறுவோர் கடமையாகும். ஆகவே. தானியப் பொருள்களின் இயல்பைஆராய்வோம்.

**அரிசி :**

அரிசி,நமதுநாட்டுமுக்கியஉணவு. அரிசியில் பலவகைஉண்டு.அரிசியைச் சோறாகச் சமைத்துஉண்கிறோம். பொங்கல், இட்டலி,தோசை,உப்புமா,உருண்டை,பிட்டுமுதலியபலகாரங்களாகவும் செய்துஉண்கிறோம். அரிசியினால் மற்றும் பலவிதப் பலகாரங்கள் செய்கிறோம். தானியவகைகளில் அரிசிதான் குறைந்தசத்துஉள்ளது. கேழ்வரகு,கம்பு,சோளம்,கோதுமைஎன்னும் தானியங்கள் அரிசியைவிடஅதிகசத்துள்ளவை. குறைந்தசத்துள்ளஅரிசியில் சிறந்ததுகார் அரிசி, இந்தஅரிசிசிவந்தநிறமாக இருக்கும். இதன் மேல் உள்ளதவிடுதான் இதற்குச் செந்நிறம் அளிக்கிறது. இந்தத் தவிட்டில் தசைவளர்க்கும் சத்துஅதிகமாக இருப்பதனால்,கார் அரிசி,மற்றஅரிசியைவிடமிகச் சத்துள்ளது. ஆனால்,நாகரிகம் உள்ளவர் என்றுநினைத்துக்கொண்டிருப்பவர் இந்தக் கார் அரிசியைஉண்பது இல்லை. இவர்கள்,மிகவெண்மைநிறமாக,மல்லிகைப் பூவைப்போல் இருக்கிறஅரிசியைத் தேடிவாங்கிஉண்பார்கள். தவிடுஅறவேபோகும்படிகுற்றியவெண்மையானஅரிசி,சத்துள்ளஅரிசிஅன்று.

பச்சரிசிஎன்றும் புழுங்கல் அரிசிஎன்றும் அரிசியில் இரண்டுவிதம் உண்டு. புழுங்கல் அரிசிஎன்பது,நெல்லைஅவித்துஉலர்த்திஉமிநீக்கியஅரிசி,புழுங்கல் அரிசியில் தவிடுமுழுவதும் நீங்கிப் போவது இல்லைசிறிதளவுதவிடுஅரிசியுடன் ஒட்டிக் கொண்டிருக்கும். பச்சரிசிஎன்பதுநெல்லைஅவிக்காமலேஉமிநீக்கியஅரிசி. இதில் தவிடுபெரும்பாலும் நீங்கிவிடும். ஆகவேதவிடுபோலபச்சரிசிஅதிகசத்துடையதல்ல. புழுங்கல் அரிசியில் சிறிதளவுதவிடு இருப்பதால்,அதுபச்சரிசியைவிடச் சத்துள்ளது.

அரிசியைச் சோறுசமைக்கும் போது,அதைநீரில் ஊறவைத்துப் பலதடவைநன்றாககழுவியபிறகுஅரிசியைஉலையில் இட்டுச் சோறுசமைக்கிறார்கள்.இப்படிஅரிசியைப் பலதடவைநீரில் கழுவுவதுதவறு,அரிசியைக் கழுவுவதால் தவிடுசிறிதளவுள்ளதவிடும் முழுவதும் போய்விடுகிறது. தவிடுகழுவப்படுவதனால் அதிலுள்ளதசைவளர்க்கும் சத்துஎடுபட்டுப் போகிறது. மேலும் சோறுவெந்தபிறகு,அதிலுள்ளகஞ்சியைவடித்துவிடுகிறார்கள். கஞ்சியைவடித்துவிடுகிறபடியினாலே,சோற்றிலுள்ளசத்துமேலும் கழிந்துவிடுகிறது. இவ்வாறுதவிட்டையும் கழுவிவிட்டு,கஞ்சியையும் வடித்துவிட்டு,வெறும் சோற்றைமட்டும் உண்பதனால் அரிசியில் உள்ளபெரும்பான்மையானசத்துக்கள் கழிந்துவிடுகின்றன. ஆகவேஅரிசிச் சோற்றில் உணவுச் சத்துகுறைவுமிகமிககுறைவு.

அரிசியைக் கழுவியநீரையும் சோற்றைவடித்தகஞ்சியையும் கிராமவாசிகள் மாடுகளுக்குக் குடிக்கக் கொடுக்கிறார்கள். இதுமாடுகளுக்குச் சிறந்தஉணவாகிறது.

அரிசியைத் தவிடுபோகக் கழுவாமல் சமைக்கவேண்டும். பொங்கலாகச் சமைப்பதுநல்லது. அவலில் தவிடு இருப்பதனால்,அரிசியைவிடஅவல் சத்துள்ளஉணவு.

என்ன? கேவலம் தவிட்டில் அவ்வளவுசத்து இருக்கிறதா? என்றுசிலர் வியப்படையக் கூடும். ஆம்,தவிடுசத்துள்ளது. உடம்புக்குப் பலமும் உறுதியும் அளிக்கும் பொருள்களில் தவிடுமுக்கியமானது.முற்காலத்தில் நெல்லைஉரலில் இட்டுஉலக்கையால் குற்றிஉமிநீக்கிஅரிசிஎடுப்பார்கள். அப்படிச் செய்வதால் அரிசியின் மேலுள்ளதவிடுமுழுவதும் பிரிந்துபோகாமல் ஓரளவுஅரிசியில் ஒட்டிக் கொண்டிருக்கும். இந்தக் கைக்குற்றல் அரிசியைச் சமைத்துசாப்பிட்டதால் உடம்புக்குப் பலம் உண்டாயிற்று. இப்போதுகைக்குற்றல் அரிகிடைப்பதில்லை. மிஷினில் நெல்லைக் குற்றிஅரிசிஎடுக்கிறார்கள். மிஷினில் அரிசிஉண்டாக்கும்போதுஅரிசியில் உள்ளதவிட்டைஅறவேநீக்கிவிட்டு,வெண்மையானஅரிசிஉண்டாக்குகிறார்கள். வெண்மையானஅரிசி,தவிடுநீங்கியஅரிசியாகையால். அதில் தசைவளர்ச்சிக்குரியசத்து இல்லை.ஆகவே,அரிசிச் சோறுதானியவகையில் மிகவும் கீழ்த்தரமானது. தசைவளர்ச்சிக்குரியசத்து இல்லாதது.

அரிசி,மற்றத் தானியங்களைப் போலவேமாவுசத்துப் பொருள். வெறும் அரிசிச்சோற்றில் உடம்புக்குவேண்டியவெப்பத்தைத் தருகிறமாவுப் பொருள் மட்டும் உண்டு. இது ஒன்றுதான் அரிசிச் சோற்றினால் நமக்குக் கிடைக்கிறநன்மை. வாய்ப்புள்ளவர் நெல்லைத் தவிடுநீக்காமல் அரிசியாக்கிச் சோறுசமைத்துஉண்ணவேண்டும். அந்தவாய்ப்பு இல்லாதவர். இழந்துபோனதவிட்டுச் சத்தைவேறுவிதத்தில் பெறவேண்டும்.

**கேழ்வரகு**

அரிசிக்குஅடுத்தபடியாகநமதுநாட்டில் உண்ணப்படும் தானியம் கேழ்வரகுஆகும். இதைப் பெரும்பாலும் கிராமவாசிகள் - உழைப்பாளிகள் - உண்கிறார்கள். கேழ்வரகுஉண்பதுஅனாகரிகமானதுஎன்றுஉண்மையறியாதவர் தவறாகக் கருதுகிறார்கள்.அரிசியைவிடச் சத்துள்ளதானியம் கேழ்வரகு,கேழ்வரகைஅரைத்துமாவாக்கிக் களியாகவும்,பிட்டாகவும், கூழாகவும்,அடையாகவும் சமைத்துஉண்ணலாம். தசைகளுக்குப் பலந்தருகிறதவிடுகேழ்வரகில் சேர்த்திருக்கிறபடியால் இது அரிசியைவிடநல்லபலந்தருகிறஉணவாகும். தசைகளுக்குஉரமளிக்கிறதவிடும். உடல் நலத்துக்குவேண்டியவெப்பம் அளிக்கிறமாவும் கேழ்வரகில் இருக்கிறபடியால்,கேழ்வரகுஅரிசியைவிடச் சிறந்தஉணவுஆகும். இதனால் தான் கேழ்வரகுஉண்பவர் உடல் உரம் பெற்றுநன்றாக இருப்பதையும்,அரிசிஉண்பவர் அவ்வளவுஉரம் பெறாமல் இருப்பதையும் கண்கூடாகக் கண்டுவருகிறோம். சிலருக்குகேழ்வரகுஉணவுஉடம்புக்குஒத்துக்கொள்வதில்லை. இப்படிப்பட்டவர் நெய் பால்,தயிர் இவைகளைக் கேழ்வரகுடன் சேர்த்துக் கொண்டால்,உடம்புக்குஒத்துப் போகும். கேழ்வரகில் கால்ஸியம், இரும்புஎன்னும் சத்துக்களும் உள்ளன.

**கம்பு:**

கேழ்வரகுக்குஅடுத்தபடியாகஉள்ளதானியம் கம்பு. அரிசியைவிடஅதிகசத்துள்ளதானியம் இது. கம்பிலுள்ளதவிடும் எடுபடாமல் அதிலேயே இருப்பதனால் கேழ்வரகைப்போலவே இதுவும் சத்துள்ளஉணவு. இதைப் பலகாரமாகச் செய்துஉண்கிறார்கள். இதிலிருந்துஉடல் நலத்துக்குரியஉயிர்ச்சத்துப் பொருளைஉண்டாக்கலாம்.

**சோளம்:**

சோளமும் அரிசியைவிடசத்துள்ளஉணவு. இதில் அரிசியைவிடப் பன்மடங்குகொழுப்புப் பொருள்கள் உண்டு. கோதுமையில் இருப்பதுபோல,சோளத்திலும் பிசுபிசுப்புத்தன்மை இருப்பதனால் கோதுமையைரொட்டிசுடுவதுபோலச் சோளத்திலும் ரொட்டிசுடலாம். கேழ்வரகு,கம்புபோலவே, சோளமும் சத்துள்ளநல்லஉணவு. தவிடுஎடுபடாதசோளத்தில் தசைகளுக்குஉரமளிக்கும் சத்தும்.உடம்புக்குவெப்பம் அளிக்கும் மாவுப் பொருளும் உண்டு.

**வரகு**

வரகுஅரிசிகொண்டுசெய்யப்படும் உணவுகள் சாப்பிடுவதால் பலவிதமானநன்மைகள் ஏற்படுகின்றன. புரதச்சத்து,சர்க்கரை,கொழுப்பு,மினரல்ஸ்,கொழுப்புச்சத்து,கால்சியம்,பாஸ்பரஸ்,

இரும்புசத்து,தையமின்,நையஸின் போன்றசத்துக்கள் வரகில் மிகுதியாகஉள்ளது. இதனால் என்னென்னநன்மைகள் ஏற்படுகின்றனஎன்பதைப் பற்றிபார்ப்போம்.

கோடைகாலங்களில் வரகரிசிகொண்டுசெய்யப்படும் உணவுகளைஅதிகம் சாப்பிடுவதால் தாகம் தணிவதோடு,சிறுநீரகங்களில் கற்கள் ஏற்படுவதைதடுக்கும்.

வரகரிசியைதொடர்ந்துசாப்பிடுவதன் மூலம் ஆண்மைகுறைபாட்டைபோக்கமுடியும்.

வரகரிசி இதயத்திற்குபலம் தரும் தன்மைஅதிகம் கொண்டது. வரகரிசிஉணவுகளைசாப்பிட்டுவந்தால் இதயம் ஆரோக்கியம் மேம்படும்.

வரகரிசியைசாப்பிடுவதால் ரத்தத்தில் ஊட்டச்சத்துகள் அதிகரிக்கும். இதுரத்தத்தை தூய்மைப்படுத்துவதோடு,ரத்தஓட்டத்தைசீராக்கும்.

இதில் நார்ச்சத்துமிகவும் அதிகம் என்பதால்,வரகரிசிகொண்டுசெய்யப்பட்டஉணவுகளைசாப்பிடும்போது,வயிறு,குடல்களில் இருக்கும் புண்கள் ஆறுவதோடு,மலச்சிக்கல் பிரச்சனையும் நீங்கும்.

வரகரிசிகொண்டுசெய்யப்பட்டஉணவுகளை இரண்டுநாட்களுக்குஒருமுறைசாப்பிட்டுவந்தால் ரத்தத்தில் சர்க்கரையின் அளவுவேகமாககுறைந்துநீரிழிவு நோய் கட்டுக்குள் வரும்.

உடலில் உள்ளதேவையற்றநச்சுக்களைவெளியேற்றும் தன்மைவரகுஅரிசிக்குஉண்டு.

கண்புரைநோய்கள், கண் வீக்கம் என்றகண்களில் ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வாகவும் இருக்கின்றது,மேலும் இது உடல் சூட்டினைக் குறைத்துஉடலைக் குளிர்ச்சியாகவைக்கஉதவுகின்றது.

நரம்புசம்பந்தப்பட்டபிரச்சினைகள்,கல்லீரல் அலர்ஜி,கல்லீரல் செயலினைமேம்படுத்துதல்,நிணநீர் சுரப்பிகளைசீராக்கவும் உதவுகிறதுவரகரிசி.பெண்கள் சம்பந்தப்பட்டபிரச்சினைகளானமாதவிடாய்க் கோளாறுகளுக்குசிறந்ததீர்வாகவும் உள்ளது.

வரகரிசியில் இருக்கும் சத்துக்கள் உடலில் ஏற்பட்டிருக்கும் புண்கள்,வெட்டுக்காயங்கள்,அதனால் ஏற்பட்டதழும்புகள் போன்றவற்றைவிரைவாகஆற்றுகிறது. மேலும் பாதத்தில் ஏற்படும் பித்தவெடிப்புகளையும் குணப்படுத்துகிறது.

**பருப்பு வகைகள்**

பருப்புவகைகளும் பயறுவகைகளும் நமதுநாட்டில் கிடைக்கின்றன. தானியஉணவுக்குஅடுத்தபடியாகபருப்பு வகைகள் நமதுஉணவில் முக்கிய இடம் பெறுகின்றன. பருப்புகளும் பயறுகளும் தசைகளுக்குப் பலம் தந்துஉடம்புக்குஉரம் அளிக்கிறபொருள்கள்.

அரிசிகோதுமைஆகியதானியங்களின் மேலேஉள்ளமெல்லியதோல் போன்றதவிட்டில்,தசையைவளர்க்கும் சத்துஉண்டுஎன்று கூறினோம். ஆனால்,அத்தானியங்களின் தவிடுஎடுபட்டுப்போய் வெறும் வெள்ளைஅரிசியும் வெள்ளைக் கோதுமையுந்தான் கிடைக்கின்றனஎன்றும்அதனால் தசைவளர்க்கும் சத்துஅரிசியிலும் கோதுமையிலும் இல்லாமற் போகின்றனஎன்றும் சொன்னோம். தவிடுஉள்ளஅரிசிகிடைத்தாலும்,அதைஉலையில் இட்டுச் சமைப்பதற்குமுன்னமேதண்ணீரில் ஊறவைத்துப் பலமுறைகழுவிவிடுகிறபடியால்,அரிசியில் உள்ளசிறிதளவுதவிடுங்கூட அறவேபோய்விடுகிறதுஎன்றும் விளக்கினோம். இவ்வாறுஅரிசியிலிருந்துஎடுபட்டுப்போனதசைவளர்க்கும் சத்தைப் பருப்புகளும் பயறுகளும் நிறைவுசெய்கின்றன. எனவே,தசைகளைவளர்க்கிறபருப்பு வகைகள் நமதுஉணவில் முக்கிய இடம் பெறவேண்டுவதுநல்லது. தானியஉணவுகள் உடம்புக்குவெப்பம் அளித்துஊக்கந்தருகின்றனவென்றால்,பருப்புகளும் பயறுகளும் தசைகளுக்குஉரம் அளித்துஉடலைப் பலப்படுத்துகின்றன. பருப்புகளிலும் பயறுகளிலும் தசைகளுக்குஉரம் அளிக்கும் (பி)வைட்டமின் என்னும் உயிர்ச்சத்து இருக்கிறது.

பருப்புவகைகளில் மட்டும் அல்லாமல்,வேர்க்கடலை. முந்திரிப்பருப்பு,வாதுமைப் பருப்பு,அக்ரோட்டுமுதலியபருப்புவகைளிலும் தசைகளுக்குஉரம் அளிக்கும் உயிர்ச் சத்துகள் நிறையஉண்டு.

நாம் உண்ணும் பருப்பு,பயறுவகைகளைப் பற்றிஆரோய்வோம்,

**துவரம்பருப்பு:**

துவரையைத் தோல் நீக்கித் துவரம் பருப்புசெய்யப்படுகிறது. துவரம்பருப்பைச் சமைத்துச் சோற்றில் இட்டுநெய்விட்டுப் பிசைந்துஉண்கிறோம். குழந்தைகளுக்குப் பருப்புச் சோறுஊட்டுகிறோம். பருப்பு வகைகள் எல்லாவற்றிலும் இருப்பதுபோலவேதுவரம் பருப்பிலும் தசைகளைவளர்க்கும் உயிர்ச்சத்துஉண்டு. துவரம்பருப்பைச் சாம்பார் செய்தும் குழம்புசெய்தும் மற்றும் வேறுவிதமாகச் சமைத்தும் உணவுடன் கலந்துஉண்கிறோம். வெங்காயச் சாம்பார் உருசியில் பேர்போனதல்லவா? இட்டலியும் சாம்பாரும் வேண்டாதவர் யார்? துவரம்பருப்பைக் குறைந்தஅளவாகச் சாப்பிடவேண்டும். அதிகஅளவுசேர்த்துக்கொண்டால் உடல் நலம் கெடும் . துவரம்பருப்பைவேகவைத்துநீரைமட்டும் எடுத்துக் கொண்டுதிப்பியைநீக்கிவிடுவதுநலம்.

**கடலைப்பருப்பு**

கடலைப்பருப்புசத்துள்ளஉணவு. தசைவளர்க்கும் சத்து இதில் அதிகமாகஉண்டு, யூனானி வைத்தியராகியமுகம்மதியமருத்துவர் கடலைப்பருப்பைத் தாதுபுஷ்டியளிக்கும் பொருளாகக் கருதுகிறார்கள். முழுக்கடலையைச் சுண்டல் செய்தும்,எண்ணெயில் வறுத்தும்,வடைசெய்தும்,உண்ணலாம். வெங்காயம் சேர்த்துஎண்ணெயில் சுட்டமசால்வடைருசியாக

இருப்பதுடன் பலமளிக்கும் பலகாரமாகவும் இருக்கிறது. கடலைப்பருப்புமாவினால் உருளைக்கிழங்கு,வாழைக்காய்,கத்தரிக்காய் ‘‘பச்சிகள்!’’செய்கிறார்கள்.கடலைமாவினால் ‘‘மைசூர் பாகு” செய்கிறார்கள்.கடலைப்பருப்புதசைவளர்க்கும் சிறந்தஉணவுஎன்பதில் ஐயமில்லை. சிலருக்குக் கடலைப்பருப்புப் பலகாரங்கள் வயிற்றுக்குஒத்துக்கொள்வதில்லை. அப்படிப்பட்டவர் குறைந்தஅளவாகஉண்ணலாம்.

உளுந்தைத் தோல்நீக்கிஉளுத்தம்பருப்புஉண்டாக்கப் படுகிறது. பருப்புவகைகளில் உளுத்தம்பருப்புஅதிகச் சத்துள்ளது. ஆகவே இதுதசைவளர்க்கும் உணவுப் பொருள்களில் முதன்மையானது. உளுத்தம் பருப்பைமாமிசஉணவுக்குஅடுத்தப்படியாகக் கூறுவர். மாமிசஉணவு,உடம்பின் தசைகளைவளர்த்துஉரம் அளிப்பதில் முதன்மையானது என்பர். மாமிசத்துக்குஅடுத்தபடியாகச் சதைவளர்க்கும் பொருள்கள் பருப்புகளும் பயறுகளும் ஆகும். ஆனால்,பருப்புவகைகளில் முதன்மையானது (மாமிசத்துக்குஅடுத்தபடியாகத்தான்) உளுத்தம்பருப்பு.

பிராமணர் இறந்தவர் நினைவுநாட்களாகிய “சிராத்தம்’’என்னும் “திவச” நாட்களில் உளுந்துவடைமுதலியவற்றைஉளுத்தம் பருப்பினால் செய்வதுவழக்கம். ஏனென்றால்,உளுந்து இறைச்சிக்குஅடுத்தபடியாகச் சத்துள்ளது. பண்டைக் காலத்தில் பிராமணர்கள் மாமிசஉணவுகளைச் சாப்பிட்டார்கள். சிராத்தநாட்களில் பலவகையான இறைச்சிகளைச் சமைத்துச் சாப்பிட்டார்கள். சமணசமயமும் பௌத்தமதமும் செல்வாக்குப் பெற்று,மாமிசஉணவுஉண்பது இழிவானதுஎன்னும் கருத்துப் பரவியபோதுபிராமணர் இறைச்சிஉண்பதைநிறுத்தி “மரக்கறி’’உணவைமட்டும் உண்ணத் தொடங்கினார்கள். இறைச்சிஉணவைவிட்டபிறகு,அதற்குச் சமமானவேறுமரக்கறிஉணவுஉளுத்தம்பருப்புதான் என்பதைக் கண்டறிந்துஅதைஅதிகமாகச் சாப்பிடத் தொடங்கினார்கள். மாமிசம் சாப்பிடாதவர்கள்,உளுந்துப் பலகாரங்களைஅதிகமாகஉண்கிறார்கள். உண்மையாகவேஉளுந்துதசைகளுக்குஉரம் தருகிறசிறந்தஉணவு.

அரிசியில் தவிடுபோய்விடுகிறபடியினால்,தசைகளுக்குஉரம் அளிக்கிறசத்தை இழந்துவிடுகிறோம். அவ்வாறு இழந்துபோனதவிட்டுச்சத்தைஉளுந்துஈடு செய்கிறது. அரிசியுடன் உளுந்துசேர்த்துச் சமைக்கும் பண்டங்கள் உடலுக்குஉரம் அளிக்கின்றன. இதனால்தான் தோசைமாவு இட்டலிமாவுஅரைக்கும்போதுஅதனுடன் உளுந்துசேர்த்துஅரைத்துப் புளிக்கவைத்துத் தோசை, இட்டலிசுடுகிறார்கள். எனவே,தோசையும், இட்டலியும் தசைகளுக்குஉரம் அளிப்பதோடுஉடம்புக்குவெப்பம் கொடுத்துஉடலைநன்னிலையில் வைக்கின்றன. ஆனால் உளுந்தையும் அளவாகஉட்கொள்ளவெண்டும். அளவுக்குமிஞ்சினால் அமுதமும் நஞ்சுஅல்லவா?

**அவரை,மொச்சைமுதலியன**

இவைகளில்,தசைவளர்க்கிறபுரோட்டின் சத்தும் வெப்பந் தருகிறகார்போஹைட்ரேட் என்னும் பொருள்களும் அதிகம் உள்ளன. பாஸ்பரஸ்,கால்சியம், இரும்புச் சத்துமுதலியவைகளும் இவற்றில்அதிகம் உண்டு. அவரைக் கொட்டைமொச்சைக் கொட்டைஆகியபருப்புவகைகளிலும் தசையைவளர்த்துஉடம்புக்குஉரம் தருகிறசத்துக்கள் அதிகம் உள்ளன. இவைகளையும் அடிக்கடிஉண்ணவேண்டும். இவற்றில் தசைவளர்க்கும் உயிர்ச்சத்துக்கள் நிறையஉண்டு.இவையன்றிபச்சைப்பயறு,பயத்தம்பயறு,காராமணி,பட்டாணி,மலைத்துவரைமுதலியபய றுவகைகளிலும் தசைவளர்க்கும் உயிர்ச் சத்துக்கள் உள்ளன. இவைகளையெல்லாம் உணவாகக் கொள்வதுஉடல்நலத்துக்குநல்லது.

**வேர்க்கடலை**

இதற்குநிலக்கடலைஎன்றும் பெயர். இதுபண்டைக் காலத்தில் நமதுநாட்டில் கிடையாது. 15ஆம் நூற்றாண்டுக்குப்பிறகு. ஐரோப்பியர்களால் இது நமதுநாட்டிற்குக் கொண்டுவரப்பட்டது. இப்போது இது நமதுநாட்டுப் பயிராகிவிட்டது. நிலக்கடலையிலிருந்துஎண்ணெய் உணவுக்காகஉபயோகிக்கிறோம். வேர்க்கடலையிலிருந்துபலவகையானபலகாரங்கள் செய்துஉண்கிறோம். இதில்,தசைக்குஉரம் அளிக்கும் உயிர்ச்சத்துநிறையஉண்டு. இதில் எண்ணெய் கலந்திருப்பதனால்இதைஅதிகமாகஉண்பது கூடாது. மிதமாகஉண்ணவேண்டும். நிலக்கடலையைஎண்ணெய் ஆட்டி,மிகுந்தபிண்ணுக்கைநிலத்துக்குஉரம் இடலாம். இந்தப் பிண்ணுக்குப் பசுக்களுக்குநல்லதீனியாகும். இதைத் தின்னும் பசுக்கள் நல்லபால் தரும். வெல்லத்துடன் கலந்து இதைப் பலகாரம் செய்துசாப்பிடுவதுநல்லது.

**கீரைகள்**

கீரையை இலைக்கறிஎன்றும் கூறுவர். நமதுநாட்டில் ஏழைமக்களும் நடுத்தரமக்களும் கீரைஉணவின் பயனைஉணர்ந்திருப்பதுபோல் செல்வந்தர் உணர்ந்துகொள்ளவில்லை. இலைக்கறிஉணவைஉண்பதுதங்கள் உயர்வுக்குக் குறைந்தசெயலாகவும் சிலர் கருதுகிறார்கள். இதுதவறானகருத்து.ஏதேனும் ஒருவகைக் கீரையைஅடிக்கடிசோற்றுடன் சேர்த்துக் கொள்வதுஉடல் நலத்துக்குஉகந்தது.நாள்தோறும் இலைக்கறிஉண்ணவேண்டும் என்பதல்ல. அடிக்கடிசேர்த்துக் கொள்வதுநல்லது. வயிற்றில் மலச்சிக்கல் இல்லாதபடிவைப்பதற்கு இலைக்கறிஉணவுசிறந்தது. பொதுவாகக் கீரைகளில் அயோடின் என்னும் பொருள் உண்டு. இது உடல் நலத்துக்கு இன்றியமையாதது.

கீரைகளில் உப்புச் சத்துக்களும்,உலோகச் சத்துக்களும்,வைட்டமின் என்னும் உயிர்ச்சத்துக்களும் உள்ளன. எலும்புகளைவளர்க்கிறசுண்ணாம்புச் சத்து (கால்ஸியம்) இரும்பு (அயம்)ச்சத்துமுதலியஉப்புச்சத்துக்களும் ஏ.பி.சி. வைட்டமின் என்னும் உயிர்ச்சத்துக்களும்

கீரைகளில் உண்டு. இந்தச் சத்துக்கள் எல்லாம் எல்லாக் கீரைகளிலும் உண்டென்றுகருதக்கூடாது. ஒவ்வொருவகையானகீரையில் ஒவ்வொருவகையானசத்துக்களும் உப்புக்களும் உள்ளன. இரத்தத்தைநன்னிலையில் வைப்பதற்குக் கீரைகள் மிகவும் உதவுகின்றன.ஆகவேகீரைகளைஒவ்வொருவரும் அடிக்கடிஉண்ணவேண்டும்.

கீரைகள் உப்புச் சத்துக்களையும் உயிர்ச்சத்துக்களையும் இலைகளின் வழியாகச் சூரியவெளிச்சத்திலிருந்தும். வேரின் வழியாகமண்ணில் இருந்தும் எடுத்துக் கொள்கின்றன. இலைதழைகளைமட்டும் தின்றுஉயிர் வாழ்கிற ஆடு. மாடு,மான், முயல்,யானை,குதிரைமுதலியமிருகங்கள் எல்லாம் உடல் நலம் பெற்று இனிதுவாழ்கின்றன. இதனால், இலைக்கறிகளில் உடல் வளர்ச்சிக்குரியசத்துக்கள் இருப்பதைநன்கறியலாம்.

இலைக்கறியைச் சமைக்கும்போதுகீழ்க்கண்டவற்றைமுக்கியமாகக் கவனிக்கவேண்டும்.

1.சமைக்கப்படுகிறகீரைகள் புத்தம் புதிதாக இருக்கவேண்டும். வாடிவதங்கியகீரைகளில் உயிர்ச் சத்துக்கள் நீங்கிவிடுகின்றன. அன்றியும்,சுவையும் குறைந்துவிடுகின்றது. ஆகையால்,புதியகீரைகளாக இருக்கவேண்டும்.

2.கீரைகளை அரிந்துநெடுநேரம் காற்றாறவிட்டுப் பிறகுசமைக்கக்கூடாது. கீரையைஅரிந்துகாற்றாறவிட்டால்,அதில் உள்ளஉயிர்ச் சத்துக்கள் நீங்கிவிடுகின்றன. சுவையும் குறைகிறது.

3.கீரைகளில் உப்புச்சத்துக்களும் உலோகச்சத்துக்களும் உள்ளனஎன்றுஅறிவோம். கீரையைவேகவைத்தால் அதிலுள்ளஉப்புச்சத்துக்கள் பிரிந்துநீருடன் கரைந்துபாத்திரத்தின் அடியில் நிற்கும். இந்தநீரைவெறும் நீர் என்றுதவறாகநினைத்து இதைக் கீழேகொட்டிவீணாக்கிவிடுகிறார்கள். உப்புச் சத்துள்ள இந்தநீர் மிகமுக்கியமானது. இதைக் கீழேகொட்டிவிடாமல்,பத்திரமாகக் கீரையுடன் சேர்த்துச் சமைக்கவேண்டும். இந்தமுக்கியமானசெய்தியைச் சமையல் செய்வோர் கவனிக்கவேண்டும்.

நமதுநாட்டில் ஆண்டுமுழுவதும் ஏதேனும் கீரைகிடைத்துக்கொண்டே இருக்கிறது. ஆகவே. கீரைக்குமுட்டுப்படவேண்டியது இல்லை. இடமும் வசதியும் உள்ளவர்,தங்கள் வீட்டிலேயேஏதேனும் கீரையைப் பயிரிட்டுக் கொள்ளலாம்.

பொதுவாகக் கீரைகளின் குணங்களைமேலே கூறியுள்ளோம். ஒவ்வொருகீரையின் தனிக்குணங்களைக் கீழேதருகிறோம்.

**அகத்திக் கீரை:**

இதில் ஏ.சி. என்னும் விட்டமின்கள் உண்டு. கண் குளிரும். சூட்டைத் தணிக்கும். பித்தத்தைத் தணிக்கச் செய்யும். கார்த்திகைமாதத்தில் இதைச் சாப்பிட்டால் கொழுப்புஉண்டாகும் என்பர். நமதுநாட்டில்,சாவுநேர்ந்தவீடுகளில் அடுத்தநாள் அகத்திக்கீரைசாம்பார் செய்வதுவழக்கம்.இதன் காரணம் என்னவென்றால் சாவுநேர்ந்தவீட்டில் உள்ளவர்கள் பிணம் அடக்கம் செய்யப்படுகிறவரையில்,சாப்பிடாமல் பட்டினிகிடப்பர். ஒருநாள் முழுவதும் பட்டினிகிடக்கநேரிடும். இதனால் உடம்பு சூடு கொள்ளும். அன்றியும் இறந்தவரைப் பற்றியவருத்தத்தினால் இரத்தக் கொதிப்பும் ஏற்படும். இவ்விதம் நேரிட்டசூட்டையும் இரத்தக் கொதிப்பையும் ஆற்றுவதற்காகத்தான் அகத்திக்கீரையைஅடுத்தநாள் சமைத்துஉண்ணும் பழக்கம் ஏற்பட்டிருக்கிறது.

வைகுண்டஏகாதசியில் பலர் இரவுமுழுவதும் கண் விழிப்பார்கள்.இரவில் தூங்காமல் கண்விழிப்பதனால் உடம்பு சூடு அடையும். அச்சூட்டைத் தணிப்பதற்காகஅகத்திக்கீரைக் குழம்பைஅடுத்தநாள் சாப்பிடுவார்கள். இதனால்,தேகச்சூட்டையும் இரத்தக் கொதிப்பையும் ஆற்றுகிற இயல்புஅகத்திக்கீரைக்குஉண்டுஎன்பதுதெரிகிறது.

நாட்டுமருந்துசாப்பிடும்போதுஅகத்திக்கீரைசாப்பிடக் கூடாது. ஏனென்றால் மருந்தின் குணத்தை இக்கீரைமுறித்துவிடும். அதனால் மருந்துசாப்பிட்டும் பயன் இல்லாமல் போகும்.

**அறுகீரை**

இதுகுத்துச் செடியாகப் படரும். அறுத்துவிட்டால் மறுபடியும் துளித்துவளரும். ஆகையினால் இதற்குஅறுகீரைஎன்றுபெயர் உண்டாயிற்று. இதைஅறைக்கீரைஎன்றும் கூறுவர். அறுகீரை,தாது புஷ்டிதருகிறகீரைகளில் ஒன்று. இதைப் புளியிட்டுச் சமைப்பதுவழக்கம் புளியில்லாமல் மிளகுசேர்த்துநெய் இட்டுச் சமைத்துச் சாப்பிட்டால் தாதுவளரும். வாயுவைப் போக்கும்.குளிர்ந்ததேகத்தோருக்குஉதவும். மூலநோய் உள்ளவருக்குஆகாது.

**கொத்துமல்லிக் கீரை:**

மணம் உள்ளது. சாம்பார்,குழம்பு, இரசம், கூட்டுமுதலியவைகளில் இதைவாசனைக்காகச் சேர்ப்பதுஉண்டு. துவையல் செய்தும் உண்ணலாம். இருதயத்துக்குநல்லது. தலையையும் மூளையையும் பற்றியசூட்டைமாற்றும். ஜீரணம் உண்டாகும்.குளிர்ந்ததேகத்தோருக்குஉதவாது.

**கீரைத்தண்டு**

இதில் வெண்மை,சிவப்புஎன்னும் இரண்டுவகைஉண்டு. இரண்டுக்கும் ஒரேகுணந்தான். இந்தக் கீரையில் எலும்புக்குஉரம் அளிக்கிறகால்ஸியம் என்னும் சுண்ணாம்புப் பொருள் உண்டு. இரும்புச் சத்தும் உண்டு. இக்கீரைதேகச்சூட்டைஆற்றும். நீர்சுருக்கு. வெட்டை இவற்றைப்

போக்கும். குளிர்ந்ததேகத்தோருக்குச் சீதளம் செய்யும். வெள்ளுள்ளி (வெள்ளைபூண்டு) சேர்த்துச் சமைப்பதுநல்லது.

**சிறுகீரை:**

இதுவும் கீரைத்தண்டு இனத்தைச் சேர்ந்தது.ஆனால் இலைகள் சிறியவை. கீரைத்தண்டிலும்,முளைக் கீரையிலும் இருப்பதுபோலவே, இந்தக் கீரையிலும் கால்ஸியம் என்னும் எலும்பைவளர்க்கிறசத்துஉண்டு. கண் புகைச்சல், காசம்,சோகைஆகியநோய்களைப் போக்கும்.சூட்டைத் தணிக்கும். இதில் அயச்சத்து (இரும்புச் சத்து) உண்டு.

**தூதுளங் கீரை (தூதுளை):**

முள் உள்ளகொடி. இலையிலும் முள் உண்டு. இலையைக் குழம்புசெய்தும் துவையல் செய்தும் உண்பர். சிறுகசப்புஉண்டு. சீதளத்தைப் போக்கும். அறிவுக்குக் கூர்மையுண்டாகும். இதுதாதுபுஷ்டி தருகிறகீரைகளில் ஒன்று. காதுமந்தம்,காசம்,தினவு,மந்தம் முதலியநோய்கள் தீரும்.

**பருப்புக் கீரை:**

இதைக் கோழிக்கீரைஎன்றும் கூறுவர்.தேகம் குளிரும்,கண்களுக்குஒளிஉண்டாகும். பித்தம் போகும். குளிர்ந்ததேகத்தோருக்குச் சீதளம் செய்யும். அவர்கள் மிளகும் சீரகமும் சேர்த்துச் சமைத்துஉண்பதுநலம்.

**பொன்னாங்கண்ணி:**

இதைப் பொண்ணாங்காணிஎன்றும் கூறுவர். ஈரமானசதுப்புநிலங்களில் படரும். இதைச் சாப்பிட்டால் கண்களுக்குஒளிஉண்டாகும். கண்புகைச்சல்,காசம்,வாதம். அனல் முதலியநோய்கள் தீரும்.

**முட்டைகோசு (கோசுகீரை):**

மேல்காட்டுக் கீரை இனத்தைச் சேர்ந்தது. இப்போதுநமதுநாட்டில் குளிர்நாடுகளில் பயிரிடப்படுகிறது. இதில் ஏ.பி.சி. என்னும் உயிர்ச் சத்துக்கள் உண்டு. சமைத்தால் இந்தச் சத்துக்கள் குறைந்துவிடுகின்றன. சமைக்காமல் மேல்பக்கமுள்ளபச்சை இலையைத் தின்றால் டி உயிர்ச் சத்துக்களைஅதிகமாகப் பெறலாம்.

**முருங்கைக் கீரை :**

இதுமுருங்கைமரத்தின் இலை.முருங்கைக் கீரைதாது புஷ்டி தருகிறகீரைகளில் ஒன்று. இரத்தத்திற்குஉரம் அளிக்கிறஉயிர்ச்சத்தும் எலும்புக்குஉரம் அளிக்கும் கால்ஸியம் என்னும் பொருளும் இதில் உண்டு. இந்தக் கீரையைச் சமைக்கும்போது இதனுடன் அரிசிமாவைத் தூவுவதுபண்டைக் காலத்துவழக்கம்.

**முளைக்கீரை:**

இந்தக் கீரையில்,கால்ஸியம் என்னும் எலும்பைஉரப்படுத்துகிறசத்துஉண்டு.(தண்டுக்கீரை,சிறுகீரை,முருங்கைக் கீரைகளிலும் இந்தக் கால்ஸியம் உண்டு). உடம்பின் வெப்பத்தைத் தணிக்கும். நீரைப்பெருக்கும். பசி உண்டாகும்.குளிர்ந்தஉடம்புக்குச் சீதளம் பண்ணும். வெள்ளைப் பூண்டுசேர்த்துச் சமைக்கவேண்டும். இதில் அயச்சத்து (இரும்புச்சத்து) உண்டு.

**வசளைக் கீரை:**

இதில்,கொடிவசளைஎன்றும் குத்து வசளை என்றும் இருபிரிவுஉண்டு. கொடி வசளை கபம் உண்டாக்கும். ஆகவேஅதனுடன் மிளகுசீரகம் சேர்த்துச் சமைக்கவேண்டும். இக்கீரைகளில் ஏ.பி.சி. என்னும் உயிர்ச்சத்துக்கள் உள்ளன. இரும்புச் சத்தும் உண்டு. இரும்பு (அயம்) இரத்தம் பெருகுவதற்குஅவசியமானது.உடல் வளர்ச்சிக்கு இன்றியமையாதபாஸ்பரஸ் சத்தும் இதில் உண்டு. வசளைக்கீரைசூட்டைத்தணிக்கும். தாதுஉண்டாகும்,வயிறு இளகும், பசி உண்டாகும்.

**வெந்தயக் கீரை:**

இந்தக் கீரையைக் கூட்டுசெய்தும்,குழம்புசெய்தும் உண்ணலாம். மந்தம்,வாயு,கபம், இருமல் இவை தீரும். வாயுவைக் கண்டிக்கும். இடுப்புவலிதீரும்,மூலவாயுபோகும். சூடு அதிகரிக்கும்.

**மணித்தக்காளிக் கீரை:**

வாய் வேக்காடு (வாய்ப்புண்) உள்ளவர் இந்தஇலையைசமைக்காமல் மென்றுதின்றால் ஆறும். சமைத்தும் உண்ணலாம்.சூட்டைஆற்றும்,நீரைப் பெருக்கும்,கபம் போகும்.இதன் காய்க்கும் இதுவேகுணம்.

**பொதினாகீரை:**

இதைப் புதினாஎன்றும் கூறுவர். மணமுள்ள இது கொடியாகத் தரையில் படரும். சாம்பார்.குழம்புமுதலியவைகளில் கறிவேப்பிலையைப்போலவாசனைக்காகப் போடுவதுவழக்கம்,துவையல் செய்துஉண்ணலாம். வாயுவைப் போக்கும். பசி

உண்டாகும்.அஜீரணத்தைமாற்றும். தீனிப்பைக்கும் குடலுக்கும் வலிவுகொடுக்கும். பாகு (சர்பத்) காய்ச்சிஉண்ணலாம். (இந்நூலில் சர்பத்துமுறையைப் பார்க்கவும்.)

**கறிவேப்பிலை:**

இதைமணத்துக்காகக் குழம்புசாம்பார். காய்கறிகளில் சேர்ப்பதுஉண்டு. துவையல் செய்தும் உண்ணலாம் சுரம்,பித்தம் தீரும்.அருசியைமாற்றும். பசி உண்டாக்கும். தீனிப் பைக்குவலிவுகொடுக்கும். இத்துடன் நெய் சேர்த்துக் கொள்வதுநல்லது.

**பசறைக்கீரை:**

பசலைக்கீரைஎன்றும் கூறுவர். தோட்டக்கால்களில் தரையில் படர்ந்துவளரும். இலைகள் மிகச்சிறியவை. மெல்லியகொடி. கொடியும் இலையும் சேர்த்துச் சமைப்பதுவழக்கம். நீர்க்கடுப்பு,நீரடைப்புபோகும். மேகவெப்புசாந்தியாகும். குளிர்ச்சியுண்டாக்கும்.

**கலவைக்கீரை:**

கலவைக்கீரைஎன்பதுபலவகையானகீரைகள் சேர்ந்தது. முளைக்கீரை,அறுகீரை,சிறுகீரை,மணலிக்கீரை. முள்ளிக்கீரை,கானாங்கீரைமுதலியகீரைகளின் கலப்பு இது. கலவைக்கீரையைச் சமைத்துச் சாப்பிட்டால் வாதம். பித்தம்,ஐயம்,மலக்கட்டு,குடல்வாதம் இவை போம். மலம் போகும்.

**ஆரைக்கீரை:**

நீரில் வளரும்.நீண்டகாம்பில் நான்கு இலைகளாக இருக்கும். சுவையாக இருக்கும். பித்தம்,நீரிழிவுபோகும்.

**புளியாரைக்கீரை:**

இதுபுளிப்புச் சுவையுள்ளது. துவையல் செய்துஉண்ணலாம். பித்தமயக்கம்,வாதகபம்.மூல உதிரம் போகும்.

**காலிபிளவர்:**

இதுவும் கோசுகீரையைப்போல் மேல்நாட்டுக்கீரை. இதைப் பூவுடன் சமைப்பதுவழக்கம். இதில் ஏ.பி.சி.விட்டமின் என்னும் உயிர்ச்சத்துக்கள் சிறிதளவுஉள்ளன.

**கிழங்குகள்**

கிழங்குகள் தரைக்குள்ளேமண்ணில் விளைகின்றன. உருளைக்கிழங்கு,வள்ளிக்கிழங்கு. மரவள்ளிக்கிழங்கு. சேனைக்கிழங்கு. சேமைக்கிழங்கு. காரட்கிழங்கு (மஞ்சள் முள்ளங்கி). முள்ளங்கி,பீட்ரூட்,வெங்காயம்,வெள்ளைப்பூண்டுமுதலியவைகிழங்குகளாம். கிழங்குகள் சத்துள்ளவை.

கிழங்குகளின் மேற்புறத்தில் தோல் இருக்கிறது. தோலுக்கும் கிழங்குக்கும் இடையில்(தோலின் அடிப்புறத்தில்) சிலஉப்புச்சத்துக்கள் இருக்கின்றன. இவை சிறிதளவுதான் இருக்கின்றன. என்றாலும் இவை உடல் நலத்துக்குவேண்டியவை. கிழங்குகளைச் சமைக்கும்போது,தோலின் கீழ் உள்ளஉப்புச் சத்துக்கள் வீணாகாதபடிசமைக்கவேண்டும். ஆகவே,கிழங்குகளைத் தோலோடுவேகவைக்கவேண்டும். வெந்தபிறகுதோலைஉரிக்கவேண்டும். வேகவைப்பதற்குமுன்னரேதோலைச் சீவிப் போட்டுப் பிறகுவேகவைப்பதுசரியல்ல. அப்படிச் செய்தால் தோலின் கீழ் உள்ளஉப்புச்சத்துக்கள் அடியோடுகழிந்துவிடுகின்றன. உருளைக்கிழங்கு,வள்ளிக்கிழங்குமுள்ளங்கிக் கிழங்குகள். பீட்ரூட் இவைகளைத் தோலைச் சீவாமலே. நீரில் நன்றாகக் கழுவிகழுவியபின்,தோலோடுசமைக்கலாம். பொதுவாகக் கிழங்குகளைஎல்லாம் “வாயுபதார்த்தம்” என்று கூறுவார்கள். ஆனால் உடம்புக்குவேண்டியசத்துக்கள் கிழங்குகளிலும் இருக்கின்றன.

சிலகிழங்குகளில்,தானியங்களில் உள்ளதுபோன்றவெப்பம் தருகிறமாவுப் பொருள்களும். வேறுசிலகிழங்குகளில் தசைவளர்க்கிறசத்துக்களும் உள்ளன. இவற்றோடு,உப்புச்சத்துக்களும் உள்ளன.

கிழங்குகளின் குணங்களைக் கீழேதருகிறோம்.

**இஞ்சி:**

இதைத் தனியாகச் சமைத்துஉண்பது இல்லை.காய்கறி,குழம்பு,துவையல்,வடை,தோசைமுதலியவைகளுடன் சேர்த்துச் சமைப்பதுவழக்கம். இஞ்சி,தீனிப்பைக்குப் பலம் தருகிறது. பசியைஉண்டாக்குகிறது. அசீரணத்தைப் போக்கும். கபத்தைஅறுக்கும். ஈரலில் உள்ளகட்டுகளையும் அறுக்கும். அசீரணபேதியைநிறுத்தும்.இஞ்சியைத் தேனில் ஊறவைத்து இஞ்சிமுறபாசெய்கிறார்கள். கடைகளில் விற்கப்படும் இஞ்சிமுறபாசர்க்கரைப்பாகில் ஊறவைத்தவை.

**உருளைக்கிழங்கு:**

அமெரிக்காகண்டத்தில் இருந்து இக்கிழங்குமற்றநாடுகளில் பரவிற்று,நமதுதேசத்தில் குளிர்நாடுகளில் இப்போதுபயிரிடப்படுகிறது. இதில்,உடம்புக்குவெப்பந் தருகிறகார்போஹைட்ரேட் என்னும் மாவுச்சத்துஉண்டு. தோலின் அடியில் இரும்புச்சத்துஉண்டு. இதில் சதைக்குஉரந்தருகிறபிவிட்டமின் சிறிதளவுஉண்டு. இதைத் தோலுடன் வேகவைத்துப் பிறகுதோலைஉரிக்கவேண்டும். தோலைச் சீவியபிறகுவேகவைத்தால் இரும்புச்சத்துகிடைக்காது. தேகத்துக்குப் புஷ்டிதரும். வாயுஉண்டாகும்.ஆகவேஇஞ்சி,புதினா,எலுமிச்சம்பழம் இவைகளில் ஏதேனும் ஒன்றைச் சேர்த்துச் சமைப்பதுநல்லது.

**கருணைக் கிழங்கு:**

இதைக் காறாக்கருணைஎன்றும் சேனைக்கிழங்கு என்றும் கூறுவார்கள். தேரையர் தமதுநோயணுகாவிதியில் ‘மண்பரவுகிழங்குகளில் கருணையன்றிப் புசியோம்’ என்று இந்தக் கிழங்கைச் சிறப்பாகக் கூறுகிறார். இந்தக் கிழங்கைஉண்பதனால் கபம்,வாதம்,இரத்த மூலம்,முளைமூலம் போகும் . பசிதீபனம் உண்டாகும்.தீனிப்பைக்குஉரம் அளிக்கும். இதனோடுபுளிசேர்த்துச் சமையல் செய்வதுநல்லது.

**கேரட் கிழங்கு:**

இதுவேமஞ்சள் முள்ளங்கிசீமைக் காய்கறிவகையைச் சேர்ந்தது. இப்போதுநமதுநாட்டில் குளிர்ப் பிரதேசங்களிற் பயிரிடப்படுகிறது. இதில் ஏ.பி.சி. என்னும் உயிர்ச் சத்துக்கள் உண்டு. பச்சையாகமென்றுதின்றால் அதிகப் பலன் உண்டு. பாஸ்பரஸ்,கால்ஸியம் என்னும் பொருள்களும் இதில் உண்டு. இரத்தத்தைவளப்படுத்தும். இதைஅடிக்கடிஉணவுடன் சேர்த்துக் கொள்வதுநலம். அல்வாசெய்தும் சாப்பிடலாம்.

**சேமைக் கிழங்கு (சேப்பங்கிழங்கு,சேம்பு):**

மேகம் சாந்தியாகும்.குண்டிக்காய்க்கும்,மூளைக்கும்,நரம்புகளுக்கும் பலம் தரும். மந்தப்படுத்தும். வாயுஉண்டாக்கும். வாதகபம் கோழைக்கட்டுகளைஉண்டாக்கும். புளியிட்டுச் சமைக்கவேண்டும்.

**பீட்ரூட்:**

இதுமேல் நாட்டுக் கிழங்கு. இப்போது நம் நாட்டில் குளிர்ந்தபிரதேசங்களில் பயிரிடப்படுகிறது. ஐரோப்பியர் இதிலிருந்துசர்க்கரைசெய்கிறார்கள். இனிப்பாக இருக்கும். பி.சி.

விட்டமின் என்னும் உயிர்ச்சத்துக்கள் இதில் உள்ளன. இதைச் சமைத்தும் உண்ணலாம். பச்சையாகவும் மென்றுதின்னலாம்.

**வேர்க்கடலை :**

இதைநிலக்கடலை. மணிலாக் கொட்டைஎன்றும் கூறுவர். இதைக் கடலைஎன்றுபருப்புடன் சேர்த்துக் கூறினாலும்,மண்ணுக்குள் விளைகிறபடியால் கிழங்கு இனத்தைச் சேர்ந்தது. இப்போதுநமதுநாட்டில் எங்கும் பயிரிடப்படுகிறது. இதில் தசைக்குஉரம் அளிக்கிறபிவிட்டமின் நிறையஉண்டு. அன்றியும் கொழுப்புச் சத்தும்கார்போஹைட்ரேட் என்னும் வெப்பம் அளிக்கும் பொருளும் இதில் உண்டு. இதிலிருந்துஎண்ணெய் எடுக்கிறார்கள். இந்தஎண்ணெய் நிலக்கடலைஎண்ணெய் என்று கூறப்படுகிறது. இந்தஎண்ணெயிலிருந்துடால்டாசெய்யப்படுகிறது. கால்ஸியம்,பாஸ்பரஸ் என்னும் பொருள்களும்இதில் உண்டு. இவை உடல் வளர்ச்சிக்குத் தேவையானபொருள்கள். வேர்க்கடலையைபலவிதமாகப் பலகாரம் செய்துஉண்கிறார்கள். பித்தம் பண்ணும். எண்ணெய் இருப்பதனால் ஜீரணம் ஆவதுகடினம். மிதமாகஉண்ணவேண்டும். வெல்லம்.சர்க்கரைசேர்த்துக் கொள்வதுநலம்.

**முள்ளங்கி:**

சூலை, குடல் வாதம்,நீர்க்கோவை. காசம் இவைபோகும். பசி தீபனம் உண்டாகும்.தொண்டைக் கம்மல். மூலரோகம்,கல்லடைப்பு இந்நோய்களைமாற்றும் நீரைப் பெருக்கும்.

**வள்ளிக்கிழங்கு:**

இதில் வெளிறியமஞ்சள்,சிவப்புஎன்னும் இரண்டு வகைகள் உண்டு.இதைச் சர்ச்கரைவள்ளிஎன்றும் கூறுவர். இரத்தம் உண்டாகும். மூளைக்குப் பலம் தரும்.மந்தப்படுத்தும். வாயுவைஉண்டாக்கும். சர்க்கரைசேர்த்துக் கொள்வதுநலம்.

**மரவள்ளிக்கிழங்கு:**

பித்தவாயு,அனல்,மந்தம் உண்டாகும். மாவுச் சத்து இதில் உண்டு.

**வெங்காயம்:**

இதில் பி.சி. விட்டமின்களும் தொத்துநோயைத் தடுக்கிறகுணமும் உண்டு. நெய் அல்லதுஎண்ணெயில் வதக்கிஉண்பதால் தாதுஉண்டாகும். நீரடைப்பு,உதிரச் சிக்கல் இவற்றைப் போக்கும். இரும்புச் சத்தும் இதில் உண்டு. காய்கறிமுதலியஉணவுகளைச்

சமைக்கும்போதுஅவைகளுடன் வெங்காயத்தைச் சேர்ப்பதுஉண்டு.நமதுநாட்டில் வெங்காயச் சாம்பார் பேர்போனது.

**வெள்ளுள்ளி (வெள்ளைப்பூண்டு):**

வாயு,சன்னி,தலைநோய். சீதம் போகும்.வயிற்றுநோயைப் போக்கும். பாலில் வேகவைத்துத் தேன் கலந்துசாப்பிட்டால் வாயுசம்பந்தமானநோய்கள் தீரும். தாதுவளரும்.வெள்ளைப் பூண்டைக் கீரைகாய்கறிமுதலியவைகளுடன் சேர்த்துச் சமைப்பதுவழக்கம்.

**டர்னிப் கிழங்கு:**

மேல் நாட்டுக் கிழங்குகளைச் சேர்ந்தது. இக்கிழங்கில் பி.சி. விட்டமின்கள் உண்டு. இக்கிழங்கின் மேல் பக்கத்தில்,அதாவது இலைகளுள்ளபகுதியில் ஏ.பி.சி.விட்டமின்கள் அதிகமாகஉள்ளன. இதன் இலை (கீரையிலும்) விட்டமின்கள் உண்டு.

**நூல்கோல் :**

இதுவும் மேல்நாட்டுக் கிழங்குவகையைச் சேர்ந்தது. நமதுநாட்டில் பயிராகிறது. இதில் பி.சி. விட்டமின்கள் சிறிதளவுஉள்ளன.

**பழங்கள்**

பழங்களில் பலவகைஉண்டு. மா,பலா,வாழைஎன் னும் முக்கனிகள் நமதுநாட்டில் பேர்போனவை.அன்னாசி,ஆப்பிள்,ஆரஞ்சி,தக்காளி,திராட்சை,எலுமிச்சை,பப்பாளி,மாதுளை,முலாம்பழம்,தர்பூசிப்பழம்,விளாம் பழம் முதலியபழங்களும் உள்ளன.

பொதுவாகப் பழங்கள் எல்லாம் கீரைகளின் குணம் உடையன. கீரைகள் இரத்தத்தைத் தூய்மையாகவைப்பதுபோல. பழங்களும் இரத்தத்தைத் தூய்மைசெய்கின்றன. அன்றியும் உணவைச் சமிக்கச் செய்வதில் உதவிபுரிகின்றன.

மேலும்,பழங்களில் பலவிதஉப்புச்சத்துக்கள் இருப்பதனால்,அவைஉடம்பைநன்னிலையில் வைக்கின்றன. அடிக்கடிபழங்களைச் சேர்த்துக்கொள்ளவேண்டும்.பழங்களில் இரத்தத்தைத் தூய்மைப்படுத்தி இரத்தத்திற்குஉரம் அளிக்கிறசிவிட்டமின் என்னும் உயிர்ச்சத்து இருக்கிறது. பழங்களின் குணங்களை இங்குஆராய்வோம்.

**ஆரஞ்சி:**

கமலாப்பழம்,சாத்துக்குடிப்பழம் என்றும் கூறப்படுகிறது. இரத்தத்திற்குஉரம் அளிக்கிறசிவிட்டமின் என்னும் உயிர்ச்சத்து இப்பழங்களில் அதிகமாகஉள்ளன. ஏ.பி விட்டமின்களும் சிறிதளவுஉண்டு. ஜீரணப்படுத்தும். பசி உண்டாக்கும். தேகச்சூட்டைத் தணிக்கும்.

**எலுமிச்சம்பழம்:**

இரத்தத்தைஉரப்படுத்துகிறசிவிட்டமின் என்னும் உயிர்ச்சத்து. இதில் நிறையஉண்டு. பித்தத்தைநீக்கும். குளிர்ச்சிஉண்டாக்கும். தீனிப்பைக்குவலிவைக் கொடுக்கும். பசியுண்டாக்கும். மார்பின் நரம்புகளுக்கும் தலைநரம்புகளுக்கும் உதவாது. தனியே இதன் சாற்றைஉபயோகிக்கும்போதுதேன் அல்லதுசர்க்கரைசேர்த்துக்கொண்டால் தீமைகள் போகும். இதன் சாற்றைச் சர்பத்துகாய்ச்சிஅருந்தலாம். எலுமிச்சம்பழத்தைஉப்பில் இட்டுஊறுகாய் போட்டுஉண்பார்கள். சர்க்கரைப் பாகுஅல்லதுதேனில் ஊறவைத்துமுரபாசெய்தும் உண்பார்கள்.

**கொடிமுந்திரிப்பழம் (திராட்சைப்பழம் ):**

இவைகளில் 10 முதல் 25 சதவிகிதம் வரையில் சர்க்கரைஉண்டு. இதில் பலவகைஉண்டு. பச்சை,கறுப்புமுதலியவை. பொட்டாசியம் முதலியஉப்புகளும் இதில் உள்ளன. இதில் சிறிதளவுபிவிட்டமின் உண்டு. சூட்டைத் தணிக்கும். பித்தஅனலைமாற்றும். தேகம் பருக்கும்.தேகத்திற்குகுளிர்ச்சியும் கண்ணொளியும் உண்டாக்கும்.

**அன்னாசிப்பழம்:**

இதுஅயல்நாட்டுப் பழம். இப்போது நமது நாட்டில் பயிரிடப்படுகிறது. இரத்தத்திற்குஉரம் அளிக்கிறஉயிர்ச்சத்து இதில் அதிகம் உண்டு. இதன் சதை ஜீரணம் ஆவதுகடினம். சாற்றைமட்டும் அருந்தவேண்டும். பித்தச்சூட்டைஆற்றும். இருதயத்தில் வரட்சியைப் போக்கும். மூளைக்குவலிவைக் கொடுக்கும். தொண்டைகம்மும். சர்க்கரைஅல்லதுகற்கண்டுசேர்த்துஉண்ணவேண்டும். கருவைஅழிக்கும் என்பர். ஆகையால் கருத்தரித்தபெண்கள் உண்பது கூடாது.

**சீமைஅத்திப்பழம்:**

இதில் நூற்றுக்கு 60 பங்குக்குசர்க்கரைஉண்டு. சூட்டைஅகற்றும். தேகம் தழைக்கும்.வலுவுஉண்டாகும்.உலர்ந்தபழம்,மார்புதொண்டைவரட்சியைமாற்றும்.
நுரையீரலுக்குநன்மைதரும். இதில் சிறிதுதசைவளர்க்கும் உயிர்ச்சத்துஉண்டு. கார்போஹைட்ரேட் என்னும் உடம்புக்குவெப்பம் அளிக்கும் பொருளும் இதில் உண்டு.

**தக்காளிப்பழம்:**

இதுஅமெரிக்கநாட்டுப் பழம். இப்போதுநமதுநாட்டில் குளிர்ப் பிரதேசங்களில் பயிராகிறது. ஏ.பி.சி. விட்டமின்கள் என்னும் மூன்றுஉயிர்ச்சத்துக்கள் இதில் உள்ளன.ஏ உயிர்ச்சத்தைவிடபி.சி. உயிர்ச்சத்துக்கள் அதிகம். சமைத்தும் உண்ணலாம். சமைக்காமலும் உண்ணலாம். தேகச் சூட்டைக் குறைக்கும்.

**தர்பூசிப்பழம்**

நீண்டுஉருண்டபெரியபழம். மேல் தோல் பச்சைநிறமாக இருக்கும். உள் சதைசிவந்து இருக்கும். இதில்செம்புச்சத்துஉண்டு. இரத்தத்தைஉரப்படுத்தும். உடம்புக்குக் குளிர்ச்சிதரும். இதைஅரிந்தால் சாறுவழியும். இந்தச் சாற்றைவீணாக்காமல் பாத்திரத்தில் பிடித்துஅருந்தவேண்டும்.

**நெல்லிக்கனி (நெல்லிக்காய்.)**

இதில் இரத்தத்திற்குஉரம் தருகிறஉயிர்ச்சத்துநிறையஉண்டு. ஆரஞ்சுப் பழத்திலும் இந்தச் சத்துஉண்டுஎன்று கூறினோம். ஆரஞ்சுப் பழத்தைவிடநெல்லிக் கனியில் அதிகஉயிர்ச்சத்து இருக்கிறது.ஒருநெல்லிக் கனியில் மூன்றுஆரஞ்சுப் பழத்தின் உயிர்ச்சத்துஉண்டு. நெல்லிக்கனி,வயிற்றிலும் குடலிலும் மாசுகள் சேரவொட்டாமல் காக்கும். தீனிப்பைக்கும் இருதயத்துக்கும் வலிவுகொடுக்கும். பசி உண்டாக்கும். நமதுநாட்டுவைத்திய நூல்கள் இந்தக் கனியைச் சிறப்பாகக் கூறுகின்றன. சியவனப் பிராசம் என்னும் மருந்து இதிலிருந்துசெய்யப்படுகிறது. இந்தமருந்துநுரையீரலுக்கு (சுவாசப் பைக்குப் ) பலம் தருகிறது. கருவுள்ளபெண்கள் இதைஅருந்தக் கூடாதுஎன்பர். ஊறுகாயாகவும் முரபாவாகவும் செய்துஉண்ணலாம். நெல்லிக்காயை இரவில் உண்பது கூடாது.

**பப்பாளிப்பழம்:**

இதுஅமெரிக்கநாட்டுப் பழம். இப்போது நம் நாட்டில் பயிராகிறது. இதில் ஏ.பி. விட்டமின்கள் சிறிதளவும் சி. விட்டமின் அதிகஅளவும் உண்டு. மலம் போகும். சூடு செய்யும்.இந்தப் பழத்தைஅளவாகஅடிக்கடிஉபயோகிப்பதுநலம். இதன் பால். இறைச்சியைநன்றாகவேகச் செய்கிறது. ஆகையால் இறைச்சிசமைப்போர்,பப்பாளிக் காய்த் துண்டுகளை இட்டுவேகவைப்பதுவழக்கம். பழுக்காதமுற்றியகாயையும் கறிசமைக்கலாம். கர்ப்பிணிகள் இதைஉண்பது கூடாது.

**பலாப் பழம்:**

முக்கனிகளில் ஒன்று. தலைநரம்புகளுக்குவலிவைக் கொடுக்கும். மந்திக்கும். வயிறுவலிக்கும். சூடு பண்ணும்.பசுநெய் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

**புளியம்பழம் (புளி):**

சாம்பார்.குழம்புமுதலியவைகளில் நம்மவர் இதைஅதிகமாகஉபயோகிக்கிறார்கள். இதில் பி.சி. விட்டமின் என்னும் உயிர்ச் சத்துக்கள் சிறிதளவுஉண்டு. தீனிப்பைக்குவலிவைக் கொடுக்கும். இரும்புச்சத்து இதில் உண்டு. தாது புஷ்டியைக் குறைக்கும். ஆகையால் இதைஅதிகமாகச் சாப்பிடுவது கூடாது. அதிகமாகச் சாப்பிட்டால் இரத்தத்தைக் கெடுக்கும்.

**பேரீச்சம் பழம்:**

இதில் பிவிட்டமின் சிறிதளவுஉண்டு. கார்ப்போஹைட்ரேட் அதிகம் உண்டு. இரும்புச் சத்தும் இருக்கிறது. மார்புக்குவலிவைக் கொடுக்கும்,தேகம் தழைக்கும். மலம் போகும்.பாலில் இட்டுக் காய்ச்சிக் குடித்தால் தாதுவளரும். வாதுமைப் பருப்புடன் கலந்துதின்றால் தேகம் தழைக்கும். கண்களுக்கும் பற்களுக்கும் ஆகாது. ஆகையால்,நெய் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

**பொம்பளிமாசுப் பழம்:**

பித்தச் சூட்டைஅகற்றும். தீனிப்பைக்குவலிவைக் கொடுக்கும். இரத்தசுத்தியாகும். பசிதீபனம் உண்டாகும்.பழச்சக்கைவிரைவில் சீரணம் ஆகாது.

**மாதுளம் பழம்:**

இருதயத்துக்கும் வயிற்றுக்கும் வலிவுதரும். பித்தம் போகும். பி.சி. விட்டமின்கள் சிறிதளவு இதில் உண்டு.

**மாம்பழம்:**

இதில் சிறிதளவு ஏ விட்டமினும் சற்றுஅதிகமாகபிவிட்டமினும் உண்டு. இருதயத்துக்கும் முளைக்கும் வலிவுகொடுக்கும். வயிறு இளகும். மலசுத்தியாகும். சூடு பண்ணும்.அதிகமாகஉட்கொண்டால் தினவு,கரப்பான். சிரங்குஉண்டாகும். மிதமாகஅருந்தவேண்டும். பால் சேர்த்துக்கொள்வதுநல்லது.

**முலாம்பழம்:**

தேகம் தழைக்கும்.நீரைப் பெருக்கும்.மந்திக்கும். விரைவில் சீரணம் ஆகாது. இதனுடன் சர்க்கரைசேர்த்துக்கொள்வதுநலம்.

**வாழைப் பழம்:**

இதில் பலவகைஉண்டு. பி.சி. விட்டமின்கள் சிறிதளவு இப்பழத்தில் உண்டு. தேகம் தழைக்கும். வலிவுண்டாகும். குடல் பருக்கும்.மந்திக்கும். தேன் அல்லதுசர்க்கரைசேர்த்துக்கொள்வதுநலம். வாதநோய் உள்ளவர்களுக்குஆகாது. பச்சைவாழைப்பழம் மலத்தைக் கட்டும்.

**ஆப்பிள் பழம்:**

இதுகுளிர் நாடுகளில் பயிராகிறது. நாள்தோறும் ஒருஆப்பிள் சாப்பிட்டால் வைத்தியரிடம் போகவேண்டியதில்லைஎன்றுஒருபழமொழிஆங்கிலத்தில் உண்டு. இதனால் இது நோய் வராமல் தடுக்கிறதுஎன்றுதெரிகிறது. இதன் மேல்தோல் சீரணிக்காது. ஆகையால் நன்றாகமென்றுதின்னவேண்டும். சீரணம் உண்டாகும்.இரத்தம் சுத்திகரிக்கும். இரத்தத்துக்குஉரம் தருகிறது. உயிர்ச்சத்து இதில் இருக்கிறது.

**எண்ணெய்கள்**

எண்ணெயும் கொழுப்பும் உடல்நலத்துக்குவேண்டியஉணவுப் பொருள்களே. ஆகையால் உணவுடன் இவைகளையும் சேர்த்துக்கொள்ளவேண்டும். எள்ளிலிருந்துஎடுக்கப்படுகிறநல்லெண்ணெயும்,நிலக்கடலையிலிருந்துஎடுக்கப்படுகிறகடலைஎண்ணெயும் தேங்காயிலிருந்துஎடுக்கப்படுகிறதேங்காய் எண்ணெயும் சமையலுக்குஉபயோகப்படுகின்றன. இவ்வெண்ணெய்களைக் காய்கறி,கீரை. கிழங்கு.குழம்பு,சாம்பார் முதலியவைகளைச் சமைக்கும்போதுஅவைகளுடன் சேர்க்கிறோம். எண்ணெய்களுக்குத் தாவரக் கொழுப்புஎன்பதுபெயர்.

ஆடு,மாடு,எருமைமுதலியபிராணிகளின் பாலிலிருந்துகிடைக்கிறவெண்ணெய் நெய்களையும் உணவுடன் உபயோகிக்கிறோம். இவைகளுக்குமிருகக் கொழுப்புஎன்பதுபெயர். மீன்களிலிருந்துஎடுக்கப்படுகிறமீன் எண்ணெய்களும் மிருகக் கொழுப்பைச் சேர்ந்தவையே.மிருகக் கொழுப்புதாவரக் கொழுப்பு இரண்டும் உடல்நலத்துக்குவேண்டியபொருள்கள்.

மிருகக் கொழுப்பாகியநெய்யிலும் வெண்ணெயிலும் ஓரளவு எ விட்டமின் டி விட்டமின் என்னும் உயிர்ச்சத்துக்கள் உள்ளன. மீன் எண்ணெய்களில் அதிகஅளவாகஏ.டி.விட்டமின்கள் உள்ளன. தாவரக் கொழுப்புகளாகியஎண்ணெய்களில் ஏ. டி. விட்டமின்கள் கிடையா.ஆனால்,எண்ணெய்களைவெயிலில் காயவைத்தால்,வெயிலிலிருந்துஎண்ணெய்களில் டி. விட்டமின் உண்டாகிறதுஎன்றுஆராய்ச்சிசெய்தவர்கள் கூறுகிறார்கள்.

நமதுநாட்டிலேஎண்ணெய் தேய்த்துக் குளிக்கும் பழக்கம் தொன்றுதொட்டு இருந்துவருகிறது. நல்லெண்ணெய்தேங்காய் எண்ணெய் இவற்றில் ஏதேனும் ஒன்றைஉச்சந்தலைமுதல் உள்ளங்கால் வரையில் உடம்புமுழுவதும் தேய்த்து,சிறிது நேரம் எண்ணெய் உடம்பில் ஊறியபின்,சீக்காய் அல்லதுஅறைப்பைத் தேய்த்துவெந்நீரில் குளிப்பதுவழக்கம். உடம்பில் தேய்த்தஎண்ணெயைநன்றாகத் தேய்த்துக் கழுவவேண்டும். இப்படிஎண்ணெய் தேய்த்துக் குளிப்பதனாலே இரண்டுநன்மைகள் உண்டாகின்றன. அவை

1. உடம்புமுழுவதும் மயிர்க்கால்கள் தோறும் உள்ளநுண்ணியதுளைகள் வியர்வையால் அடைபட்டிருக்கும். அழுக்குநீங்கிச் சுத்தம் அடைகின்றன.

வியர்வையோடுவெளிப்படுகிறஅழுக்கினால் மயிர்க்கால் துவாரங்கள் அடைபடுகின்றன. எண்ணெய் தேய்த்துவெந்நீரில் குளிப்பதனாலேமயிர்க்கால்கள் அழுக்குநீங்கிச் சுத்தப்படுகின்றன. எண்ணெய் தேய்த்துத் தண்ணீரில் குளிப்பதனால் இத்தன்மைஉண்டாகிறதில்லை. இதனால்தான் தேரையரும் நோயணுகாவிதியில். ''எண்ணெய் பெறில் வெந்நீரில் குளிப்போம்" என்று கூறினார்.

எண்ணெய் குளிப்பதனாலே.மயிர்க்கால் துளைகள் சுத்தப்படுவதோடு,நரம்புகளும் பலம் அடைகின்றன. கண் குளிர்கிறது. உடம்பில் வியர்வையினால் ஏற்படுகிற''கற்றாழைநாற்றம்" எண்ணெய் குளிப்பதனாலேநீங்கிவிடுகிறது. எண்ணெய் குளிக்கும் பழக்கம் இல்லாதவர்களின் உடம்பில் அருவெறுப்புள்ளகற்றாழைநாற்றம் வீசுவதுஉண்டு. எண்ணெய் தேய்த்துக் குளித்தால் அந்தநாற்றம் அடியோடுநீங்கிவிடுகிறது.

2.இரண்டாவதுநன்மைஎன்னவென்றால்,எண்ணெய் தேய்த்தஉடம்பின் மேல் சூரியவெளிச்சம்படுவதனால்,எலும்புக்குப் பலம் உண்டாகிறது. சூரியவெளிச்சத்தில் எலும்புக்குப் பலம் தருகிற டி விட்டமின் என்னும் உயிர்ச்சத்துஉண்டு. எண்ணெயில் சூரியவெளிச்சம் படும்போதுஅந்தஉயிர்ச்சத்துஏற்படுகிறது. இப்படிக் கூறுவதனால்,எண்ணெய் தேய்த்துக் கொண்டுவெயிலில் நிற்கவேண்டும் என்பதுபொருள் அல்ல. அப்படிநிற்பதுதவறு. அதனால் தீமைஉண்டாகும்.வெயிலில் இராமல் சூரியவெளிச்சம்படும்படிநிழலில் இருந்தால் போதும். எண்ணெய் தேய்த்துக் குளித்தபிறகும் சிறிதளவுஎண்ணெய்ப் பசைஉடம்பில் இருப்பதனாலே,அதன்மேல் சூரியவெளிச்சம் பட்டாலும் டி விட்டமின் ஏற்படுகிறது. ஆகையினால்,வாரத்துக்குஒருதடவைஎண்ணெய் தேய்த்துவெந்நீரில் குளிப்பதுநல்லது.

விளக்கெண்ணெய் ஆகியஆமணக்குஎண்ணெய் தேய்த்துக் குளிப்பதுதவறு. விளக்கெண்ணெய் தேய்த்துக் குளிப்பதால் நரம்புத்தளர்ச்சிஉண்டாகும். கடலைஎண்ணெய் தேய்த்துக் குளிப்பதும் வழக்கம் இல்லை.

தாவரக் கொழுப்பாகியஎண்ணெய்களைவிடமிருகக் கொழுப்பாகியவெண்ணெய்களில் அதிகசத்துஉண்டு. ஆனால்,மிருகக் கொழுப்புகளைமட்டும் உணவுடன் உபயோகிப்பதுநலம் அல்ல. இரண்டையும் சேர்த்துக்கொள்வதுநலம்.

தேங்காய் எண்ணெய். கடலைஎண்ணெய் முதலியதாவரக் கொழுப்பிலிருந்துடால்டா, வனஸ்பதிமுதலியபொருள்களைச் செய்கிறார்கள். அவைகளில் ஏ.டி.விட்டமின்கள் கிடையா. மீன் எண்ணெய்களிலும் நெய் வெண்ணெய் போன்றமிருகக் கொழுப்புகளிலும்தான் ஏ.டி.விட்டமின்கள் உண்டு.

**இறைச்சிவகை**

தசைகளைவளர்க்கும் உணவுப் பொருள்களில் இறைச்சிகள் மிகச் சிறந்தவை. தாவரப் பொருள்களாகியபருப்புகள்,கொட்டைகள் முதலியவற்றில் தசையைவளர்க்கும் சத்துஉள்ளதுஎன்பதைமேலே கூறினோம். ஆனால்,அவைகளைவிடமிகச் சிறந்தவை இறைச்சிவகைகளாம். தசைகளுக்குஉரம் அளித்துத் தசைகளைவளர்ப்பதில் இறைச்சியேசிறந்ததுஎன்றும்,அதற்குஅடுத்தபடி,சற்றுமட்டமானதுகொட்டைகளும் பருப்புகளும் என்றும் உணவுஆராய்ச்சிசெய்தஅறிஞர்கள் கூறுகிறார்கள்.

இதைநாம் கண்கூடாகவும் காண்கிறோம். இறைச்சிஉண்ணும் மக்கள் உடல்கட்டுடன் உரமாக இருப்பதையும் மரக்கறிகளைமட்டும் உண்போர் சற்றுஉடல் உரம் தளர்ந்து இருப்பதையும் காண்கிறோம். இப்படிக் கூறுவதனாலே,மாமிசஉணவுஉண்ணாதவர். இறைச்சிஉணவைஉண்ணவேண்டும் என்றுவற்புறுத்துவதாகக் கருதக் கூடாது. உணவைஉண்பதுஅவரவர் விருப்பத்தையும் பழக்கத்தையும் பொறுத்தது. ஆகவே,வைத்தியரைத் தவிரமற்றவர்கள், இந்தஉணவைத்தான் உண்ணவேண்டும். இந்தஉணவைஉண்பது கூடாதுஎன்றுசொல்லத் தகுதியற்றவர்கள்.

சிலசமயத்தினர் இறைச்சிஉணவைஅறவேநீக்கிவிடுகிறார்கள். சமணர் என்றும் ஜைனர் என்றும் கூறப்படுகிறமதத்தினர் இறைச்சிகளைஅறவேஉண்பது இல்லை. ஆனால்,அவர்கள் பால்,தயிர்,நெய் முதலியபால் உணவுகளைஉண்கிறார்கள். ஜைனர்களின் சமயப் பிரசாரத்தினாலே. நமதுநாட்டுப் பிராமணர், இக்காலத்தில் மாமிச் உணவுஉண்பது. இல்லை. ஆனால்,அவர்களும் பால் தயிர் மோர் நெய்களைத் தாராளமாகஉண்கிறார்கள். ஆனால்.வடநாட்டில் உள்ளபிராமணர்கள் இன்றும் புலால் உணவையும் மின் உணவையும் உண்கிறார்கள், இறைச்சிஉணவைஉண்ணாதவர், இறைச்சியோடுசம்பந்தப்பட்டபால்,தயிர்,வெண்ணெய் நெய்களைஉண்ணவேண்டும். இல்லையானால். அவர்களின் தேகசுகம் ஒருவகையில் கெட்டுப் போகும்.

இறைச்சிஉணவில் தசையைவளர்க்கிறசத்தும்,பி. வைட்டமின் என்னும் உயிர்ச்சத்தும் நிறையஉள்ளன. வைட்டமின் என்னும் உயிர்ச்சத்துகளில் மிகமுக்கியமானஉயிர்ச்சத்துதசையைவளர்க்கிறபிவைட்டமின்தான் என்பதைமனத்தில் வைக்கவேண்டும்.

இறைச்சிஉணவு,சத்துள்ளஉணவுஆகையினால் அதைமிதமாகஉண்ணவேண்டும் அதிகமாகஉண்பதனால்,உடம்புக்குத் தீங்குஉண்டாகும். அன்றியும்.ஒரேவேளையில் பலவித இறைச்சிகளைஉண்பதும் கூடாது. இறைச்சிகள் புதியதாகவும் சுத்தமாகவும் இருக்கவேண்டும். பழையஅழுகிய இறைச்சிகள் தீமைஉண்டாக்கும்.

முஸ்லிம்கள் மாடு. ஒட்டகம் முதலியவற்றின் இறைச்சிகளையும் உண்கிறார்கள். மதப்பற்றுள்ள முஸ்லிம்கள்,செவிள் உள்ளமீன்களைத் தவிரமற்றமீன்களைஉண்பதில்லை. ஐரோப்பியர் மாட்டு இறைச்சியையும் பன்றி இறைச்சியையும் உண்கிறார்கள். இந்துக்கள் மாடு. ஒட்டகம்.பன்றி இறைச்சிகளைஉண்பதில்லை. ஆனால் எல்லோரும் ஆட்டு இறைச்சியைஉண்கிறார்கள். கோழி,வான்கோழி,வாத்து,புறா,காடை,கவுதாரிமுதலியபறவைகளின் இறைச்சிகளையும் உண்கிறார்கள்.பால்.தயிர்,வெண்ணெய்,நெய் இவைகளும் இறைச்சிவகையைச் சேர்ந்தனவே. மாமிசம் உண்ணாதவர் பால். தயிர்,நெய்,வெண்ணெய்களைஅதிகமாகச் சேர்த்துக்கொள்ளவேண்டும். பொதுவாகஇறைச்சிகளில் பாஸ்பரஸ் என்னும் பொருள் இருக்கிறது. பாஸ்பரஸ் எலும்புகள் வளர்வதற்குமிகவும் உதவிசெய்கின்றன.

இறைச்சிகளைப் பற்றியகுறிப்பு:

**ஆட்டிறைச்சி**

தேகம் தழைக்கும்.வலிவுண்டாகும்.சத்துஅதிகரிக்கும். இதைச் சமைக்கும்போது இதனுடன் கொத்தமல்லி,கருவாப்பட்டை,நெய் இவற்றைச் சேர்ப்பதுநல்லது.

**வெள்ளாட்டிறைச்சி**

பத்தியத்திற்குஉகந்தஉணவு. மார்புக்குவலிவைக் கொடுக்கும். கபத்தைஅறுக்கும். பசி உண்டாகும்.உடம்பில் பலம் உண்டாகும். நோய்கள் போகும். இதனுடன் எலுமிச்சம்பழச்சாறுசேர்த்துக்கொள்வதுநல்லது.

**ஆட்டுமூளை**

இதைஉண்பதனால் மூளைக்குப் பலம் உண்டாகும். கண் குளிரும்,தாதுவிருத்திஉண்டாகும். இதில் தசைகளுக்குப் பலம் தருகிறஉயிர்ச்சத்துஉண்டு. சீரணப்படுவதுகடினம். இஞ்சி,கடுகு,சீரகம் சேர்த்துச் சமைக்கவேண்டும்.

**ஆட்டுஈரல்**

இதில் ஏ.பி.சி.டி. வைட்டமின் என்கிறநான்குவகையானஉயிர்ச்சத்துக்கள் உள்ளன. பிவைட்டமின் என்னும் தசைவளர்க்கும் உயிர்ச்சத்து இதில் அதிகமாகஉண்டு. உடம்பில் சிறிதளவு இருக்கவேண்டிய இரும்புமுதலியஉலோகச் சத்துக்களும் இதில் உண்டு. கொழுப்பும் இதில் அதிகமாகஉண்டு. இதைச் சமைக்கும்போதுஇதனுடன் இலவங்கப்பட்டை(கருவாப்பட்டை) சேர்த்துக் கொள்வதுநல்லது.

**ஆட்டுக் கால்**

ஆட்டுக்கால் இறைச்சி. கால்களுக்குவலிவைத் தரும். தைரியம் உண்டாக்கும். எலும்புகளுக்குவலிவுதரும். இதனுடன் சீரகம்,புதினாசேர்த்துக் கொள்வதுநல்லது.

**நுரைஈரல்:**

ஆட்டின் நுரையீரல் சூட்டைஆற்றும். உடம்புக்குக் குளிச்ச்சிதரும். நுரைஈரலுக்கு (சுவாசப் பைக்கு) வலிவைக் கொடுக்கும். தேக புஷ்டிஉண்டாகும். மிளகு,சீரகம்.புதினாசேர்த்துக்கொள்ளவேண்டும்.

**ஆட்டின் குண்டிக்காய்:**

இதைஉண்பதனால் குண்டிக்காய்களுக்கும் இடுப்புக்கும் வலிவுஉண்டாகும். இடுப்புநோயைமாற்றும்.தாதுவளகும்.இதில், ஏ.பி. வைட்டமின்களும் உண்டு. இதனுடன் மிளகுசேர்த்துச் சமைக்கவேண்டும்.

**கோழிக்கறி:**

சேவல் இறைச்சிஅதிக சூடு உண்டாக்கும். அன்றியும் தாது நஷ்டம் உண்டாகும். ஆகையால் சேவல் கறியைஉண்பதுநல்லதல்ல. பெட்டைக்கோழி இறைச்சியும் சூடு பண்ணும்.வாய்வுபோகும். சிலேத்துமமும் போகும்.தாதுவளரும்.வலிவுஉண்டாகும்.சூட்டுஉடம்புக்குஉதவாது. இதனுடன் எலுமிச்சம்பழச்சாறுசேர்த்துக்கொள்வதுநல்லது.

**கருங் கோழிக்கறி:**

கோழியில் கருங்கோழிஎன்றுஒருவகையுண்டு. இது வெண்ணிறமான இறகுஉடையது. இக்கோழியின் தோல்கருமைநிறமாக இருக்கும். இதன் இறைச்சியைஉண்பதனால்,உதிரம் தூய்மைப்படும். உதிரசம்பந்தமானநோய்கள் தீரும். வலிவுஉண்டாகும்.தேகம் தழைக்கும். குஷ்டம்.வாதநோய்.சூலை,முதலியநோய்கள் போகும்.

**கோழிக் குஞ்சு:**

நோயாளிக்கும்.பிள்ளைகளுக்கும் நன்மைதரும். பத்தியத்திற்குஉதவும். ஜீரணம் ஆகும்.தேகம் பருக்கும்.

**வான்கோழிக் கறி:**

பலமுண்டாகும்.தேகம் பருக்கும்.குடலின் வலிவைஅதிகப்படுத்தும். அதைச் சமைக்கும்போதுபுதினா,எலுமிச்சம்பழச்சாறுசேர்த்துக்கொள்ளவேண்டும்.

**வாத்துக் கறி:**

இரத்தம் அதிகரிக்கும். தேகம் தழைக்கும்.மந்திக்கும்.

**காடைக் கறி:**

உடம்பின் சூட்டைஅகற்றும். உதிரம் பெருகும்.விரைவில் சீரணமாகும்.சோகைநோய் தீரும்.பலநோய்களும் போகும். தேகம் தழைக்கும்.பத்தியத்துக்குஆகும்.

**கவுதாரிக் கறி :**

உதிரம் உண்டாகும். மூளைக்குப் பலம் தரும். தேகபலமும் வீரியமும் உண்டாகும்.வாதபித்தநோய்கள் தீரும். சூட்டுடம்புக்குஆகாது. சூட்டுடம்புக்காரர் இதைச் சாப்பிடும்போதுஎலுமிச்சம்பழச்சாறுசேர்த்துக்கொள்வதுநன்று. பிள்ளைபெற்றதாய்களுக்குப் பத்தியமாக இவ்விறைச்சியைக் கொடுப்பதுண்டு.

**புறாக் கறி:**

இந்த இறைச்சியினால் பாரிசவாயு,பக்கவாதம், இசிவு,வீக்கம்,மகோதரம்,ஆகியநோய்கள் தீரும். குண்டிக்காய்க்குவலிமைகொடுக்கும். கொழுமையுண்டாகும்.இதைஉண்ணும்போதுதிராட்சைப்பழம் உட்கொள்வதுநலம்.

**உள்ளான் கறி:**

இதுபத்தியத்துக்குஆகும். வாதபித்தத்தைத் தணிக்கும். மேகநோய் போகும்.குடலுக்குவலிவுஉண்டாகும். பசி உண்டாகும்.சமைக்கும் போதுமிளகும் சீரகமும். சேர்த்துக்கொள்ளவேண்டும். இறைச்சிகளில் பறவைகளின் இறைச்சிஅதிகநல்லதுஎன்றுகருதப்படுகிறது.

**கோழிமுட்டை:**

தாதுஅதிகப்படும்.தேகம் தழைக்கும்.இரத்தம் உண்டாகும். இதைஅதிக நேரம் வேகவைத்தால் கெட்டியாய் விடும்˙ விரைவில் ஜீரணப்படாது: வாய்வுஉண்டாகும். ஆகையினால் இதைமுக்கால் வேக்காடுவேகவைத்துஉண்ணவேண்டும்.

**வாத்துமுட்டை**

தேகத்துக்குவலிவுகொடுக்கும். உடல் பருக்கும்.வாயுவைஉண்டாக்கும். மந்திக்கும். வான்கோழிமுட்டைக்கும் இதுவேகுணம். இஞ்சி,கொத்துமல்லி,சீரகம் சேர்த்துச் சமைக்கவேண்டும்.

**குறிப்பு** - முட்டைகளில் ஏ.பி. வைட்டமின் என்னும் உயிர்ச் சத்துக்களும் தசைவளர்க்கும் பொருளும். கொழுப்பும் உள்ளன. பாலுக்குநிகரானதுமுட்டை. பால் குறைவாகஉள்ளநமதுநாட்டில் முட்டையைஅதிகமாகஉண்பதுநல்லது. முக்கியமாகவளரும் குழந்தைகளுக்கும் இது ஏற்றதாகும். வெள்ளைநிறமான ஓடு உள்ளமுட்டையைவிட,பழுப்புநிறமான ஓடு உள்ளமுட்டைகளில் அதிகசத்துஉண்டு. சமைக்கும் முட்டைகள் புதிதானவையாயிருக்கவேண்டும். அழுகியமுட்டைகளும் கெட்டுப்போனமுட்டைகளும் ஆகா.

**புளு முட்டை**

தேகம் தழைக்கும்.தாதுஅதிகரிக்கும். ஜீரணம் ஆகும்.நெய்யில் பொறிக்கவேண்டும்.

**மீன்கள்**

மீன்களில் பலவகைநல்லதண்ணீர் மீன்களும் கடல் மீன்களும் உள்ளன. மீன்களில் உப்பை இட்டுஉலரவைத்துக் கருவாடுசெய்கிறார்கள். மீன் உணவு. மற்ற இறைச்சிகளைவிடஎளிதில் ஜீரணமாகிறது. இதில் பிஎன்னும் தசைவளர்க்கும் சத்துஉண்டுபொடிமீன்களில் (சிறுமீன்களில் ) கால்ஸியம் என்னும் சுண்ணாம்புச் சத்துநிறையஉண்டு. இது எலும்புகளுக்குப் பலம் தருகிறது. இதைச் சமைத்துஎலும்புகளையும் சேர்த்துஉண்பதுவழக்கம். பிள்ளைபெற்றதாய்க்குப் பொடிமீனைமிளகுச் சாறுவைத்துப் பத்தியமாகஉண்பிக்கிறதுஉண்டு. பிள்ளைபெற்றவர்களுக்குஎலும்புபலம் குறைந்துவிடுகிறது,அதைநிறைவுசெய்வதற்கே இந்தப் பத்தியஉணவுகொடுக்கப்படுகிறது. மாமிசஉணவுஉண்பவர்கள் கூட நமதுநாட்டில்,மீன்களைக் குறைவாகவேகுறைஉண்கிறார்கள் என்றுஅரசாங்கத்தார் குறைகூறுகிறார்கள்.நமதுநாட்டில் கடல் வளம் உண்டு. மீன் உற்பத்தியைஅதிகப்படுத்தஅரசாங்கத்தார் மீன் இலாகாஏற்படுத்திமீனைஅதிகமாகவிற்பதற்குஏற்பாடுசெய்திருக்கிறார்கள். சுறாமீனின் சாலிலிருந்துமீன் எண்ணெய் எடுத்துவிற்கப்படுவதுகுறிப்பிடத்தக்கது.

இறைச்சிகளில் பிவிட்டமின் என்னும் உயிர்ச்சத்துஅதிகம். ஆனால் சோடாஉப்புசேர்த்துச் சமைத்தால் இந்தஉயிர்ச்சத்துஅழிந்துபோகிறது. சோடாஉப்பைச்சேர்க்காமல் சமைக்கவேண்டும். விரைவில் நன்றாகவேகும் என்னும் காரணத்திற்காக இறைச்சியுடன் சோடாஉப்புசேர்க்கிறார்கள். அப்படிசேர்ப்பதுஉடல் நலத்துக்குஏற்றதல்ல.

**தமிழர் உணவுவகைகள்:**

**சோறு:**

அரிசியில் நீரைப்பெய்துபுழுக்கினால் அதுசோறாகின்றது. சோற்றுணவைத் தமிழர்கள் விரும்பியுண்டிருக்கின்றனர்.

**“ஆற்றுக்குள் இருந்துஅரகராஎன்றாலும்**

**சோற்றுக்குள் இருக்கிறான் சொக்கநாகன்’’**

என்பதுபழமொழி. அடிசில்,அயினி,அவிழ், கூழ்,சொன்றி,நிமிரல்,புழுக்கல்,புன்கம்,பொம்மல்,மிதவை, மூரல்,வத்தம் என்பதுபோன்றபலசொற்கள் சோற்றைக் குறித்துவருகின்றன.

**அமிழ்தனமரபி னூன்றுசையடிசில்- சோறு**

**அயினியுமின்றயின்றனனே-சோறு**

**அவிழ் வேண்டுநர்க் கிடையருள்-சோறு**

**கூழுடைக் கொழுமஞ்சிகை-சோறு**

**இழித்தானாப் பலசொன்றி -சோறு**

**பெருஞ்சேய் நெல்லின் கொக்குகிர் நிமிரல் -சோறு**

**விரலெனநிமிர்ந்தநிரலமைபுழுக்கல்-சோறு**

**பாற்பெய் புன்கம் தோனாகுமயக்கி-பாற்சோறு**

**குரூஉக் கணிரடிப் பொம்மல் -தினைச்சோறு**

**பாலுமிதவையும் பண்ணாதுபெறுகுவீர்-(பாற்சோறு)**

**இன்சுவை மூரற் பெறுகுவீர் -(பருப்புச்சோறு)**

**சுடர்க் கடைப் பறவைப் பெயர்படுவத்தம் - (நெற்சோறு)**

என இலக்கியங்கள் இவை வருமாற்றைச் சுட்டிச் செல்கின்றன.

உட்பக்கத்தில் காழ்ப்பு இல்லாதவற்றைதொல்காப்பியர் புல்லென்றுகுறிப்பிடுவார். இக்கொள்கையின் அடிப்படையில் உண்ணும் சோறு வகைகள் அனைத்தும் புல்லுணவுஎனலாம். சோற்றைக் கூலங்களின் அடிப்படையில் தினைச்சோறு, நெற் சோறு,புற்சோறு (புல்லரிசிச் சோறு),வரகுச்சோறுஎனநால்வகையாகப் பிரிக்கலாம். இந்தஅடிப்படைகள் தமிழர்கள் நெறியோடுஉணவைப் பகுத்திருந்தமுறைமையைவிளக்கும். சோற்றைவிதவிதமானபெயர் சூட்டிஉண்டுமகிழ்ந்தவர் தமிழர். சோற்றோடுதயிரைவிரவிவைத்துவிட்டால் தயிர்ச்சோறுஎனப்படும். புளிச் சாற்றினைக் காய்ச்சிஅதனைச் சோற்றோடுவிரவித் தாளிதம் செய்துவிட்டால்

புளியோதரை,புளிச்சோறுஎனவும்,எலுமிச்சம் பழச்சாற்றைஅப்படியேபுளிச்சாறுக்குப் பதிலாகவிரவிவிட்டால் எலுமிச்சஞ்சோறுஎனவும்,காய்ச்சியபாலைமட்டும் விரவிவிட்டால் அதுபாற்சோறுஎனவும்,பலவகைக் காய்களைஒன்றாகவேகவைத்துக் குழம்புதயாரித்துசோற்றோடுசேர்த்துக் கலந்துவிட்டால் அது கூட்டாஞ்சோறுஎனவும் அழைக்கப்படும்.

இதுமட்டுமன்றிநிலாக்காலத்தில் நிலவில் உண்ணும் உணவிற்குநிலாச்சோறுஎனவும் தமிழர் பெயரிட்டிருந்தனர். அயலூர் போகும் போது,பசித்தவேளைஉண்பதற்குஎடுத்துச் செல்லும் உணவுகட்டுச்சோறுஎனப்படும். ஆறிப்போனசோற்றைபழஞ்சோறு (பழையது) என்றும் ஆறாதசூடானசோற்றைச் சுடுசோறுஎனவும் தமிழர் நயமாகவழங்குகின்றனர். வெந்நீர்ப் பழையதுஎன்றவழக்கு இன்னமும் தென்தமிழ்நாட்டில் உண்டு. பச்சரியால் ஆக்கப்பட்டசோறுபொங்கல் என்றும்,புழுங்கல் அரிசியால் ஆக்கப்பட்டசோறுபுழுக்கல் எனவும் தனித்தனியானபெயர்களோடுவழங்குகின்றன.

கல்யாணம்,குழந்தைப்பேறுமுதலியமங்கலமானகாரியங்களில் மற்றவர்களோடுஉண்டுமகிழ்கிறஉணவிற்குசிறுசோறுஎன்றுபெயர். இதனைஅகநானூறு குறிப்பிடுகிறது. மரணம் முதலியஅமங்கலகாரியங்களில் பிறருக்களிக்கும் உணவிற்குப் பெருஞ்சோறுஎன்றுபெயர். போர்க்களத்தில் மடிந்துபோனவீரர்களின் நினைவாகச் சமைத்துப் படைக்கப்படுகின்றஉணவிற்குபெருஞ்சோற்றுநிலைஎன்றுபெயர். இதனைத் தொல்காப்பியம்,

**“பிண்டம்மேயபெருஞ்சோற்றுநிலையும்**’’எனக் குறிப்பிடுகிறது. வான்சோறு,பழஞ்சோறு,வெஞ்சோறுமுதலியனபற்றியும் இலக்கியங்கள் பல இடங்களில் குறிப்புக்களைத் தருகின்றன.

‘‘சோறும் சருக்கரைப் பொங்கல் (அக்காரடலை,அக்காரவடிசில்) வெண் பொங்கல்,மிளகுப் பொங்கல்,நெய்ப்பொங்கல்,தேங்காய்ச் சோறு,பாற்பொங்கல்,கரும்புச்சோறு,ஊன்சோறு (புலவு),ஊன்றுவையடிசில் எனப் பலவகைப்படும் எனதேவநேயப்பாவாணர் குறிப்பிடுகின்றார்.

**(அ) தினை,தினைச்சோறு**

முதற்கூலவகைகள் எட்டனுள் தினையும் ஒன்று. கருந்தினை,சிறுதினை,செந்தினைஎன்பனதினைகளின் வகைகளாகும். ஏனல் என்றதொடரும் சிறுதினையைக் குறிக்கும். இதனை “ஏனலஞ் சிறுதினை’’என்றதொடர் விளக்கும். இக்காலத் தமிழர்சிறுதினையை “அறுப்பன் தினை’’என்றும்,பெருந்தினையை “முறியன் தினை’’எனவும் வழங்குகின்றனர். தினைக்குழங்குதினை,பைந்தினைஎனஅடைகளைக் கொடுத்து இலக்கியத்தில் புலவர்கள் பாடுகின்றனர். சங்க இலக்கியத்தில் “இறடி’’என்றசொல்லும் தினையைக் குறிக்கப் பயன்பட்டது.

**“குரூஉக்கனிறடிப் பொம்மல்”**

என்றமலைபடுகடாம் தொடர் இதனைவிளக்கும். தினைஎன்பதைசிறுதானியவகைஎன்றுமட்டுமேசொல்லிவிளக்கமெதுவும் சொல்லாமல் தமிழ்ப்பேரகராதிகுறிப்பிடுகிறது.

‘‘தினைக் காலுள் யாம் விட்டகன்றுமேய்க்கிற்பரோ’’

எனக் கலித்தொகைதினையைப் பற்றிக் குறிப்பிடுகிறது. கொழுத்த ஊன் துண்டங்களைத் தீபிலிட்டுச் சுட்டுஅவற்றுடன் தினைச்சோற்றைச் சொரிந்துபாணர்கள் உண்டனர் என்பதை,

**செந்தீஅணங்கியகொழுநிணக் கொழுங்குறை**

**மென் நினைப் புன்கம் உதிர்ந்தமண்டையொடு**

**......... பகுக்கும்**

எனஅகநானூறுகூறுகிறது.தினைச்சோற்றுடன் ஊனைக் கலந்துஉண்ணுதல் சிறந்தசுவைஉணவாகத் தமிழர்களால் கருதப்பெற்றிருந்தது. நெய்யில் வெந்த இறைச்சிவேவையோடுநிறம்மிக்குத் தோன்றும் வடிவினைஉடையதினைச்சோற்றைவிருந்தினர்களுக்குக் கொடுத்தனர் என்பதை,

**“பரூஉக் குறைபொழிந்தநெய்க்கண் வேவையொடு**

**குரூஉக் சுணிநடிப் பொம்மல் பெறுகுவீர்’’**

எனமலைபடுகடாம் உரைக்கிறது. “தினையை இடித்துநுவணையைஉண்டனர்’’என்றசெய்தியினையும்காணமுடிகிறது.

**குழம்பு**

இக்காலத்தவர் குழம்பைஆணம் என்றுகுறிப்பிடுவர். திண்மைநிலைபற்றிநீர்,சாறு,தீயல், இளம்குழம்பு,குழம்பும், கூட்டுஎனக் குழம்புபலவகைப்படும். குழம்பினைக் காய்கறிக் குழம்புஎனப் பிங்கலநிகண்டுகூறுகிறது.

**புளிக்குழம்பு**

புளிச்சுவையைப்பெய்துகுழம்பாகவைப்பதுபுளிக்குழம்பாகும். தன்மெல்லியவிரல்களால் கட்டியாகமுற்றிவிளைந்ததயிரைப் பிசைந்துஅதைக் குவளைபோன்றகண்களில் தாளிப்புப் புகை மணம் கமழ,புளிக்குழம்பாக்கித் தலைவனுக்குக் கொடுத்தாள் என்பதை,

**“முளிதயிர் பிசைந்தகாந்தண் மெல்விரல்**

**குவளையுண்கண் குய்ப்புகைகமழத்**

**தான்றுழந் தட்டதீம்புளிப் பாகர்**

**இனிதெனக் கணவன் உண்டலின்**

**நுண்ணிதின் மகிழ்ந்தன்றுஒண்நுதல் முகனே”**

எனக் குறுந்தொகைஉரைக்கிறது. இனியமாங்கனிகளைப் பிசைந்துமணம் மிக்கபுளிக்குழம்பாக்கினர் என்னும் குறிப்புபுறநானூற்றில் காணப்படுகிறது.

**உவியல் (அவியல்)**

‘‘நெடுவாளைப் பல்லுவியல்’’என்றபுறநானூற்றுப் பாடலைஎடுத்துக்காட்டிஉவியல் என்பதற்குச் சமைத்தகறிஎன்றுதமிழ்ப்பேரகராதி கூறுகிறது இக்காலத்தவர் பலவகையானகாய்கறிகளைக் கொண்டுஅவியல் செய்கின்றனர். சங்ககாலமக்கள் நீண்டவாளைமீனைக் கொண்டுஉவியல் செய்துஅதைப் பழஞ்சோற்றுடன் சேர்த்துஉணவாகஉட்கொண்டனர் என்றசெய்தியை,

**“நெடுவாளைப் பல்லுவியற்**

**பழஞ்சோற்றுப் புகவருந்தி”**

என்னும் புறநானூற்றுஅடிகள் பகர்கின்றன.

**தமிழுணவும் வேலைவாய்ப்பும்**

சுற்றுலாத் தொழில் ஆயிரக்கணக்கானபேர்களுக்குவேலைவாய்ப்பினைநல்குகிறது. சுற்றுலாத்துறைஒருசேவைத்துறை. இதனாலபலருக்குவேலைவாய்ப்புகிடைக்கிறது. வெளிநாட்டுசுற்றுலாப் பயணிநமதுநகரத்திற்குவந்தால் உணவுவிடுதிக்காரர்,பயணமுகவர்கைவினைக்காரர்,பயணவழிகாட்டி,சமையல்காரர்,வண்ணார்,கணக்கா உணவுபரிமாறுவோர்,கேளிக்கையாளர் முதலானபலர் பயன் பெறுகின்றனர். 1996-97 இல் சுற்றுலாவின் மூலம் இந்தியாவில் ஓட்டுமொத்தமாக 21.1 மில்லியன் பேர்கள் வேலைவாய்ப்பைப் பெற்றனர் சுற்றுலாப்பயணிசெலவிடும் பணம்,பன்மடங்குப் பெருக்கமுறையில் (ஆரடவனிடநைச) பலகைகளுக்குமாறி,பலதரப்பட்டபொருளியல் துறைகளைமேம்படுத்துகின்றன.பலதொழிலாளர்கள் பிழைக்கின்றனர். 1981-ஆம் ஆண்டு நம் பாரதம் சுற்றுலா மூலம் பெற்றநிகரலாபத்தை (580 கோடி) குறைந்தபட்சம் நான்கால் பெருக்கினால் (580 × 4 ஸ்ரீ2320) 2320 கோடிரூபாய் வரும். எனவேநமதுதேசியவருவாயில் சுற்றுலாதனதுபங்காக 2320 கோடிரூபாயைஅளித்ததுஎனக் கணிக்கப்பட்டுள்ளது. 1999 ஆம் ஆண்டில் இந்தியாசுற்றுலாவின் மூலம் 1304.1

கோடிரூபாயைவருவாயாகப் பெற்றது. இதனால் நம் நாட்டின் பொருளாதாரமுன்னேற்றத்தில் சுற்றுலாமுக்கியமானதோர் பங்கைவகிக்கிறதுஎனலாம். இதுவே நம் வருவாயின் உயிர்நாடியாகவிளங்குகிறது.

**வினாக்கள்**

| வ.எண் | ஐந்து மதிப்பெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | தமிழர் உணவுவகைகளைசுட்டுக. | K2 | CO2 | PO4 |
| 2 | கிழங்குகளின் பயன்பாடுகுறித்துஎழுதுக. | K3 | CO3 | PO5 |
| 3 | தமிழர்கள் பயன்படுத்திய இறைச்சிவகைகளைகுறிப்பிடுக. | K4 | CO4 | PO1 |
| 4 | எண்ணெய்களின் பயன்பாடுகள் யாவை? | K5 | CO5 | PO2 |
| 5 | சோற்றுக்குவழங்கும் வேறுபெயர்கள் என்னென்ன? | K1 | CO4 | PO3 |

| வ.எண் | எட்டு மதிபெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | தமிழர் உணவுகளில் பழங்களின் பயன்பாட்டைவிவரிக்க. | K2 | CO1 | PO4 |
| 2 | தானியஉணவும்,பருப்பும் பயிர் வகைகள் குறித்துஎடுத்துரைக்க. | K1 | CO2 | PO6 |
| 3 | கீரைஉணவின் நலன்கள் குறித்துவிரிவாகவிவரி. | K4 | CO2 | PO5 |
| 4 | தமிழர் உணவுவகைகளின் தன்மையைஎடுத்துரைக்க. | K3 | CO4 | PO6 |
| 5 | தசையைவளர்க்கும் இறைச்சியைதமிழர்கள் பயன்படுத்தியவிதத்தைகட்டுரைக்க. | K5 | CO1 | PO3 |

முனைவர்.இரா. சொர்ணபமிலா

உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறைஉயராய்வுமையம்
தெ.தி. இந்துக்கல்லூரி,
நாகர்கோவில் - 629002.

| Text books | |
|---|---|
| | சுற்றுலாவியல் , தங்கமணி; கொங்கு பதிப்பகம், பாண்டியன் நகர், சின்னாண்டான் கோயில்; கரூர். |
| | சுற்றுலா, டாக்டர் இரா. சாந்தகுமாரி, சாந்தா பப்ளிஷர்ஸ், ஶ்ரீபுரம் 2 வது தெரு, இராயப்பேட்டை, சென்னை-14. |
| | சுற்றுலாவியல், முனைவர் ச. ஈஸ்வரன், சாரதா பதிப்பகம், சென்னை. |
| Reference Books | |
| | சுற்றுலாவியல், மா. ராஜசேகர்- கொங்குப் பதிப்பகம், பாண்டியன் நகர்,சின்னாண்டன் கோயில், கரூர் |
| | சுற்றுலா வளர்ச்சி : வெ. கிருட்டினசாமி, மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை – 600018 |

| Related Online Contents [MOOC, SWAYAM, NPTEL, Websites etc.] |
|---|
| **Web Sources** |

- Tamil Heritage Foundation- www.tamilheritage.org <http://www.tamilheritage.org>
- Tamil virtual University Library- www.tamilvu.org/ library http://www.virtualvu.org/library
- Project Madurai - www.projectmadurai.org.
- Chennai Library- www.chennailibrary.com <http://www.chennailibrary.com>.
- Tamil Universal Digital Library- www.ulib.prg <http://www.ulib.prg>.
- Tamil E-Books Downloads- tamilebooksdownloads. blogspot.com
- Tamil Books on line- books.tamil cube.com
- Catalogue of the Tamil books in the Library of British Congress archive.org
- Tamil novels on line - books.tamilcube.com

| Expected Course Outcomes | | |
|---|---|---|
| **On the Sucessful completion of the Course,Students will be able to** | | |
| இப்பாடத்தைக் கற்பதால் பின்வரும் பயன்களை மாணவர்அடைவர் | | |
| CO 1 | **சுற்றுலாவைப் பற்றிய அறிவைப் பெறுவர்.** | K1,K2 |
| CO 2 | **பண்டைக்காலச் சுற்றுலா பற்றி அறிந்திருப்பர்.** | K3 |
| CO 3 | **சுற்றுலாவின் பயன்களை உணர்ந்திருப்பர்.** | K4 |
| CO 4 | **தமிழகத்தில் உள்ள புகழ்மிக்க தலங்களைப் பற்றி அறிந்திருப்பர்.** | K5 |
| CO 5 | **சுற்றுலாவின் வளர்ச்சியை விரிவுபடுத்தும் முறையினை அறிந்திருப்பர்.** | K6 |
| K1 - Remember; K2 - Undestand; K3 - Apply; K4 - Analyze; K5 - Evaluate; K6 - Create | | |

| | PO 1 | PO 2 | PO 3 | PO 4 | PO 5 | PO 6 | PO 7 | PO 8 | PO 9 | PO 10 | PSO 1 | PSO 2 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **CLO1** | **3** | 2 | 3 | 2 | 3 | 2 | 2 | 3 | 2 | 3 | 2 | 2 |
| **CLO2** | 2 | 3 | 2 | 3 | 2 | 3 | 2 | 3 | 2 | 3 | 2 | 2 |
| **CLO3** | **3** | 3 | 2 | 3 | 2 | 3 | 2 | 3 | 2 | 3 | 2 | 3 |
| **CLO4** | 2 | 3 | **3** | **3** | 3 | 3 | 2 | 3 | 2 | 3 | 2 | 2 |
| **CLO5** | 2 | 3 | 2 | 2 | 3 | 2 | 3 | 2 | 2 | 3 | 2 | 3 |